# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 48+4

சுடர் 32 | கதிர் 239 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை 23.07.2017


## வெளிவாரிக் கற்கை தெரிவுப் பரீட்சையை தடுக்கக்கோரி வழக்கு

*யாழ்ப்பாண மாணவர்கள் உயர்நீதிமன்றில் தாக்கல்*

யாழ்ப்பாணம், ஜூலை 23
பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப் படிப்புக்களை முன்னெடுக்க நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் தெரிவுப் பரீட்சை முறையை >> 41

# மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மீது துப்பாக்கிச் சூடு

*தெய்வாதீனமாக உயிர் தப்பினார்*
*நல்லூர் ஆலய வீதியில் நேற்று மாலை பயங்கரம்*



யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீது நேற்று மாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். அவரது மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.15 மணியளவில் >> 45

## நடந்தது என்ன?

விளக்குகிறார் இளஞ்செழியன்

★ கடந்த 8 மாதங்களாக ஆபத்தான வழக்குகளைக் கையாண்டு வருகின்றேன்
★ எனது நடவடிக்கையை அவதானித்துத் தாக்குதல் திட்டமிடப்பட்டதாகச் சந்தேகிக்கின்றேன்



யாழ்ப்பாணம், ஜூலை 23
துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் என்ன நடந்தது என்பதை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் ஊடகங்களுக்கு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்துக் கருத்துத் தெரிவித்தார். >> 45

## நீதித்துறையே இலக்கு

*கண் கலங்கினார் நீதிபதி*

யாழ்ப்பாணம், ஜூலை 23
இந்தச்சம்பவம்நீதித்துறைக்கே விடுக்கப்பட்ட சவாலாகவே நான் கருதுகின்றேன். நீதித்துறையே இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயத்தை அரசு முக்கியமாகக் கவனத்தில் எடுக்கவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.
அவர்மேலும்கூறுகையில், அரச தலைவர், பாதுகாப்பு அமைச்சு, நீதி அமைச்சு, நீதிச் >> 04

## அனலைதீவைச் சேர்ந்த இருவர் நேற்றிரவு கைது

யாழ்ப்பாணம்,ஜூலை 23
மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அனலைதீவைச் சேர்ந்த இருவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலி >> 45

## படுகாயமுற்ற சார்ஜன்ட் நள்ளிரவு உயிரிழப்பு

*17 வருடங்கள் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலராக இருந்தார்*



யாழ்ப்பாணம், ஜூலை 23
மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படு >> 45

## மோட்டார் சைக்கிளில் தப்பினார் தாக்குதலாளி

யாழ்ப்பாணம், ஜூலை 23
மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் மெய்ப் பாதுகாவலரது துப்பாக்கியைப் பறித் >> 45

## சூத்திரதாரிகளை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

*பொலிஸ்மா அதிபரைக் கோருகிறது கூட்டமைப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக வன்மையாகக் கண்டிப்பதாக, அந்தக் >> 45

## ஆரியக் கூத்தாடினாலும் நாங்கள் காரியத்தில் கண்ணாயிருப்போம்

*கொழும்பு சட்டக் கல்லூரி வித்தக விழாவில் சுமந்திரன் முன்னிலையில் கூறினார் விக்கி*

யாழ்ப்பாணம், ஜூலை 23
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனையும் மகன் என்று விளித்துக் கூறிய பின்னர், ஆரியக் கூத்தாடினாலும் நாங்கள் காரியத்தில் கண்ணாய் இருக்கவேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். >> 45

## நீதிபதிக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ், ஜூலை 23
மேல் நீதிமன்ற நீதிபதி >> 45

## வடக்கு மாகாண சட்டத்தரணிகள் நாளை புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித் >> 04

## சம்பவத்தை திசை திருப்ப யாழ். பொலிஸார் முயற்சி

*வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜூலை 23
"யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூடு தொடர்பான விசாரணையில் பொலிஸார் காட்டும் அவசரம் இந்தச் சம்பவத்தைத் திசை திருப்பும் முயற்சியாகவே நாம் எண்ணுகின்றோம். உண்மையான தாக்குதலாளி சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்" இவ்வாறு வவுனியா >> 04

## மஞ்சள் நிறத் திரவம் குறித்து உடன் விசாரணைவேண்டும்

*யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் வேம்படி அதிபர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வானத்தில் இருந்து கொட்டிய மஞ்சள் நிறத் திரவத்தால் 16 மாணவிகளும், ஒரு >> 45

## கறுப்பு ஜூலை நினைவு இன்று

*தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் நினைவேந்தல்*

யாழ்ப்பாணம், ஜூலை 23
1983 ஜூலை 23 இலங்கை வரலாற்றில் கறுப்பு தினம். இரத்தக் கறை படிந்த நாள். பேரின வாதிகள் மிருகங்களாக மாறித் தமிழர்களை வேட்டையாடிய கொடுமை மிகு நாள். ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் படுகொலையுண்ட 34 ஆவது நிறைவு ஆண்டு.
34 ஆண்டுகளுக்கு முன்னர் 1983 ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி முதல் சுமார் ஒரு வார காலம் நாடு முழுவதும், குறிப்பாகத் தலைநகரில் தென்பகுதியில் தமிழர்கள் உயிருடன் எரியூட்டப்பட்ட, கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்ட, வீடுகள், வர்த்தக நிலையங்கள் சூறையாட >> 45


20
SDB TOP SAVER
20 வருட பூர்த்தியை முன்னிட்டு
சேமிப்பு கணக்குக்கு வழங்கும்
10% அதிகூடிய வட்டி
• எச் சந்தர்ப்பத்திலும் பணத்தை மீளப்பெறும் வாய்ப்பு
• SDB VISA Debit Card வசதி மற்றும் SMS சேவை
• வட்டி வீதம் 10% (வ.தே.வ 10.46%) வரை*
011 5 411 411
*நிபந்தனைகளுக்குட்பட்டது
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ. இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ
SDB வங்கி

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## 95 ஆவது கூட்டுறவாளர் தினம் முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, ஜூலை 23
95 ஆவது பன்னாட்டு கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்று நடைபெற்றன. இந்த விழா வருடந்தோறும் கூட்டுறவுத் திணைக்களத்தால் நடத்தப்பட்டு வருகிறது. அதற்கமைவாக முல்லைத்தீவில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகாரம், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-10)

## டெனீஸை நீக்கும் முடிவை பரிசீலிக்க வேண்டும் ரெலோ

*மன். மாவட்ட மக்கள் மன்றம் கோரிக்கை*

மன்னார், ஜூலை 23
டெனீஸ்வரனை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ரெலோ எடுத்துள்ள முடிவை மீள்பரிசீலனைசெய்யவேண்டும். மன்னார் மக்களின் அபிலாசைகளையும்அபிப்பிராயங்களையும் புறந்தள்ளி ரெலோ தன்னிச்சையாகச் செயற்படும் பட்சத்தில், சனநாயக ரீதியாக போராட்டங்களை ரெலோவுக்கு எதிராக முன்னெடுக்க நேரிடும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட மக்கள்மன்றம்எச்சரித்துள்ளது. ரெலோ அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளருக்குத் தலைப்பிட்டுஎழுதியுள்ளகடிதத்திலேயே அந்த அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் உள்ளதாவது;
மன்னார் மாவட்டத்தில் இதுவரைகாலமும்மக்கள்எந்தக்கட்சி வேறுபாடுகளும் இல்லாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்து வந்தனர். தங்கள்கட்சிசார்பாகதேர்தலில் போட்டியிட்ட பா.டெனீஸ்வரனும் அதிகூடிய வாக்குகளைப் பெற்றமையால் வடமாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். மன்னார் மாவட்டத்துக்கென்றும் தங்கள் கட்சிக்கென்றும் வழங்கப்பட்ட அமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

வாக்களித்த மன்னார் மாவட்ட மக்களின்எந்தக்கருத்துக்களையும் அறிந்து கொள்ளாமலும் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்ளாமலும் அவரின் அமைச்சுப்பதவியைவெறிதாக்குவதற்கு தாங்கள் மேற்கொள்ளும்நடவடிக்கைஎமதுமாவட்ட மக்களுக்குச் செய்யும் துரோகமாகவேகருகிறோம்.

வடமாகாண சபை அமைச்சர்கள்மீதுமாகாணசபைஉறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முதலமைச்சரால்விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட அறிக்கைப் படி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மீது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சருக்கெதிராக முதலமைச்சரால் எடுக்கப்பட்ட தவறான நடவடிக்கையைக்கண்டித்து ஒரு தொகுதிமாகாணசபைஉறுப்பினர்கள் முதலமைச்சருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தனர் என்று அறியக்கூடியதாக உள்ளது. அந்த விடயத்தில்கூடதங்கள்கட்சியானது இரண்டுநாள்களின் பின்பே முதலமைச்சருக்குஆதரவுதெரிவிக்கின்றது என்று அறிவித்திருந்தது. இந்த விடயத்தில்கூடஅமைச்சர்மீது குற்றச்சாட்டுக்கள் இல்லாத போதும் அவரை ஒரு மாதகாலத்துக்கு கட்டாய விடுப்பில் இருக்கும் படி கூறியமைக்கு உண்மையிலேயே தங்கள் கட்சியே டெனீஸ்வரனுக்கு ஆதரவாகப்பரிந்துபேசிஇருக்க வேண்டும்.

வடமாகாண ரீதியிலும் எமது மாவட்ட ரீதியிலும் எந்தப் பாகுபாடுமின்றிபொதுமக்களுக்குச் சீரான சேவையை வழங்கிக் கொண்டிருக்கும்அமைச்சரை நீக்கிஅவருக்குப்பதிலாகவேறு மாவட்டத்தைச் சேர்ந்த புதியவரை நியமிப்பதற்கு தாங்கள் முதலமைச்சருக்குப்பரிந்துரை செய்திருக்கும் நடவடிக்கை மன்னார் மக்களாகிய எம்மை அதிர்ச்சியும் வேதனையும் அடையச்செய்துள்ளது.

இந்தநடவடிக்கைதங்கள்கட்சி மீது மக்கள் கொண்ட நம்பிக்கையைஇழக்கச்செய்வதோடு மட்டுமல்லாது எதிர்காலத்தில் தங்களது கட்சியினது அரசியல் செயற்பாடுகள் மக்களால் புறந்தொதுக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்துவிடும்.

2013ஆம் ஆண்டுஅமைக்கப்பட்ட மாகாண சபையின் ஆட்சிக்காலங்கள் இன்னும் 15 மாதங்களில்முடிவுறவிருக்கும் இந்தத்தருணத்தில்அமைச்சுப் பதவி மாற்றமானது பொருத்தமானதாக அமையவில்லை என்று கருதுவதனாலும் மன்னார் மாவட்ட மக்கள் மன்றம் சார்பாக தங்கள் முடிவுகளை மீள் பரிசீலனை செய்யுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம். இந்த விடயம் தொடர்பாக தங்களின் சாதகமானபதிலைநாளைஎதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். மன்னார் மக்களின் அபிலாசைகளையும் அபிப்பிராயங்களையும்புறந்தள்ளிதங்களின்கட்சி தன்னிச்சையாகச் செயற்படும் பட்சத்தில், மன்னார் மக்களாகிய நாம் தங்களுக்கெதிராக சனநாயக ரீதியாக போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என்பதை வருத்தத்துடன் மன்னார் மாவட்ட மக்கள் மன்றம் தெரிவிக்கின்றது. - என்றுள்ளது. (ற-5)

# கடத்தல்களுக்கு பின்னணி மகிந்த ஆதரவாளர்களே

*மங்கள குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 23
வெள்ளை வான் கடத்தல் சம்பவங்களுக்குமகிந்தஆதரவாளர்களேபின்னணியாக உள்ளனர். அனைத்துப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளரைக் கடத்த முயற்சித்தமை பொலிஸ் திணைக்களத்தில் உள்ளமகிந்தவின்ஆதரவாளர்களே.

இவ்வாறுநிதிமற்றும்ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டினார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பில்கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வெள்ளை வான் கலாசாரத்துக்கு எதிராகக் குரல்கொடுத் தவர் என்ற வகையில் மருத்துவ பீட மாணவர்கள் வெள்ளை வானில் கடத்திச் செல்ல முயன்றதை அனுமதிக்கின்றீர்களா? எனஊடகவிலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
இந்தச் சம்பவத்தை நான் கண்டிக்கின்றேன். கண்டனம் வெளியிடுவது மட்டுமல்ல. பொலிஸ் மா அதிபருக்குத் தொலைபேசி ஊடாகத்தொடர்புகொண்டுஎன்ன இவ்வாறு செய்கின்றீர்கள் எனவினவினேன். பொலிஸ் திணைக்களத்திலுள்ள சில நபர்களால் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் ஒரு சதித்திட்டமாகவே நான் இதனைப் பார்க்கின்றேன். நேற்று பகல் காணாமல் ஆக்கப்பட்டோர்தொடர்பான சட்டத்தில் அரசதலைவர் கையெழுத்திடுகின்றார். அரசதலைவர் கையெழுத்திட்ட ஒரு சில மணித்தியாலங்களுக்குள் இவ்வாறு நடைபெறுவதில் எனக்குச் சந்தேகம் உள்ளது. இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் மா அதிபர் உறுதி அளித்துள்ளார்.

ரயன்ஜயலத்தைக்கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட என்.ஏ0410என்றஹைஏஸ் கே.டி.எச் ரக வெள்ளை வான்நிதிஅமைச்சுக்குசொந்தமானதுஎனசமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ள தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை. முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்சவின்ஆட்சிக் காலத்தில்வரிச்சலுகையின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளவாகனமே இந்தகடத்தல்பாணியிலான கைதுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. - என்றார். (ற-ஐ-10)

## மாவட்ட செயலர் விளக்கம்

கடந்த 18ஆம் திகதி உதயன் பத்திரிகையின் 2 ஆம் பக்கத்தில் "அபிருத்திக்கு நாமே தடை" என்ற தலைப்பில் வெளியான செய்தியில் யாழ். மாவட்ட செயலர் நா. வேதநாயகன் "இராணுவத்தினர் அதிகமாக தண்ணீரைப் பயன்படுத்துகின்றார்கள்." என்று கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் மாவட்ட செயலர் தனது உரையில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாட்டில் ஏற்பட்டுள்ள கழிவு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

*அரசதலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 23
நாட்டின் மிகப் பெரும் பிரச்சினையாகக்காணப்படும்கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் என்று அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கிரிந்திவலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ சீலரத்னநாயக்கதேரர்நினைவு தியான மண்டபத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதேஅவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
"பன்னாட்டு உதவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளின் அடிப்படையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தைஅரசுதற்போதுநடைமுறைப்படுத்தியுள்ளது. இன்னும் சில வருடங்களில் குப்பைகள், இந்த நாட்டு மக்களுக்கும் எந்தவொரு எதிர்கால அரசுக்கும் ஒரு பிரச்சினையாகஇருக்காது. இன்று குப்பைகள் தொடர்பில் நாட்டில்அனைத்துஇடங்களிலும் எதிர்ப்புகள் மட்டுமே உள்ளன. முழு நாட்டுக்கும் சவாலான இத்தகைய பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்க முயற்சிக்கின்ற போது எதிர்ப்புகளைப் போன்றுதீர்வுகளும்மிகவும் முக்கியமாகும். இன்று நாட்டுக்குத் தேவையாக இருப்பது மக்களின் நல்லொழுக்கமும் பண்பாடுமாகும். பௌதீகவளங்கள்எவ்வளவு அபிவிருத்தி செய்யப்பட்ட போதும் நல்ல மனிதனையும் நல்ல சமூகத்தையும் உருவாக்குவதற்குஆன்மிக தத்துவமே அவசியமாகும். அந்தவகையில் இத்தகைய தியான நிலையங்கள் அமைக்கப்படுவது அவசியமாகும். -என்றார். நிகழ்வில் மறைந்த முன்னாள்அமைச்சர் சரத்சந்திர ராஜகருணாவின் 77ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த ஸ்ரீ சீலரத்ன நாயக்க தேரர் நினைவு தியான மண்டபமும், புத்தர்சிலையும்திறந்து வைக்கப்பட்டன. (ஐ-10)



## பொலிஸார் நடமாடும் சேவை மட்டுவிலில் நேற்று ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 23
தென்மராட்சிப்பிரதேசத்தில்பொலிஸார்முன்னெடுத்துவரும் நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு மட்டுவில் வளர்மதி விளையாட்டரங்கில் நேற்றுஆரம்பிக்கப்பட்டது. யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்டனீஸ்லஸ் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நடமாடும் சேவையூடாக ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பயன்பெறலாம். அங்கு மக்களின் குறைகளைக் கேட்டறிந்து தேவைகளை நிறைவு செய்வதற்குப்பொலிஸார்நடவடிக்கைஎடுப்பர்என்றுதெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி. விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கைதடிசித்தமருத்துவர்வே. திருமால், சர்வமததலைவர்கள், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## திருத்தி வாசிக்கவும்

இயந்திரக் கோளாறு காரணமாக இன்றைய சூரியகாந்திப் பக்கங்கள் சிலவற்றின் தலைப்புகள் விடுபட்டுள்ளன. 21ஆம் பக்கத்தின் சினிமா விமர்சனத்தை 'ரூபாய் மதிப்புக் குறைவு' என்றும், 23ஆம் பக்கத்தில் விடுபட்டுள்ள சிறுவர் பக்கத்தின் தலைப்பை 'பச்சை நிறமே பச்சை நிறமே' என்றும், 26ஆம் பக்கத்தின் தலைப்பை செல்லும் வழியின் தூரம் என்றும்திருத்தி வாசிக்கவும்.

# சைட்டம் கல்லூரிக்கு எதிராக துண்டு அறிக்கைகள் விநியோகம்

ஹற்றன், ஜூலை 23
சைட்டம்மருத்துவகல்லூரிக்குஎதிர்ப்புத் தெரிவித்து ஹற்றனில் பல்கலைக்கழக மாணவர்கள்பொதுமக்களுக்குத்தெளிவூட்டும் வகையில் துண்டு அறிக்கைகளை நேற்று விநியோகித்தனர்.

இந்தநடவடிக்கையில்25இக்கும்அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் வியாபார நிறுவனங்களுக்குச் சென்றும், பொதுமக்கள் நடமாடும் பகுதியிலும் துண்டு அறிக்கைகளை விநியோகித்தனர். அதேவேளை கை ஒலிபெருக்கி ஊடாக சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வாசகங்களையும் தெரிவித்தனர். "அரசு சைட்டத்தை மூட வேண்டும், கல்வியை தனியார் மயப்படுத்துவதை நிறுத்த வேண்டும், மலையகப் பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் தளபாடங்கள் பற்றாக்குறை நிலவுகின்ற போதும் அவற்றைக் கவனிக்காதுஒருசிலதனிப்பட்டவளர்ச்சிக்காக செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும்" போன்ற தெளிவூட்டல்களை இதன்போது தெரிவித்தனர். (ஐ-10)





# பொய் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விட்டோம்

## கேப்பாபிலவு மக்கள் ஆதங்கம்

முல்லைத்தீவு, ஜூலை 23
"கொழும்பு அரசும், அரசியல் தலைவர்களும் எமக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானவை. அவர்களின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விட்டோம். இன்று வரை காணி விடுவிப்புத் தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை."

இவ்வாறு கேப்பாபிலவு மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டம் நேற்றுடன் 144 நாள்களை எட்டியுள்ளது. அவர்களின் கோரிக்கைக்கு இதுவரை சாதகமான பதில் வழங்கப்படவில்லை.

"பல தரப்பட்ட அரசியல் தலைவர்கள் போராட்டம் ஆரம்பித்த நாள் தொடக்கம் எம்மை வந்து சந்தித்தனர். கொழும்பு அரசுடன் பேசி காணி விடுவிப்புக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக உறுதி அளித்தும் சென்றனர். போனவர்கள் திரும்பி வரவில்லை. இன்றோ, நாளையோ எங்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்று இந்தத் தறப்பாள் கொட்டகையில் காத்திருக்கிறோம். கொழும்பு வரை சென்று எங்களுக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். எம்மை எவரும் திரும்பிப் பார்ப்பதாக இல்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரியே அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ற-ஜ)

# கிளிநொச்சி மாவட்ட வறட்சி தொடர்பில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூலை 23
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலமை தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் நேற்று நடத்தப்பட்டது.

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலமை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

குடிதண்ணீர் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான இடங்களை அடையாளம் காணல், அங்கு நீர் தாங்கிகள், பவுசர்கள் வழங்க நடவடிக்கை எடுத்தல், கால்நடை விவசாயம் மீன்பிடி போன்ற திணைக்கள அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டுதல் போன்ற திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிலவுகின்றது. விவசாயம், கால்நடை, மீன்பிடி உள்ளிட்ட விடயங்களில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி பிரதேச செயலர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர், இடர் முகாமைத்துவத் திணைக்களத்தினர், கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தினர், விவசாய திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-10,6)



# 2020இல் நிச்சயம் ஆட்சி மாற்றம்

## மகிந்த அணியினர் நம்பிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 23
நாட்டில் 2020 ஆம் ஆண்டு நிச்சயம் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படும். நாம் எதிர்பார்க்கும் சிறந்த தலைவர் ஒருவரை ஆட்சிபீடம் ஏற்றுவோம்.

இவ்வாறு மகிந்த அணியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மகிந்த அணியின் தமிழர் பிரதிநிதிகளின் ஒன்று கூடல் மட்டக்களப்பு அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது

தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் செய்கின்ற செயல்களை மக்கள் அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களும் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்றனர். மக்கள் எதிர்பார்த்தவற்றை ஆட்சியில் இருப்பவர்கள் பெற்றுக் கொடுக்கப் பின் நிற்பதால், ஏமாற்றம் அடைந்துள்ளனர். அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, நாட்டுக்கு சேவையாற்றக் கூடிய , மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு தலைவரைத் தெரிவு செய்வார்கள். அதனால் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.
என்றனர்.

இந்த ஒன்று கூடலில் நாமல் ராஜபக்சவின் இணைப்பு செயலாளர் ரா.பாஸ்கரன், மட்டக்களப்பு இணைப்பாளர் நா.நகுலேஸ்வரராசா, அமைப்பின் புதிய உறுப்பினர்கள் மகளிர் அணி மற்றும் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-10)

# மட்டு. பொருளாதார மைய நிலையத்துக்கு அடிக்கல்

மட்டக்களப்பு, ஜூலை 23
மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார மைய நிலையத்துக்கான அடிக்கல் களுதாவளையில் நேற்று நடப்பட்டது.

"இந்தப் பொருளாதார மைய நிலையம் 300 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. 4 மாதங்களில் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்படும்" என்று கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரேணுகா ஏக்கநாயக்க தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் கிராமிய பொருளாதார அமைச்சர் பீ.ஹரிசன், கிராமிய பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எஸ்.அமீரலி, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட செயலர், பிரதேச செயலாளர்கள், அமைச்சின் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-10,46)

# நிதி ஒதுக்கப்படாததால் விவசாயத்துறை வீழ்ச்சி

## மத்திய மாகாண விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டு



நுவரெலியா, ஜூலை 23
மலையகப் பகுதிகளின் விவசாய அபிவிருத்திக்கு கடந்த காலங்களில் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை. விவசாயத்துறை பெரும் வீழ்ச்சி அடைந்திருந்தது. தற்போது மலையக அபிவிருத்திக்கு பல உதவிகள் வழங்கப்படுகின்றன. மாவட்டம் அபிவிருத்தி நோக்கிச் செல்கிறது.

இவ்வாறு மத்திய மாகாண தமிழ் கல்வி, விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில், இந்து கலாசார அமைச்சர் எம்.ரமேஸ்வரன் தெரிவித்தார்.

நன்னீர் மீன் வளர்ப்புக்கு நிதி வழங்கும் நிகழ்வு நுவரெலியாவில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

நன்னீர் மீன்பிடித்துறை அபிவிருத்திக்கு நுவரெலியா மாவட்டத்துக்கு மட்டும் 500 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக வருமானத்தைப் பெற்று வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நன்னீர் மீன் வளர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

நிகழ்வில் பன்மூர் குளத்தில் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டன. மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கணபதி கனகராஜ், பிலிப்குமார், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் டப்ளியூ ஜே.ரணசிங்க, நீர் வள அமைச்சின் தலைவர் சட்டத்தரணி, உபாலி மோட்டி உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-ஜ-10)

# அமைச்சர் ஹிஸ்புல்லாவை சந்தித்தார் சவூதி இளவரசர்

மட்டக்களப்பு, ஜூலை 23
இலங்கைக்கு வந்துள்ள சவூதி அரேபியாவின் முன்னணி முதலீட்டாளரும், இளவரசருமான அப்துல் அஸீஸ், இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை, நகர அபிவிருத்தி, கட்டட அமைப்பு மற்றும் வீடமைப்பு துறைகளில் முதலீடு செய்வது தொடர்பில் அதில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. எதிர்வரும் திங்கட்கிழமை அரச தலைவர், தலைமை அமைச்சர் உள்ளிட்ட அரச உயர் மட்டத்துடனான பேச்சுக்களை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு கெம்பஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் பொறியியலாளர் ஹிராஸ் ஹிஸ்புல்லா, அஷ்ஷெய்யித் மசூர் மௌலானா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சவூதிக்குழு இன்று மட்டக்களப்புக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது. அங்கு முதலீடு செய்யவுள்ள பகுதிகளுக்கு களப் பயணமொன்றையும் மேற்கொள்ளவுள்ளதுடன், பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-10)



# ஜனநாயக முறையிலேயே அரசைக் கவிழ்க்க முடியும்

## தென் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 23
தற்போது ஆட்சியிலுள்ள மைத்திரி தலைமையிலான அரசை ஜனநாயக முறையில் மட்டுமே கவிழ்க்க முடியும். எவர் ஆட்சியில் இருப்பர் என்று மக்களால் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

இவ்வாறு தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் தெரிவித்தார்.

காலியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தற்போதைய அரசை கவிழ்க்க பல சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் அந்தத் திட்டங்கள் எவையும் பயனற்றவை. ஜனநாயக ரீதியில் மட்டுமே அரசைக் கவிழ்க்க முடியும். இந்த அரசு தொடர்ந்து ஆட்சியில் இருக்குமா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த தற்போதைய அரச தலைவருக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- என்றார். (ற-ஜ-10)



# தரம் 5 மாணவருக்கு வழிகாட்டல் முகாம்

மட்டக்களப்பு, ஜூலை 23
இந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சுற்றாடல் கல்வி பயிற்சிமுகாம்முறாவோடை சக்தி வித்தியாலயத்தில் நேற்று நடத்தப்பட்டது. பயிற்சி முகாமில் மாணவர்களுக்குச் செயன்முறை ரீதியானவிளக்கவுரைகள்நடத்தப்பட்டன.

முறாவோடைசக்திவித்தியாலயம், சுங்கான்கேணிஅரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கறுவர்க்கேணிவிக்னேஸ்வரா இளநிலை பாடசாலை, கிண்ணையடிசரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் அதில் கலந்து கொண்டனர்.

இந்தமுகாமைநடத்தப்புதிய சந்தர்ப்பங்கள் அமைப்பு அனுசரணை வழங்கியது. கோறளைப்பற்று கோட்டக் கல்விபணிப்பாளர்நா.குணலிங்கம்தலைமையில் ஆசிரியஆலோசகர்யோ.கோபாலரெட்ணம் வழிகாட்டலில் முகாம்நடத்தப்பட்டது. (ற-ஜ-10)

# துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் நடைபெற்ற இடம்



# விபத்தில் இருவர் காயம்

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நேற்றுகாலைநடந்தவாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சிகரைச்சி பிரதேச செயலகம் முன்பாக முச்சக்கரவண்டியொன்றும், மோட்டார்சைக்கிள்ஒன்றும்மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துதொடர்பானமேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்மீதானதுப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் தொடர்பில் கேள்வியுற்றதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேரில் சென்று நலன் விசாரித்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலமும் மருத்துவமனைக்கு வந்திருந்தார். இதேபோன்று பல சட்டத்தரணிகளும் மருத்துவமனைக்கு வந்து, நீதிபதியுடன் கலந்துரையாடினர்.

# ஒலுவில் துறைமுகத்துக்கு நேரில்சென்றார்சமரசிங்க

## குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார்



மட்டக்களப்பு, ஜூலை 23
ஒலுவில் துறைமுகத்தில் உள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று நேரில் சென்றார்.

அங்கு சென்ற அமைச்சர் மக்கள் பிரதிநிதிகளிடமும் துறைமுகத்தில் உள்ள பிரச்சினைகள்தொடர்பாகக்கேட்டறிந்தார். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முகம்மட் நசீர் குறித்த துறைமுகத்தில் உள்ள பிரச்சின்னகள் தொடர்பாக எடுத்துக்கூறினார். மண் அகழ்வு பிரச்சினை, மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள், நட்டஈடுவழங்காமை, காணி உரிமையாளர்களுக்கான பணத்தைவழங்குதல்போன்றவற்றுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க உறுதியளித்தார்.

அமைச்சர்தயாகமகே, பிரதியமைச்சர்களான பைஷல் காசீம், முத்துஹெட்டிக்கம, கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முகம்மட்நசீர், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சின்செயலாளர்ஜயம்பத்தி, அம்பாறை மாவட்ட மேலதிக செயலர் உள்ளிட்டவர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ற-ஜ-10)

# தாய்வான் இளைஞர் குழு மட்டக்களப்புக்கு பயணம்

தாய்வான் நாட்டின் தாய்ச்சுன் பன்னாட்டு வை.எம்.சீ.ஏநிறுவனத்தின்இளைஞர் குழு மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிபர் சங்கத்துக்கு நேற்றுச்சென்றனர்.

இளைஞர் குழுவை மட்டக்களப்புவை.எம்.சீ.ஏநிறுவனப் பிரதிநிதிகளும், வை.எம்.சீ.ஏ வாழ்வோசை பாடசாலை மாணவர்களும் வரவேற்றனர்.

அதன் பின்னர் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றநிகழ்வில் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ.யின் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், மட்டக்களப்பு நகரின் சிறப்புக்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக்குழு7நாள்கள்மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏயில் தங்கி இருந்து மட்டக்களப்பு, வாகரை ஆகிய பிரதேசங்களில்பல்வேறுசமூகசேவைப் பணிகளில்ஈடுபடவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-10)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## வடக்கு...

தும் உண்மையான தாக்குதலாளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் நாளை திங்கட்கிழமை வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியை இலக்கு வைத்த தாக்குதல் நீதித்துறை மீதான அச்சுறுத்தலாகும். அதனைத் திட்டமிட்டுச் செய்தோரை நீதிக்கு முன் நிறுத்தும் பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு. எனவே உண்மையான தாக்குதலாளியைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்தப் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை வலியுறுத்தி நாளை திங்கட்கிழமை வடக்கு மாகாணச் சட்டத்தரணிகள் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகமாட்டார்கள்" என்று யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் நேற்றிரவு அறிவித்தது. (த-வ)

## நீதித்துறையே...

சேவை ஆணைக்குழு இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுகின்றேன். நீதித்துறையைப் பாதுகாக்கவேண்டும். நீதிபதிகளையும் பாதுகாக்க வேண்டும். நீதிபதிகள் சுயாதீனமாக சுதந்திரமாகச் செயற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுகின்றேன் - என்றார். (த-5-37)

## சம்பவத்தை...

மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் துணிச்சலானவர். எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் அடிபணியமாட்டார். அவரால் அண்மைக்காலமாக நடத்தப்பட்ட வழக்குகள் மிகவும் பயங்கரமானவை.

எனவே அவரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் கண்டிக்கத்தக்கது. இந்தத் தாக்குதலை மேற்கொண்ட உண்மையான தாக்குதலாளி சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் பொலிஸார் இந்த விடயத்தில் காட்டும் அவசரம் எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. நீதிபதி மீதான உண்மையான இலக்கை பொலிஸார் திசை திருப்ப முனைகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது" என்று சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் மேலும் தெரிவித்தார். (த-வ)




மாவிட்டபுரம்கந்தசுவாமிஆலயத்தின்வருடாந்தப்பெருவிழாவின்தேர்த்திருவிழாநேற்றுசிறப்புறநடைபெற்றது. அதிகாலை முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிசேகம் இடம்பெற்றது. தொடர்ந்து கந்தப் பெருமான் தேரில் எழுந்தருளிபக்தர்களுக்குக் காட்சியளித்தார். (ற-ஜ-10)

# நல்லூரானின் திருவிழாவுக்காக நல்லூர் நகரமே விழாக்கோலம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நல்லூர் நகரமே விழாக் கோலம் பூண்டு வருகின்றது. வீதிகள் தோறும் பந்தல்கள் அமைக்கும் பணிகளும் ஆலய சூழலை அழகுபடுத்தும் பணிகளும் மிக மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் வாளாகம் முழுவதும் உயரிய கம்பங்களின் மேல் நந்திக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அத்துடன் ஆலயச் சுழலலை அண்மித்ததாக சிவப்பு வெள்ளை நிறத்திலான படங்குகள் கட்டும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆலயச் சூழல் தூய்மையாக்கப்பட்டு வெளி வீதியில் மின்குமிழ்கள் பொருத்தும் வேலைகளும் நடைபெறுகின்றன. கோபுரங்கள் வர்ணங்கள் பூசப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றன. ஆலய சூழலிலுள்ள அன்னதான







மடங்களில் அடியவர்களுக்கான அன்னதானத்தை சிறப்பாக வழங்க ஏற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் இளைப்பாறவும், தாகம் தீர்க்கவும் தண்ணீர்ப்பந்தல்கள் பாரம்பரிய முறையில் கிடுகினால் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் சிறப்பான அம்சமாக 94 வருடங்களாக ஆலய முன் பக்க வீதியில் கிடுகால் வேயப்பட்ட பந்தல் அமைக்கும் அன்பர்கள் இந்த முறையும் அந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. (21,17,ரி)

## விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம். ஜூலை23
ஜீவநதி , காலம் இதழ்களின் விமர்சன அரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பொது வாசகர் குவிமட சிறிய கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
அ.யேசுராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விமர்சன உரைகளை சி.ரமேஸ். அ.குகனேஸ் வரவன், தி. செல்வ மனோகரன், ந.சத்தியபாலன், ந.குகபரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். அதனைத் தொடர்ந்து கருத்தாடல் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது.
(21,12)

## சிறிகதிர்காம கந்தனின் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை23
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நவாலி சிறி கதிர்காமக் கந்தனின் கொடியேற்றம் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.
நவாலி சிறி கதிர்காம முருகன் ஆலய முதன்மைக் குரு கந்தசிரோன்மணி சிவத்திரு மா.பத்மநாதன் தலைமையில் சிறப்பு ஆடிவேல் உற்சவம் இடம்பெற்று இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் உற்சவம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (21,50)

# அராலி மத்தி சாலைச் சீரமைப்புக்கு ரூபா 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு

## மக்கள் சந்திப்பில் சரவணபவன் எம்.பி உறுதியளிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 23
சுமார் 75 வருடங்களுக்கும் மேலாகத் திருத்தப்படாமல் இருக்கும் அராலி மத்தி குமுக்கன் சாலைச் சீரமைப்புக்குத் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து 10 இலட்சம் ரூபாவை வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உறுதியளித்தார்.
அராலி மத்தி ஊரத்தி மகமாயி அம்பாள் ஆலய வளாகத்தில் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
அராலி மத்தி ஊரத்திக் கிராமம் தொடர்ந்தும் அதிகஷ்டப் பிரதேச மாகவே உள்ளது. இது ஏன் அவ்வாறு இருக்கிறது? என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதனை படித்த இளையோர்கள் தான் முன்னெடுக்க வேண்டும். இந்த ஆராய்ச்சியை வைத்துக்கொண்டுசேவை தேவைப்படும் மக்களுக்கான உதவித்திட்டங்களையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ள முடியும்.
இங்கே சாலைப்பிரச்சினை, விளையாட்டு மைதானப் பிரச்சினை, வீட்டுத்திட்டம், மலசலகூடம், இளையோரின் வேலைவாய்ப்பு, குமுக்கன் குள வாய்க்கால் கட்டுமானம் மற்றும் கல்வி தொடர்பில் பேசப்பட்டன.
இந்த அனைத்துப் பிரச்சினை களையும் சம்பந்தப் பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு படிப்படியாகத் தீர்க்க ஆவனசெய்வேன்.
இதில் முதற்கட்டமாக குமுக்கன் சாலைச் சீரமைப்புக்கு எனது பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து பத்து இலட்சம் ரூபா உடனடியாக வழங்குகிறேன்.
இந்தச் சாலையை முழுமையாகச் சீர மைப்பதற்குரிய மதிப்பீட்டு அறிக்கையைத் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுத் தாருங்கள். சம்பந்தப்பட்ட அமைச்சருடன் தொடர்புகொண்டு விரைவில் சாலையை அமைத்துத் தருவேன். அதே போன்று, பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைக்கு மாலைநேரக் கல்வி நிலையத்தில் போதிக்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவையும் ஏனைய உதவித் திட்டங்களையும் வழங்க ஏற்பாடு செய்கிறேன் - என்றார். (21)

## விழிப்புணர்வு ஆற்றுகை


யாழ்ப்பாணம்.ஜூலை23
யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் அலுவலகமும், ராகஸ்வரம் கலை மன்றமும் இணைந்து நடாத்தும் வாக்களார் பதிவு தொடர்பான விழிப்புணர்வு ஆற்றுகை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5மணிக்கு சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
இந்த விழிப்புணர்வு ஆற்றுகை 'பதிய வேண்டும் மக்களே பதிய வேண்டும் தேர்தல் டாப்பில் உங்கள் பெயர் பதிய வேண்டுமே' என்ற கருப்பொருளில் பல பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றது.
இந்த ஆற்றுகை உங்கள் பிரதேசங்களிலும் நடைபெறவேண்டும் என்றால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் தேர்தல்கள் அலுவலகத துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (21,12)

மட்டுவில் சந்திரபுரம் கிராமத்துக்கு

# ரூபா 42 லட்சம் செலவில் குழாய் மூலம் குடிதண்ணீர்

தென்மராட்சி ஜூலை 23
குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை காணப்படும் மட்டுவில் சந்திரபுரம் கிராமத்துக்கு சாவகச்சேரி பிரதேச சபையால் 42 லட்சத்து 72 ஆயிரம் ரூபா செலவில் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது. என தெரிவிக்கப்பட்டது.
அந்தப் பகுதியில் உள்ள கல்வம் சிவன் ஆலயத்துக்கு அருகில் குடிதண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டு அந்தப்பகுதியில் காணப்படும் இடியூற்று கிணற்றிலிருந்து நீர் பெறப்பட்டு கிராமத்திற்கு வழங்கப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. மாகாண பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டிலிருந்து தாங்கி மற்றும் குழாய்கள் அமைக்கப்படவுள்ளன. (21,9)

# ஆடி அமாவாசையை முன்னிட்டு மண்சட்டி வியாபாரம் அமோகம்



யாழ்ப்பாணம், ஜூலை 23
அமரத்துவம் அடைந்த தந்தையரை நினை கூர்ந்து இந்து மக்களால் பின்பற்றப்படும் முக்கிய விரதமான ஆடி அமாவாசை இன்று ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நிகழ்வை முன்னிட்டு நேற்றையதினம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் மண் சட்டிகளின் வியாபாரம் சூடு பிடித்திருந்தது.
யாழ்ப்பாணக் குடாநாட்டின் முக்கிய பொதுச் சந்தையான திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் மண் சட்டிகளின் வியாபாரம் இடம்பெற்றது. கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் மண் சட்டிகளின் வியாபாரம் சூடு பிடித்துள்ளமையைக் காண முடிகிறது.
மண் சட்டிகள் ஒவ்வொன்றும் தரத்துக்கேற்ப 30 ரூபா, 50 ரூபா, 100 ரூபா, 150 ரூபா எனப் பல்வேறு விலைகளிலும் விற்பனை செய்யப்பட்டன. இவ்வருடம் கடந்த வருடத்தை விட அதிகளவான மண் சட்டிகள் விற்பனை செய்யப்படுவதாக திருநெல்வேலிப் பகுதியில் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக மண் சட்டி வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நல்லூரைச் சேர்ந்த மு. ரவிக்குமார் தெரிவித்தார். (21,8,17)



## இரணைமடுக் குளத்தின் தண்ணீர் மட்டம் குறைந்ததால் மீனவர்கள் பாதிப்ப

### வறட்சி நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி ஜூலை 23
கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் கடும் வறட்சியுடனான காலநிலை காரணமாக மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையால் விவசாயம், நன்னீர் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதுடன் குடி தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இரணைமடு குளத்தை நம்பி வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்லும் நன்னீர் மீன்பிடியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமக்கு நிவாரணங்களை வழங்க அதிகாரிகள் முன்வரவேண்டும். என்று இரணைமடுக்குளத்தில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமையால் நாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எமக்கு உதவ எவரும் முன்வரவில்லை. இரணைமடுக் குளத்தை நம்பி சுமார் 200 மேற்பட்ட குடும்பங்கள் வரை வாழ்வாதாரத் தொழிலை முன்னெடுத்து வருகின்றனர். வறட்சியினால் குளத்தின் நீர்மட்டம் வற்றியுள்ளது. இதனால் 200 குடும்பங்களை சேர்ந்த 1000க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது 4 அடி நீர் காணப்படுவதாக தெரிவிக்கின்ற போதிலும் 2 அடி நீர் மாத்திரமே குளத்தில் காணப்படுகின்றது.. மிகுதி சேறாகவே காணப்படுகின்றது. இரணைமடுத் திட்டத்தின் அபிவிருத்திப் பணிக்காக திறந்துவிடப்பட்ட நீராலேயே இவ்வாறானதொரு பிரச்சினைக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம்.
எமக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். குறைந்தது 6 மாதகாலத்துக்காவது நிவாரணம் வழங்க வேண்டு என்றார்.
"இரணைமடு குளத்தின் அபிவிருத்தி தொடர்பில் வரையப்பட்ட திட்டத்தில் குறைந்தது 5 அடி நீர் தேக்க வேண்டும் என குறிப்பிட்டப்பட்டிருந்தது.
தற்போது நீர் மட்டம் 3 அடியாக காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக விவரங்களைச் சேகரிக்குமாறு உரிய துறை அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும்." என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
(21.6.34)

# மயிலிட்டியின் முழுமையான அபிவிருத்தியால் தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புக் கிடைக்கும்

## யாழ். மாவட்டச் செயலாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23
மயிலிட்டித் துறைமுக அபிவிருத்தியுடன் அந்தப் பகுதிக்கான உட்கட்டுமான வசதிகளும் ஏற்படுத்தவேண்டிய அவசியப்பாடு உள்ளது. இவை தொடர்பில் கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சர் சிறப்புக் கவனம் செலுத்தி அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் மயிலிட்டியை முழுமையாக அபிவிருத்தி செய்வதோடு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி தேசிய வருமானத்திலும் பங்களிப்புச் செய்ய முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.
வலி.வடக்குப் பகுதியில் அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டித்துறைமுகப் பகுதியில் கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: "27 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட இந்தத்துறைமுகமானது எந்த அபிவிருத்தியும் இன்றி உள்ளன. மயிலிட்டியில் பல அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளதாக மீனவர் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அவர்களது கோரிக்கை நியாயமானது . அதேபோன்று தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 54 ஏக்கர் நிலப்பகுதியில் உடனடியாக குடியமர்வதற்கு 249 குடும்பங்கள் முன்வந்துள்ளனர். அதனால் அவர்களுக்கான வீட்டு வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் வீட்டு வசதி, துறைமுக அபிவிருத்தியுடன் இப்பகுதிக்கான உட்கட்டுமான வசதிகளும் ஏற்படுத்தவேண்டிய அவசியப்பாடும் உள்ளது. எனவே இவை தொடர்பிலும் கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சர் சிறப்புக் கவனம் செலுத்தி அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டால் இந்தப் பகுதியினை முழுமையாக அபிவிருத்தி செய்வதோடு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி தேசிய வருமானத்திலும் பங்களிப்புச் செய்ய முடியும் என்றார்.
அடுத்து உரையாற்றி மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் "மயிலிட்டித் துறைமுகப் பகுதியில் மீனவர்கள் உடனடியாக தொழிலில் ஈடுபடுவதற்கான அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வழங்குவதோடு இந்தப் பிரதேசத்திலுள்ள இருந்து அழிவடைந்த 4 ஆலயங்களின் சீரமைப்புக்கும் நிதி வழங்கப்படும் . அதாவது உடனடியாக மீனவர்கள் கடலிற்கு இறங்குவதற்காக ஓர் வாடி வசதி அவர்களுக்கான கழிப்பறைகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மயிலிட்டித் துறைமுகமானது இலங்கையிலேயே இரண்டாவது பெரிய வருமானத்தை ஈட்டிய மீன்பிடித் துறைமுகம். 1990ஆம் ஆண்டுக்கு முன்பே இங்கு ஆயிரத்து 500 மீனவர்கள் நேரடியாகவும் 3 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் மறைமுகமாகவும் நன்மை பெற்ற ஓர் துறைமுகம். இதனை அபிவிருத்தி செய்ய வேண்டிய ஓர் கடப்பாடு எமக்கு உண்டு. இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பிலும் ஆராயப்படுகின்றது. இந்தப்பகுதியில் உள்ள 4 இந்து ஆலயங்களுக்கும் ஓர் கிறிஸ்தவ ஆலயத்தின் சீரமைப்புக்கும் உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதில் 4 இந்து ஆலயங்களுக்கும் எனது அமைச்சின் ஊடாக உதவ முடியும். இருப்பினும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் கிறிஸ்தவ ஆலயத்துக்கு பரிந்துரை செய்யமுடியும். இங்கே தொழில் புரிவதானால் மீனவர்கள் குடியேற வேண்டும். அதற்கான வசதிவாய்ப்புக்கள் தொடர்பிலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனால் உட்கட்டுமான அபிவிருத்திகள் தொடர்பிலும் கவனத்தில் கொள்ளப்படு என்றார்.
மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் குணபாலசிங்கம் உரையாற்றுகையில், மயிலிட்டிக் கிராமத்தில் துறைமுகம் உள்ளிட்ட 80 ஏக்கர்கள் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட பகுதியில் 249 குடும்பங்கள் மட்டுமே குடியமரமுடியும். ஆனால் அந்த 249 குடும்பங்களையும் தவிர்த்து மேலும் ஆயிரம் குடும்பங்கள் மீள் குடியமரக் காத்திருக்கின்றனர். அவர்களின் பிரதேசங்கள் விடுவிக்கப்படவேயில்லை. அவ்வாறு அவர்களின் பிரதேசங்களும் விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே உண்மையான மீள்குடியமர்வையும் முழுமையான தேசிய உற்பத்தியையும் எதிர்பார்க்கலாம்.
மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் அதிகம் பருத்தித்துறைப் பகுதியில் வாழ்வதனால் பருத்தித்துறை வீதி திறக்கப்பட வேண்டும். எமது கிராமத்தின் 3 கிராம அலுவலகர் பகுதி உட்பட வலி. வடக்கின் எஞ்சிய பிரதேசங்களும் விரைவில் விடுவிக்கப்படவேண்டும். இவற்றோடு இந்தப்பகுதியில் மீள்குடியமரும் மாணவர்களுக்கான பாடசாலைகளை உடனடியாக விடுவிப்பதோடு மருத்துவமனை வளாகமும் விடுவிக்கப்பட வேண்டும்" - என்றார்.
(21.101)

## அவசர சிகிச்சைப் பிரிவிலுள்ளவரை அடையாளம் காணுமாறு கோரல்

வீதி விபத்தில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட ஆண் ஒருவரை அடையாளம் காட்டுமாறு கோரப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சிறிபவானந்தராஜாவால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உடம்பில் பலத்த காயங்களுடன் எச்வை 9251 இலக்க முச்சக்கர வண்டியில் ஆண் ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையிலிருந்து நேற்றுமுன்தினம் பி.ப. 2.30 மணியளவில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
தற்போது அந்த நபருக்கு விபத்து அவரச சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது.
அந்த நபரின் உறவினர் அல்லது உரித்துரையோர் வந்து அடையாளத்தை உறுதிப்படுத்துமாறும் கேட்டுகொள்கின்றேன் என்றுள்ளது. (வ-21)

## குழாய்க்கிணறு தோண்ட முயற்சித்தவருக்கு எச்சரிக்கை

அச்சுவேலி.ஜூலை23
அனுமதி பெறாமல் ஆழ்துளைக் குழாய்க்கிணறு தோண்டுவதற்கு முயற்சித்த காணி உரிமையாளரும் ஆழ். துளைக்குழாய்க்கிணறுதோண்டும்நிறுவனத்தின் பணியாளரும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். குழாய்க்கிணறு அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டது.
இந்தச் சம்பவம் அச்சுவேலி தெற்கில் அண்மையில் நடைபெற்றது.
வெளிநாட்டில் இருந்து தாயகம் திரும்பியவர் தனது வர்ழைத் தோட்டத்தில் பிரதேச சபையிடம் அனுமதி பெறாதநிலையில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைப்பதற்கு முயற்சித்தார். சம்பவ இடத்துக்கு சென்ற வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் அச்சுவேலி பொலிஸாரின் உதவியுடன் குழாய்க் கிணறு அமைக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தினார். வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நிலையில் உள்ளூர் சட்டதிட்டங்கள் தெரியாத நிலையில் குழாய்க்கிணற்றைத் தோண்ட முயற்சித்ததாக தெரிவித்துக் கொண்டதை அடுத்து சம்பந்தப்பட்ட நபரும் குழாய்க்கிணறை அமைக்கும் நிறுவன பணியாளரும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். உரிய முறையில் பிரதேசசபையில் முன் அனுமதி பெறாமல் குழாய்க்கிணறு தோண்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் யு.ஜெலீபன் அறிவித்துள்ளார்.
(21.11)

### நகரசபையின் டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகள் இடம்பெற்றன

அரச பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சால் அனுப்பப்பட்ட சுற்றிக்கையின் பிரகாரம் சாவகச்சேரி நகரசபையின் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி திண்மக்கழிவு அகற்றும் இடத்தில் நடைபெற்றன. அரச தலைவரின் அலுவலகத்தால் அனுப்பப்பட்ட' நாமே ஆரம்பிப்போம் டெங்குவை ஒழிப்போம் தேசிய நடவடிக்கையுடன் ஒன்றிணைவோம்" என்ற இணைந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிகழ்வு இடம்பெற்றது. நகரசபை சபைச் செயலாளர் கா. சண்முகதாசன் தலைமையில் சபையின் அலுவலர்கள், பணியாளர்கள் எனப்பலர்கலந்துகொண்டு அங்கு காணப்பட்ட பொலித்தீன் தாள்கள் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.
(21.9)

# குளங்களின் சீரமைப்பில் ஈடுபடுவோருக்கு இந்தவருடம் சம்பளக்கொடுப்பனவு

## தென்மராட்சிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

தென்மராட்சி ஜூலை 23
தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் குளங்களின் சீரமைப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு உலர் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக இந்த வருடம் வேலை நாட்களுக்கான வேதனம் வங்கிக் கணக்கு ஊடாக வழங்கப்படுமென தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது, பிரதேசத்தில் 40 லட்சம் ரூபா செலவில் ஆறு குளங்கள் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சரசாலை தெற்கு மாத்தளான்குளம், வெள்ளாம்போக்கட்டிவண்ணான் குளம், கெற்பேலி தரவைக் குளம், நாவற்குழி கிழக்கு நெலிக்கன்குளம், வரணி இயற்றாலை நெத்தலிக்குளம், நாவற்குழி மேற்கு கோப்பியன்குளம் ஆகியவை உலக உணவுத் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்டு வருகின்றன.
உலக உணவுத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கடும் வேலைத்திட்டங்களில் பங்கு பற்றுவோருக்கு முன்னைய காலங்களில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.
இந்த வருடம் மேற்கொள்ளப்படும் 6 குளங்களின் சீரமைப்புப் பணிகளில் பணியாற்றுவோருக்கு சம்பளக் கொடுப்பனவு வங்கியூடாக வழங்கப்படடவுள்ளது என்றார்.
(21.9)

## தேசியமட்டப் போட்டியில் முல்லை.மாணவன் இரண்டாமிடம்

முல்லைத்தீவு, ஜூலை 23
அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியில் முதலாம் பிரிவு வாசிப்பில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முல்லைத்தீவு வள்ளிபுனம் மகாவித்தியாலய மாணவன் வரதராஜ் தமிழ்வழுதி இரண்டாம்இடத்தைப்பெற்றுக்கொண்டார். கடந்த 9ஆம் திகதியன்று டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்மொழித் தின தேசிய நிலைப் போட்டியில் கலந்து கொண்டே அந்த மாணவன் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டார்.
(21)

## 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 23
கிளிநொச்சி, பெரியபரந்தன் பகுதியில் 20 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்பு பிரிவினர் தெரிவித்தனர்.
கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை குறித்த பகுதிக்குச் சென்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்னவின் சிறப்புப் பிரிவினர் 20 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த நபரரைக் கைது செய்தனர். அவரிடம் இருந்து 20 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்" என்றும் பொலிஸார் தெரி வித்தனர்
(21,6)

## வவுனியா பாவற்குளத்தின் கீழான உப உணவுப் பயிர்ச்செய்கை வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 23
வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் பெரிய நீர்ப்பாசனக் குளமாக விளங்கும் பாவற்குளத்தின் கீழ் இந்த ஆண்டு சிறுபோகம் முற்று முழுதாக உப உணவு பயிர்ச்செய்கையானதாக அமைந்தது. அதில் வெற்றியும் கிடைத்துள்ளது என விவசாய திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.
'இந்த ஆண்டு கால போகத்தில் பாவற்குளத்தின் கீழ் சிறந்த அறுவடை பெறப்பட்டது என்றால் மிகையாகாது. சிறந்த சிக்கன நீர்ப்பாசனத்தின் மூலமே சிறந்த அறுவடையைவிவசாயிகள் பெற்றனர்.
இதனை தொடர்ந்து சிறுபோகத்தில் 1000 ஏக்கர் உப உணவு உற்பத்தி மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. எனினும் 500 ஏக்கரில் மிகவும் வெற்றிகரமாக உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய திணைக்களம் ஆகியன இந்தத்திட்டத்தில் இணைந்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளனர். பாவற்குளத்தின் கீழ் விதை உற்பத்தி, தேசிய உணவு உற்பத்தித் திட்டம், வயல் நிலங்களில் மாற்றீட்டு பயிர்ச்செய்கை, மாகாண குறித்தொதுக்கப் பட்ட நிதியம் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் நிலக்கடலை 300 ஏக்கரிலும், உழுந்து 150 ஏக்கரிலும், கௌபி 10 ஏக்கரிலும்,சோயா 50 ஏக்கரிலும், சோளம் 15 ஏக்கரிலும், விதை உற்பத்திக்காகவும் சாதாரண உற்பத்தி நோக்கத்துக்காகவும் செய்கை பண்ணப்பட்டுள்ளது' என்று விவசாயத் திணைக்களம் தகவல்கள் மேலும் தெரிவித்தன.
(21,402)

### கொடுக்குளாய் – இயக்கச்சி இடையேயான

# அபாய வெளியேற்றப் பாதையின் முழுமையான சீரமைப்புக்கு ரூ. 45 மில்லியன் தேவை



யாழ்ப்பாணம், ஜூலை 23
வடமராட்சி கிழக்கில் மக்களின் 7.8 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்புடன் இடர் முகாமைத்துவ அமைச்சின் 12 மில்லியன் ரூபா நிதியுடன் சீரமைப்புச் செய்யப்பட்ட கொடுக்குளாய் - இயக்கச்சி அபாய வெளியேற்றப் பாதையின் ஒருபகுதி நேற்று முன்தினம் இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவால் திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பாதையை முழுமையாகச் சீரமைப் பதற்கு இன்னும் 45 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக அமைச்சரிடம் மக்கள் கேட்டுக் கொண்டனர்.
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு அபாய நிலையின் போது வெளியேறுவதற்கு உரித்தான வீதி மிக் நீண்ட காலமாக சீரமைப்புச் செய்யப்படாமல் இருந்தது. இந்தப் பாதையைச் சீரமைப்புச் செய்வதற்கு யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இந்தப் பாதை அமைப்புக்கான நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களின் போதும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலையில் அந்தப்பிரதேச மக்கள் இணைந்து புலம்பெயர் நாடுகளில் வசித்து வருபவர்களுடைய பங்களிப்புடன் சுமார் 78 இலட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்டனர். அந்த நிதியைப்பயன் படுத்தி பாதைக்கு தேவையான மக்கி மற்றும் மூலப்பொருள்களை போட்டிருந்தனர். பின்னர் அந்தப்பாதை இடர் முகாமைத்துவபிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இடர் முகாமைத்துவ பிரிவினரால் மேலதிகமாக 12 மில்லியன் ரூபா செலவில் பதையின் மேலதிக சீரமைப்பு பணிகள் இடம்பெற்றன. பகுதியளவில் சீரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள்" இந்தப் பாதை முழுமையாகச் சீரமைக்கப்படாதுள்ளது. முழுமையாகச் சீரமைக்க வேண்டுமானால் இன்னும் 45 மில்லியன் ரூபா நிதி தேவை எனக் கூறப்படுகின்றது. எனவே அந்த நிதியை ஒதுக்கி பாதையை சீரமைக்க வேண்டும்" என்று அமைச்சர் பிரியதர் சன யாப்பாவைக் கேட்டுக் கொண்டனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக இடர்முகாமைத்துவ அமைச்சர் பதிலளித்தார்.
நடைபெற்ற இந்த நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர், இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர், மாவட்ட இடர் முகாமைத் துவப் பிரிவின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாண வர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
(21,6)

### விபத்தை ஏற்படுத்தியவருக்கு ரூபா 9,500 தண்டம்

விபத்தின் போது பலத்த காயம் ஏற்படுத்தியமை உட்பட 5 குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடைய நபருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று 9 ஆயிரத்து 500 ருபாவை தண்டமாக செலுத்துமாறு உத்தரவிட்டது
இந்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன்றில் பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டார். இதனை அடுத்தே அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.
(21,12)



பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ சீ த.க.பாடசாலை மாணவர்கள் நேற்று முன்தினம் டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகளில் ஈடுபட்டு, பாடசாலை வளாகத்தில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர்.
(21,9)

# மாகாண அபிவிருத்தியில் தேனீ வளர்ப்பும் உள்ளீர்ப்பு

## முல்லை. மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் தெரிவிப்பு





முல்லைத்தீவு, ஜூலை 23
மாகாண அபிவிருத்தித்திட்டத்தில் தேனீ வளர்ப்பும் உள்வாங்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்தார்.
ஒட்டுசுட்டான் தட்டயன்மலை கிராமத்தில் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மனோகரனின் தேன் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் இடம்பெற்றது. அதில் விருந்தினராக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"இது வரையில் 145 தேன் பெட்டிகள்விநியோகிக்கப்பட்டன. தேனீ வளர்ப்போர் அதன் மூலம் சிறந்த அறுவடையை பெறுகின்றனர். தேனீ வளர்ப்பு ஒரு பொழுது போக்காகச் செய்யும் தொழிலாக, மூலதனமில்லாத வருவாயைப் பெறக்கூடிதாகும்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.
நிகழ்வில் தேனீ வளர்ப்புப் பற்றியும், அதனை எவ்வாறு கையாள்வது, அதன் வருவாய் தொடர்பாக வும், தேனீ வளர்ப்பதால் யானைகளின் தாக்கங்களும் குறைவடையும் எனவும் பலர் கருத்துரை வழங்கினர். அதனையடுத்து தேன் அறுவடை இடம்பெற்றது. இதில் முதற்கட்டமாக 1.5 போத்தல் தேன் எடுக்கப்பட்டதுடன் இயந்திர மூலம் தேனைப் பிரித்தெடுப்பது தொடர்பாக செய்முறை விளக்கங்கள் வழங்கப் பட்டன.
ஒட்டுசுட்டான் விவசாயப் போதனாசிரியர் அஜந்தன் தலைமையில் இடம் பெற்ற தேன் அறுவடை விழாவில் பாடவிதானஉத்தியோகத்தர் ரா. மாலினி, பதில் உதவி விவசாயப் பணிப்பாளர் வி. நடனமலர், விவசாயப் போதனாசிரியர் யோ. பிரியதர்சினி மற்றும் பயனாளிகள், பொதுமக்கள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
(21,500)

# ஆட்சியைக் கைப்பற்ற ஆயுதமாகிறார் கோத்தா

## வியூகம் வகுக்கிறது மகிந்த தரப்பு

கொழும்பு, ஜூலை 23
இலங்கையில் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு முயற்சித்து வரும் மகிந்த அணி, இதற்கான தமது இறுதி அரசியல் அஸ்திரமாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவையே முழுமையாக நம்பியிருக்கின்றது எனத் தெரியவருகின்றது.

இதன்படி மக்கள் மத்தியிலுள்ள அவருக்குள்ள செல்வாக்கை நாடி பிடித்துப் பார்ப்பதற்கான பரீட்சைக் களமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை மகிந்த அணி கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட மகிந்த உறுப்பினர் ஒருவர், கோத்தபாயவையும், படையினரையும், அரசமைப்பையும் மையப்படுத்தியே பொது எதிரணியின் பிரசாரம் அமையும் எனவும், பிரசாரப்பீரங்கியாகக் கோத்தபாய செயற்படுவதற்குரிய வாய்ப்பிருக்கின்றது எனவும் கூறினார்.

எனினும், எதிர்காலத்தில் முக்கிய தேர்தலில் களமிறங்குவதற்கு தயாராகிவரும் கோத்தபாய ராஜபக்சவை உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பயன்படுத்தி அதில் தோல்வியேற்படும் பட்சத்தில் அது எதிர்காலத்தில் சிக்கலை ஏற்படுத்தும் என்ற கருத்தும் மகிந்த அணிக்குள் நிலவி வருகின்றது. ஆகவே, விரிவான ஆய்வின் பின்னரே இது விடயத்தில் இறுதி முடிவொன்று எடுக்கப்படவுள்ளது.

அரச தலைவராகப் பதவி வகிக்கும் ஒருவர் இரண்டு தடவைகளே அந்தப் பதவிக்குப் போட்டியிடலாம் என்ற சரத்தை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச 18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாற்றியமைத்தார். இதன்மூலம் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் பதவியை வகிக்கலாம் என்ற நிலை உருவாகியது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட்டது.

புதிய அரசமைப்பிலும் இதே நிலைமை நீடிக்கும். எனவே, எதிர்வரும் தேர்தல்களில் மகிந்த ராஜபக்சவால் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்க முடியாது. எனவேதான், கோத்தபாயவை மகிந்த அணியிலுள்ள மூத்த உறுப்பினர்கள் தமது இறுதி அஸ்திரமாகப் பார்க்கின்றனர்.

சிலவேளை, நாடாளுமன்றத்தின் ஊடாகவே அரச தலைவரைத் தெரிவுசெய்யும்முறை புதிய அரசமைப்பின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டால் பொதுத் தேர்தலில் மகிந்த அணியின் முதன்மை வேட்பாளர் யார் என்ற கேள்வி எழும். மகிந்தவா? கோத்தாவா? என வரும்போது பெரும்பாலான உறுப்பினர்கள் கோத்தா வுக்கே பச்சைக்கொடி காட்டக்கூடும். எனவேதான், கோத்தாவை மையப்படுத்தும் வகையில் மகிந்த அணியின்அரசியல் வியூகம் வகுக்கப்பட்டு வருகின்றது. (த)

## ஐ.தே.க. கூட்டத்தின் மீது சூடு: இருவருக்கு பத்தாண்டு சிறை

### 26 வருடங்களின் பின்னர் தீர்ப்பு

1991ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்திய கூட்டமொன்றின் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதன்போது மூவருக்குக் காயங்கள் ஏற்பட்டன.

இது தொடர்பான குற்றச்சாட்டில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட குருநாகல் பிரதேச சபையின் முன்னாள் தலைவரான பெட்ரிக் கருணாசிங்கவுக்கும், அவரது சகோதரரான பிரியந்த கருணாசிங்கவுக்கும் குருநாகல் மேல்நீதிமன்ற நீதியரசர் திருமதி மேனகா விஜேசுந்தர தலா பத்து ஆண்டுகாலச்சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

1991ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நடத்திய கூட்டத்தின் மீது துப்பாக்கிச்சூடுநடத்தப்பட்டது. இதன்போது அவரது ஆதரவாளர்கள் மூவர் படுகாயமடைந்தனர். கடந்த 26 வருடங்களாக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

## கட்சியை விமர்சிப்போரை குறி வைக்கின்றது ஐ.தே.க

கொழும்பு, ஜூலை 23
பகிரங்கமான இடங்களில் கட்சியின் யாப்புக்கு முரணாக கட்சியை விமர்சிக் கும் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின்செயற்குழுதீர்மானித்துள்ளது.

கட்சி அல்லது அதன் அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றச்சாட்டு அல்லது விமர்சனங் கள் இருக்குமாயின் அதனைக் கட்சியின் செயற்குழு அல்லது நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் முன்வைக்க முடியும்.

இவற்றுக்கு வெளியில் கட்சியை விமர்சிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர்ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் கூடிய செயற்குழு தீர்மானித்துள்ளது.

கட்சியைப் பகிரங்கமாக விமர்சிப்பதாகப் பிரதிய மைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஏற்கனவே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்களில் சிலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. (த)

## கரதியானவில் குப்பை கொட்டினால் நடுவீதியில் படுத்துப் போராடுவேன்

### மேல்மாகாண முதலமைச்சர் எச்சரிக்கை

கொழும்பில்சேகரிக்கப்படும் குப்பைகளை கரதியானவில் கொட்டினால் நடுவீதியில் படுத்துப் போராட்டம் நடத்தப்போவ தாக மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய எச்சரிக்கை செய்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொழும்புக் குப்பைகளை அகற்றும் பொறுப்பு மாகாண முதலமைச்சர் என்ற முறையில் எனக்கே உரித்தானது. எனது விருப்பத்துக்கு மாறாக கொழும்பு மாநகரசபை கரதியான பகுதியில்குப்பைகளைக்குவிப்பதற்கு இடமளிக்கமுடியாது - என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொழும்பு மாநகரசபை ஆணையாளர் வி.கே.ஏ.அநுர, கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பை களைக் கரதியானவில் கொட்டுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருப்பதால் அதைத் தடைசெய்வதற்கு முதலமைச்சருக்கு எவ்வித உரிமையும் கிடையாது எனச் சுட்டிக்காட்டினார்.

குப்பைகளைக் கொட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் அவற்றைக் கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களுக்குத் இடமளிக்கமுடியாது என அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன அண்மையில் திட்டவட்டமாகக் கூறியுள்ள நிலையில், முதலமைச்சரின் இந்தப் பிடிவாதம் பல்வேறு சர்ச்சைகளுக்கு இடமளிக்குமென அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (த-ய)


### மரண அறிவித்தல்



**திருமதி மகேஸ்வரி சண்முகம்பிள்ளை**

வித்தகபுரம் தையிட்டிபுலத்தினைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சண்முகம்பிள்ளை (21.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - பார்வதியார் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் இந்துமதி, சிவமதி (ஆசிரியர், யா/அராலி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயும் விசுவநாதன் (தலைவர், கமக்காரர் அமைப்பும் அராலி தெற்கு/கிழக்கு), ஏகாம்பரநாதன் (ஓய்வு பெற்ற இ.போ.ச முகாமி) ஆகியோரின் மாமியும் தயாழினி, சரவணபவன் (துபாய்), விமலினி, வித்தகன் (மாணவன் தொழில்நுட்பவியல் கல்லூரி, கொக்குவில்), ஷங்குகன் (மாணவன் யா/அராலி சரஸ்வதி ம.வி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, சிவகாந்தம், சிவசிதம்பரம், நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.
021 205 1433, 077 4561 348

தகவல்:
குடும்பத்தினர்



### மரண அறிவித்தல்

**முத்துக்கிருஷ்ணன் சீவரத்தினம் (J.P)**



மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்கிருஷ்ணன் சீவரத்தினம் (J.P) 21.07.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்கிருஷ்ணன் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வரத்தினத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீலிங்கம் மற்றும் ரஜனி, ரமேலா, ரஞ்சிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுஷா, ரமேஸ், ஸ்ரீதரன், ராஜா ஆகியோரின் அன்பு மாமனும் தரணிகா, கிருஷிகான், அஸ்மினா, அட்ஷயன், கார்னிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற துரைராசசிங்கம் மற்றும் கமலாதேவி, செல்வவதி, இந்திராணி, பாலகருணேந்திரன், ஸ்ரீதரன், அருந்தவநாதன், அருந்தவநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரமேஸ் - 0777 246 720

தகவல்:
குடும்பத்தினர்.


## இந்திய அரச தலைவருக்கு மைத்திரி, ரணில் வாழ்த்து

கொழும்பு, ஜூலை 23
இந்தியாவின் புதிய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ராம்நாத் கோவிந்துக்கு இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி நடந்த இந்திய அரச தலைவர் தேர்தலில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட, ராம்நாத் கோவிந்த்சுமார் 66 வீதவாக்குகளைப் பெற்றுவெற்றிபெற்றார்என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தியாவின் அரச தலைவராகப் பதவியேற்கவுள்ள ராம்நாத் கோவிந்துக்கு தமது இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக, இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தமது அதிகாரபூர்வக் கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, இந்தியாவின் 14ஆவது குடியரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ராம்நாத் கோவிந்துக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது கீச்சகப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (த)

## பாடசாலை வானை ஓட்டிய 17 வயது மாணவி கைதானார்

கொழும்பு, ஜூலை 23
பாடசாலைச் சீருடையுடன் பாடசாலை வானொன்றை ஓட்டிச் சென்ற 17 வயது மாணவி யொருவர் கந்தானைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த மாணவி, மாணவர்கள் பலரை வானில் ஏற்றிக்கொண்டு வெவ்வேறு பாடசாலைகளுக்கு முன் இறக்கிவிட்டுச் சென்றதைக் கண்ட கந்தானைப் போக்குவரத்துப் பொலிஸார் அவரை இடையில் நிறுத்திப் பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச்சென்றனர்.

இந்த மாணவியிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாததால் வாகனத்தின் பதிவுப் புத்தகத்தைப் பொறுப்பேற்றுக்கொண்ட பொலிஸார் அதன் பின் மாணவியின் தாயைப் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து எச்சரிக்கை செய்த பின் மாணவியை விடுதலை செய்துள்ளனர். (டு)

# ஆரம்பப் பிரிவு மாணவருக்கு எழுத்துப் பரீட்சை வேண்டாம்

## தேசிய கல்விச் சேவை ஆணைக்குழு அரசிடம் பரிந்துரைப்பு

கொழும்பு, ஜூலை 23
அரச பாடசாலைகளில் தரம் 01 முதல் தரம் 05 வரையிலுள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு எழுத்து மூலப் பரீட்சைகள் எதனையும் நடத்தாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசிய கல்விச் சேவை ஆணைக்குழு அரசிடம் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக்க தெரிவித்ததாவது:

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களுக்கு எழுத்து மூலப் பரீட்சைகள் அவசியமற்றவை. அவர்களை மதிப்பீடுசெய்ய வேறு முறைமைகள் உள்ளன. பாடசாலையின் நிலைமையை அறிந்துகொள்ள தரம் ஐந்துக்குப் பின்னர் பரீட்சையை நடத்தினால் போதுமானது.

பரீட்சை நடத்துவது மாணவர்களைப் போட்டி போடச்செய்வதற்காக அல்ல. பாடசாலை ஆசிரியர்கள் செயற்படுகின்றார்களா?, மாணவர்களின் அடைவு மட்டம் அடையப் பெறுகின்றதா?, அதிபர் பாடசாலையை ஒழுங்காக வழிநடத்திச் செல்கின்றாரா? என்பதை அறிய வேறு வழிமுறைகள் உள்ளன என்றார். (கு)

## 2,000 ரூபா அபராதத்துடன் சரண குணவர்தன விடுதலை

கொழும்பு, ஜூலை 23
தனது சொத்து விவரங்களைப் பிரகடனப்படுத்தத் தவறினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தொடர்ந்திருந்த இரு வழக்குகளிலும் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து அவருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதத்தைச் செலுத்துமாறு உத்தரவிட்ட கொழும்பு முதன்மை நீதிவான் லால் ரணசிங்க பண்டார அவரை இரு வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்தார்.

தேசிய லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றிய சமயம் 2006/2007ஆம் ஆண்டுக்குரிய சொத்து விவரங்களை அவர் சமர்ப்பிக்கவில்லையென இந்த இரு வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. (கு)

## தாதியர் பற்றாக்குறையால் டெங்கு சிகிச்சையில் சிக்கல்

### ஐக்கிய இலங்கை தாதியர் சங்கம் விசனம்

கொழும்பு, ஜூலை 23
அரச வைத்தியசாலைகளில் தாதியர்களுக்கு நிலவும் பற்றாக்குறையால் நாள்தோறும் அதிகரித்துவரும் டெங்கு நோயாளர்களுக்கான சிகிச்சையில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய இலங்கை தாதியர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

சகல அரச வைத்தியசாலைகளிலும் டெங்கு நோயாளிகள் நிரம்பி வழிவதால் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்குத் தற்போது பணியிலுள்ள தாதியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், அதனால் நோயாளிகள் ஆபத்துகளுக்கு உள்ளாகும் நிலை தோன்றியிருப்பதாகவும் சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.மெதிவத்த தெரிவித்தார்.

அநேகமான வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும், தாதியருக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் டெங்கு நோய் தொற்றியிருப்பதால் இந்த நிலை மேலும் விபரீதமாகியிருப்பதாகவும், சுகாதார அமைச்சர் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு மேலதிக தாதியர்களையும் ஏனைய ஊழியர்களையும் ஏற்பாடு செய்யவேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (டு)



# மைத்திரியே மீண்டும் போட்டியிடுவார்

### அடித்துச் சொல்கிறார் மேல்மாகாண முதலமைச்சர்

கொழும்பு, ஜூலை 23
மைத்திரிபால சிறிசேனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த அரச தலைவர் வேட்பாளர். அதனை நிராகரிக்க அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரிபால சிறிசேன போன்று ஜனநாயகம் மிக்க தலைவர் இதன் பிறகு நாட்டுக்குக் கிடைக்குமா என்று தெரிவிக்கமுடியாது. அதனால்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அவரைக் கட்சியின் தலைவராக ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

அவர்மீது வைத்திருக்கும் நம்பிக்கை காரணமாகவே சுதந்திரக் கட்சியில் பெரும்பான்மையினர் அவருடன் இணைந்திருக்கின்றனர். அடுத்துவரக்கூடிய 2020 அரச தலைவர் தேர்தலிலும் சுதந்திரக் கட்சி அரச தலைவர் வேட்பாளராகக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார். அது கட்சின் தீர்மானமாகும். அதனை அரச தலைவர் நிராகரிக்க முடியாது -என்றார். (கு)

## மருத்துவ விநியோகப் பிரிவில் மோசடி; அரச தலைவர் ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, ஜூலை 23
மருத்துவ விநியோகப் பிரிவில் நடந்துள்ள நிதிமோசடி தொடர்பாக பெரும் ஊழல் மோசடிகளை விசாரிக்கும் அரச தலைவர் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டுமுதல் 2015 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் தனியார் மருந்து நிறுவனம் ஒன்றிடம் மருந்துகளைக் கொள்வனவு செய்த போது நடந்ததாகக் கூறப்படும் நிதிமோசடி குறித்தே விசாரணை நடத்தப்படுவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நடைமுறைச் செயற்பாடுகளை மீறி குறித்த காலப்பகுதியில் 8,700 வகையான மருந்துகளைக் கொள்வனவு செய்ததன் மூலம் அரசுக்கு 12 கோடியே 90 லட்சம் ரூபாவு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கமைய மருத்துவ விநியோகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் தனியார் மருந்து நிறுவனங்களுக்கான செயல் முகாமையாளர் உட்பட 21 பேர் விசாரணைக்காக ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (டு-ய)

## காணாமற்போனோர் செயலகத்துக்கு அடுத்த வாரம் அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜூலை 23
காணாமல்போனோர் செயலகச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதை அடுத்து அதற்கான அதிகாரிகள் அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளனர்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் அரசமைப்புச் சபை அடுத்த வாரம் கூடி இந்த நியமனத்துக்கான பரிந்துரைகளைச் செய்யும். இந்த அலுவலகம் 7 அதிகாரிகளைக் கொண்டிருக்கும். இவர்களை அரசமைப்புச் சபை பரிந்துரை செய்ய அதனை அரச தலைவர் உறுதிப்படுத்துவார். (கு)

## மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ரணவீர விரைவில் கைதாவார்?

கொழும்பு, ஜூலை 23
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றிய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் டி.ஆர்.எல். ரணவீர கைதுசெய்யப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாஜுதீன் கொலை, ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு, வெலிக்கடைச் சிறைச்சாலைத் தாக்குதல் சம்பவம், பியகம விலேஜ் ஹோட்டல் உரிமையாளர் கொலை உட்பட சில சம்பவங்கள் தொடர்பில் ரணவீரவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுமுன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காகவே அவர் கைதுசெய்யப்படவுள்ளதாகப் பேசப்படுகிறது.

ரணவீரவுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகவும், முன்னரே இவர் கைது செய்யப்படவிருந்தபோதிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பதவிவகித்த காரணத்தால் கைது செய்ய முடியாமல் போனதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலைமை காரணமாக ரணவீர அண்மையில் வேறு பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (டு-ய)

## 2 ஆவது தேசிய வைத்தியசாலையாகக் கண்டி

கொழும்பு, ஜூலை 23
இலங்கையின் இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக கண்டி வைத்தியசாலையைத் தரமுயர்த்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார்.

கண்டி வைத்தியசாலையில் தற்போது நடந்துவரும் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியானதும் அடுத்த வருடத்தில் அதைத் தரமுயர்த்தமுடியுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

கண்டி வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காகச் செலுத்த வேண்டியுள்ள 70 கோடி ரூபாவை விரைவாக செலுத்துமாறு அவர் அமைச்சின் கணக்காளருக்குப் பணிப்புரை விடுத்திருப்பதாகவும், அங்கு எட்டு மாடிகளுடன் அமைக்கப்பட்டுவரும் புதிய கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை அண்மையில் பார்வையிட்ட பின்னரே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்திருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (கு)



## ஜப்பானியக் கப்பல்களை பார்வையிட்டார் ருவான்

கொழும்பு, ஜூலை 23

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் ஜப்பானியக் கடற்படையின் போர்க்கப்பல்களை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன மற்றும் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேரத்ன, ஜப்பானியக் கடற்படையின் உலங்குவானூர்தித் தாங்கி நாசகாரிக் கப்பலான இசுமோ மற்றும் சசகாமி ஆகிய போர்க்கப்பல்களுக்கு நேற்று முன் தினம் காலை சென்று பார்வையிட்டார்.

இதன்போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு ஜப்பானியக் கடற்படையினர் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

ஜப்பானிய உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ஹிரோயுகி மியாசாவா மற்றும் முதலாவது பாதுகாப்புக் கப்பல்கள் அணியின் தளபதியான றியர் அட்மிரல் யொசிஹிரோ கோகா உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள், அவரை வரவேற்றனர்.

இதையடுத்து, இசுமோ மற்றும் சசகனாமி ஆகிய போர்க்கப்பலில் உள்ள வசதிகள் குறித்து ஜப்பானிய அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

அதேவேளை, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவும், தனியாகச் சென்று ஜப்பானியக் கப்பல்களைப் பார்வையிட்டார். இதன்போது கடற்படைத் தளபதியும் உடன் சென்றிருந்தார். (த)

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 23

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களிடையே மீண்டும் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது என அந்தக் கட்சியின் முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தொகுதி அமைப்பாளர்களில் பலர் பெயரளவுக்கு மாத்திரமே இருக்கின்றனர். கட்சியின் முன்னேற்றம் பற்றி அவர்கள் எவ்வித அக்கறையும் காட்டாமல் காலம் கழித்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. அவ்வாறானவர்களை நீக்கிவிட்டுப் புதியவர்களை நியமிக்கக் கட்சியின் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் தேர்தலுக்கு முன் சகல தொகுதிகளிலும் கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் கூறினார். (த-ய)

## நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றவே புதிய வரிச்சட்டம்

### அநுரகுமார திஸாநாயக்க சாடல்

கொழும்பு, ஜூலை 23



பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றவே அரசு புதிய தேசிய வருமான வரிச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சித்து வருகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கும் மூன்றாம் தவணைக் கடன்தொகையைப் பெற இந்த நிபந்தனைகளை அரசு பூர்த்தி செய்யவேண்டும் எனவும் அவர் கூறினார்..

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய தேசிய வருமான வரிச் சட்டத்தைக் கொண்டு வரவுள்ள அரசு அது குறித்து தேசிய வருமான வரித் திணைக்கள அதிகாரிகள், தொழிற்சங்கங்கள், வரி செலுத்துவோர் போன்ற பொறுப்பு மிக்க எவரிடமும் கருத்துக்களைக் கேட்டறியவில்லை.

புதிய சட்டத்தில் அரசு வரவு- செலவுத் திட்டத்தில் முன்வைத்த வரி அறவீட்டுத் திருத்தங்களைவிட அதிகளவான வரி அறவீட்டு திருத்தங்களை முன்வைத்துள்ளது.

இதுவரை வரி அறவிடப்படாத விவசாயம், ஊழியர் சேமலாப நிதியம், லொத்தர் பரிசுகள், அரச தலைவர் வழங்கும் பரிசுகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதியுதவி போன்றவற்றுக்கும் வரி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மேலும் மேடை நாடகங்கள், இசைத்துறையின் புதிய தயாரிப்புகள், ஆயுள் காப்புறுதியின் காலம் முடிந்த பின்னர் கிடைக்கும் பணம் ஆகியவற்றும் வரி அறிவிடப்படவுள்ளது.

தொழில் புரியும் ஒருவர் சம்பாதிக்கும் வருமானத்துக்கு அறவிடப்படும் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் வரவு- செலவுத் திட்டத்தில் வருடாந்தம் 12 இலட்சம் ரூபா சம்பாதிப்போருக்கு வரி விலக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த திருத்தம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. எனினும் புதிய சட்டத் திருத்தத்தில் வரிக்கு உட்படும் வருமானம் 5லட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 5லட்சம் ரூபாவுக்கும் மேல் சம்பாதிக்கும் அனைவரும் வரி செலுத்தவேண்டும். இதனால் புதிய வருமான வரிச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்க வேண்டும் - என்றார். (த-ய)

## உயர்கல்வி அபிவிருத்திக்கென உலக வங்கி 10 கோடி டொலர்

கொழும்பு, ஜூலை 23

இலங்கையின் உயர்கல்வித்துறை அபிவிருத்திக்காக உலக வங்கி பத்து கோடி அமெரிக்க டொலர்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பீ.ஜீ.ஜயசிங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 15 அரச பல்கலைக்கழகங்களிலும் நடத்தப்படும் பாடநெறிகளை நவீன யுகத்துக்கேற்ப அபிவிருத்தி செய்வதற்காகவே உலக வங்கி இந்த நிதியுதவியை வழங்கவுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்தின் கீழ் வராமல் உயர்கல்வி அமைச்சின் தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் வரும் ஹோமாகம பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்துக்கும், அநுராதபுரத்தின் பிட்சு வித்தியாலயத்துக்கும் இந்த நிதியுதவியைப் பயன்படுத்திக்கொள்வதற்கான அனுமதியை உலக வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (ய)

## இறைவரி ஆணையாளருக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூலை 23

புதிய இறைவரிச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் அதீத அதிகாரங்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தொடரப்பட்டுள்ளன எனத் தேசிய இறைவரித் திணைக்களத்தின் பொதுசேவைக் குழுவின் முதன்மைச் செயலாளர் அஜித் புஷ்பகுமார தெரிவித்தார்.

ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் பிரத்தியேக அதிகாரங்கள் மூலம் திணைக்களத்தில் எதேச்சதிகாரத்துக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டங்களின் படி தவறொன்றை இழைக்கும் திணைக்கள அதிகாரியொருவருக்கு எதிராகச் சாதாரண சட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடிய வழிவகைகள் உள்ளன.

எனினும், புதிய சட்டத்தின்படி அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் உயர்நீதிமன்றம் தலையிட்டு உரிய தீர்வுகளை வழங்க வேண்டும் எனக் கோரியே இந்த மூன்று வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன என அவர் மேலும் கூறினார். (த-ய)

## செவனகல சீனி ஆலைக்கு எதிராக மனித உரிமைக்குழுவில் முறையீடு

கொழும்பு, ஜூலை 23

செவனகல சீனித் தொழிற்சாலைக்கு எதிராக அந்தப் பிரதேசத்தின் கரும்புச் செய்கையாளர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நிறுவனத்தின் முறையற்ற, அநீதியான நிர்வாகத்துக்கு எதிராகவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செவனகல சீனி நிறுவனத்தின் கீழ் வரும் எம்பிலிபிட்டிய, தனமல்வில, செவனகல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கரும்புச் செய்கையாளர்கள் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில், செவனகல சீனி நிறுவனத்தின் திறமையற்ற நிர்வாகத்தால் தங்களுக்குப் பல அநீதிகள் இழைக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டு தங்களுக்கு விமோசனமொன்றை வழங்கவேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-ய)

## மலையகத்தில் 1800 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள்

### அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு

நுவரெலியா, ஜூலை 23

மலையகத்தில் 1800 பேருக்குக் காணி உறுதிப்பத்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காணி உறுதிப்பத்திரங்கள் 7 பேர்ச்சர்ஸ் காணியுடன் வீட்டுரிமையும் கொண்டது. இதுவரை எந்தவொரு தலைவரும் இவ்வாறு அதிகாரமிக்க உறுதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கவில்லை என மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இந்தக் காணியுறுதிப்பத்திரத்தை வங்கியில் வைத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

ஹற்றன் அபோட்சிலி ஆனைத் தோட்ட மக்களுக்குப் பசும்பொன் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 20 தனி வீடுளை அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெற்றது. அதில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியா மாவட்டத்தில் சுமார் 2 இலட்சம் பேருக்கு 5 பிரதேச சபைகள் மாத்திரம் தான் இருக்கின்றன. இதனால் கந்தப்பளையில் உள்ளவர் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நுவரெலியா பிரதேச சபைக்கு வரவேண்டும். இதனை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்று நாம் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டதன் காரணமாக நாடாளுமன்றத்தில் ஆறு உறுப்பினர்களைக் கொண்டுவர முடிந்தது. அரசியல் ரீதியாகப் பலத்தை நிரூபித்த நாம் தொழிற்சங்க ரீதியாகவும் இணைந்து பலத்தை நிரூபிக்க வேண்டும்.



இது தொடர்பாக நாங்கள் தற்போது அமைச்சர் ராதா கிருஸ்ணனுடனும், அமைச்சர் மனோ கணேசனுடனும் பேசி வருகிறோம். இன்று ஒரு சிலர் அமைச்சுக்கு வருகை தந்து எனக்கு வீடு வேண்டும் என்று தெரிவித்து வருகிறார்கள்.

ஒரே நாளில் ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேருக்கும் வீடு கட்டிக் கொடுக்க முடியாது. அதற்கு காணிகள் பெறவேண்டும் நிதி பெற்றுக் கொள்ள வேண்டும். பொறுத்திருந்தால் சகலருக்கும் கிரமமாக வீடுகளை கட்டிக் கொடுப்பேன் - என்றார். (தய-4-3)



## ஸ்ரீ சம்மக்கா சாறக்கா ஜோதிடம்

**இந்தியாவின் பிரபல ஜோதிடர்**
**ஆந்திரா மந்திரவாதி சுப்பிரமணியசுவாமி**

நேரம்:- காலை 8.00 தொடக்கம் மாலை 7.00 வரை
இல.276/1, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இ:- 076 720 6899

எத்தனையோ ஆள்களிடம் ஜோதிடம் பார்த்திருப்பீர்கள். ஆனால் இவர்களிடம் பார்த்தல் நூற்றுக்கு நூறு வீதம் எல்லாப் பரிகாரமும் கிடைக்கும். கைரேகை, ஜாதகம், கல்வி, தொழில், வியாபாரம், வாஸ்து சாஸ்திரம், வெளிநாட்டு பயணம் இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்துக் கூறப்படும்.

இந்தியாவின் பிரபல ஜோதிடர்
ஆந்திரா மந்திரவாதி சுப்பிரமணியசுவாமி.

---

## யாழ். - திருமலை - மட்டக்களப்பு - அக்கரைப்பற்று
## A/C பஸ் சேவை

காலை 7.30 மணிக்கு யாழ். நகரிலிருந்து புறப்படும்.
காலை 7.30 மணிக்கு அக்கரைப்பற்றிலிருந்து புறப்படும்.



கட்டணம் - 1100/= ரூபா.
திருமலை கட்டணம் - 700/= ரூபா.

| ஆசனப்பதிவுகளுக்கு. | அக்கரைப்பற்றில். |
|---|---|
| வரணி ஆசனப்பதிவகம் | அல் ராசித் ரவல்ஸ் |
| 352, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | அக்கரைப்பற்று. |
| 021 222 2868, 077 791 7691 | 071 364 2419, 077 484 5550 |

---

## Florance Nighhtingale School of Nursing
## புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப் பாடசாலை

**நீங்கள் வைத்தியசாலையில் தாதியராக தொழில்புரிய வேண்டுமா?**

எங்கள் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் ஒருவருட தாதியர் பாட-நெறியினைப் பூர்த்தி செய்தபின் உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்.



- ஒரு வருட தாதியர் பயிற்சிப் பாடநெறி
- 3 மாதம் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்

**தகைமைகள்**

O/L 6 பாடம் சித்தி
வயது 18 - 35 வரை
கடமை நேரம் - 8.30 - 4.00

பயிற்சியின் பின் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 718 6438, 021 492 8916
முகவரி :- *K.K.S.Road, Maruthanarmadam.*
கிழமைகளில் இரண்டு நாள்கள் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறும்.

---

## IMMEDIATE VACANCY

**IRSTHA** *Software Engineers Web Devolopers*

We warmly welcome talanted, Selfmotivated individuals with excellent programming knowledge and Sound Educational background to join our team.

☑ Location - Jaffna ☑ Possition - 30

**Ideal candidates should be experienced in coding with programming**

- Knowledge in PHP / C#, ASP, ASP - NET, HTML 5, CSS, J Query, JAVA Script.
- My SQL & SQL Database.
- Power shell

**Candidates Should also have the ability**

- Functioning in Fast - Paced environment with small & medium sized teams.
- Work with minimum supervision to meet deadlines
- Motivated, result oriented mindset.
- Clearly communicate with the team

**A competitive salary Package will be offerd depending on your experience and talent.**

Please send your CV including some of the work done in this field as portfolio with two names and details of non related refrees to below email address within 7 days.

job@irstha.com
Irstha
64,Kannathiddy Rd, Jaffna.
021 221 7871

---

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பில்டிங் கன்ஸ்ரைக்ஸன் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

☑ மேசன் ☑ தச்சுவேலை தெரிந்தவர்கள்
☑ கம்பிவேலை தெரிந்தவர்கள் ☑ பெயின்ரர்கள்
} சம்பளம் ரூ.1700/- (தினம்)

(மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 150/= வழங்கப்படும்)

☑ உதவியாளர் - சம்பளம் ரூ.1200/= (தினம்)

(மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 112/- வழங்கப்படும்)

077 712 9690, 077 550 1520 ,
077 853 5248

---

## தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பொருள்களை எடுத்துச் செல்லும் போக்குவரத்து சேவைக்கு கீழ்க் கண்ட பணிகளுக்கு ஆள்கள் தேவை.

1. டிரைவர் - சாரதி
Delivery boy

077 730 6473
79,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கடை இல :- 021 222 5504, 077 251 4981

---

## சுவிசேஷ விடுதலைப் பெருவிழா

தேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.
தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்.
தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்
மத்தேயு :- 7:7

**அன்பான சகோதர சகோதரிகளுக்கு இறைவனின் திருநாமத்தில் வாழ்த்துக்கள்**

வியாதிகள், பாவக்கட்டுக்கள், பிசாசின் பிடி, நோய்களினால் நிம்மதி இல்லாத வாழ்க்கை வாழ்ந்து குடும்பத்திலும் சமாதானமில்லாது சண்டைகளால் எல்லா வற்றையும் இழந்து மரணம்தான் முடிவென்று எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் ஜனங்களே உங்கள் விடுதலைக்காக நடத்தப்படும் இந்த சுவிசேஷ பெரு விழாவுக்கு வாருங்கள். தேவனால் உலகெங்கும் வல்லமையாய் பயன்படுத்தப்படும் தேவமனுஷனால் உங்களுக்காக ஜெபிக்கப்படும். நிச்சயமாக விடுதலையை இயேசு உங்களுக்குக் கொடுப்பார்.



இடம் :- ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கு
காலம் :- இன்று (23.07.2017) ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மாலை 5.00 மணி


ஒருங்கமைப்பு:- தேவவார்த்தை மிஷனறி சபை (ஊர்காவற்றுறை)
தலைமைப் போதகர் அ.அருள்ராஜா
தேவவார்த்தை மிசனறிசபை, ஊர்காவற்றுறை, இலங்கை.
077 600 0542

வணபோதகர் சுவிசேஷகர் பாஸ்கரன்
விசுவாச வாழ்வு திருச்சபை
நெதர்லாந்து 077 600 0937
george.kathiresu@gmail.com

---

## Pizza Hut

மாறிவரும் வாழ்க்கை முறையில் சுவையான தொரு அங்கமாகுங்கள்...




### CREW MEMBERS

வயது 17-45 இடைப்பட்டிருத்தல்
(முழுநேரம்) (ஆண்/பெண்) - Full Time

புதிதாக திறக்கவுள்ள எமது கிளைகள் யாழ்ப்பாணம், மற்றும் சிலாபம்

தெஹிவளை, அத்திடிய, அவிஸ்ஸாவளை, பம்பலப்பிட்டி, பொரலஸ்கமுவ, கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம், கோட்டை, கம்பஹா, ஹெவ்லொக், ஜா-எல, கடவத்தை, கடுவலை, கிரிபத்கொடை, கொட்டாஞ்சேனை, கொடிகாவத்தை, கொட்டாவ, லிபர்டி பிலாஸா, மஹரகம, மாலபே, மொரட்டுவை, நாவல, நீர்கொழும்பு, நுகேகொடை, பாணந்துறை, பெலவத்தை, தலவத்துகொடை, வத்தளை, வெலிசற, மற்றும் வென்னப்புவ

### DELIVERY RIDERS

வயது 22-45 இடைப்பட்டிருத்தல்
(முழுநேரம்) (ஆண்/பெண்) - Full Time

அதுருகிரிய, அத்திடிய, பம்பலப்பிட்டி, பொரலஸ்கமுவ, தெஹிவளை, கோட்டை, ஹெவ்லொக், ஜா-எல, கடவத்தை, கிரிபத்கொடை, கொட்டாஞ்சேனை, கொடிகாவத்தை, கொட்டாவ, மஹரகம, மாலபே, மொரட்டுவை, நீர்கொழும்பு, நுகேகொடை, பிலியந்தலை, இரத்தினபுரி, தலவத்துகொடை, வத்தளை, வெலிசற, மற்றும் வென்னப்புவ

நிறுவனத்தினால் வழங்கப்படும் Bajaj CT100 துவிச்சக்கரவண்டி மற்றும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசி

**எம்மிடமிருந்து உங்களுக்கு**

- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை போனஸ்
- சேவை நேரங்களில் உணவு இலவசம்
- முன்அனுபவத்திற்கு விசேட சம்பளத் தொகை
- தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்து வசதி
- உள்ளக பதவி உயர்வு
- வைத்திய காப்புறுதி
- நிரந்தர தொழில் வாய்ப்பு
- தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சியும், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சாதாரண தேர்ச்சியும் இருத்தல் அவசியம்

குறைந்தபட்ச தகைமை: க.பொ.த. சாதாரண தரம்வரை (O/L) கல்வி கற்றிருத்தல்

உங்களின் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், கல்வி, சேவை சான்றிதழ் மற்றும் வங்கி புத்தகத்தின் பிரதியுடன் திங்கள், முதல் வெள்ளி வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 மணியளவில் கீழுள்ள முகவரிக்கு நேர்முக பரீட்சைக்காக வரவும்.

55/25, வொக்ஸ்ஹோல் ஒழுங்கை, கொழும்பு 02.
(இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பிரதான காரியாலயத்திற்கு பின்னால்)
jayakody@gamma.lk | 0766 531 891, 0766 833 096
(கோட்டையிலிருந்து 138 மஹரகம பஸ்சில் ஏறி நவலோக சந்தியில் இறங்கி கியூ வீதியிலுள்ள வொக்ஸ்ஹோல் ஒழுங்கையில் இறுதி முனைக்கு வரவும்)

skillsads

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சம்பந்தரின் தெரிவு!

அண்மையில் கிளிநொச்சிக்கு வந்திருந்தார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன். அப்போது 150 நாள்களாக போராட்டம் நடத்திவரும் காணாமற்போனவர்களின் உறவினர்களையும் சந்தித்தார். அவர்களின் சோகங்களைக் கேட்டறிந்தபின்னர், தாமும் ஆதரவு தெரிவித்து அமைத்த இன்றைய அரசுடன் இனிமேல் கடுமையாகத் தான் நடந்துகொள்வார் என்று தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் கிளிநொச்சியில் உள்ள கூட்டமைப்பு அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் அவர் ஆற்றிய உரையில், புதிய அரசமைப்பு முயற்சிகள்பற்றி விளக்கமளித்தார். அரசுதொடர்பில் தான் கடுமையாக நடந்துகொள்ளாமல் இருப்பதற்கான காரணத்தையும் விளக்கியிருந்தார்.

இவற்றின் பின்னணியில் நேற்றுமுன்தினம் ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலரைச் சந்தித்துப் பேசினார். அப்போது அவர் வழமைக்கு மாறாக அரசின் போக்குக் குறித்துக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

வெளிநாட்டுத்தலைவர்களுடனானசந்திப்புகளில்சம்பந்தன் காட்டும் மென்போக்கு நேற்றைய சந்திப்பில் தொனிக்கவில்லை என்பதை அவருடனிருந்தவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். கிளிநொச்சியில் சம்பந்தன் சொன்னதைப் போலவே அரசுடன் அவர் கடுமையாக நடந்துகொள்ளப் போவதற்கான அறிகுறியாக இதனைக் கொள்ளமுடியும்.

மிக நீண்ட நாள்களாகவே சம்பந்தரும் கூட்டமைப்பினரும் அளவுக்குமீறிப்பொறுமைகாக்கிறார்கள்என்கிறவிமர்சனம், விசனம் இருந்து வந்தது. கொழும்பில் உள்ள ராஜதந்திர வட்டாரங்கள் இடையேகூட சிறிய அள்வில் இந்த உணர்வை அவதானிக்கமுடிந்தது. அரசுடன்சம்பந்தன்இன்னும்கொஞ்சம் இறுக்கமாகவே நடந்துகொள்வது சிறந்ததாக, பயனுள்ளதாக இருக்கும் என்று பல ராஜதந்திரிகளும்கூட தனிப்பட்ட முறையில் கருதினார்கள்.

எனினும் தொடர்ந்து மிகவும் நிதானத்தைக் காத்து வந்த சம்பந்தன், கடுமையானவிமர்சனங்களைக்கட்சிக்குள்இருக்கும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போன்றவர்களே முன்வைத்தபோதும்கூட, அரசையும் அதன் தலைவர்களையும் சாடுவதைத் தவிர்த்தே வந்திருந்தார். இதுவே அவர் மீதான கடுமையான வசை பாடல்களை அவரது எதிரிகளிடம் இருந்தும் உருவாக்கியது.

அப்படிப்பட்ட சம்பந்தர்தற்போது பொறுமை இழந்திருக்கிறார்என்பதையேஅவர்ஐ.நாவின்அரசியல்விவகாரங்களுக்கான கீழ்நிலைச்செயலரைச்சந்தித்தபோது தெரிவித்தகருத்துக்கள் எடுத்தியம்புகின்றன. குறிப்பாக புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ள நிலையில்அதனைக்குலைக்கும்விதமாகசிறிலங்காசுதந்திரக்கட்சியினர் நடந்துகொள்வது அவரைச் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கக்கூடும்.

கட்சிகளுக்கு இடையிலான இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, புதியஅரசமைப்புமுயற்சிகளைவிரைவுபடுத்திநீடித்தஅமைதியை ஏற்படுத்த வேண்டிய அரச தலைவர்கள், குறிப்பாக மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் அது பற்றிஅக்கறையின்றி, அதனைஇரண்டாம்பட்சவிவகாரமாக அணுகுவதன்காரணத்தால் சம்பந்தர் பொறுமை இழந்திருக்கக்கூடும்.

அதேசமயத்தில்அரசமைப்புமுயற்சிகளில்இருந்துகுழப்பிக் கொண்டு தான் வெளியேற முடியாது என்கிற யதார்த்தத்தையும் அவர் புரிந்து வைத்திருக்கிறார். அதனாலேயே அவர் இன்னமும்அமைதிவாசிக்கிறார்என்றுகருதவேண்டியுள்ளது.

ஆனால், அரசின் போக்கைத் தீவிரமாகக் கண்டித்து அதனுடன் இன்னமும் கடினமாக நடந்துகொள்ளவேண்டியது காலத்தின் அவசியம். இலங்கையின் சிங்கள பௌத்த வரலாற்றில் இருந்து அதற்கான போதிய படிப்பினைகள் இருக்கும்போது காலத்தைத் தாமதிப்பதைவிட அரசுடன் கடுமையாக நடந்துகொள்வதுதான் சம்பந்தரின் முன்பாக இருக்கக் கூடிய தெரிவும்கூட.

புதிய அரசமைப்பை விரைவுபடுத்துவதற்கும் அந்த அரசமைப்பு கொஞ்சம் கொஞ்சமாக சிங்கள பௌத்த இனவாதத்தால் செல்லரிக்கப்படாமல் பாதுகாக்கவும் சம்பந்தர் உடனடியாகச் செய்யவேண்டியதும் அதுதான்.

# ஈழத்தமிழர் வரலாற்றில் என்றுமே மறந்திட இயலாத



# கறுப்பு ஜூலை கலவரம்



மு.ஈழத்தமிழ்மணி

ஈழத் தமிழர்களது நினைவில் இன்றைய நாளில் கண் முன் விரிக்கின்ற அந்த துன்பியல் நினைவுகள் மனதை வருத்துபவை. சிங்களப் பேரினவாதிகள் மிருகங்களாக மாறி, இலங்கைத் தமிழர்களைப்படுகொலைசெய்து இலங்கையின் வரலாற்றில் கறை படியவைத்த அந்தக் கறுப்புஜூலைநினைவுகளே அவை.

இற்றைக்கு 34ஆம் ஆண்டுகளுக்குமுன்னர். 1983 ஜூலை 23 ஆம் திகதியன்று ஆரம்பித்து சுமார் ஒரு வார காலம்வரை நீடித்த கலவரத்தில் தலைநகர் கொழும்பில்தமிழர்கள்உயிருடன் எரியூட்டப்பட்ட, வெட்டிக் கொல்லப்பட்ட, வீடுகள் வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்ட கொடூரமிக்க காட்சிகள் யாவும் கண்முன்னே வந்து செல்கின்றன.

1983 ஆம் ஆண்டு அப்போதைய அரசதலைவரான ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் அரசினால் மிகவும் நேர்த்தியாகத் திட்டமிடப்பட்டு, அரங்கேற்றப்பட்ட இனப் படுகொலைக்கு நம்பத்தகுந்த பல பின்னணிக் காரணங்களுண்டு. இந்தக் கொடிய படுகெலைகளை முன்னின்று நடத்தியவர்களில் ஆட்சியாளர்கள், பிக்குமார் ஒன்று திரட்டப்பட்ட பெரும்பான்மையினக் குண்டர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிறைகளில் தண்டனை அனுபவித்து வந்த பயங்கரமான சிங்களச் சிறைக்கைதிகள், எனப் பல வேறு தரப்புக்களைச்சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அடங்குவர்.

1983 ஆடிக்கலவத்தின் இலக்கு, தமிழர்களைக் கொல்லுவது, தமிழர்களின் சொத்துக்களை அழிப்பது, பாலியல் வன்முறை, ஆயுதங்கள், கத்திகள் பொல்லுகள், கையெறி குண்டுகள், கோடரிகள், துப்பாக்கிப்போன்றவற்றைப் பயன்படுத்தித் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துதல் என அமைந்தது. படுகொலை செய்யப்பட்டோர் 3 ஆயிரம் தமிழர்கள், காயமடைந்தவர்கள் 2 லட்சத்து 50 ஆயிரம்பேர், அழிக்கப்பட்ட வீடுகள் 18 ஆயிரம் எனஇந்தப்பட்டியல்நீள்கிறது.



### கலவரம் வெடிக்கக் காரணமான புலிகளது திருநெல்வேலித் தாக்குதல்

1983ஜூலைமாதம்22ஆம் திகதி நள்ளிரவை நெருங்குகின்றசமயம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பலாலி வீதியில் உள்ளதபாற் பெட்டிச் சந்திக்கு அருகில். அந்தப் பகுதியையே அதிர வைக்கின்ற பெரிய குண்டு வெடிக்கின்றது. அந்த நேரத்தில் வீடுகளில் உறக்கத்தில் இருந்த மக்கள் விழித்தெழுகின்றனர். என்ன நட்ந்தது? என்ற கேள்வியுடன் மக்கள் குழப்பமடைகின்றனர். விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடியில் 13 படையினர் கொல்லப்பட்ட அந்தப் பெரும் தாக்குதல் செய்தி, விடிவதற்குள் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் பரவுகிறது. 1968 இலிருந்து படையினரின் கெடுபிடிகள் காரணமாக படையினர் மீது ஆங்காங்கே இரகசியமாக மறைந்திருந்து போராளிகளால் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்த போதிலும், திருநெல்வேலித்தாக்குதலே அவற்றுள் முதலாவது பெரிய தாக்குலாக அமைந்தது. யாழ்ப்பாணநகரை நோக்கி பலாலியிலிருந்து ரோந்துவந்தபடையினரின் ட்ரக் வண்டியை இலக்குவைத்தே கண்ணிவெடித்

தாக்குதல் நடத்தப்பட்டது.
தாக்குதலில் சிதறிய ட்ரக் வண்டியிலிருந்த 13 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதையடுத்து 2 படையினர் தப்பிப்பிழைத்தனர். அடுத்த நாள் பிற்பகல் வேளையில் தப்பிய இரு படையினரில் ஒருவரோடு இன்னும் சில படையினர் சேர்ந்து திருநெல்வேலி, நல்லூர், கந்தர்மடம் போன்ற இடங்களில் வீடுகளுக்குள் புகுந்தும், வருவோர் போவோர் மீதும் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு 40 இக்கு மேற்பட்ட அப்பாவி மக்களை பலியெடுத்திருந்தனர்.
விடுதலைப்புலிகளின் குறித்த தாக்குதல் இலங்கை அரசுக்கும் படையினருக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. கொல்லப்பட்ட 13 படையினரின் சடலங்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்படாமல் நேரடியாக கொழும்பு கனத்தை மயானத்தில் அடக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாடு 24 ஆம் திகதி தொடக்கம் பெரும் பதட்டத்துக்குள்ளாகியிருந்த நிலையில் காணப்பட்டது. மக்கள் தத்தம் வீடுகளுக்குள் முடங்கியிருந்தனர்.
படையினரின் உடல்கள் கனத்தைக்கு எடுத்துவரப்பட்ட வேளையில், பெருந்தொகையான காடையர்களும் கனத்தைப் பகுதிக்கு கொண்டுவந்து இறக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பெரும் குற்றங்களுக்காகச் சிறைசென்று மீண்டவர்கள். அவர்களை அங்கு அழைத்துவந்த வாகனங்கள் யாவும் அரசுக்குச் சொந்தமானவை. உடல்களை அடக்கம் செய்த பின்னர் பொரளையிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரத்தை உடன் ஆரம்பிப்பது அரசினது திட்டமாகவிருந்தது. அரச தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன அமைச்சரவையில் உள்ள முக்கிய அமைச்சர்கள் சிலரின் தலைமையில் தமிழர்களைக் கொன்றொழிக்கின்ற சம்பவங்கள் பொரளையிலிருந்து ஆரம்பமாகின்றன.

### பொரளை கனத்தையில் பற்ற வைக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிரான தீச்சுவாலை

பொரளைப் பிரதேசம் தீயில் பற்றியெரிகின்றது. தமிழர்களின் வீடுகள் தாக்கப்படுகின்றன. வீடுகளுக்குள் புகுந்த குண்டர்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். பெற்றோல் ஊற்றி வீடுகளையும் வர்த்தக நிலையங்களையும் எரிக்கின்றனர். தமிழர்கள் உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு திக்குத் திசை தெரியாது ஓடுகின்றனர். வெறிபிடித்த சிங்களவர்களால் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்.
பொரளையில் ஆரம்பித்த இனக்கலவரம் கொழும்பின் ஏனைய பகுதிகளுக்கும் பரவுகிறது. அரசினால் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுமென கொழும்புத் தமிழ்மக்கள் நம்பினார்கள். ஆனால் அது பொய்த்துப் போனது.
யூலைமாதம் 25 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைக்குள் சிங்களக் குண்டர்கள் அத்துமீறி உள்நுழைகின்றனர். சிறையில் அடைக்கப்பட்டிருந்த சிங்களக் கிரிமினல் கைதிகளும் சேர்ந்து முதலில் 35 தமிழ் அரசியல் கைதிகளை இழுத்து வைத்து வெட்டிச் சாய்க்கின்றனர். தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட 52 பேர் இருநாள்களில் படுகொலையுண்டனர். ஏனைய கைதிகள் கடுமையாகப் போராடியே தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர். தமிழ் அரசியல் கைதிகளையும் கொல்லவேண்டும் என்ற அரசின் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தக்கொலைகள் நடத்தப்பட்டிருந்தன.
சிறைச்சாலை அதிகாரிகளின் ஆதரவுடனேயே இந்தக் கொலைகள் அரங்கேற்றப்பட்டன. அதிகாரிகள் பார்த்துக் கொண்டிருக்கவே சிங்களக்கைதிகள் தமிழ் அரசியல் கைதிகளைக் கொன்றார்கள். குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்தார்கள். தன்னைத் தூக்கிலிட்ட பின்னர், தமிழர் ஒருவருக்கு தனது கண்களைத் தானமாக வழங்க வேண்டும் என குட்டிமணி தனது இறுதி விருப்பத்தை நீதிமன்றில் தெரிவித்திருந்தார். அவரது கண்கள் தோண்டி எடுக்கப்பட்டதன் பின்னணி அதுதான்.



கறுப்பு ஜீலையுடன் வன்செயல்கள் யாவும் முடிந்துவிடவில்லை. அவை பல வடிவங்களில் தமிழர்கள் மீது அரங்கேற்றப்பட்டு கொண்டுதானிருக்கின்றன. என்றுமே மறக்க முடியாத கறுப்பு ஜீலை இடர் 34 ஆண்டுகளைக் கடக்கின்றது


### கலவரத்தைக் கட்டுப்படுத்த பின்னடித்தார் ஜே.ஆர்.


யூலை 25, முதல் 28ஆம் திகதி வரை கொழும்பு மாவட்டத்தில் தமிழர்கள் கொல்லப்பட்டும், எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் இந்தியத்தலைமை அமைச்சரான இந்திராகாந்தியின் சிறப்புத் தூதுவராக இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் பி.பிநரசிம்மராவ் கொழும்பு வந்தார். யூலை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புலிகள் கொழும்புக்குள் வந்து விட்டார்கள் என்று பரப்பப்பட்ட வதந்தி, பெரும் பீதியைக் கிளப்பியிருந்தது. உண்மையில் அப்படி எதுவும் நடைபெறவில்லை. அன்றைய தினம் பலநூற்றுக்கணக்கில் தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர் வர்த்தக நிறுவனங்கள், வீடுகள் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டன. யூலை 30, 31 இல் வன்முறைகள் ஓரளவு குறைந்தன. ஓகஸ்ட் முதல் வாரத்தில் பன்னாட்டு அழுத்தங்கள் அதிகரித்தமையினால் அரசு தாக்குதல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது.
இனத்தினதும் நாட்டினதும் பெயரால் இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத்தமிழர்கள் மீது தென்னிலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் படுகொலைகளைப் பாதுகாப்புப்படையினர் தடுத்து நிறுத்தவோ எதிராக நடவடிக்கை எடுக்கவோ முன்வரவில்லை. படையினர் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.
ஜே.ஆர். அரசினால் நன்கு திட்டமிடப்பட்டு, அரச அங்கீகாரத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட தமிழர்கள் மீதான அந்தத் தாக்குதல் திட்டம் இனக்கலவரத்தை பின்னின்று இயக்கியிருக்கின்றது.
திருநெல்வேலித் தாக்குதலக்கு முன்னதாகவே தென்பகுதியிலிருந்து தமிழர்களைத் துடைத்தெறிவதற்கான திட்டம் தயாராக இருந்துள்ளது. திருநெல்வேலித் தாக்குதலுடன் அது ஆரம்பிக்கப்பட்டதுஎன்பதே உண்மையாகும்.
ஒரு வாரமாக நடைபெற்ற இனக் கலவரத்தினால் வீடுகளை உடமைகளை, இழந்த தமிழ் மக்கள் கொழும்பில் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் தஞ்சமடைந்தனர். பின்பு இந்தியா அனுப்பி வைத்த கப்பலில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
இனக் கலவரம் நடந்துகொண்டிருக்கையில் இந்த வன்முறைகளைச் சிங்கள மக்களின் தேசிய எழுச்சி என வர்ணித்து அரச தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அதற்கு ஆசீர்வாதம் ஆதரவு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.
1983 ஜூலை இனக்கலவரமே உள்நாட்டு மட்டத்திலிருந்த இனப்பிரச்சினையை பன்னாட்டு மட்டத்துக்கு கொண்டு சென்றது. இந்த இனக்கலவரத்துடன் இந்தியா அதிகளவில் இலங்கை விவகாரத்தில் தலையிட்டது. பின்னர் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா நேரடித் தலையீட்டைச் செய்வதற்கான தொடக்கப்புள்ளியும் இந்த 1983 ஜூலை இனக்கலவரமேயாகும்.

### தமிழர்களை ஆயுதப் போராட்டத்தில் தீவிர நம்பிக்கை வைக்கத் தூண்டியது 1983 ஜூலை கலவரமே

பின்னர் பன்னாட்டு மட்டத்தில் இலங்கைத் தமிழர் விவகாரம் தெரியப்படுத்தப்படவும் இது வழிவகுத்தது. இந்தியா, ஈழத்தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சியைக் கொடுத்து ஆயுதங்களையும் வழங்கியது. அந்த வகையில் 83 இனக்கலவரம், ஈழத்தமிழர்களைப் பலப்படுத்தியது.
கறுப்பு ஜீலையுடன் வன்செயல்கள் யாவும் முடிந்துவிட வில்லை. அவை பல வடிவங்களில் தமிழர்கள் மீது இன்றும் அரங்கேற்றப்பட்டு கொண்டுதானிருக்கின்றன. என்றுமே மறக்க முடியாத கறுப்பு ஜீலை கலவரம் 34 ஆண்டுகளைக் கடக்கும் இன்றைய வேளையில் உலகில் எத்தனையோ நாடுகளில் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. ஆனால் ஈழத்தமிழர்களின் கதறலும், கண்ணீரும், வீதிகளை நிறைத்து அந்த அவலக்குரல்கள் காற்றில் கலந்து இன்றும் பேரோசையாகப் பெருகி நிற்கின்றன. கண்ணீர் மட்டுமே கறுப்பு ஜீலையை நினைவு படுத்தும் இன்றைய நாளில் எஞ்சியிருக்கின்றது.







## ஆசிரியருக்கான கடிதம்

### பொருத்து வீடுகளை பெற விரும்புவோருக்கு அவற்றை வழங்க உதவுங்களேன்!

மக்கள் சாத்தியமாக எதை விரும்புகிறார்களோ அதனை நிறைவேற்றி வைப்பது அரசின் கடமை. பொருத்து வீடுகளைத் தமது சொந்த விருப்பத்தின் பேரில் பெற விரும்பும் வீடற்றவர்களுக்கு, அவர்களது விண்ணப்பத்தின் அடிப்படையில் பொருத்து வீடுகளை வழங்க மீள் குடியேற்ற அமைச்சர் தீர்மானித்துள்ளமை நியாயமானதே. வசிப்பதற்கு வீடற்ற நிலையில் தற்காலிக கொட்டில்களிலும், உறவினர்களது வீடுகளின் ஒரு பகுதியிலும் தங்கி வாழ்ந்து சிரமப்படுவோருக்குத் தான் வீடற்றோரின் சிரமமும் கவலையும் புரியும். யாழ்ப்பாணத்தில், கொழும்பில் மற்றும் வெளிநாட்டில் என்று சொந்தமாக வீடுகளைக் கொண்டிருக்கும் கூட்டமைப்பினருக்கு இந்த மக்களது மனநிலை புரியப்போவதில்லை. கடந்த மூன்று வருடங்களாக இந்தப்பொருத்து வீடுகள் பற்றி விமர்சித்து காலத்தைப் போக்கிக் கொண்டாயிற்று. மீதமுள்ள இரண்டு வருடங்களும் இதே விதத்தில் தான் பொருத்துவீடுகள் குறித்து விமர்சித்துக் காலத்தைப் போக்கப்போகிறோமா?
தனியொரு முஸ்லிம் அமைச்சராக இருந்து கொண்டு ரிசாட்பதியுதீன் மன்னாரில் முஸ்லீம் மக்களுக்கு எத்தனையோ கல் வீடுகளைக் கட்ட உதவி பெற்றுக் கொடுத்துள்ளார். அதற்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை எமது ரீ.என்.ஏ.காரர்கள் வீடற்றவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுத்து உதவ இயலாத கையறுநிலையில் இருந்து கொண்டு, அரசு வழங்க முன்வந்துள்ள பொருத்து வீடுகளைக் கூட வீடற்ற மக்கள் பெற இயலாத விதத்தில் அந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டு அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தி வருவது நியாயமானதொன்றல்ல.
தமக்கு வாக்களித்த மன்னார் மக்களைத் திரும்பிக் கூடப்பார்க்காத சுமந்திரன் இழுவைப்படகுத் தொழிலைத் தடைசெய்யச் சட்டம் நிறைவேற்றி எமது மக்களுக்கு துரோகம் செய்துள்ளார்.
வேலை வாய்ப்பு இல்லாமல் பலர் இந்த மாவட்டத்தில் இருக்கிறார்கள். பல வேலை வாய்ப்புக்களை வழங்கக்கூடிய தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை இயங்க வைத்திருந்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். வடமாகாண சபையினரோ, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ இது குறித்து அக்கறை காட்டாதது வேதனையாக உள்ளது. எனவே இவர்கள் அரசுடன் இந்த விடயங்கள் குறித்துப் பேசி, கப்பல்சேவையை ஆரம்பிக்கவும், வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்கவும் ஆவன செய்தல் அவசியம்.

எஸ்.றொபேர்ட்
மன்னார்.

# விசேட விலைக்கழிவு !




நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து தேவைகளுக்கும் மிக பொருத்தமான, சிறந்த தீர்வினையும் விற்பனைக்கு பிந்திய சேவையினையும் மிகவும் அர்பணிப்புடன் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

Central Environmental Authority Approved



1. வீடு , தொழிற்சாலை , உணவகங்களுக்கு உகந்த எல்லா அளவிலுமான RO குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.
2. நீரக்குழாய்கள் , Tiles , Bathroom fittings களில் படியும் கல்சிய , மக்னீசிய படிவுகளிலிருந்து விடுதலை பெற Water Softener System.
3. சுற்றாடல் அதிகார சபையின் நியமங்களிற்கேற்ப கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை நிறுவி பராமரித்தல்.
4. நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.

குறிப்பு :- பெரிய வேலைத்திட்டங்களுக்கு மிகக் குறைந்த வட்டியுடனான வங்கிக் கடன் சலுகைகள் பெற்றுக்கொள்ளலாம்!

WE ACCEPT MasterCard VISA

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.341, K.K.S Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

SATISFACTION 100% GUARANTEE


# கொக்கெயின் கொள்கலனை விடுவித்த சுங்க அதிகாரிகள் மூவர் இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 23
இரத்மலானைப் பிரதேசத்தில் பெருந் தொகை கொக்கெயின் போதைப் பொருள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சுங்கத் திணைக்களத்தின் மூன்று அதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இரத்மலானையில் கொக்கெயின் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பில் ஏழு பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். இந்த நிலையில் கொக்கெயின் போதைப் பொருளுடன் கொள்கலனை விடுவித்த சுங்கத் திணைக்கள அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கொள்கலனை விடுவித்ததைத் தொடர்ந்து, அந்தக் கொள்கலன் இரத்மலானைக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தது. சுமார் 3.2 பில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெயின் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-ய)


## வீடு வாடகைக்கு உண்டு

இல - 283/2, முதலாம் ஒழுங்கை, குட்செட் றோட், தோணிக்கல், வவுனியா 04 அறை, 02 வரவேற்பு அறை, சமையல் அறையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 678 2238/ 077 604 9815**

## ஆடிப்பூர விழாவும் இறுவட்டு வெளியீடும்

மூளாய் அருள்மிகு ஆதிபராசக்தி அலங்கார நாயகியின் ஆடிப்பூர பெருவிழாவும் அம்மன் போற்றிப் பாடல்கள் இறுவட்டு வெளியீடும்.

காலம் :- 26.07.2017

077 778 1605
சிவஸ்ரீ புவனேந்திர குருக்கள்

## கதிர்காமம் உற்சவம் - பேருந்து சேவை



யாழ்.நகரிலிருந்து தினமும் பிற்பகல் 3.50 மணி
கதிர்காமத்திலிருந்து தினமும் இரவு 11 மணி.

ஆசனப்பதிவுகளுக்கு :-
வரணி ஆசனப் பதிவகம்
352, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.நகர் - 021 222 2868, 077 604 8921
கதிர்காமம் - 077 978 7824, 077 529 9015
கட்டணம் - ரூபா.950/-

## முதலாம் ஆண்டு சேவை நிறைவில்

# றோயல் மெடிக்கல் சென்ரர்

458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.

**றோயல் வைத்திய ஆலோசனைகள் ...**

- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்



**தொடர்புகளுக்கு...**
021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com

# வவுனியா மாவட்டக் கூட்டுறவுச் சபை

## இலிகிதர் பதவி (302/14)

**மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. பதவி:- எழுதுனர்
02. சம்பளக் குறி இல:- 302/14
03. சம்பள அளவுத்திட்டம்:- 13875-115X10 - 125X10 - 16275 (13/2015 இன் படி)
(இத்துடன். கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 04/2017 திகதிய சுற்று நிருபத்திற்கு அமைய. அனுமதிக்கப்பட்ட விசேடபடி 15% உம். இலாபத்தில் 7800.00 ரூபா வாழ்க்கைப்படிச் செலவும் மேலதிகமாக வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 15 வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவி யொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவி யொன்றில் நான்கு(04)வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க.பொ.த (சாதரணதரம்)கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில், திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

04. வயதெல்லை 18-45 இற்கும் உட்பட்டிருத்தல்.
05. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் உடையவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ எமக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
06. விண்ணப்ப முடிவுத்திகதி:-09.08.2017
07. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையது ஆகாது என்பதுடன் அவர்கள் பதவிக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**திரு.இ.சுப்பிரமணியம்** J.P
**தலைவர்,**
**மாவட்டக்கூட்டுறவுச் சபை,**
**புகையிரத நிலைய வீதி, வவுனியா.** **23.07.2017**
**024 - 2220528**

# இலங்கைக்குச் செல்ல பயணத் தடையில்லை

## உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை22

இலங்கையில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதியுச்சமாகக் காணப்படுகின்றபோதிலும், வெளிநாட்டவர்களுக்குப் பயணத் தடையையோ, வர்த்தகத் தடையையோ பரிந்துரை செய்யவில்லை என உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2010ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையான ஆறு வருட காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் டெங்குக் காய்ச்சலால் இந்த ஆண்டு பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4.3 மடங்கு அதிகமாகும். டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோரில் 43 சதவீதமானோர் மேல் மாகாணத்திலேயே உள்ளனர்.

சுகாதார மேம்பாடுகளுக்காக இலங்கை சுகாதார அமைச்சுடன் இணைந்து உலக சுகாதார அமைப்பு பல்வேறான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. தெற்காசிய பிராந்தியத்துக்கான அலுவலகப் பிரதிநிதிகள் தேவையான ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றனர் - என்றுள்ளது. (த-ய)

### மணமகன் தேவை

1991 ஆம் ஆண்டு பிறந்த சுவீடனில் Full qualified MBBS படித்த டொக்டர் மணமகளுக்கு Full qualified MBBS முடித்த டொக்டர் மணமகன் தேவை.

ஐரோப்பா
ரஷ்யா
சிறீலங்கா

இடங்களில் படித்த மணமகன் விரும்பத்தக்கது.

பிறந்த ஆண்டு 1984 - 1990 இற்குள் இருப்பது விரும்பத் தக்கது.

IT Engineer Expert ஐரோப்பாவில் படித்தவர்களும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-Email address
seegeer10@gmail.com

### Green Nation காகித பைகள்

காகித பைகள் கிடைக்கும்

01. உணவு மற்றும் பேக்கரி 02. காகித ஷாப்பிங் பைகள்
03. ஆடை மற்றும் பரிசு பைகள்
04. உணவு மடிப்புக்கள் மற்றும் பெட்டிகள்
* எந்த நேரத்திலும் கிடைக்கும்.
* நாங்கள் உங்கள் ஓடர்களை ஏற்கின்றோம்

ஹொட் லைன் இல- 011 727 2072

முகவரி :- W.U.செனவிரத்னா நிறுவனம் மற்றும் பிறைவேட் லிமிட்டெட்

### TOYOTA AQUA கார் உடன்விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள புதிய மொடல், சகல வசதிகளும் உள்ள TOYOTA AQUA HYBRID வெள்ளைநிற கார் (CAG - XXXX) உடன் விற்பனைக்குண்டு.

T.P No:- 071 894 5692

### மரண அறிவித்தல்



**J.A.W. ஸ்ரோங்க்**

ஜோன் அன்ரனி விக்னராஜா ஸ்ரோங்க் (முன்னாள் Mercantile Credit Ltd ஊழியர்) 15.07.2017 அன்று London U.K இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் மஞ்சுளாவின் அன்புக் கணவரும், வேலணி, ஜொனத்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான S.W. ரட்ணராஜ் ஸ்ரோங்க், மேரி பவளம் ஸ்ரோங்க் ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான எட்வேர்ட் துரைராஜசிங்கம் மற்றும் திருமதி வினிபிரட் துரைராஜசிங்கம் ஆகியோரின் மருமகனும் சுட்டி ஸ்ரோங்க் (London) அவர்களின் சகோதரனும், ரஞ்சினி ஸ்ரோங்க் (London), தஞ்சுளா தேவதாஜன் (Australiya), மோகன் துரைராஜசிங்கம் (London) அஞ்சு நவநீதராஜா (London) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.07.2017 சனிக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் மல்வேர்ண் அவனியூவில் உள்ள செ‌ன். அன்டியூஸ் தேவாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கார்பேண்டேர்ஸ் Park Watford, UK இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

00447957698897 / 7590590223

### தேவை

தையல் வேலை தெரிந்த அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை.

076 739 8678

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம். நல்லூர் கோயிலுக்கு 3 நிமிடம் வாகன தூரத்தில் 90 பேர்ச்சில் அமைந்துள்ள இரு வீடுகளும் கராஜும் கொண்ட காணியொன்று உடனடியாக விற்பனைக்குண்டு. வியாபார ஸ்தலமாகவும் பாவனைப்படுத்தலாம்.

**விலாசம்:- 235/2, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

077 672 4477
58 Million Negoitable

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கைதடியில் A9 வீதியிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் மாகாண சபைக்கு முன்னால் 3 லாச்சம் 17.38 குளி காணித்துண்டு விற்பனைக்குண்டு.

077 515 0619

### வீடு வாடகைக்கு

யாழ்.உரும்பிராய், பலாலி வீதிக்கு அண்மையில் 5 படுக்கை அறை, 5 குளியலறையுடனான விசால மாடிவீடு உடன் வாடகைக்குண்டு. காரியாலயமாகவும் பாவிக்கலாம்.

077 365 8485

### S.K. Broking

Re.No.- NAL / DS / 1442

வீடு வாடகைக்கு உண்டு

கோப்பாய் இராசவீதி, கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் புதிய வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

077 193 3490, 077 461 3884

### வாடகைக்குண்டு

யாழ்.நகருக்கு அண்மையில் புத்தம் புதிய மேல்மாடி, கீழ்மாடி வீடு வாடகைக்கு உண்டு.

மேல்மாடியில் 10 அறைகள் இணைக்கப்பட்டுள்ள குளியலறைகளுடன் சமையலறை மற்றும் பெரிய விறாந்தை AC உட்பட சகல தளபாடமும் உண்டு. திருமணம் மற்றும் சகல சுபகாரியங்களுக்கும் உகந்தது.

தொடர்பு :- 077 810 5102, 077 301 3659

### வீடு வாடகைக்கு தேவை

ஓய்வுபெற்ற அரச ஊழியருக்கு 3 அங்கத்தவர் கொண்ட கௌரவ குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உடனடியாக தேவை. (தரகர்தேவையில்லை)

077 517 8727, 077 242 3400, 077 753 1344




• ஆஸ்துமா
• பீனிசம்
• இருமல்
• தும்மல்

½ தேக்கரண்டி வீதம் தினமும் காலையில் குடித்து வருவதோடு, எண்ணெயின் சிறிய அளவை சூடாக்கி பூச வேண்டும். கொதிக்கும் நீரில் கருஞ்சீரக எண்ணெய் சிறிதளவு விட்டு ஆவி பிடிக்கவும். 3 தொடக்கம் 7 நாட்கள் வரை மேற்கொள்ள வேண்டும்.

GMP, HACCP, ISO 22000 & 14001 CERTIFIED COMPANY

☎ 0117 772277

www.baraka.lk

கல்விக்கான நிதியத்தையும்
ஆயுட் பாதுகாப்பையும்
வழங்கும் ஓரே திட்டம்

**Ceylinco Life Degree Saver**

மேலதிக விபரங்களுக்கு
0112 461 461




செலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிட்டட்டால் வெளியிடப்பட்டது. (PB5183)

CEYLINCO LIFE
வாழ்க்கைக்கான நிரந்தர உறவு

செலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிட்டட், செலிங்கோ லைப் கோபுரம், 106, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05.
கம்பனிப் பதிவு இல. PB 5183. தொ: (011) 2 461 461 மின்னஞ்சல்: service@ceylife.lk வலைத்தளம்: www.ceylincolife.com

# கேள்வி பதில்

## மருத்துவர் எம்.அரவிந்தன்

### உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் நீரிழிவை கட்டுப்படுத்த முடியுமா...?

**கேள்வி :** எனது வயது 25. எனது மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்துக்கான மருத்துவச் சான்றிதழ் (Licence medical certificate) பரீட்சையின் போது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு 250 Mg/ldl ஆகவும் FBS ஆனது 160 Mg/dl ஆகவும் காணப்பட்டது. இதன் பின்னர் 'எச்.பி.ஏ.ஐ.சி' (HbAIC) என்ற பரீட்சை மேற்கொள்ளப்பட்டது. எனது 'எச்.பி.ஏ.ஐ.சி' (HbAIC) அளவானது 8.5 வீதமாகக் காணப்பட்டது. எனது உடல் நிறை 90 கிலோ கிராம். எனது குடும்பத்தில் எவருக்கும் நீரிழிவு நோய் இருக்கவில்லை. என்னிடமும் இந்த நோய்க்கான அறிகுறிகள் எவையும் காணப்படவில்லை. உணவுக்கட்டுப்பாட்டினால் மாத்திரம் இதனைக் கட்டுப்படுத்த முடியுமா..? தயவு செய்து ஆலோசனை தரவும்..?

**பதில் :** உங்களுடைய குருதிப் பரிசோதனைப் பெறுபேறுகள் அனைத்துமே உங்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றன. உங்களுடைய உடற்பருமனும் அதிகமாக இருக்கிறது. உங்களுடைய உயரத்தைக் குறிப்பிட்டிருந்தால் உடற் திணிவுச் சுட்டெண்ணி னைக் (BMI) கணிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

நீரிழிவு நோயானது அதிக தண்ணீர்த்தாகம்,அதிகளவு சிறுநீர் வெளியேறுதல், அதிகளவு பசி மற்றும் உடல் நிறை குறைவடைதல் போன்ற அறிகுறிகளுடன் வெளிப்படலாம். நீரிழிவு நோயானது இவ்வாறான அறிகுறிகள் எதுவுமின்றியும் ஏற்படலாம் என்பது மிக முக்கிய மாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். நீரிழிவு நோயானது குறிப்பாக வகை 2 ஏற்படுவதற்கு பரம்பரைக் காரணிகள் மாத்திரமல்லாது




சூழல் காரணிகளும் (வாழ்க்கை முறை) காரணமாக அமைகின்றன.

நீரிழிவு நோயினைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பது மிகவும் இன்றியமையாததாகும். சீனிச் சத்துள்ள மற்றும் அதிக மாப்பொருள் அடங்கியுள்ள உணவுப்பதார்த்தங்களை நீங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு அதிகமாக இருப்பதால் நீரிழிவைக் கட்டுப்படுத்தும் மருந்துகளை அவசியமாகப் பயன்படுத்த வேண்டும்.

எனவே நீங்கள் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறுவது அவசியம். உங்களுக்கு மெற்போமின் என்ற குளிசை மருந்தையே மருத்துவர் பொதுவாக பரிந்துரை செய்வார்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தாதவிடத்து நீண்ட காலத்தில் பலவிதமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

குறிப்பாக,பார்வை மங்கலடைதல், சீறுநீரகப் பாதிப்பு, நரம்புத்தொகுதி பாதிப்பு மற்றும் இருதய நோய் போன்றன ஏற்படலாம்.

நீங்கள் வைத்திய ஆலோசனையைப் பெற்று ஒழுங்காக மருந்துகளை உள்ளெடுத்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையினைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீண்டகால பாதிப்புக்களைத் தவிர்த்து ஆரோக்கியமாக வாழ முடியும்.

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி,
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனாவைத்தியசாலை.





# 'ஆஸ்த்மா'

## அல்லலுறும் சிறுவர்களைப் பாதுகாத்தல்

## மருத்துவர் ந. சிறி சரவணபவானந்தன்

சிறுவர்களில் காணப்படும் மிகப் பொதுவான நாட்பட்ட நோயாக இழுப்பு நோய் (ஆஸ்த்மா) காணப்படுகிறது. அனேகமான பெற்றோருடைய கவலையாகவும், விடைதெரியாத வினவலாகவும் இருப்பவை பிள்ளைக்கு ஏன் அடிக்கடி இழுப்பு வருகிறது.எப்படி இதை தடுக்கலாம்..? இழுப்பை முழுவமாக மாற்ற முடியுமா..? என்பனவே.சிறுவர்களைப் பொறுத்தவரையில் பதினொரு பேரில் ஒருவருக்கு இழுப்பு நோய் காணப்படுவதுடன் நீண்ட நாள்களுக்கு மருந்துப் பயன்பாடும் தேவைப்படுகிறது. பிரிட்டனில் சாதாரணவகுப்புஒன்றில் மூன்றில் ஒரு சிறுவர்களுக்கு இழுப்பு நோய் காணப்படுகிறது.




இலங்கையில் உள்ள 5 தொடக்கம் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் நூற்றுக்கு 13 தொடக்கம் 25 பேருக்கு அதாவது. நான்கு பேரில் ஒருவருக்கு இழுப்பு நோய் காணப்படுகிறது. கடந்த பத்து வருடங்களில் இழுப்பு நோயினால் அல்லற்படுவோரின் எண்ணிக்கை இருமடங்காகியுள்ளது. ஏறத்தாழ மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளில் மூன்று பேரில் ஒருவருக்கு ஒரு தடவையாவது இழுப்பு ஏற்படுகிறது. அதேபோலவே முன்பள்ளிச் சிறுவர்களில் நான்கு பேரில் ஒருவருக்கு இழுப்பு நோய் காணப்படுகிறது. இதிலிருந்து சிறுவர்கள் எவ்வளவு தூரம் இழுப்பு நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

**நோயக் காரணிகள்**

சிறுவர்களுக்கு இழுப்பு ஏற்படுவதற்கு மிகப்பொதுவான காரணமாகச் சொல்லப்படுவது சுவாசக்குழாய் கிருமித் தொற்றுக்களாகும். அதை விடவும் சூழலின் வெப்பநிலை மாற்றம் குறிப்பாக,வெப்பத்திலிருந்த குளிரான காலநிலை, சிகரெட் புகையால் காற்று மாசடைதல், வீட்டிலுள்ள படுக்கை விரிப்புகள், யன்னல் திரைச் சீலைகள், மின்விசிறிகள் போன்றவற்றில் தூசி காணப்படல், வளர்ப்பு பிராணிகள் வீட்டினுள்ளே உலாவுதல், பூக்களின் மகரந்த மணிகளின் பரம்பல் போன்ற காரண காரியங்களும் நோய் ஏற்படுவதற்கு காரணங்களாக அமைந்துள்ளன.

எவ்வகையான காரணிகளாக இருந்தாலும் சுவாசக் குழாய்களில் ஏற்படும் தாக்கத்தினால் சுவாசக்குழாய்கள் சுருக்கமடைகின்றன.சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. பிரதானமாக வெளிச் சுவாசத்தில் சிரமம் ஏற்படுவதுடன் விசில் கரைவது போன்ற ஒலி வெளிப்பாடுகளுடன் இழுப்பு ஏற்படலாம். இதைவிட இழுப்பு நோய் உள்ளவர்களில் வறட்டு இருமல், நெஞ்சறை தசைகள் மேலதிகமாக வேலை செய்து சுவாசச் செயன்முறையின் வேகம் அதிகரித்தல் போன்ற அறிகுறிகளையும் இயல்பாக அவதானிக்கலாம்.

**சிகிச்சை முறைமை**

சிறுவர்களுக்கு இழுப்பு நோய் இருப்பதாக உணரின் அது இழுப்பு நோய்தானா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு பெற்றோர் வழங்கும் விரிவான தகவல்களும், உடற்சோதனையும்,சிலவகையான குருதி அல்லது எக்ஸ் கதிர் பரிசோதனைகளும் தேவைப்படலாம். இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் இழுப்பு நோய் உள்ளதை உறுதியாகத் தீர்மானிப்பது என்பது சில சமயங்களில் கடினமான விடயமாக இருப்பினும் முறையே அதற்கான அறிகுறிகள் தென்படின் இழுப்புக்கான சிகிச்சை வழங்கப்படும்.

இழுப்பு நோய்க்கான சிகிச்சை முறைகளின் பிரதான பங்களிப்பு என்பது இழுப்பு ஏற்படாமல் தடுக்கும் முறைகளே.ஆக இதற்கான சிகிச்சை முறையில் பெற்றோருக்குப் பெரும் பங்களிப்பு உள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களின் போது பெற்றோர் தமக்குள்ள பங்களிப்பை உதாசீனம் செய்கின்றனர். உதாரணமாக இழுப்புக்கான அறிகுறிகள் உள்ள போதும் அதனை பதிவேட்டில் பதிந்து பிள்ளைகளை சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு வருமாறு அறிவுறுத்தினாலும் பெற்றோர் அதைச் சரிவரச் செய்வதில்லை. அதேபோன்று சிறுவர்களுக்கு நோய் உண்டாகும் காரணிகளான சிகரெட் புகை, தூசு போன்றவற்றைத் அவர்களின் சுழலில் இருந்து தவிர்த்துக்கொள்ளத் தவறிவிடுகின்றனர். முன்னர் கூறியது போலவே சிறுவர்களுக்கு இழுப்பு ஏற்படுவதற்கான பிரதான காரணியாக சுவாசத் தெர்ற்றுக்கள் விளங்குகின்றன.

அதனைத் தவிர்ப்பதற்கு தகுந்த முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.குறிப்பாக, கை கழுவுதல், தும்மும் போதும், இருமும் போதும் கைக்குட்டையை அல்லது திசுத்தாளைப் பாவித்தல், சனநெருக்கடியான பகுதிகளைத் தவிர்த்தல், சுவாசத் தொற்று உள்ளவர்கள் பாடசாலைகளுக்கோ அல்லது வேலைத்தளங்களுக்கோ செல்வதைத் தவிர்த்தல் போன்ற விடயங்கள் முக்கியமானவை.இதன்மூலம் குழந்தைகளுக்கு சுவாசத்தொற்று ஏற்படாமல் தடுக்கலாம்.

**மருந்துப் பாவனை**

மருத்துவ சிகிச்சை முறையில் இழுப்பைக் குணப்படுத்தும் மருந்துகளும், இழுப்பு அடிக்கடி வராமல் தடுப்பதற்கான நீண்ட நாள் பாவனைக்குட்படும் மருந்துகளும் தேவைப்படலாம்.இந்த நோயை முழுமையாக குணப்படுத்துவது என்பது கடினமான விடயம். ஆனாலும் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இழுப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாவிக்கும் மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகளைத் தவிர்ப்பதற்கு எப்போதும் மருந்துகளை 'இன்ஹேலர்' எனப்படும் கருவி மூலம் வழங்க வேண்டும். ஆனாலும் ஒருவருக்கு 'இன்ஹேலர்' மூலம் மருந்தை வழங்கத் தீர்மானிக்கையில் பெற்றோர் அதற்கான சம்மதத்தைத் தெரிவிப்பதில்லை.இதற்கான காரணமாக பெற்றோர் 'பம்முக்கு பழகி விடுவோம்' என்ற வியாக்கியானத்தை வெளிப்படுத்துகின்றனர். உண்மையில் இது தவறான கருத்தாகும். இழுப்பு மருந்தை இலகுவாக பக்க விளைவு குறைவாகப் பாவிப்பதற்கும், இழுப்பு அடிக்கடி வராமல் தடுப்பதற்கு நீண்ட நாள்களுக்கு மருந்தை வழங்கவும்சிறந்தமுறையாக காணப்படுவது 'இன்ஹேலரை' பாவிப்பது என்பதே. இழுப்பு மிக அதிகமாக இருந்தால் வைத்தியசாலையில் அனுமதித்து ஆவி அடிக்கடி பிடிக்க வேண்டும். இப்படியான சந்தர்ப்பங்களின் போதும் சில பெற்றோர் தவறிழைக்கின்றனர். அதாவது குழந்தையை வைத்தியசாலையில் அனுமதிக்காது வெளிநோயாளர் பிரிவில் மருந்து ஆவியை ஒரு சில தடவைகள் பிடிக்கின்றனர்.பின்பு குழந்தைகளை வீட்டுக்குக் கொண்டு செல்கின்றனர்.இழுப்பு நோய் மிகவும் அதிகமானதும் காலம் தாழ்த்தியே அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கின்றனர்.

**தீர்வும் உணவு உள்ளீடும்**

நீண்ட நாள்களுக்கு காணப்படும் இழுப்பு நோய்க்கு சில படிமுறைகளில் சிகிச்சை வழங்கப்படுகிறது. இழுப்பு அடிக்கடி அல்லது தொடர்ந்து ஏற்படுமாயின் 'இன்ஹேரலருடன்' வாயால் உட்கொள்ளும் ஒரு சில மருந்துகளையும் வழங்க வேண்டும். இதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமாகின்றது.

பெரும்பாலும் சுவாசத் தொற்றுக்களாலேயே இழுப்பு நோய் ஏற்படுவதால் சிறுவர்கள் வளரும் போது நோய் எதிர்ப்பு சக்தி ஏற்பட்டு சுவாசத்தொற்றுக்கள் குறைவடையும் போது இழுப்பு நோயும் குறைவடையலாம். எனினும் சிலருக்கு வளர்ந்த பின்னரும் இழுப்பு நோய் இருப்பதை அவதானிக்கலாம். முக்கியமாக ஆறு மாதத்துக்குட்பட்ட குழந்தைக்கு சுவாசத் தொற்று ஏற்பட்டு இழுப்பு அறிகுறிகள் ஏற்படுமாயின் அடிக்கடி இழுப்பு பின்னரும் ஏற்படச் சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே குழந்தைகளை சுவாசத்தொற்றுக்களிலிருந்து பாதுகாப்பது என்பது மிக முக்கிய கடமையாகும். இருதய நோய், போசணைக்குறைபாடு போன்ற வேறு நோய்கள் இருப்பினும் இழுப்பு அடிக்கடி ஏற்படலாம். எனவே அவற்றுக்கான தகுந்த சிகிச்சை முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

சிறுவர்களுக்கு உணவு ஒவ்வாமையால் இழுப்பு ஏற்படுவதில்லை. வெளிப்படையாக உணவு ஒவ்வாமைக்கான அறிகுறிகள் காணப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர சத்து நிறைந்த உணவுகளைத் தவிர்க்கக் கூடாது. உதாரணமாக முட்டை, பால், பழங்கள் போன்றவை சளி பிடிப்பை அதிகரிக்கும் எனக் கருதி குழந்தைகளுக்கு அவற்றைத் தர மறுக்கின்றனர்.

ஆக,இழுப்பு என்பது அதிகரித்து வரும் நாட்பட்ட நோய் என்பதுடன் அது அடிக்கடி வராமலிருக்க தகுந்த சிகிச்சை முறைகளையும்,நோய்த் தடுப்பு முறைகளையும் மற்றும் வைத்திய ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டுமென்பது மிகவும் அவசியமாகிறது.

குழந்தை நல வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.



மூச்சடங்கிய வீரசந்தானம்

32



சதிகளை முறியடித்து வென்றது கட்டார்

சான் ஏற முழம் சறுக்குது

20



23.07.2017

சூரியகாந்தி

உதயன்





# முல்லை மாவட்ட மீள்குடியேற்றத்தில் இன, மத வேறுபாடு காட்டும் அரச நிர்வாகம்

கொ. செ. வேலாயுதபிள்ளை

போர் ஓய்ந்தும்கூட அது விட்டுச் சென்றுள்ள பிரச்சினைகள் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றன. ஆனால் எப்போதும் இந்த நாடு 'இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு' என்றே தொடர்ந்தும் சொல்லப்படுகின்றது. நடந்த போர், அடக்கு முறையாளர்களுக்கும் நியாயம் கேட்ட சிறுபான்மையினருக்கும் இடையிலானது.

எனினும் சிங்கள, தமிழர்கள் போரில் நேரடியாகச் சம்பந்தப்பட்டார்கள். அந்த இரண்டு தரப்புக்களும் போரின் இழப்புக்களால் பாதிக்கப்பட்டன. ஆனாலும் இறுதியாக, போரின் முடிவில் அதிக இழப்புகள் அதில் பின்னடைவு கண்டவர்களையே சாரும் என்ற பெரும்பான்மை யதார்த்தப்பாட்டில் அந்தப் பாதிப்பு தமிழர்களுக்கே ஏற்பட்டது. அது வரலாற்று அவலம். ஆனால் நடந்து முடிந்த அந்தப் போரின் பாதிப்புக்கள் என்பவை ஆளாளுக்கு மாறுபட்ட அளவுகளில் கிடைத்ததாக நோக்க முடியாது. அது ஏற்படுத்திய பாதிப்பு சம பரம்பலையுடையது. சிங்களவர்களுக்கு இவ்வளவு, தமிழர்களுக்கு இவ்வளவு, முஸ்லிம்களுக்கு அவ்வளவு... என்று எப்படி அதன் தொகையை, நிறையை, அளவை மதிப்பிடமுடியும்...?



நடந்து முடிந்த போர் வடக்குக் கிழக்கையே தளமாகக் கொண்டிருந்தது. அதிலும் வடக்கே அதன் நிலையான தளமாக நெடுங்காலம் நீடித்தது. அந்த வகையில் போரால் அப்பகுதியை வாழ்விடமாகக் கொண்ட மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர்.

குறித்த பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களே. அவர்கள் தமது பூர்வீக நிலங்களை விட்டு இடம்பெயரும் நிலை ஏற்பட்டது. உணவின்மை, உடமை, சொத்திழப்புக்கள், உயிரிழப்புக்கள் எனப் போர் அவர்களுக்கு வழங்கியிருந்த கொடுமைகள் எண்ணிலடங்காதவை.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழந்திருந்த தமிழ் முஸ்லிம் மக்கள் தாராளமாகவே போரின் பாதிப்புக்களை அனுபவித்திருந்தனர். அதனை அளவிட்டுத் தராதரப் படுத்திக்கொள்வது சாத்தியமற்றது. அத்துடன் போரால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கும் பாதிப்பு நிவாரணங்களும்கூட பாரபட்சமற்றிருக்கவே வேண்டும். வேறுபாடு காட்டுதல் முறையற்றது. ஆனால் முல்லைத்தீவு - கூழாமுறிப்புச் சம்பவம் இதற்கு எதிர் மறையானது.

### கூழாமுறிப்புச் சம்பவம்

கடந்த வாரத்தில் முல்லைத்தீவில் 'முகப்புத்தகப் போராளிகளால்' ஒன்றிணைக்கப்பட்ட போராட்டம் ஒன்று மக்கள் கவனத்தை ஈர்த்திருந்தது. அது அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் காடழிப்புக்கு எதிரானது. அவர்களின் முகப்புத்தகச் செய்திகள், "177 ஏக்கர்கள் அளவுடைய தேக்கங் காடுகளை அழித்து அவ்விடத்தில் முஸ்லிம் மக்களைக் குடியமர்த்தும் செயற்றிட்டத்தின் ஆரம்பமே இந்தக் காடழிப்பு" என்றன. முள்ளியவளை - ஒட்டுசுட்டான் வீதிக்கும், நெடுங்கேணி - புளியங்குளம் வீதிக்கும் இடைப்பட்ட கூழாமுறிப்பு எனும் பகுதியிலுள்ள தேங்கங்காடுகள் அவசர அவசரமாக அழிக்கப்பட்டு அந்தப் பகுதியில் முஸ்லிம் மக்களைக் குடியமர்த்துவதற்கான முன்னாயத்தங்கள் நிகழ்வதைக் கண்டித்து அதற்கெதிராகவே அந்தப் போராட்டம் நடந்திருக்கின்றது. அந்தப் போராட்டம் இரண்டு அணுகுமுறைகளைக் கொண்டிருந்தது. ஒன்று அது காடழிப்புக்கு எதிரானது. இரண்டாவது இனப்பரம்பலைச் சீர்குலைக்கும் விதமாக அவ்விடத்தில் முஸ்லிம்களைக் குடியமர்த்துவதற்கு எதிரானது.

அது பாதிக்கப்பட்ட மக்களை முன்னிறுத்தி அல்லது சாட்டாகக் கொண்டு அரசியல் உயர்மட்டங்களால் முன்னெடுக்கப்படும் செயல் என்றும் விமர்சனங்கள் எழுந்தன.

### முஸ்லிம்கள் முன்னர் வாழ்ந்த நிலம் அது

முல்லைத்தீவு - கூழாமுறிப்பில், இப்போது காடு அழிக்கப்பட்ட பகுதியில் 25 வருடங்களுக்கு முன்னர் கிட்டத்தட்ட ஆயிரத்து 400 முஸ்லிம் குடிகள் வாழ்ந்திருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அவர்கள் போர் காரணமாக அவ்விடத்தை விட்டகன்று வேறு இடங்களில் தமது வாழ்வை முன்னெடுத்திருக்கின்றனர்,இப்போது 25வருடங்களுக்குப்பிறகு அந்தக் குடிகள் பல்கிப் பெருகி விட்டன. போர் ஓய்ந்து மீளவும் தமது வாழ்விடத்தில் குடியமர அவர்கள் முனைகின்றனர். அதற்காகவே முன்பு அவ்விடத்தில் தாம் வாழ்ந்த நிலப்பரப்புக்கு மேலதிகமான நிலம் அவர்களுக்கு இப்போது தேவைப்படுகின்றது என்பது அவர்கள் தரப்பில் சொல்லப்படும் நியாயங்கள் அந்தக் குடிகள் முன்பிருந்து நிரந்தரமாகவே அவ்விடத்தில் வாழ்க்கை நடாத்தி வந்திருந்தால், அதன்வழி மெல்ல மெல்ல ஏற்படும் அவர்களின் பெருக்கம் ஒரு பெரிய விடயமாகி யிருக்காது. ஆனால் இன்றைக்கோ திடீரென்று அதிகளவு இடத்தைத் தமது இருப்புக்காக அவர்கள் ஒதுக்கும்போது அது ஒரு பெரிய விடயமாகியிருக்கின்றது. அத்துடன் அந்தப்பகுதியில் பெருமளவில் தேக்கங்காடுகள் அழிக்கப்படுவதுவும் இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வைக்கின்றது. முல்லைத்தீவு மாவட்ட இனப்பரம்பலில் வருங்காலத்தில் மாற்றம் ஏற்படும் எனும் விடயத்தையும் இதன்படியே வைத்து நோக்கவேண்டும். ஆனால், போரால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குரிய காணிகள் என்ற தோற்றத்துக்குள் பெரும் அரசியல் பின்னணியில் அவசர அவசரமாக இந்தச் சம்பவம் முஸ்லிம்களுக்காகக் கூழாமுறிப்பில் நிகழ்ந்தேறுவதுதான் பாரதூரமான விடயம்.

காரணம், போரால் பாதிக்கப்பட்ட இன்னும் பல முஸ்லிம் மக்களும் ஏராளம் தமிழ் மக்களும் இன்றுவரைத் தமது இருப்பிடங்களுக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களிடம் காட்டப்படாத அன்பும் அக்கறையும் அரசியல் தலைமைகளால் கூழாமுறிப்பு விவகாரத்தில் எப்படிச் சடுதியாகக் காட்ட முடிகின்றது...?

### பாதிக்கப்பட்டவர்கள் பலர் இருக்க இவர்களில் ஏன் அவசர அக்கறை...?

போரால் பாதிக்கப்பட்ட நிலையில் ஏராளமானவர்கள் இருக்க, அவர்களை எல்லாம் விடுத்து அவசர அவசரமாகக் கூழாமுறிப்புப் பகுதியில் முஸ்லிம் மக்களுக்குக் காணி ஒதுக்குவதில் பின்னணியில் இருந்து செயல்படும் அரசியல் உற்று நோக்க வேண்டியதே. இதுவரை காலமும் போரால் பாதிக்கப்பட்ட எத்தனையோ ஆயிரம் மக்கள் தமது இழப்புகளுக்குரிய இழப்பீடுகள் கிடைக்காமல் தவிக்கின்றனர்.

அதற்காகக் களமிறங்கிப் போராடிக் கொண்டுமிருக்கின்றனர். ஆனால் இதையெல்லாம் கவனிக்காத அல்லது இதற்கெல்லாம் செவிசாய்க்காத, உதவி புரியாத அரச அதிகாரிகள், அமைச்சர்கள் சிலர் குறித்த மக்களை மாத்திரம் முதன்மைப்படுத்துவதும் அந்த மக்களுக்குரியதைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாத்திரம் முன்னிற்பதுவும் முன்னுக்குப் பின் முரணாகவே இருக்கின்றது. பல இடங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண ஒழுங்குகளுக்குரிய ஆரம்ப முயற்சிகள்கூட மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் போரால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற போர்வைக்குள், மற்றவர்களுடன் பாரபட்சப்படுத்தியே பார்க்கப்படுகின்றது குறித்த பிரச்சினை.

பெரும் அரசியல் பின்னணியுடன் நிகழும் இதில் அந்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தமக்கும் ஆதாயம் தேட விளைகின்றனரா...?

காணிக்காகவும் இருக்க நிலம் இன்றியும் உடைமைகள் இழந்தும் ஏராளமானோர் குரல் எழுப்பிக் கொண்டிருக்க சத்தமில்லாத இவர்களுக்கு ஏன் அவசரமாக இருப்பிடம்...?

சரி... போர் பாதித்தவர்களுக்கு நிவாரணம் என்றால் இவர்களுக்கு ஏன் இவ்வளவு முன்னுரிமை...?

இந்தக் கேள்விகளைப் போலவே குறித்த பிரச்சினையை ஒட்டி இன முரண்பாட்டைக் கிள்ளிவிடும் பல செயற்பாடுகள் மேற்குறித்த அரசியல்வாதிகளாலும் உயர்மட்ட அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இலங்கை என்பது ஒரு நாடு. அந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமமான அரசியல் உரிமைகளுக்கு உரித்துடையவர்கள். இலங்கை அரசு இதன் பின்னால் உள்ள சதியை வேரோடு களைந்து, பொது நீதியில் இயங்க ஆவண செய்யவேண்டும்.


**பெரும் அரசியல் பின்னணியுடன் நிகழும் இதில் அந்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தமக்கு ஆதாயம் தேட விளைகின்றனரா...?**

**காணிக்காகவும் இருக்க நிலம் இன்றியும் உடைமைகள் இழந்தும் ஏராளமானோர் குரல் எழுப்பிக் கொண்டிருக்க சத்தமில்லாத இவர்களுக்கு ஏன் அவசரமாக இருப்பிடம்...?**

**சரி... போர் பாதித்தவர்களுக்கு நிவாரணம் என்றால் இவர்களுக்கு ஏன் இவ்வளவு முன்னுரிமை...?**









# சதிகளை முறியடித்து வென்றது கட்டார்

தவபாரதி

ஒரு குட்டி நாடு கட்டார். தன்னுடைய வானூர்திச் சேவையின் விரிவாக்கத்தால் அதிகளவில் பேசப்படுகின்றது. எண்ணை வளம், பாலைவனத் தேசத்தின் கடின உழைப்பு, வியாபாரத்தளம் என்று ஏராளம் வழிகளில் தொடர்ந்தும் தன்னை உயர்த்திக் கொண்டதில் அதன் பிரபல்யம் குறைந்த பாடில்லை. இத்தனைக்கும் நடுவில் உழைப்பாளர் வர்க்கத்தை அதிகம் சுரண்டுகின்றது என்கிற குற்றச்சாட்டும் கட்டாருக்குச் சொந்தமானதே. இனிவரும் காலங்களிலும் கட்டார் பெருமளவில் பேசப்படும். காரணம், அதன் வானூர்திச் சேவையோ அல்லது ஏனைய வழிகளில் அதற்குக் கிடைத்த செல்வங்களோ அல்ல. அவை அனைத்தையும் பயன்படுத்திய கட்டார் 2022ஆம் ஆண்டில் நடக்கவிருக்கின்ற உலகக்கிண்ணக்கால்பந்தாட்டத்தொடருக்கான உரிமத்தைத் தன்வசமாக்கியிருக்கின்றது. ஏராளம் நாடுகளுடனான கடும்போட்டியின் பின்னர் அந்தக்குட்டி நாட்டுக்குக் கிடைத்த வெற்றி அது. அந்த வெற்றிதான் அந்த நாட்டுக்கு அண்மையில் ஏற்பட்ட சகல பிரச்சினைகளுக்கும் ஆரம்பப் புள்ளியாகவிருந்துள்ளது.

### உலகில் அதிக பார்வையாளர்களைக் கொண்டது கால்பந்தாட்டம்

நான்கு வருடங்களுக்கு ஒருதடவை பன்னாட்டளவில் 'பன்னாட்டுக் கால்பந்துச் சங்கங்களின் கூட்டமைப்பால் (FIFA) நடத்தப்படுகின்ற உலகக் கிண்ணத் தொடர்களின் வரிசையில் 2022ஆம் ஆண்டுக்கான தொடரை கட்டார் நடாத்தவிருக்கின்றது. பெரும் வல்லரசுகளுடன் முட்டிமோதிப் பலப்பரீட்சை செய்ததிலேயே, பெரும் சிரமப்பட்டு இறுதியில் அது கட்டாருடைய கைக்கு எட்டியது.

நான்கு சுற்றுக்களாக நடந்தேறிய அதற்கான வாக்கெடுப்பில் கட்டாரைத் தவிர்த்து நான்கு நாடுகள் போட்டியிட்டிருந்தன. முதலாவது சுற்றில் ஒரு வாக்குடன் முதலாவதாகவே ஆஸ்திரேலியா அதிலிருந்து வெளியேறியது. இரண்டாவது சுற்றில் இரண்டு வாக்குகளைப் பெற்ற ஜப்பானும் வெளியேற்றப்பட்டது. மூன்றாவது சுற்றில் ஐந்து வாக்குகளைப் பெற்ற நிலையில் தென்கொரியாவுக்கும் அது கிடைக்காமல் போயிற்று. நான்காவதும் இறுதியுமான சுற்றில் எட்டு வாக்குகளுடன் அமெரிக்க வல்லரசும் வெளியேற்றப்பட, 14 வாக்குகளைப் பெற்ற நிலையில் கடைசியாகக் கட்டாருக்குக் கிடைத்தது வெற்றி. அரபு நாடென்றில் அந்தப்போட்டி நடப்பது இதுவே முதல் முறை. மத்திய கிழக்கு நாடுகளில் என்று பார்த்தாலும் கூட நிலமை அப்படித்தான். தனக்குக் கிடைத்த வெற்றியுடன் அதை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைத் தடல் புடலாகப் பெருமெடுப்பில் முன்னெடுக்கத் தொடங்கியது கட்டார். மைதானங்கள், சுற்றுலாப்பயணிகளுக்குரிய வசதி வாய்ப்புக்கள், பார்வையாளர்களுக்கு வேண்டிய தேவைப்பாடுகள் என்று அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்ததுடன், மிகப் பிரமாண்டமாகவும் அதை முன்னெடுத்தது. அந்த வேலைப்பாடுகளில் முக்கால்வாசியை முடிவுக்கும் கொண்டுவந்தது. அந்தப் பின்னணியில் தான் கட்டாருக்கு வந்தது கஸ்ட காலம். கட்டாரைச் சூழவுள்ள அயல் நாடுகளால் கட்டார் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றது.

### அமெரிக்காவினதும் அயல் நாடுகளதும் நிலைப்பாடு

ஓரே நிலப்பரப்பாகக் கட்டாருடன் கூடியிருக்கின்ற சவூதி அரேபியாவின் தலைமையில் நடக்கின்றது அந்த நெருக்குதல். ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன், எகிப்து ஆகிய நாடுகள், சவூதியுடன் இணைந்து கட்டாருடனான உறவுகளை முறித்துக் கொண்டன. ஏமன், லிபியா, மாலைதீவுகளும் அவற்றைப் பின் தொடர்ந்தன. உணவுப்பொருள்களைப் பெறுவதில் தனது அயல் நாடுகளிலேயே தங்கியிருந்த கட்டார் பெரும் இடர்ப்பாட்டுக்கு முகம் கொடுக்கத் தொடங்கியது.

மேற்குறித்த அனைத்து வளைகுடா நாடுகளும் கட்டார் பயங்கரவாதிகளுக்குத் துணைபோவது, அவர்களுக்குப் பணத்தை வாரி வழங்குவது, ஈரானுடன் இணைந்து செயற்படுவது போன்றவற்றைக் கட்டார் செய்யும் குற்றங்கள் என்று முன்வைத்து அவற்றையெட்டி இன்னும் சில நிபந்தனைகளையும் கூடவே கட்டாருக்கு விதித்தன. அவை அனைத்தையும் கட்டார் மறுத்தது. இது திடீரென்று நிகழ்ந்தது. ட்ரம்பின் முதல் பயணம் அந்தப் பிராந்தியத்தில் நிகழ்ந்த ஒன்றிரண்டு நாள்களின் பிற்பாடு என்றும் நோக்கலாம். 2022இல் உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கு இறுதிவரை முயன்று கட்டாரிடம் தோற்ற அமெரிக்காவும் அருகிலுள்ள ஒரு சிறிய நாட்டுக்கு தமக்குக் கிடைக்காத அந்த உரிமம் கிடைத்துவிட்டதே என்று குறித்த வளைகுடா நாடுகள் செய்த சதியாகவே அண்மைக்காலங்களில் நீடித்திருந்த கட்டாருக்கான நெருக்கடிகளைக் கொள்ளவேண்டியிருக்கிறது. காரணம், திடீரென்று ஒருசேர வளைகுடா நாடுகள் கட்டாரைப் புறமொதுக்கின. பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கின்றது என்பதை முதன்மைப்படுத்தி இன் னும் நிபந்தனையைக் கட்டாருக்குத் திணித்தன. சிறிது காலத்தில் அவை ஒன்றிணைந்து கட்டார் நடத்தவிருக்கும் உலகக் கிண்ணத் தொடருக்கும் எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனால் அதற்கு அனுமதியளித்த பன்னாட்டுக் கால்பந்துச் சங்கங்களின் கூட்டமைப்போ அது கட்டார் நடாத்துவதே உறுதி என்றது. அதன் பின்னர் இப்போது கட்டாருக்கான தமது தடைகளைத் தளர்த்துவதாகக் குறித்த நாடுகள் குறிப்பிட்டிருக்கின்றன. இதற்குள் தெரிவது அமெரிக்க ஏகாதிபத்தியமா? அல்லது அயல் நாடுகளின் சர்ந்தர்ப்பவாதமா? என்பதற்கு அப்பால் ஒரு பிரச்சினை எப்படி அணுகப்பட்டிருக்கின்றது என்பதே இவை வெளிப்படுத்தும் சாரம்.

### முடியாமல் போனதால் முடிவுக்கு வந்தன அயல் நாடுகள்

இப்போது வளைகுடாப் பிரச்சினை ஓயத் தொடங்கியிருக்கின்றது. சவூதியின் கூட்டணிகள் தமது நிபந்தனைகளைக் கைவிட்டிருக்கின்றன. கட்டாரிலிருக்கும் அல்-ஜசீரா செய்தி நிறுவனத்தின் வலையமைப்புக்களை நிறுத்துவது, துருக்கி இராணுவத் தளத்தை மூடுவது, இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்புடனான தொடர்பை முறித்துக்கொள்வது, ஈரானுடனான உறவுகளைக் குறைப்பது என கட்டாருக்கு விதிக்கப்பட்ட 13 நிபந்தனைகளும் சாட்டுக் காரணங்களுடன் கைவிடப்பட்டிருக்கின்றன. 'அல்– ஜசீராவை மூடுவது அவசியமில்லை. என்றாலும் வன்முறையைத் தூண்டுவது மற்றும் வெறுக்கத்தக்க பேச்சுக்களை அல்–ஜசீரா நிறுத்துவது அவசியமானது" என்பதுபோன்றே தளர்த்தப்பட்ட அனைத்து நிபந்தனைகளுக்கும் நியாயப்பாடு வழங்கப்பட்டிருக்கின்றது. இது எல்லாம் நடந்தேறியிருப்பது கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் பின்னனியில்.

### கட்டாரின் திறமை

கட்டாருக்கு ஏற்படுத்தப்பட்ட நெருக்குதல்களையும் சவால்களையும் அந்த நாடு எப்படிச் சமாளித்தது? கட்டார் சமாளித்தது என்பது தவறானது. அது எல்லாவற்றிலும் வெற்றி கண்டது என்றே சொல்ல வேண்டும். சவூதியால் உணவுத்தடை ஏற்படுத்தப்பட்டது. வான் பரப்புக்களையும் கடல் பரப்புக்களையும் மூடி அண்மித்திருந்த நாடுகள் பலவும் கட்டாருக்குத் தடைகளை ஏற்படுத்தின. இவற்றால் கட்டார் தளர்ந்து விடவில்லை. தன்னுடைய விமானங்களையும் கப்பல்களையும் கொண்டு, தூரப் பயணம் செய்து, தூரவுள்ள நாடுகள் பலவற்றிலுமிருந்து தனக்குத் தேவையானதைப் பெற்றுக் கொண்டது. ஜேர்மனிலிருந்து பால் மாடுகளையும், ஈரானிலிருந்து உணவுகளையும் பெற்றுத் தொடர்ந்தும் அவ்வாறே பல வழிகளைக்கையாண்டு தனது தேவையைப் பூர்த்தி செய்யப் பழகிக் கொண்டது. நிலமையை அறிந்தன அயல் நாடுகள். திரை மறைவில் தமது ஏற்றுமதிகளுக்குரிய நல்ல சந்தையை இழந்து விடுவோம் என்று ஏங்குவதும் நிகழ்ந்தது. இப்போது கட்டாருக்கு ஏற்படுத்தப்பட்ட தடைகள் விலகுகின்றன. அப்படியாயின் அயல் நாடுகள் கூட்டாகச் சேர்ந்து சுமத்திய குற்றங்களின் நிலை...?



**"இனிவரும் காலங்களிலும் கட்டார் பெருமளவில் பேசப்படும். காரணம், அதன் வானூர்திச் சேவையோ அல்லது ஏனைய வழிகளில் அதற்குக் கிடைத்த செல்வங்களோ அல்ல. அவை அனைத்தையும் பயன்படுத்திய கட்டார் 2022ஆம் ஆண்டில் நடக்கவிருக்கின்ற உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடருக்கான உரிமத்தைத் தன்வசமாக்கியிருக்கின்றது.**

எம்.ஐ.முபாறக்



# காட்டிக் கொடுத்தார் விமல்

மகிந்த அணியின் அரச எதிர்ப்புப் பரப் புரைக்குத் துருப்புச் சீட்டாக அமைந்த முதல் காரணி இலங்கை மத்திய வங்கி மோசடிதான். இன்றுவரை அந்த விட யம் நீள்கிறது.

இந்த மோசடிக்குக் காரணமான 'பெர்பச் சுவல் ட்ரஸரீஸ்' நிறுவனத்தின் உரிமையா ளரான அர்ஜுன அலோசியஸ் அந்த மோசடி யால் பெறப்பட்ட பணத்தைக் கொண்டு மட்டக்க ளப்பில் மதுபானத் தொழில்சாலை அமைத்து வருவதோடு அவர் இன்னும் பல வர்த்தகங்களிலும் முதலீடு செய்து வருகின்றார்.

அவ்வாறு முதலீடு செய்யப்பட்டவற்றுள் சில ஊடக நிறுவனங்களும் அடங்குகின்றன. சிங்கள மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளைத் தொடங்கவுள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. அத்தோடு தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் இரண்டு சிங்களத் தொலைக் காட்சி நிறுவனங்கள் மீதும் முதலீடு செய்துள்ளாராம். அந்தத் தொலைகாட்சி நிறுவனங்கள் எவை என்று அறிவதற்கு ஊடகவியலாளர்கள் ஆர்வம் காட்டினர். அந்த ஆர்வத்தை விமல் வீரவன்சவால் மாத்திரம்தான் நிறைவேற்றி வைக்க முடிந்துள்ளது.

நிகழ்வு ஒன்றின்போது மத்திய வங்கி ஊழல், மோச டிகள் பற்றியும் அந்த மோசடியால் பெறப்பட்ட பணம் தொலைக்காட்சி நிறுவனங்கள் மீது முதலீடு செய்யப் பட்டிருப்பது பற்றியும் கூறிக்கொண்டிருந்தார் விமல். அப்போது அவர்முன் வழமைபோல் தொலைக்காட்சி களின் ஒலிவாங்கிகள் பல வைக்கப்பட்டிருந்தன.

பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென ஒலிவாங்கிகள் ஒவ்வொன்றையும் உற்றுப் பார்க்கத் தொடங்கினார். அவற்றுள் இரண்டு ஒலிவாங்கிகளைப் பிடித்தார்.

"இதோ இருக்கிறார்கள் இருவர்.அ ருகருகில் தான் இருக்கிறார்கள். இவர்கள்தான் அந்த ஆட்கள்"என்றார். அந்த இரண்டு ஒலிவாங்கிகளும் அர்ஜுன ஆலோசி யஸ் முதலீடு செய்துள்ள ஊடக நிறுவனங்களின் ஒலிவாங்கிகளாம்.

"இப்படிப் பப்ளிக்கில் போட்டு நாறடிக்கிறீங்களே.."



# சான் ஏற முழம் சறுக்குது...

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. மைத்திரி தலை மையிலான சுதந்திரக் கட்சியை விடவும் மகிந்த தலைமையிலான அணியில்தான் உறுப்பி னர்கள் அதிகம் இருந்தனர். இப்போது இந்தப் பிளவு மேலும் விஸ்தரிக்கப்பட்டு மகிந்தவின் பலம் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

இந்தப் பலத்தைக் கொண்டு சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் 'சீனியர்கள்' இருக்க அந்த அணியின் 'ஜுனியர்கள்' புதிய கட்சி ஒன்றை உரு வாக்க வேண்டும் என்று மகிந்தவுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்களாம்.

அவ்வாறான 11 பேர் அந்த அணியில் இருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது. புதிய கட்சி ஒன்று உருவாக்கப்படுமாக இருந்தால் ஜுனியர்களாக இருக்கின்ற தாம் சீக்கிரமாகச் சீனியர்கள் அந்தஸ்தை அடைந்து விடலாம் என்று அவர்கள் கருதுகிறார்களாம்.

இந்த ஜுனியர்கள் இன்னொரு திட்டத்தையும் வகுத்துள்ளார்களாம். மைத்திரி அணியில் இருந்து 18பேர் மகிந்த அணியில் இணைந்தால் தாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அமைச் சுப் பதவிகளைப் பெறலாம் என்பதுதான் அந்தத் திட்டமாம்.

ஆட்சி மாற்றம் தொடர்பிலான நம்பிக்கையை ஏற்படுத்தி, அதில் அவர்களுக்கு முன்னு ரிமை வழங்கப்படும் என்ற உறுதி மொழியை வழங்கி இவர்களைத் தடுத்து நிறுத் துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளாராம் மகிந்த.

"பாவம் சான் ஏற முழம் வழுக்கும் நிலைதான் மகிந்தவுக்கு"

# நாங்க எல்லாம் மானமுள்ளவங்கய்யா...

அரசில் இருந்து 18 பேர் வரை விலகுவதற்குத் திட்டமிட்டுள்ளனர் எனச் செய்திகள் .அவர்களுள் மிகமுக்கியமானவர் சுற்றுலாத் துறைப் பதில் அமைச்சர் அருந்திக்க பெர்ணாண்டோதான்.

அமைச்சுக்குள் அவருக்கு எதிராக இடம்பெற்று வரும் வெட்டுக் குத்துக்கள்தான் அவர் பதவி விலகத் தீர்மானித்தமைக்குக் கார ணமாம். அவர் இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு ஒரு நாளைக்கு முன்பும் அவருக்கு மற்றுமொரு வெட்டு வீழ்ந்ததாம்.

சுற்றுலாச் சபைக்குக் கடந்த வாரம் தவிசாளர் ஒருவர் நியமிக் கப்பட்டார். அவர் அமைச்சர் சாகல ரத்னாயக்கவின் சகோதரர். அவர் பதவி ஏற்கும் நிகழ்வு அமைச்சில் இடம்பெற்றது. ஆனால்,அந்த அமைச்சின் பதில் அமைச்சராகவும் அதே அமைச்சில் அலுவலகத்தையும் கொண்டிருக்கும் அருந் திக்க பெர்னாண்டோவை அந்த நிகழ்வுக்கு அழைக்க வில்லையாம்.

அதுமாத்திரமன்றி, அவர் தலைவராக நியமிக்கப்பது கூட அவருக்குத் தெரியாதாம். இவ்வாறு இன்னும் எத்தனையோ விடயங்கள் அவருக்குத் தெரியாம லேயே நடக்கின்றனவாம்.

இப்படியான ஓர் இடத்தில் இருந்து மரியாதையை இழப்பதைவிட அரசில் இருந்து விலகுவது மேல் என நினைத்துத்தான் அருந்திக்க அரசில் இருந்து போவ தற்கு முடிவெடுத்தாராம்.

"நாங்க எல்லாம் மானமுள்ளவங்கய்யா... மதியாதோர் தலைவாசல் மிதிக்கமாட்டோம். தெரியுமில்ல..."

# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!



# மாப்பிள்ளைத் தோழனைச் சந்தித்தார் மைத்திரி



பழைய நினைவு ஒன்றை மீட்டிப் பார்க்கும் ஓர் அருமையான சந்தர்ப் பம் ஓரிரு நாட்களுக்கு முன்னர் மைத்திரிக்குக் கிடைத்தது. அதுவும் அவரது திருமண நாள். அவர் சற் றும் எதிர்பார்த்திராத தருணத்தில் அது நடந்தது.

பாணந்துறை நகர சபை மைதானத்தில் போதைப்பொருளுக்கு எதிரான கூட் டம் ஒன்று அவருடைய தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வு முடிந்து நடையில் சென்று மக்களைச் சந்தித்த அவருக்கு இன்ப அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

ஆம்..! நீண்ட நாள்களுக்குப் பிறகு அவரது நண்பர் ஒருவரைச் சந்திக்கக் கிடைத்ததுதான் அந்த இன்ப அதிர்ச்சி. அதில் விசேஷம் என்னவென்றால் அந்த நண்பர் மைத்திரியின் திருமணத்தின்போது மாப்பிளைத் தோழனாகக் கலந்துகொண்டவர் என்பதுதான்.

ஓய்வுபெற்ற ஆசிரியரான அந்த நண்பரைக் கட்டி அனைத்து ஒளிப்படம் எடுத்துத் தனது பழைய நினைவுகளை மீட்டி மகிழ்ந்தாராம் மைத்திரி.

"அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே...நண்பனே..நண்பனே.... இந்த நாள் அன்றுபோல் இன்பமாய் இல்லையே. அது ஏன்...? ஏன்...? நண்பனே.."



# 'மேட்டர்'

நாமல் ராஜபக்சவின் சகோதரர்களுள் ஒருவரான ரோஹித ராஜபக்ச அரசியலுக்கு மிகத் தூரமாகவே இருக்கின்றார். எதிர்காலம் தொடர் பில் எதுவித இலக்குமில்லாமல், கவலையுமில்லாமல் விளையாட் டுப் பையனாக வலம் வருகிறார் அவர்.

கலைகளுடன் அவருக்கு ஈடுபாடு உண்டு. இசை அல்பங்கள் தயா ரிப்பது அவரது பொழுதுபோக்குகளில் ஒன்று. அண்மையில் அவர் தயாரித்த இசை அல்பம் ஒன்றில் அவரது மூத்த சகோதரர் நாமலை நடிக்க வைத்த செய்திதான் இன்றைய அரசியல் அரங்கில் கிசுகிசு வாகச் சுற்றுகிறது. அந்த அல்பத்தில் நடித்த யுவதிதான் அந்த கிசுகிசுப்புக்கு முக்கிய காரணம்.

நுவரெலியாவில் படப்பிடிப்பு. அன்றைய தினம் மகிந்தவும் நாட்டில் இல்லை. தாயும் வீட்டில் இல்லை. ஒரே 'போரிங்' நாமலுக்கு. அந்த போரிங்கைப் போக்குவதற்காகத் தன்னுடன் நுவரலியாவுக்கு வரு மாறு ரோஹித அழைத்ததும் உடனே சென்றுவிட்டார் நாமல்.

அங்கே சென்றதும் ஒரு யோசனை தோன்றியது ரோஹிதவுக்கு. நாமலை அந்த இசை அல்பத்தில் நடிக்க வைத்தால் என்ன என்ப துதான் அந்த யோசனை. நாமலிடம் அதைக் கூறியதும் அவரும் சம்மதித்தார்.

அண்ணன், தம்பி இருவரும் இணைந்து அந்த அல்பத்தை நடித்து முடித்தனர். இதுவொரு 'மேட்டரல்ல'. அந்த அல்பத்தில் கதாநாயகி யாக நடித்த யுவதிதான் 'மேட்டர்'.

ஆம், அந்த யுவதி வேறு யாருமல்லர் நாமலின் காதலியாம். இந்தச் செய்தியைச் சிலர் பரப்பிவிட்டனர். அதைப் பார்த்து பதறிப்போன நாமல் அவருக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நான் அவரை முதன்முதலாகப் பார்த்ததே படப்பிடிப்புத் தளத்தில்தான் என்று இப்போது மறுப்பறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றாராம் .

"அரசியல் பரபரப்புக்கு மத்தியில் சின்னச் சின்னக் கிளுகிளுப்பு இருக்கத்தானே வேணும்"



# பண்டிகை

## களைகட்டாமல் கடந்து செல்கிறது

ஒருவருடைய மதிப்பை அளவிடுவதெனின் அவர் கொண்டுள்ள பணத்தின் அளவை வைத்தே அதைத் தீர்மானித்துக் கொள்கிறார்கள். இன்றைய சமூக நிலவரமும் இதுவே. அனைவரும் மதிக்கும் அளவுக்குப் பணம் சம்பாதித்து வாழ நினைக்கும் ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கையில் சூதாட்டம் சூழ்ந்தால் என்ன நடக்கும்? அதுதான் 'பண்டிகை'யின் கதை. நேர்மையாக உழைத்து, நல்ல வாழ்வு அமைத்துக்கொள்ள முயல்கிறான் வேலு (கிருஷ்ணா). குடும்பத்தை நிம்மதியாக வைத்துக்கொள்ள, சூதாடினாலும் தப்பில்லை என்று எண்ணுகிறான் முனி (சரவணன்). சமூகம் எக்கேடு கெட்டாலும் தனது கருவூலம் நிரம்பினால் போதும் என்று செயல்படுபவன் தாதா (மதுசூதனன் ராவ்). சூதாட்ட சூழ்ச்சி காரணமாக தாதாவிடம் தான் இழந்த பணத்தை வேலு உதவியுடன் பெற்றுவிட ஒரு திட்டம் தீட்டுகிறான் முனி. இதில் வென்றது யார்...? என்பதே மீதிக் கதை.

### சூதாட்டமும் வன்முறையும்

கதை பழசு என்றாலும், வலுவான திரைக்கதை ஓட்டம் படத்தைத் தாங்கிப் பிடிக்கிறது. சூதாட்டத்தின் உள்ளே நடக்கும் சகுனியாட்டத்தையும் விறுப்பாகச் சொல்கிறது 2ஆம் பாதி. ஐ.பி.எல் கிரிக்கெட்டை மையமாக வைத்து வெளியே நடத்தப்படும் சூதாட்டம், பலசாலிகளை மோதவிட்டு அதில் பந்தயம் கட்டிப் பணம் குவிக்கும் சண்டைக் களச் சூதாட்டம் என்று திரைக்கதையை வித்தியாசமான கோணத்தில் நகர்த்தியிருக்கிறார் அறிமுக இயக்குநர் பெரோஸ். திரைமறைவில் செயல்படும் குழுவை விவரித்த விதம், காட்சியமைப்புகளின் நேர்த்தி, திரைக்கதை நகர்வுகள் அழகு!

சூதாட்டத்தில் ஒருவர் எப்படிச் சிக்குகிறார்? அவரை உள்ளே அகப்படுத்துவதற்கு எதிரிகள் வகுக்கும் வியூகம், அதில் புழங்கும் பணம், பேரம் பேசுதல் உள்ளிட்டவை தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், வன்முறைதான் சற்றுத் தூக்கலாகவிருக்கின்றது. சூதாட்டத்தின் பின்னணியில் பொலிசார் இருப்பதை பால்ராஜ் (சண்முகராஜா) கதாபாத்திரம் மூலம் சித்திரித்திருக்கிறார்கள்.

### நாயகன், நாயகி - பாத்திரங்கள்







'கழுகு', 'யாமிருக்க பயமேன்' திரைப்படங்களுக்குப் பிறகு, திரையில் ரசிகர்களை நன்கு வசீகரிக்கிறார் கிருஷ்ணா. காதல் காட்சிகளிலும், காதலியின் அலைபேசி எண்ணை மறந்துவிட்டு, அலையும் காட்சிகளிலும் ரசிக்க வைக்கிறார். ஆக்ரோஷமாக மோதும் காட்சிகளில் அசத்துகிறார். காவியாவாக வரும் நாயகி ஆனந்திக்குப் பெரிதாக வேலையில்லை. அவ்வப்போது தலைகாட்டுகிறார். தாதா வீட்டில் வேலு, முனி குழுவினர் கொள்ளையடிக்கப் போகும்போது, வந்து செல்பி எடுக்கிறார். அந்தக் காட்சிகள் எதற்கு என்றே தெரியவில்லை. அதன் பின்னர் படத்தில் இருந்தே காணாமல் போய்விடுகிறார் நாயகி.

சூதாட்டத்தால் அனைத்தையும் இழக்கும் சரவணன், தான் இழந்ததை தாதா வீட்டில் இருந்து கொள்ளையடிக்க முயற்சிக்கும் காட்சிகளில் துளியும் நியாயம் இல்லை. ஆனால், அவர் மாட்டிக்கொள்ளும் காட்சிகளில் ரசிகர்கள் 'அய்யோ .பாவம்' எனச் சொல்லும் அளவுக்கு குணச்சித்திர நடிப்பை வெளிப்படுத்திவிடுகிறார்.

தாதா கதாபாத்திரத்தில் மதுசூதனன் ராவ் கச்சிதம். வேலுவுடன் மோதும் விக்டர், மாலிக், மந்திரியாக வரும் நிதின் சத்யா, கிளைமாக்ஸில் மோதும் இரட்டையர்கள் என அனைவரும் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளனர். கருணாஸ் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே வருகிறார். வேலுவிடம் காவியா 'பீர்' கேட்பதும், குடித்துவிட்டுப் போன் பேசுவதும் அபத்தம். கொள்ளையைத் துப்புத் துலக்க வருபவர் பயன்படுத்தும் அந்த ஆயுதம், பார்வையாளரையே கிழிப்பதுபோல இருக்கிறது. தவிர்த்திருக்கலாம்.

### இசை, காட்சியமைப்பு

சண்டைக்காட்சிகள், முத்தாய்ப்பான சில வசனங்கள் சிறப்பு. ஆர்.எச். விக்ரமின் பின்னணி இசை வலுச் சேர்க்கிறது. பாடல்கள் பருவாயில்லை ரகம். காதல் காட்சிகளில் அதிகம் செயற்கைத்தனம்! படத்தின் ஓட்டத்தில் இருந்து காதல், பாடல் காட்சிகள் விலகியே நிற்கின்றன. படத்தின் 2ஆம் பாதியில், சூதாட்டத்தில் இழந்த பணத்தை மீட்பதையும், அதற்காகத் திட்டமிடுவதையும் நகைச்சுவையாகக் கையாண்டிருக்கிறார் இயக்குநர். நேர்த்தியான இறுதிக் காட்சி அமைந்தும் பண்டிகை என்பது களைகட்டாமலேயே கடந்து விடுகின்றது.

# ரூபாய்

### கதைப் பார்வை

நாயகன் சந்திரனும், நண்பன் கிஷோர் ரவிச்சந்திரனும் 'டெம்போ' ரக ஊர்தியில் பொருட்கள் ஏற்றியிறக்கி உழைப்பவர்கள். தேனியில் காய்கறிகளை ஏற்றிக் கொண்டு சென்று சென்னை கோயம்பேடில் இறக்குவதை வழமையாகக் கொண்டவர்கள். அதற்கான கூலியை வைத்து 'டெம்போ'வின் கடன் தவணைப் பணத்தை அடைக்கத் திட்டமிடுகிறார்கள். பணம் போதாததால், சென்னைக்குள் சவாரிக்காசுச் சுற்றுகிறார்கள். அவ்வேளை கடன் தொல்லை காரணமாகத் தனது வீட்டை மாற்றும் சின்னி ஜெயந்த் மற்றும் அவரது மகள் ஆனந்தியின் அறிமுகம் கிடைக்கிறது. அவர்களிடம் வாடகை பேசி, டெம்போவில் பொருள்களை ஏற்றிக்கொண்டு வீடு தேடுகிறார்கள். ஆனந்தியைப் பார்த்ததும் சந்திரனுக்குக் காதல் தொற்றிக்கொள்கிறது. இதற்கிடையே, தனியார் நிதி நிறுவனத்தில் பெரும் தொகைப் பணத்தைக் கொள்ளையடித்த ஹரிஷ் உத்தமன், பொலிஸ் சோதனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பணப்பையை இவர்களது டெம்போவில் போட்டுவிடுகிறார். கூடவே, டெம்போவையும் தவறவிடுகிறார். அந்தப் பணம் என்ன ஆனது? சந்திரன்-ஆனந்தி காதல் கைகூடியதா? ஹரிஷ் பணத்தை எடுக்கின்றாரா அல்லது பொலிஸ் ஹரிஷைப் பிடித்ததா? என்பது மீதி கதை!





### குறைகளைக் குறைத்து இருக்கலாம்

'சாட்டை'யை இயக்கிய அன்பழகனின் 2ஆவது படம். வீதியைக் கதைக் களமாகக் கொண்ட விறுவிறுப்பில் சாதாரண மனிதர்களையும் அவர்களது ஆசாபாசங்களையும் கொண்டுவந்து பொருத்த முயன்றிருக்கிறார் இயக்குநர். ஆனால் அது எதார்த்தத்தில் இருந்து விலகியே நிற்கிறது. பெரும்பாலான காட்சிகள் இயல்பாக இல்லை. உதாரணத்துக்கு, நாயகன் உட்பட 4 பேரும் வில்லனிடம் சிக்கிக்கொண்ட பிறகு, அவர்கள் தப்பிச் செல்ல எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. இறுதிக் காட்சியை இப்படித்தான் அமைக்க வேண்டும் என்பதற்காகவே கடைசி வரை அவர்களை வில்லனின் பிடியிலேயே இருக்க வைத்துவிட்டார் இயக்குநர். ஆணி அடிக்கும் இயந்திரத்தால் ஆட்களைக் கொல்வது போன்ற காட்சிகள் அபத்தமானவை. நிதி நிறுவனத்தில் ஹரிஷ் கொள்ளையடிக்கும் காட்சி தர்க்கரீதியாக நம்பகமாக அமையவேண்டும் என்பதில் இயக்குநர் காட்டிய ஈடுபாடும், கவனமும், 2ஆம் பாதியில் இல்லாததுதான் படத்தின் பெரிய சிக்கல்.

### பாத்திரங்கள்

'கயல்' படத்தில் நடித்த சந்திரன் தனது வழக்கமான நடிப்பை வழங்கியிருக்கிறார். ஆனந்தியை உருகி உருகிக் காதலிக்கிறார். நமக்குச் சொந்தமில்லாத பணத்துக்கு ஆசைப்படுவது தவறு என்று சொல்லும் இடத்தில் ஆனந்தி நெகிழ வைக்கிறார். படம் முழுவதையுமே சின்னி ஜெயந்த் தனது குணச்சித்திர வேடத்தால் தாங்கிப் பிடிக்கிறார். நாயகனின் நண்பனாக வரும் கிஷோர் ரவிச்சந்திரனின் நடிப்பும் கச்சிதம்.


### இசை, ஒளிப்பதிவு

படம் இரண்டு காரணங்களால் நம்மை இருக்கையில் பொறுமையுடன் அமரவைக்கிறது. ஒன்று, வி.இளையராஜாவின் ஒளிப்பதிவு. வீதியில், வளைவுகளில், மலைப்பாதைகளில், மலை கிராமங்களில் அவரது கமரா காட்டியிருக்கும் துடிப்பும் வேகமும் நிதானமும் அபாரம்! இரண்டாவது, இமானின் இசையும், யுகபாரதியின் வரிகளும். இயக்குநர் நினைத்தால் இசையமைப்பாளரிடம் இருந்து கதைக்கு இணக்கமான இசை, பாடலாசிரியரிடம் இருந்து கட்டுக்கோப்பான வரிகளைப் பெற முடியும் என்பதற்கு இந்தப் படம் இன்னும் ஒரு உதாரணம். ஸ்ரேயா கோஷலின் குழைவான குரலில் ஒலிக்கும் 'உன்கூட பேசத்தானே', அனிதா வெங்கட்டின் குரலில் ஒலிக்கும் 'டுக்கும் டுக்கும்' என்ற கிராமத்து முளைப்பாரி, திருவிழா பாடல் ஆகியவற்றில் யுகபாரதி வழக்கமான தன் மண்வாச முத்திரையைப் பதித்திருக்கிறார். நமக்குச் சொந்தமில்லாத பணத்துக்கு ஆசைப்பட்டால் அது கெடுதலில் போய் முடியும் என்று சொல்கிறது படம். 2ஆம் பாதியின் தர்க்கப் பிழைகளைக் களைந்திருந்தால் 'ரூபாய்' மதிப்பு கூடியிருக்கும்!






# குற்றமும் தண்டனையும்



அன்று ஒரு வெள்ளிக்கிழமை. யாழ்ப்பாணம் நீதிவான் மன்றின் இருக்கைகள் இளைஞர்களால் நிறைந்திருந்தன. பெரிய வழக்குகளுடன் தொடர்புபட்டவர்களாக அவர்கள் தெரியவில்லை. அப்படித் தொடர்புபட்டவர்கள் சிறைக்கூண்டுக்குள் தான் இருப்பார்களே தவிர வெளியில் நிற்பதற்குரிய சந்தர்ப்பங்களும் குறைவு. இவர்கள் எதற்காக வந்திருப்பார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இப்படி ஒரு பொழுதும் வண்டிகள் தரிப்பிடம் நிறைந்தும் நான் பார்த்தில்லை.

அனைத்து இளைஞர்களும் தமக்குரிய சட்டத்தரணிகளைப் பிடிப்பதில் ஓடித்திரிந்தார்கள்.

இந்த வழக்குக்கு சட்டத்தரணி தேவைதானா? என்ற கேள்விக்கணையோடு சிலர். சட்டத்தரணிகளைப் பிடித்துத் தமக்கு நிகழ்ந்தவற்றை மிகச் சாதுக்களாகக் கூறிக்கொண்டிருந்தார்கள் இன்னும் சிலர்.

"பார்த்துக்கொள்ளலாம், இதெல்லாம் பெரிய விசயமில்ல, என்ன ஒரு ஆறாயிரம், ஏழாயிரம் செலவாகலாம், தண்டப்பணம் கொஞ்சம் செலுத்த வேண்டியிருக்கும், பணம் வைச்சிருக்கிறியா?" இப்படியான கேள்விகள் நிறைவு பெற்றதும் பணம் கைமாறியது. இன்னும் சில இளைஞர்களோ விட்டபாடில்லை. சட்டத்தரணிகளின் பின்னுக்கும் முன்னுக்கும் ஓடித்திரிந்தார்கள்.

சட்டம் தன் கடமையைச் செய்கிறது. அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் பிழை செய்தவர்களாகத் தான் இருக்கின்றனர். ஆனால் அந்தப்பிழையைத் திரும்பத்திரும்பச் செய்யக் கூடாது என்று முடிவெடுப்பவர்கள் குறைவாகவே இருக்கின்றனர்.

"வழக்குக்கு வந்தவர்கள் உள்ளே வந்து அமருங்கள்" என்ற பொலிசாரின் குரல் கேட்டு வெளியில் நின்றுகொண்டிருந்த அனைவரும் அவசரப்பட்டு உள்ளே சென்றார்கள். சிறிது நேரத்தில் மன்றின் செயற்படுகள் ஆரம்பமாயின. வழக்கு எண் கூப்பிடப்பட்டதும் குற்றவாளிக்கூண்டுக்குள் ஏறினார் ஒருவர்.

நீதிபதி: – வீதியின் நடுவே வாகனத்தைச் செலுத்தியது குற்றம். குற்றத்தை ஏற்றுக்கொள்கிறீரா?

பதில்: – ஆம் ஏற்றுக்கொள்கிறேன்.

தண்டப்பணம் 5ஆயிரம் செலுத்த வேண்டும். என்று அறிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்டவர் குற்றவாளிக் கூண்டை விட்டு இறங்கினார்.

- ✦ வாகன விபத்தைத் தடுக்கத் தவறியமை, அனுமதிப்பத்தரமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கும் 6ஆயிரம் ரூபா தண்டம்.
- ✦ அதிக வேகமாக வாகனம் செலுத்தியமைக்கு ஆயிரம் ரூபா தண்டம்.
- ✦ சமிக்ஞை விளக்கின்றி இரவு நேரத்தில் பயணம் செய்தமைக்கு 2ஆயிரம் ரூபா தண்டம்.
- ✦ தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் வாகனம் நிறுத்தியமைக்கு ஆயிரம் ரூபா தண்டம். மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு 7ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டம். அத்துடன் ஒரு வருட காலத்துக்கு சாரதிய அனுமதிப்பத்திரம் நிறுத்தப்படுகின்றது.
- ✦ காப்புறுதிப்பத்திரமின்றியும், வரிப்பத்திரமின்றியும் வாகனம் செலுத்தியமைக்கு 3ஆயிரம் ரூபா தண்டப்பணம் கட்டவேண்டும். பேருந்துத் தரிப்பிடம் இல்லாத இடத்தில் பேருந்தை நிறுத்திப் பயணிகளை ஏற்றியமைக்கு 4ஆயிரம் ரூபா தண்டப்பணம். தெளிவற்ற சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வாகனம் செலுத்தியமைக்கு 3ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டப்பணம். அத்துடன் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.
- ✦ ஆசனப்பட்டி அணியாமல் சென்றமைக்கு ஆயிரம் ரூபா தண்டம்.
- ✦ சிவப்பு நிற வீதிச் சமிக்ஞையை மதிக்காமல் வாகனம் செலுத்தியமைக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணம்.
- ✦ வாகானப்பத்திரம், வாகன வரிப்பத்திரமின்றி, காப்புறுதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமைக்குத் தண்டப்பணம் 7ஆயிரம் ரூபா.
- ✦ சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் இன்றியும் மற்றும் இடப்பக்கத்தில் செல்லாமைக்கும் 4ஆயிரம் ரூபா தண்டம்.
- ✦ 'பட்டா'ரக வாகனத்தில் ஆபத்தான முறையில் பொருள்களை ஏற்றிச் சென்றமைக்கும் ஆயிரம் ரூபா தண்டம்.


வழக்குகளைப் பரீசீலனை செய்தார் நீதவான். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தமது குற்றங்களை ஏற்றுக்கொண்டனர். தண்டங்களுடன் நிறைவடைந்தன தண்டனைகள்.

இந்த வழக்குகள் நிறைவுபெற்றதும் மன்றுக்குள்ளிருந்த அனைத்து இளைஞர்களும் வெளியேறிவிட்டார்கள். மன்றின் செயற்பாடுகள் இந்த குற்றங்களு டனே முடிவுக்கும் வந்தன. அன்றைய நாளை முழுவ துமாக நிறைத்துக்கொண்ட இந்தக் குற்றங்களைப் புரிந்தவர்கள் பணம் கட்டினால் போதும் இந்த இடத்தை விட்டு எப்படியாவது வெளியேறி விடவேண்டும் என்ற சிந்தனையிலேயே இருந்தார்கள். குட்டிபோட்ட பூனை மாதிரி அங்குமிங்கும் சுற்றித்திரிந் தார்கள்.

எமது நாட்டுச்சட்டம் இது தான் என்றால் அவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியது நாம் தான் என்பதை ஏனோ மறந்து விட்டவர்கள் இப்படிச் சிறிய குற்றங்களுக்காகக் குற்றவாளிக்கூண்டுக்குள் ஏறுகின்றார்கள். இன்னுமொரு கவலையான விடயம், சிலர் தமது உறவுகளைக் தண்டணையிலிருந்து விடுவிப்பதற்குப் பணமின்றி மன்றிற்குள்ளும் வெளியேயும் அலைந்தலைந்து நண்பர்களிடமும் ஏனைய உறவுகளிடமும் கையேந்திக்கொண்டு... பார்ப்பதற்கே பரிதாப நிலை அது.

சட்டம் தன் கடமையைச் செய்கிறது. அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் பிழை செய்தவர்களாகத் தான் இருக்கின்றனர். ஆனால் அந்தப்பிழையைத் திரும்பத் திரும்பச் செய்யக் கூடாது என்று முடிவெடுப்பவர்கள் குறைவாகவே இருக்கின்றனர். வாகனத்தை வீதியில் தான் செலுத்தலாம். அதற்காக வீதியில் எப்படியும் வாகனத்தைச் செலுத்தலாம் என்றில்லை. அதற்குச் சட்டம், ஒழுங்கு இருக்கும் போது வாகனத்தை இப்படிச் செலுத்தினால், என்ன அப்படிச் செலுத்தினால் என்ன என்று வீதியில் சாகசம் நிகழ்த்துவதும், மற்றவர்களுக்கு இடையூறு செய்வதுவும் தண்டனைக்குரியது. வீதி ஒழுங்கு அறியாமல் வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்று வைத்திருந்தாலும், பணம் இருக்குத் தானே என்று சட்டத்துக்குச் சவால்விட்டாலும்கூட நிலைமை இப்படித் தான். மன்றுப்படி ஏறவைக்கும்...!






மனிதனை மனிதனாய்
மதிக்காத மனிதர்க்கு
விலை என்ன சொல்லு மனிதா?
இனிமை தமை மறுத்து
கற்பிதங்கள் பூட்டுபவர்
கசடனாய்க் கொள்க மனிதா!

மனிதத்தின் மாண்பினை
மாசாக்கிப் பணி செய்வேனை
மனிதனாய்க் கொள்ளலாமா?
மனிதனை மனிதனாய்
மதித்தறியாப் பேதையர்க்கு
சிலை வைத்துப் பேணலாமா?

மனிதனை மனிதனாய்
ஏற்காத மனிதனை
மாமேதை என்பதழகா?
இனிதான கன்னயை
வேம் பென்றுரைப்பது
கீழ்மையிலும் கேடல்லவா?

கற்சிலைக்கு ஆயிரமாய்க்
கற்பிதங்கள் செய்தாலும்
அற்புதங்கள் ஆவதில்லையே
பொற்புடைய மனிதத்தை
மதிக்கத் தெரியாதோரை
மாக்களில் சேர்த்தலழகு.

மொழிவழி மாந்தரை
இழிவென்றுரைப்பதால்
மொழி வழி இனம் வாழுமா?
இழிவான மனங்கொண்டு
மொழி வழி பகுப்போரை
கீழ்மகன் என்றுரைசெய்.

சித்தம் இழந்தவன்
செயல் தன்னை மானிடம்
பைத்தியம் என்கின்றது.
மெத்தப் படித்தவன்
மேன்மை கொள் பண்பினால்
மேலவன் ஆக உயர்வான்.

மனிதத்தை நேசித்து
மனிதத்தை மாண்பு செய்
மானிடம் புவியிலோங்கும்.
இனிதான புவி வாழ்வு
எந்நாளும் நினைவொளிர
பண்புடமை ஆற்று மனிதா!

மனிதத்தைக் காதல் செய்
மனிதத்தைப் பேணி வாழ்
மனிதமே தழைக்கும் இங்கு
கனி விட்டுக் காய் கொள்வோர்
காசு, பணத்தால் மனித
வாழ்வினைக் காணமாட்டார்.

வளவை வளவன்



# நல் அறிவுரைகள் வெற்றி தரும்

அதிகாலைப்பொழுது வீட்டின் முன்பாக அமைந்திருந்த திண்ணையில் அமர்ந்திருந்து பாடங்களை மீட்டிக்கொண்டிருந்தாள் வாணி. அன்றைய தினம் ஆங்கிலப் பரீட்சை நடைபெறும் நாள் என்ற ஞாபகங்கள் அவளை துரித மீட்டல்களைச் செய்யப் பணித்தன. எத்தனை தடவை படித்தாலும் மனப் பாடமாகாத பாடப் புத்தகத்தின் தாள்களைப் புரட்டியபடி சினம் கொண்டாள். 'என்ன இது. எத்தனை தடவைகள் படித்தாலும் விளங்கவில்லையே' என்று தன்னுள் புலம்பினாள்.

பொழுது புலர்ந்தது. பகலவன் ஒளி எங்கும் பரவியது. கோலம் போடுவதற்காக வீட்டின் வாசல் புறத்துக்கு வந்தார் வாணியின் தாய். திண்ணையில் புத்தகமும் கையுமாக இருந்த வாணியை உற்று நோக்கியபடி "இன்றை மீட்டல் எப்படி..? பரீட்சைக்கு தயாரா?" என வினவினார்.

"இல்லையம்மா....! இந்தப் பாடத்தை மனப்பாடம் செய்ய முடியவில்லை. எதுவுமே ஞாபகத்தில் இல்லை." என்றாள் வாணி.

பதிலுரைத்த தேவி "எல்லா விடயங்களையும் பொறுமையோடு செய்ய வேண்டும். அமைதியோடு அணுக வேண்டும். அவசரமின்றி ஆறுதலாகப் படி." என்று கூறியபடி கோலம் போடத் தொடங்கினாள். கவனச் சிதறல் இன்றி தன் பணியைச் செய்துகொண்டிருந்தாள்.



இந்தச் சந்தர்ப்பத்திலே தாயும் மகளும் உரையாடிய விடயங்களைக் கேட்டபடியே வீட்டிலிருந்து வெளிப்பட்டார்வாணியின் தந்தை. தந்தையாரைக் கண்டதும் தனது முறைப்பாட்டை வெளிப்படுத்தினாள் வாணி, "அப்பா..! இந்தப் பாடத்தை மனப் பாடம் செய்ய முடிய வில்லை" – என்றாள்.


அனைத்தையும் கேட்ட வாணியின் தந்தை, அப்படியா மகளே என்று விழித்தார். பின்பு தன் மனைவி கோலம் போடுவதை அவதானித்தார். மனைவியை நோக்கி "ஏன் கோலத்தை அழித்து அழித்துப் போடுகிறீர்?" என்று அன்பின் கனிவோடு கேட்டார்.

இப்போது பதிலுரைத்த வாணியின் தாய் "இந்தக் கோலம் எப்படிப் போடுவதென்பதை நேற்றே அறிந்துகொண்டேன். சிறிய கோலம் என நினைத்து முன்னாயத்தமின்றி கோலத்தைப் போட்டுப் பார்க்காமல் புள்ளிகளை வைத்துவிட்டேன். இப்போது கோலத்தை எப்படித் தொடங்குவதென்று தெரியவில்லை. அதனால் தான் அழித்து அழித்துப் போட்டுக் கொண்டு இருக்கிறேன்" என்றார்.

திண்ணையில் அமர்ந்துகொண்டு தன்னருகே அழைத்து வாணியை அமரச்செய்தார். பின்பு தாயின் பதில்களை அவதானித்தாயா என்று கேட்டார். "பாடங்களைப் படிப்பதும் அப்படித்தான். வெறுமனே படித்தால் மட்டும் போதாது. ஒரு தடவைக்கு இரண்டு தடவை எழுதி எழுதிப் படிக்க வேண்டும். அப்போது தான் படிப்பது மனதில் பதிவுறும். புதிய பாடங்களை முதல் தடவையாகப் படிக்கும்போது கொஞ்சம் கஸ்டமாகத் தான் இருக்கும். அப்போது பாடங்கள் ஒன்றும் விளங்கவில்லையே என்று நினைத்துப் படிக்காமல் விட்டுவிடக் கூடாது. அடுத்தடுத்துப் பாடங்களை ஞாபகப் படுத்திப் படிக்கும்போது அவை கொஞ்சம் கொஞ்சமா விளங்கும். அதையே எழுதிப்படித்தால் மனதில் நன்றாகப் பதியும். கஸ்டமாக இருந்ததெல்லாம் எளிதாகிவிடும்." என்று அறிவுரை கூறி வாணிக்கு உற்சாகம் தந்தார்.

தந்தை கொடுத்த உற்சாகத்துடன் வாணி எழுதிப்படிக்க ஆரம்பித்தாள். பாடங்களை ஞாபகப்படுத்திப் படிக்க ஆரம்பித்தாள். அனைத்துப் பாடங்களிலும் நல்ல பெறுபேறுகள் பெற்று பரீட்சையில் முதல் மாணவியாக தெரிவுசெய்யப் பட்டாள்.





நா.கிருபாகரன், தரம் - 10 பி, யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்



சிவதுகன் பிருத்வி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.




# அமைதியை விரும்பும் அமைப்பு

AMNESTY INTERNATIONAL

அமைதியை விரும்புபவர்களுக்கு என்றும் ஒரு அமைப்பு உள்ளது. இதன் பெயர் 'அம்னெஸ்ரி இன்ரெர்நசனல்' இது தனி மனித உரிமை. சுதந்திரம் மற்றும் உயிர். உடைமைகளின் நலனைப் பாதுகாப்பதற்கான கோரிக்கைகளை முன்வைக்கின்றது. குறிப்பிட்ட கட்சி அல்லது அரசுக்குச் சொந்தமானது அல்ல. இது ஒரு பன்னாட்டு அமைப்பு.

இந்த அமைப்பு பொது நல அமைதியில் விருப்பம் உள்ளவர்களை உள்ளடக்கியதாக பிரித்தானிய நகரமான லண்டனை மையாகக் கொண்டு1961ஆம்ஆண்டுஆரம்பிக்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசையும் பெற்றிருக்கின்றது.

# ஓடி விளையாடுவோம்

சின்னஞ்சிறு பாலர் நாம்
சேர்ந்து விளையாடுவோம்
கூடி விளையாடுவோம்
கூடிப் பந்தாடுவோம்...!

கூடுவோம், ஆடுவோம்
கூடிக் கூத்தாடுவோம்
ஓடுவோம், பாடுவோம்
ஓடி விளையாடுவோம்....!

கிட்டிப்புள்ளு, கிளித்தட்டி
வட்டக்கோடு, வாரோட்டம்
கோலிக்குண்டும், பம்பரமும்
நாளும் விளையாடுவோம்...!

பட்டம் விட்டுப் பாடுவோம்
பந்தடித்து ஆடுவோம்
இஸ்டமாகக் கூடியே
இனிதே விளையாடுவோம்...!

சோம்பி இருந்தால்
சுகம் கெட்டுப்போகும்
ஓடி விளையாடினால்
உடல் உறுதியாகும்

சின்னஞ்சிறு பாலகராய் நாம்
சேர்ந்து விளையாடுவோம்
கூடி விளையாடுவோம்
நாம் ஓடி விளையாடுவோம்

கந்த பேரின்பம்



பெரும்பாலும் மருத்துவ மனைகளில் பச்சை நிறமே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக அறுவைச் சிகிச்சையில் ஈடுபடும் மருத்துவர்கள், உதவியாளர்களின் உடைகள் மற்றும் அந்த அறைச் சுவர்களின் வண்ணம் என்பன அதிகம் பச்சை நிறத்திலேயே அமைந்திருக்கும். இதற்குக் காரணங்கள் உண்டு.

அடர் சிவப்பு நிறம் கொண்ட குருதியை பார்க்கும்போது அநேக மனிதர்களுக்கு எளிதில் சோர்வு உண்டாகிவிடுகின்றது. அதைப் போக்குவதற்காகவே பச்சை நிறத்தை இங்கு அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

பொதுவாகவே பச்சை நிறம் கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தருவது. அமைதியையும் தருகிறது. பூமியைக் குளிர்வித்துக் கொண்டிருக்கும் இயற்கைச் சூழல் கூடப் பச்சை வண்ணங்களை விரித்து பசுமை நிறமாயிருக்கின்றது. ஏன், எங்களுடைய பாடசாலைக்



எழுத்துப் பலகைகள் கூட இன்றைக்குப் பச்சை வண்ணம் சூடியே பாடங்கள் பல தருகின்றன.

# பண்டாரவண்ணியன்





## அடிமைச்சங்கிலி பூட்டி விட்டோமென்று கொக்கரிப்பா...?

இருள் போர்த்த வனம்
அமைதியாகக் கிடந்தது

தலையசைக்கும்
மரங்களைத்
தட்டிக் கொடுத்துப்போகிறது
தென்றல்

எரியத் துடிக்கும்
ஒன்றிரண்டு தீப்பந்தங்களுடன்
அமைதியும் ,அவலமும்
எல்லோரையும்
தாலாட்டிக் கொண்டிருந்தது.

ஒட்டுசுட்டான்,
புதுக்குடியிருப்புச்
சாலையின் ஒரு புறம்
பத்தடி தூரம் தள்ளி
ஒவ்வொரு படைவீடு
பத்துப்படை வீடுகள்
ஒவ்வொன்றிலும்
ஆய்தங்களோடு வீரர்கள்..

நடுவில்
நிமிர்ந்து நிற்கிறது
இருவாள்க்கொடி உயர்ந்த
படைவீடு.

வைக்கோல் மேய்ச்சலும்
முள்முருக்கம் இலைச்சாற்றில்
தரை காட்டும்
அழகும்
அந்த இருளில்
பந்தத்தின் ஒளியில்
பளிச்சிட்டுக் கிடக்கிறது

தனக்கான இடம்தேடி
அரண் அமைத்த
வன்னியன் படைகள்
படை வீடுகளில்
படுத்துறங்குமா...?

அர்த்தசாமம் கடந்தும்
தூங்க மறுத்த விழிகளோடு
போராடிக் கொண்டிருந்தான்
பண்டாரவன்னியன்

படை வீட்டுக்குள்ளே
நடைபோடும் சிங்கத்தைத்
தன் விழிகளினாள்
கொத்திக் கொண்டிருக்கிறாள்
குருவி !

இடையில் செருகிய
கட்டாரியும்
எந்தநேரம்
சண்டை எனினும்
பாயத் தயாரான
நிலையில்
ஆனாலும்
தன்
இறுமாப்பழகனை
இமைமூடாது
பார்ப்பதில்த்தான்
எத்துணை ஆனந்தம்

போரும் காதலும்
வேரடி மண்ணாய்
வன்னியர் வாழ்வில்
நிகழ்வதும் நிஜமே

வாள் உயர்த்தி
பகையைச் சாடுகையில்
தன் வேல்விழியால்
வன்னியனைப்
பார்த்துக்கொணடிருப்பாள் குருவி.

சுற்றி உள்ள
படை வீடுகளில்..
உணர்வுடை வன்னியர்கள்
வீரர்கள் விழிகளின்
இமைக் கதவுகள்
அகலத் திறந்தபடி
நீர் உகுத்தன..

நெருப்பாற்றுக்கு
அணை போட
துடித்துக் கொண்டிருந்தது
குருவியின் அதரங்கள்.

என்ன பேசுவது
என்பது தான்
இந்தநிமிடம் வரை
உள்ள வினா
பேசத்தொடங்கும் முன்பே
எரிந்து விழுந்துவிட்டால்

எப்போதும்
வன்னியன் வார்த்தைகள்.
எரிகற்கள்போல்
எதிர் நிற்பவனை
தாக்கி
வலிமையற்றதாக்கிவிடும்


முல்லைத்தீவுக்
கோட்டை
பகைவனின்
கைகளில் விழும்போது
வார்த்தைகளின்
வலிமையைக்
கண்டிருக்கிறாள்.

குமாரசிங்கவன்னியனும்
தோழர்களும்
சாவைப்பற்றி
முத்தமிட்ட வேளையில்
முள்ளியவளைப் பற்றின்
படைவீட்டு முகப்பொன்றில்
கொதித்தெழுந்த
பண்டாரவன்னியனின்
உரை கேட்டிருக்கிறாள்..

அத்தனையும்
நெருப்புத் துண்டங்கள்
அனல் கக்கி விழுந்தபோது
கோட்டையடி ஐயனின்
ஆலயத்தின் முற்றமெல்லாம்
வண்ணம் மாறி
வடிவு காட்டிற்று..

வீழ்ந்து விட்டோமென்று
வீணர்கள் நினைத்திருப்பர்
ஆண்ட இனம்
தன்மானம் இழந்ததென்பர்
நிமிர்ந்த எம்தோள்களில்
அடிமைச்சங்கிலி
பூட்டி விட்டோமென்று
கொக்கரிப்பா...?

(தொடரும்)



**நூல் : ஆன்மிக வாழ்க்கைக்கு 101 பயனுள்ள வழிகாட்டிகள்**

**ஆசிரியர் : அராலியூர் வி. செல்வரத்தினம் (ஜே.பி)**

**வெளியீடு: செல்வி விஜயதெய்வேந்திரன் திருவருள்சோதி**

**விலை : 120 ரூபா**

## ஆன்மாவை உணரவைக்கும் புத்தகம்

ஆன்மாவை உணரவைத்து, மனித வாழ்க்கையைப் பயனுள்ள வகையில் வாழ்வதற்கு வழிகாட்டி நிற்கிறது 'ஆன்மிக வாழ்க்கைக்கு 101 பயனுள்ள வழிகாட்டிகள்' எனும் நூல்.

மனிதன் தன்னை அறிந்துவிட்டால், அவனுக்கு ஒரு துன்பமும் ஏற்படாது. இதனைத்தான், 'தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை' என்கிறது திருமந்திரமும். ஆதலால், மனிதன் தன்னை உணரவும் அறியவும் குறித்த புத்தகம் பெருந்துணை செய்கிறது. புற உடலைச் சவர்க்காரம் கொண்டு சுத்தம் செய்வதைப்போல, அக உடலை இத்தகைய புத்தகங்கள் மூலம் தூய்மைப்படுத்த வேண்டும். அந்தவகையில், இந்தப் புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வெருவரும் நிச்சயம் மனத்தூய்மை பெறுவர்.

அராலியூர் வி.செல்வரத்தினம், ஒரு சிறந்த ஆன்மீக எழுத்தாளர். கணித விஞ்ஞான உயர்வகுப்பு மாணவர்களுக்கு உகந்த நூல்களை ஆக்கிப் பெரும் புகழ் பெற்றவர். எண்ணற்ற நூல்களின் சொந்தக்காரர். இன்றும் எழுத்துலகில் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கிறார்.

**நூல்: பார்வைகள் (கவிதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்: அபீர்ராஜன்**
**வெளியீடு: அபீர் வெளியீட்டகம், கொழும்புத்துறை.**
**விலை: 250 ரூபா**

## சமகாலச் சமூகத்தின் பதிவுகள்

சமகாலச் சமூகத்தைப் பதிவாக்கி, சிறியோர், பெரியோர் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த விளைகிறது 'பார்வைகள்' (கவிதைத் தொகுப்பு) நூல்.

தமிழ் மொழி, சிறுவர்கள், பெண்கள், கல்வி, சமூக அநீதிகள், சமூகப் பெரியார்கள், போதைப்பொருள், இலட்சியம், அறிவுரையென முழுமையாக 60 கவிதைகளைச் சுமந்துள்ள இந்த நூல், உண்மைக்கு மிகவும் நெருக்கமானதாக உள்ளது.

அனைத்துக் கவிதைகளுமே எளிய மொழிநடையில் புனையப்பட்டுள்ளன. ஆங்காங்கே எழுத்துப் பிழைகள் உண்டு. அவற்றைக் களைந்தால் நன்று.

மனித வாழ்வின் துயரங்களைப் பதிவாக்கும் கவிஞராக மட்டுமல்லாமல், நாளைய வாழ்வுக்கான நம்பிக்கையை ஊட்டும் கவிஞராகவும் இருக்கும் அபீர்ராஜன். எழுத்துலகில் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கிறார்.






(அன்பார்ந்த எழுத்தாளர்களே! நூல் அறிமுகத்தில் உங்களின் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின், புத்தகத்தின் இரண்டு பிரதிகளை **ஆசிரியர், நூல் அறிமுகம், உதயன், இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.)

# பாராட்டு அவர்களுக்கே...

பெண்கள், ஆணுக்கு அடங்கியவர்களாக, அடிமைகளாக இல்லாமல் ஆணும் பெண்ணும் சமமாக நோக்கப்பட வேண்டுமென்பதுதான் பெண்ணியமாகும். இன்று ஆணுக்கு நிகராகப் பெண்கள் கால் பதிக்காத துறைகளே கிடையாது. ஆணைவிட அதிகமாகச் சம்பாதிக்கும் பெண்களையும், ஆண்களுக்கு மேலதிகாரியாகத் திகழும் பெண்களையும் இன்று சாதாரணமாகவே அலுவலகங்கள் வங்கிகள், பாடசாலைகள் என அனைத்திலும் காணமுடியும்.

பெண்ணியக் கோட்பாட்டாளர்கள் பாரதி வழியில் பெண்ணுரிமை பேசினாலும், திருமண பந்தத்தில் இன்றுகூட சோதிடர்களின் சாதகப் பொருத்தங்களும், தரகர்களின் சீதனப் பொருத்தங்களும் அதிக செல்வாக்குப் பெறுகின்றன. இந்த விடயத்தில் சமூகமும் கலாசாரமுமே பெண்களின் எதிரிகள். தோசங்கள், பாவங்கள், செவ்வாய், சனி, சீதனம் என்கின்ற அரக்கர்கள் தங்கள் கோரப்பற்களால் பெண்கள் வாழ்வைக் கடித்துக் குதறுகின்றன. உயர் பட்டம், பதவிகளிலுள்ள பெண்கள்கூட இதற்கு விதிவிலக்கல்ல.

இந்த வகையில்தான் ஓவியாவின் கதையையும் கூற வேண்டும். ஓவியா ஒரு சாதாரண, நடுத்தரக் குடும்பத்துப் பெண். தனது முயற்சியால் படித்துப் பட்டம் பெற்றுப் பாடசாலையின் அதிபராக உயர்ந்து விட்டாள்.

இன்று அந்தப் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி. அது மட்டுமல்ல வெளிநாட்டு அன்பர் ஒருவர் தனது தந்தையின் ஞாபகார்த்தமாகப் பாடசாலை முன்றிலில் சரஸ்வதி சிலையையும், அதற்கான அழகிய தூபி மாடத்தையும் கட்டித் திறப்பு விழாவையும் செய்து உதவுகிறார். கிராமமே கூடி மிக ஆரவாரமாக இதுவரை நேரமும் நடந்த விழாவும் முடிந்து பாடசாலை நிசப்தத்துக்கு வந்து விட்டது. பாடசாலையின் அதிபர் ஓவியா விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்த மனமகிழ்வுடன் தனது உந்துருளியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள்.

அதிபரின் உழைப்புக்குக் கிடைத்த புகழ்ச்சியும் பாராட்டுக்களும் அவளது மனத்திரையில் ஓடிக்கொண்டேயிருந்தன. இதயத்தின் ரம்மியமான உணர்வுகள், இதமான மாலைநேரத் தென்றல் காற்றாக மனதுக்கும் உடலுக்கும் குளிர்ச்சியைக் கொடுத்தது.

விழாவுக்கு வந்திருந்த மாகாண அமைச்சின் உதவிப் பணிப்பாளர் தமது உரையில் "இற்றைநாள் வரை இலைமறை காயாக இருந்த பாடசாலையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த பெருமை அதிபர் திருமதி ஓவியாவுக்கே உரித்தாகும்" என அவளுக்குப் புகழாரம் சூட்டியிருந்தார். அந்தப் பெருமைக்குத் தான் தகுதியானவள் தானா? எனத் தன்னையே எடைபோட்டாள். தனது நினைப்புக்கள் எங்கே தெருவில் வரும் வாகனங்களுக்கு இடையூறாகி விபத்து வருமோ என்ற பயத்தில் மிக மெதுவாகவே உந்துருளியைச் செலுத்திச் சென்றாள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பேசுகையில் "இன்றைய வளர்ச்சிக்கு முழுப் பொறுப்பும் ஓவியா அதிபர்தான்" என்றும், "அவரது அயராத உழைப்பு பாடசாலையை முன்னேற்றியது மட்டுமல்லாமல் ஆசிரியர்களையும் ஒன்றுபடுத்திப் புதிய பாதையில் வீறுநடை போட வைத்திருக்கின்றது" என்றும் குறிப்பிட்டார். "பெற்றோர், நலன்விரும்பிகளையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்கள் கோரிக்கைகளையும் நிறைவேற்றி வந்தார். ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சைகளிலும் ஆசிரியர்களோடு இணைந்து தானும் வகுப்புக்களை நடத்தி ஊக்குவித்ததால் நல்ல பெறுபேறுகள் கிடைத்தன. சகல முன்னேற்றங்களுக்கும் அதிபரும், அவரது அன்புக்கினிய ஆசிரியர்களுமே உரித்தாவர்" எனவும் மேலும் பாராட்டிப் புகழ்ந்தார். அப்போது எழுந்த கைதட்டல்கள் இப்போதும் காற்றில் மிதந்து வந்து அவளுக்கு இனிமை தந்து கொண்டிருந்தன.

> இத்தனை பாராட்டுக்கள், புகழுரைகள் அவள் உள்ளத்தை நிறைத்தாலும் உடனேபோய்த் தனது கணவருடன் இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று உள்ளம் விரும்பியது. இன்பம் , துன்பம், புகழ்ச்சி , இகழ்ச்சி எதையும் தனது கணவனுடன் பங்குபோடும் மனப்பக்குவம் நிறைந்தவள் அவள்.

கௌரவ விருந்தினர்களாக வந்திருந்த சமயப் பெரியாரும், ஓய்வுநிலை அதிபரும் பேசுகையில், "முன்னைய ஆண்டுகளில் பெருமை மிக்க தமிழ் அறிஞர் ஒருவருக்குச் சிலை எடுப்பதற்காகக் கனடா வாசியான கந்தப்பிள்ளை பல வெளிநாட்டு அன்பர்களைத் தொடர்பு கொண்டு சிலை அமைக்க முயற்சித்தபோதும் அது கைகூடாமல் போனது வருந்தத்தக்கது. ஆனால் எமது அதிபர் கொடுத்த ஊக்கத்தால் வெளிநாட்டு அன்பர் தனி ஒருவராக மனமுவந்து சில லட்சம் ரூபா செலவில் சரஸ்வதி சிலையையும் அதற்கான அழகிய தூபி மாடத்தையும் பாடசாலைக்கு அர்ப்பணிக்க முடிந்தது பாராட்டத்தக்கது. சொற்பொழிவாளர் விவரித்ததுபோல நீல விதானத்து நித்திலப் பூம்பந்தற் கீழ் கோலக் கலையரசி அன்னை கலைவாணியின் சிலையமைப்பு வியக்கத்தக்கது" என்றிருந்தனர்.

இத்தனை பாராட்டுக்கள், புகழுரைகள் அவள் உள்ளத்தை நிறைத்தாலும் உடனேபோய்த் தனது கணவருடன் இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று உள்ளம் விரும்பியது. இன்பம், துன்பம், புகழ்ச்சி, இகழ்ச்சி எதையும் தனது கணவனுடன் பங்குபோடும் மனப்பக்குவம் நிறைந்தவள் அவள்.

பெண்ணியம் தொடர்பான கருத்துக்களை அவள் என்றும் பெரிதுபடுத்துவதில்லை. பாரதியார் காலத்திலிருந்த பெண் அடிமைத்தனம் இப்போது இல்லை. கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், சகல துறைகளிலும் போட்டி போட்டுக்கொள்ளும் நாம் இன்று சுதந்திரமாக நடமாடுகிறோம். காதலர் இருவர் கருத்தொருமித்து, ஆதரவுடன் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, விட்டுக்கொடுத்து வாழும்போது வன்முறை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது அவளது நம்பிக்கை.

புதுநியமனம் கிடைத்து வன்னிப் பகுதியில் பாடசாலையில் கடமையாற்றும்போது போர்க்காலச் சூழலுள் அகப்பட்டிருந்ததை அவளால் என்றும் மறக்க முடியாது. "எட்டில் செவ்வாய் தோசம், எட்டாமிடத்தில் செவ்வாயும் சனியுமிருப்பது குடும்ப வாழ்வில் பலத்த குழப்பங்களையும் தூரதேச வாசத்தையும் கொடுக்கும்" என முன்னொருநாள் தந்தையாரின் அழைப்பின்பேரில் வந்த சோதிடர் கூறியிருந்ததையும் அவள் மறந்து விடவில்லை.

அப்போது வன்னிப் பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகவும் வளத்துணையாளராகவும் கடமையாற்றிய காவியன் தன்னைச் சுற்றிச் சுற்றி வரும்போதே சோதிடர் கூறிய வார்த்தைகளை வெளிப்படையாகவே அவனுக்குக் கூறிவைத்தாள் ஓவியா. இது கேட்டுச் சிரித்த காவியன் சோதிடர்களையும், சோதிடத்தையும் விமர்சித்துப் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பறைசாற்றினான். காலப்போக்கில் இருவரின் காதலும் கனிந்து கணவன் - மனைவியாகினர். இன்று நிரந்தர ஆசிரியர் நியமனத்துடன் இரண்டு குழந்தைகளின் அப்பாவாகப் பொறுப்புடன் மனைவியைத் தனது கடமைகளுக்கு அனுப்பி வைத்துவிட்டு வீட்டில் இருக்கிறான் காவியன். ஓவியாவின் நினைவு இப்படியாகச் சுழன்றுகொண்டிருக்கையில் வீதியின் அருகிருந்து வந்த பெண்ணின் விசும்பல், அழுகைக்குரல் அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அப்போது உந்துருளி காந்தன் சந்தியைக் கடந்திருந்தது. சற்றுக் காட்டுப் பாங்கான இடம் அது. சன நடமாட்டமும் குறைவு. இருந்தாலும் பெண்ணின் அழுகுரல் கேட்ட பின்பு விட்டுச் செல்லவோ, ஏன் எனக்குச் சோலி என்று தவிர்த்துக் கொள்ளவோ மனமின்றி உந்துருளியை நிறுத்தினாள் ஓவியா. "யாரம்மா ஏன் அழுகிறாய்" என்று வினவினாள். அழுதபடியே பற்றை மறைவில் தெரிந்த ஒற்றையடிப் பாதையில் விழுந்து கிடந்த சைக்கிளை விட்டு விலகி வந்த பெண் "அம்மா நீங்க விரைவாக ஓடுங்கோ, கழுத்தில சங்கிலி, கொடியோட நிக்கிறியள். என்ரை சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ரெண்டு பேர் இந்தப் பக்கமா ஓடீற்றாங்கள்.



வலைஞர் மடம் இப்போது பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. மக்கள் இறுதி நம்பிக்கையோடு அங்கேயும் கூடாரங்களை அமைக்கின்றனர். பனம் கொட்டுகளை கடற்கரை மணலில் புதைத்துப் பாதுகாப்புத் தேடிக் கொள்கின்றனர். பீப்பாக் கள், தகரங்களைப் புதைத்து குட்டிக்குட்டி கிணறுகளையும் அமைத்துக்கொள்கின்றனர். அதில் கொஞ்சம் கொஞ்சமாக ஊறி வரும் தண்ணீருக்காக வரிசை கட்டி நிற்கின்றோம். வலைஞர்மடம் கடற்கரையும் மலசலகூடம் ஆனது.





# செல்லும் வழியின் 11

ப்ரியமதா பயஸ

குடும்பம், வாழ்க்கை என்று வாழத்தொடங்கும் முன்னமே எமக்கு இருப்பிடம் அற்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. அத்தோடு பெரும் இன்னல்களைத் தந்தது வளமோடு இருந்த வன்னி வாழ்க்கை. காலையில் எழுந்ததும் பால் கறப்பதும், கீரை பிடுங்குவதும், வாழைக்குலை பழுத்துவிட்டதா? எனச் சுற்றிச் சுற்றிப் பார்ப்பதும், கறுவாமரம் ஒவ்வொரு சாணாக வளர்வதை ரசிப்பதுமாகக் கழிந்தன அந்தப் பொழுதுகள். இப்போது குடிதண்ணீருக்குக் கூட வழியற்றவராக நாம் மாறியிருப்பது துன்பத்தை மட்டுமல்ல வாழ்க்கையில் பிடிப்பின்மையையும் கொண்டு வந்து சேர்த்தது. இறுதிவரை வன்னியை விட்டு வேறு எங்குமே நகர்வதில்லை என்றிருந்த நிலைப்பாடு ஒவ்வொருவரிடையேயும் இருந்து குறைந்து கொண்டே போனது. இப்போது நாம் பொக்கணையில் இருந்து புறப்படுவதற்குத் தயாராகிவிட்டோம்.

**வலைஞர்மடத்தை நோக்கிய நகர்வு**

அருகில் குண்டுகள் விழுகின்றன. குப்புறப் படுத்திருந்து குண்டுகள் விழுந்த திசையை நோக்கிப் பார்க்கின்றேன். பத்து, இருபது மீற்றர் தூரத்துக்கு உருண்டையான ஒரு பொருள் மேலே எழும்பிக் கீழே வந்துவிழுகின்றது. பயசை உசார்படுத்துகின்றேன்.

"அங்க பாருங்கோ...! சட்டி, பானை எல்லாம் மேலை எளும்புதப்பா பக்கத்தில அதிகமாக விழுகிறது ஓடுவம் வாருங்கோ..." என்று கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு செல் விழுந்த திசை ஊடாகப் பாதையைக் கடக்க ஓடிக்கொண்டிருந்தோம். அங்கே வானை நோக்கி எழும்பியது சட்டி, பானைகள் அல்ல. அவை அப்பாவி மக்களின் தலைகள் என்பதைக் கண்கூடாகப் பார்க்க இதயம் சிதறிப் போனது. உறவுகள் அல்லோல கல்லோலப்பட்டு அழுது புலம்பின. அந்த இடத்தை விட்டு நகரும்படி அவர்களை அழைத்துக்கொண்டு மற்றோரும் ஓடினர். கால்கள் சோந்து, கண்கள் மங்கி, தலை சுற்றி, இருள் கவிழ்ந்தது. இப்போது வலைஞர் மடத்துக்கு வந்துவிட்டோம்.

**அருமை நண்பனின் இழப்பு**

ஒவ்வொரு நகர்விலும் உயிர்பிரிதலின் வலியை உணர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றோம். திலீபன் இறந்துவிட்டான். ரவுன்ஸ் தலைக்குள்ள கொளுவிட்டு தாம் அங்கே வந்த கொடும் செய்தி நிலைகுலைய வைத்தது. எனது அலுவலக நண்பன் அவன். ஒவ்வொரு ஐந்தாம் திகதியும் நடக்கும் கூட்டத்தின் சுருக்கமான அறிக்கையை அவனைத்தவிர யாரும் அழகாகச் சொல்லமாட்டார்கள். நகைச்சுவை என்பது அவனால் மட்டும் நறுக்காகவிட முடியும்.

ஒவ்வொரு ஐந்தாம் திகதியும் 'மனேஜரும் எங்கள் கணக்கறிக்கையும்' என்னும் தலைப்பிலேயே அவனது கதைச் சுருக்கம் இருக்கும். அத்தனை விடயத்துக்கும் நகைச்சுவையாகவே பதில் தருவான். ஒருபோதும் சிடுமூஞ்சியாக அலுவலகத்தில் அவன் இருந்ததில்லை. விரைவாக உலகைவிட்டுப் போகப்போகின்றான் என்பதாலோ என்னவோ எல்லோரோடும் யதார்த்தமாகவே பழகினான்.

உடையார்கட்டில் இருக்கும்போது இடம்பெறும் விமானக்குண்டு தாக்குதல்களில் விளைந்த ஒவ்வொருவரின் சாவையும் அவன் பெரும் சுமையோடு தாங்கிக் கொண்டான். நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல எங்களை விட்டுப் பிரியப்போகும் அந்த மூன்று நபர்களில் இவனும் ஒருவனாகவே இருந்தான் என்பதை அந்தநொடி வரை கனவிலும் நினைத்ததில்லை. திருமணமாகிக் கொஞ்சகாலம் தான். ஒரு பெண் குழந்தைக்குத் தந்தை ஆகியிருந்தான். ஆனாலும் எங்கள் மத்தியில் அவன் ஒரு சிறுவனாகவே எப்போதும் வலம்வந்தான்.

"அக்கா உங்கட கையால தேநீர் குடிக்க வேணும்"

என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பான். காரணம் நான் தயாரிக்கும் தேநீர் அவனுக்கு மிகவும் பிடிக்கும். மற்றைய சகோதரிகள் இதற்காவே அவனோடு சண்டை போடுவார்கள். அந்த அன்பான உயிர் அந்த கொடிய போரில் பிரிந்தபோது நாம் ஒவ்வொருவரும் நிலை குலைந்துபோனோம். அவன் மனைவி திருமணமாகி ஓரிரு வருடங்களில் தன் கணவனை இழந்து தவித்துப்போனாள். இதே நிலைமை தனது மனைவிக்கும் ஏற்படும் என்று அன்று வெண்மதியின் கணவர் இறந்துபோனார் என்று எம்மிடம் வந்து சொன்ன திலீபன் தானும் அறிந்திருக்கவில்லை. தன் இறப்பும் தன் மனைவியைத் தவிக்கவிடும் என்று அவன் துளியளவும் எண்ணியிருக்கவில்லை. எல்லோருடைய இறப்பும் அந்த நேரத்தில் எழுதப்படாத விதியாகவே இருந்தது. திலீபனின் மறைவுச் செய்தியோடு இன்னும் பல நண்பர்கள், உறவுகளின் சாவுச் செய்தியும் வந்தது. அடுத்த நகர்வு என்பது கொடும் இழப்புக்கு மத்தியிலும், விட்டு விட்டு ஓடும் பிணாங்களுக்கு மத்தியிலும் என்று நாம் நினைத்தும் பார்க்கவில்லை.

**அடுத்த பாதுகாப்பு வலயமாக வலைஞர்மடம்!**

வலைஞர் மடம் இப்போது பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. மக்கள் இறுதி நம்பிக்கையோடு அங்கேயும் கூடாரங்களை அமைக்கின்றனர். பனம் கொட்டுகளை கடற்கரை மணலில் புதைத்துப் பாதுகாப்புத் தேடிக் கொள்கின்றனர். பீப்பாக்கள், தகரங்களைப் புதைத்து குட்டிக்குட்டிக் கிணறுகளையும் அமைத்துக்கொள்கின்றனர். அதில் கொஞ்சம் கொஞ்சமாக ஊறி வரும் தண்ணீருக்காக வரிசை கட்டி நிற்கின்றோம். வலைஞர் மடம் கடற்கரையும் மலசல கூடம் ஆனது.

எந்திரி முதல் மருத்துவர் வரை கடற்கரையில் மலசலம் கழிக்கத் தயாரானார்கள். அந்தப் பாதுகாப்பு வலையத்திலும் மீண்டும் ஒரு கொலைக்களம் தொடங்கியது. சாவு நெருங்க நெருங்க நாம் நொருங்கிக் கொண்டு இருந்தோம்...

(தொடரும்)



# முடமான முனகல்கள்

ஊனமாய்ப் போனதென்
ஊழியின் கூலியென்றென்னை
உதாசீனம் செய்யாதீர்.

படிதாண்ட முடியாமல்
பலமுறை அழைக்கையில்
பல்படாக்குறையாகப் பேசாதீர்.

படிதாண்ட முயன்று நான்
பலதடவை தடக்கி விழுந்திருப்பேன்
தறதறவென்று இழுக்காதீர்.

தடியூண்டி எழும்ப நான்
எத்தனங்கள் செய்கையிலே
தடிகொண்டு தாக்காதீர்.
நடுவீட்டுக்குள்ளே நான் நகரமுடியாமல்
மலம், சலம் கழித்துவிட்டால்
எட்டி நின்று உதைக்காதீர்.

குடிகொண்ட அழுக்குப்போக
குளிப்பாட்ட எண்ணியென்னை
தோஷரித்துப் பார்க்காதீர்.

உணவென்ற பேரிலேதோ
உள்ளமீதி போட்டு எந்தன்
உயிர்காக்க முயலாதீர்கள்.
ஓடி விளையாடும் பேத்தியர் பாதம்
என் உணர்விழந்த
பாதத்தை மிதிக்கையில்
மிளிரும் மகிழ்வைத் தடுக்காதீர்.

பேரப்பிள்ளைகளுக்கும்
இந்தப் பாட்டில் கிடக்கும் பாட்டியை
ஒருமுறை காட்டி வையுங்கள்
பெற்றகடன் கழித்தீரென்றெண்ணி
கடைசியாய் என் முன்னே
போலியாயேனும் அழுது பாருங்கள்.

கந்தர்மடம் அ. அஜந்தன்








ஈழத்து சினிமா

# களைகள்

சி.ப.வேந்தன

**சிறுவர்களின் நடிப்பு இயல்பாக இருப்பது அழகு. கிராம சேவையாளரது உரையாடல், முகபாவனை மற்றும் நடிப்பு என்பன பாத்திரத்தை முழுமை பெற வைக்கின்றன. மற்றவர்களது நடிப்பில் போதாமை இருப்பது சில இடங்களில் உறுத்துகிறது. வெடிப்புக்கள் நிறைந்த சுவரில் தலை சாய்த்து இருப்பது, இறுதிக்காட்சியில் களை அறுத்துப் போடுவது எனச் சில இடங்களில் குறியீடுகள் பேசுவது இரசிக்க வைக்கிறது:**

## கண்டுகொள்ளப்படாத கதை



"சினிமா எனும் கலை வெளிப்படுத்துகின்ற கருத்துஎன்பதுகடலின் கொந்தளிப்போஅல்லதுஎரிமலைகளின் குமுறலோ இல்லை. மாறாகஒருவனின்கண் ஓரத்தில் மெல்லத் தேங்கும் ஒரு கண்ணீர்த்துளியாகும்"-பெலபெலாஸ். ஆரம்பகாலங்களைவிட பின்னாள்களில் போரியல் சார்ந்தோ அல்லது பரப்புரை சார்ந்தோ விடுதலைப்புலிகள் தமது திரைப்படங்களை அணுகியிருக்கவில்லை என்பது துறைசார் ஆய்வாளர்களும் குறித்த காலப்பகுதியில் சினிமா சார்ந்து இயங்கியவர்களும் புரிந்துகொண்ட அல்லது ஏற்றுக்கொண்ட ஒன்று. எண்ணிக்கையில் கூடுதலாக அவர்கள் தாம்சார்ந்த திரைப்படங்களை உருவாக்கியிருந்தாலும் மற்றைய. மூன்றாந்தரசினிமாநோக்கியும்நகரஅவர்கள் தலைப்பட்டனர் என்பதை யாராலும் மறுக்க முடியாது.அந்தவரிசையில்போர்பற்றிப்பேசாது போர்ச்சூழலில் வாழ்ந்த மக்களது மனநிலைகள். வாழ்க்கைச்சிக்கல்கள். நடைமுறைச்சிக்கல்கள்என்பவற்றைப்பேசுகின்றஒரு திரைப்படமாகவெளிவந்திருக்கிறது'களைகள்'திரைப்படம். பதினைந்து நிமிடங்களைக் கொண்ட இந்தப்படத்தைநிதர்சனத்தின்திரைப்பட உருவாக்கப்பிரிவு தயாரித்திருக்கிறது.

போர் நடந்துகொண்டிருக்கும் காலம் கதைக்களமாகின்றது. இடம்பெயரும் மக்களோடு லக்சுமி குடும்பமும் இடம்பெயர்கிறது. கணவனின் நண்பனது காணிக்குள் தற்காலிகக் கொட்டில்போட்டு வாழ்க்கையத் தொடங்குகிறார்கள். நாளடைவில்கையிருப்புக்குறைந்து சாப்பாட்டுக்கே திண்டாடும் நிலைவருகிறது. கணவனைப் போகவேண்டாம் என லக்சுமி தடுத்தும் அவன் தாம் விட்டு வந்த சொந்த வீட்டைப்பார்த்துவிட்டுஅங்குஇருக்கும்நெல்லை எடுத்துவரலாம்எனும்நினைப்போடுவேலைக்குப் போகிறேன் பொய் சொல்லிவிட்டு நண்பனுடன்வீட்டைநோக்கிப்போகிறான். வழியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் அவர்கள் இருவரையும்பிடித்து. சுட்டுக்கொன்று. கிணற்றுக்குள் வீசிவிட்டுப் போய்விடுகின்றனர்.
இதைஅறியாதலக்சுமி. பிள்ளைகளோடுகாத்திருக்கிறாள். ஒருநாள் அவளுடைய தந்தை வந்து அவனை இராணுவம் பிடித்துப்போனதாகச்சொல்கிறார். கதறியழுதஅவள்அவனை மீட்பதற்காகக் கிராம சேவகரிடம் செல்கிறாள். அவர் தன்னால் ஒன்றும் செய்ய முடியாதென்றும்செஞ்சிலுவைக்குழுவிடம்சென்றுமுறையிடுமாறும் கூறி அனுப்பிவிடுகிறார். அவள் செஞ்சிலுவைக் குழுவிடம்சென்றுமுறையிடுகிறாள்.
வயலில் லக்சுமியும் மூத்த மகனும் வேலை செய்து வரும் வருமானத்தில் குடும்பம் ஓடிக்கொண்டிருக்கிறது. சில நாள்களின் பின்னர் லக்சுமியின்தந்தைவீட்டைப்பார்க்கப்போகும் வழியில் மக்கள் கூட்டமாக நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர் அந்தக் கூட்டத்துக்குள் சென்று விசாரிக்கின்றார். கிணற்றுக்குள் இருந்துஎடுக்கப்பட்டஎலும்புக்கூடுகளைகிராம சேவகரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் மீட்டு விசாரணை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தவிடயத்தைக்கேள்விப்பட்டலக்சுமி அதுதன்னுடையகணவன்எனஅடையாளம் காட்டுகிறாள்.
பிறிதொருநாள்கணவனது இறப்புஅத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்காக லக்சுமி கிராம சேவையாளரிடம் செல்கிறாள். அப்போது கிராம சேவையாளர் அதைத்தரமுடியாதுஎனக்கூறி விரட்டிவிடுகிறார். அழுதவாறு அவள் திரும்பிவிடுகிறாள். அடுத்தநாள் அவர் இவளுடைய வீடுதேடி வந்து அவளுடைய குடும்ப அட்டையை வாங்கி அதிலுள்ள கணவனது பெயரை நீக்கிவிட்டு 'செத்தவங்களுக்கு நிவாரணம் குடுக்கிறதில்லை' என்று கூறி குடும்ப அட்டையை வீசிவிட்டுச்செல்கிறார்.
வீட்டுத்தோட்டத்தில் வளர்ந்திருக்கும் களைகளை அறுத்து வீசிக்கொண்டிருந்த மகனது கையிலிருக்கும் ஒருபிடிக்களை தூரமாகச் சென்றுவிழுகிறதுகோபத்தோடுஅவன்கிராம சேவகர்போவதையேவைத்தகண்வாங்காது பார்த்துக்கொண்டிருக்கப் படம் நிறைவடைகிறது.

நிதர்சனத்தின்திரைப்படஉருவாக்கப்பிரிவினரால் உருவாக்கப்பட்ட இந்தப்படத்தில் இராமலிங்கம். சசிக்குமார். வீரசிங்கம். ஜெயா. சாந்திருதசா. அனுவர்னா. கலைச்செல்வி மேலும் பலர்நடித்திருக்கிறார்கள். இசைவழங்கியிருக்கிறார் முகிலரசன். ஒளிப்பதிவு டயஸ். படத்தொகுப்பு கோமகன் கதை. திரைக்கதை எழுதி இயக்கிருக்கிறார் க. சிவராஜா.

போரின்போது இடம்பெயர்ந்து எல்லைப்புறக் கிராமங்களில் சென்று வசித்த மக்களை அரச ஊழியர்களும் அரசுக்குச் சார்பானவர்களும் எப்படியேல்லாம் தங்களுடைய அதிகாரங்களையும் பதவிகளையும் கொண்டு நசுக்குகிறார்கள்எனும்நடைமுறைப்பிரச்சினையைப் பேசியிருக்கிறது படம். இன்றும் பலர் காரணமேயின்றி. எந்தவித முன்விரோதங்களும் சண்டைகளுமின்றி. ஏதேனும் ஒரு காரணத்துக்காக இவ்வாறான நிலைகளில் வஞ்சிக்கப்பட்டும் ஏமாற்றப்பட்டும் அலைக்கழிக்கப்பட்டும் வருகின்றார்கள். பாதிக்கப்படுபவர்கள் அதை வெளியே சொல்லாமலும் அதற்குத் தீர்வுகாண முயலாமலும் சகித்துக்கொண்டு வாழப்பழகிவிட்டனர். தம்முடைய அதிகாரங்களையும் பதவிக்கான மிடுக்கையும் பாமர மக்களிடம் பிரயோகிக்கும் உளவியல் சிக்கல் நிறைந்தசில அரசஊழியர்கள்செய்யும்தவறுகளைப் படம் பேசுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மௌனம் சாதிக்கும்நிலையில் இந்தச்சமூகப்பிரச்சினையைச் சம்மந்தப்பட்டவர்களின் குரலாகப் பேச முனைந்த இயக்குநரின் முயற்சி பாராட்டுக்குரியது. படமென்றால் பெரிய பிரச்சினைகளையும்பெரியளவில்தாக்கமுறவைக்கும்கதைகளையும்தான் பேசவேண்டுமா? எனும் கேள்விக்குப் பதிலாக இந்தக் கதையை திரைவடிவில்கொண்டுவந்து. திரைமறைவிலோ. பகிரங்க வெளியிலோ காலங்காலமாகப் பேசப்படாதிருந்த ஒரு விடயத்தைப் பேசியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

குறிப்பிட்ட காலத்தில் அரச விசுவாசிகளாக. எல்லையில்லாததமதுநன்றியுணர்வைஅரச அதிகாரிகள். அப்பாவி மக்கள் பலரிடம் பல விதங்களில் காட்டியிருந்தனர் என்பதை இந்தக் கதை மூலம் இயக்குநர் எடுத்துக்காட்டியிருக்கிறார். கண்ணை உறுத்தாமல் மிக யதார்த்தமாகக் கதைக் களத்தைப் பதிவு செய்திருப்பதில்ஒளிப்பதிவுகவனிக்கவைப்பதோடு நெருக்கமாக இரசிக்கவும். உணரவும் வைக்கிறது. கதை ஓட்டத்துக்கு ஏற்ப பரபரப்பின்றி மிகஇயல்பாகவேகாட்சிகளைத்தொகுத்திருப்பதும்உறுத்தலின்றிக்கதையோடுமிக இயல்பாகவும் அமைதியாகவும் பயணிக்க வைக்கிறது. பிரதேசவழக்குக்குஏற்பஉரையாடல்கள் அமைத்திருப்பது இரசிக்க வைத்தாலும் அதுவே பல இடங்களில் நாடக வசனங்களை ஒத்திருப்பது சலிப்புறவும் வைக்கிறது.
சிறுவர்களின் நடிப்பு இயல்பாக இருப்பது அழகு. கிராம சேவையாளரது உரையாடல். முகபாவனை மற்றும் நடிப்பு என்பன பாத்திரத்தை முழுமை பெற வைக்கின்றன. மற்றவர்களது நடிப்பில் போதாமை இருப்பது சில இடங்களில் உறுத்துகிறது. வெடிப்புக்கள் நிறைந்தசுவரில்தலைசாய்த்து இருப்பது. இறுதிக்காட்சியில்களை அறுத்துப்போடுவதுஎனச் சில இடங்களில்குறியீடுகள்பேசுவது இரசிக்க வைக்கிறது.
கலைஇயக்குநரதுபங்குபடத்தைரசிக்கவைப்பதிலும் தரத்தைக்கூட்டுவதிலும் முன்னிற்கிறது. ஆனாலும் படம் ஏதோ ஒரு வகையில் தொக்கி நிற்பதும் இறுக்கமான அல்லது நிறையான ஒரு வடிவத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதும் குறையாகவே வெளிப்படுகிறது. இன்னும் கூடுதலாக அல்லது மிகவும் சுவாரஸ்யமாகஇந்தக்கதையைச்சொல்லியிருக்கலாமோ...! எனவும் எண்ண வைக்கிறது. ஆனாலும் யாரும் அணுகாத அல்லது பேசவிளையாதஒருகருவைப்படமாக்கமுன் வந்து அதை ஓரளவுக்காவது சாத்தியப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கதே.



# கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.



அ.முத்துலிங்கம்

## புலம்பெயர் எழுத்து

பல வருடங்களுக்கு முன்னர் என்னை அறிமுகப்படுத்தும்போது 'புலம் பெயர்ந்த எழுத்தாளர்' என்று ஒருவர் கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. நான் திடுக் கிட்டு விட்டேன்.

அப்பொழுது அந்தச் சொல்கூட எனக்குப் பரிச்சயமாக இருக்கவில்லை. நான் இலங்கையில் இருந்தபோது எழுதினேன். பின்னர் புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்தும் எழுதினேன். எனவே நண்பர் என்னை எப்படி அந்த வகைப்பாட்டுக்குள் அடக்கினார் என்பது தெரியவில்லை. "நான் மறுபடியும் இலங்கைக்குப் போய் அங்கேயிருந்து எழுதினால் நான் யார்?" என்று கேட்டேன். அவரிடம் பதில் இல்லை. புலம் பெயர்ந்தவர் எழுதுவது புலம்பெயர் இலக்கியம் என்றால் அது தமிழில் பல நூறு வருடங்களுக்கு முன்னரே தொடங்கி விட்டது. சத்திமுற்றப் புலவரின் 'நாராய் நாராய் செங்கால நாராய்' பாடலில் ஆரம்பித்து இன்று வரை தொடர்கிறது.

பழந்தமிழ் இலக்கியத்தில் 'செலவழுங்குதல்' என்ற துறைகூட இருக்கிறது. பொருள் தேட வெளியூருக்குப் புறப்பட்ட தலைவன், தலைவியின் துயரத்தைத் தாங்க முடியாமல் பயணத்தை நிறுத்திவிடுவது.

அகில் சர்மா என்ற இந்திய அமெரிக்கர் ஆங்கிலத்தில் எழுதுகிறார். இவர், ஒரு மில்லியன் டொலர் சம்பள உத்தியோகத்தைத் துறந்துவிட்டு முழுநேர எழுத்தாளராகிப் பிரபலமானவர். இவரிடம் ஒருமுறை "நீங்கள் புலம்பெயர்ந்த எழுத்தாளரா?" என்று கேட்டேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "புலம்பெயர்ந்து விட்டபடியால் ஒருவர் எழுதுவது புலம்பெயர் இலக்கியமா? பத்திரிகைகள் வசதிக்காக ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு பெயர் சூட்டுவார்கள். மருத்துவர் வியாதிகளுக்குப் பெயர் சூட்டுவதுபோல. எழுத்தாளர் இதுபற்றி அலட்டிக்கொள்ளக் கூடாது. அவர் எழுதுவது உலகத்துக்குப் பொதுவான மனித உணர்வுகளைப் பிரதிபலிப்பதுதான் முக்கியம்" என்றார்.

புலம்பெயர்ந்து எழுதியவர்களில் உடனே நினைவுக்கு வருபவர் நோபல் பரிசு பெற்ற ஐஸக் பஷீவ்ஸ் சிங்கர் என்ற போலந்து (யூத) எழுத்தாளர். அவர் 33வயதிலேயே அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்தாலும் வாழ்நாள் முழுக்கப் போலந்து யூதர்களைப் பற்றியே எழுதினார். இவரால் தன்னைச் சுற்றி வாழும் மற்றைய மக்களைப் பற்றி நினைக்க முடியவில்லை. மைக்கேல் ஒண்டாச்சி இலங்கையில் பிறந்து 12வயதில் இலங்கையை விட்டு வெளியேறியவர். அவர் கடைசியாக எழுதிய த கற்ஸ் ரேபிள் (the cats table) என்ற நாவல் பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையை விட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்ட கப்பல் பயணத்தைப் பற்றிச் சொல்கிறது. இலங்கையில் அவர் அனுபவித்த அந்தக் கால வாழ்க்கையைப் பற்றி வர்ணிக்கிறார். இலங்கையை விட்டு 56 வருடங்களுக்கு முன்னர் இவர் வெளியேறிவிட்டாலும் இலங்கை இவரை விட்டு இன்னும் வெளியேறவில்லை. எழுத்திலே புலம்பெயர்ந்த எழுத்து, புலம்பெயராத எழுத்து என்ற வகைப்பாடு கிடையாது.

நல்ல எழுத்து, மோசமான எழுத்து என இரண்டு பிரிவுதான். புதுமைப்பித்தன் இலங்கைக்குப் போனது கிடையாது. ஆனால் அவர் துன்பக்கேணி என்றொரு அருமையான சிறுகதையை இலங்கைப் பின்னனியில் புனைந்திருக்கிறார். காஃப்கா அமெரிக்கா போனது கிடையாது ஆனால் அவர் 'அமெரிக்கா' என்றொரு நாவல் எழுதியிருக்கிறார். நல்ல எழுத்துக்குத் தேவை கற்பனை வளம். ஐம்பது வருடங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தன்னைச் சுற்றி வாழும் மக்களைச் சட்டை செய்யாமல் தன் மக்களைப் பற்றியே சிலர் எழுதுகிறார்கள். அதே சமயம் புலம்பெயராமலேயே உலக மக்களை நினைத்து எழுதுபவர்களும் உண்டு. எழுத்து என்பது இவை எல்லாவற்றையும் தாண்டி மனித குலத்தை நோக்கி முன்னேறுவது.

சுவீடனில் உள்ள ஒரு தச்சு வேலைக்காரர் பைன் மரத்தில் தளபாடங்கள் செய்வார். அமெரிக்கர் ஓக் மரத்தில் செய்வார். இந்தியர் தேக்கு மரத்தில் செய்வார். இவர்களை 'பைன் மரத் தச்சு வேலைக்காரர்', 'ஓக் மரத் தச்சு வேலைக்காரர்', 'தேக்கு மரத் தச்சு வேலைக்காரர்' என நாங்கள் விளிப்பதில்லை. எல்லோரையும் தச்சு வேலைக்காரர் என்றுதான் சொல்லுவோம்.

அதேமாதிரி ஈழத்து எழுத்தாளர், தலித் எழுத்தாளர், பெண்ணிய எழுத்தாளர், புலம்பெயர் எழுத்தாளர் என்பதெல்லாம் ஒருவிதமான வகைப்படுத்தல்தான். அமெரிக்காவில் நான் என்னை எழுத்தாளர் என்று அறிமுகம் செய்து கொள்வேன். என்ன மொழியில் எழுதுகிறீர்கள் என்று கேட்டால் தமிழ் என்று சொல்வேன். செவ்வாய்க் கிரகத்தில் இருந்து ஒருவரைச் சந்திக்கும்போது என்னைப் 'பூமி எழுத்தளர்' என்று அறிமுகப்படுத்திக் கொள்வேன். இலக்கியம் என்பது உண்மைக்கான தேடுதல். பூமியில் எங்கேயிருந்தும் அதை ஆரம்பிக்கலாம்.



பாஸ்கர் சக்தி

## ரியாலிட்டி ஷோக்கள்

சித்தி, மெட்டி ஒலி, கோலங்கள் ஆகிய சீரியல்கள் ஒளிபரப்பான காலகட்டத்தை சீரியல்களின் பொற்காலம் என்று சொல்லலாம். சீரியல்களையும் அதன் பாத்திரங்களையும் மக்கள் ஒருவித ஆவேசத்துடன் நேசித்தார்கள். 2000ஆம் ஆண்டு என நினைக்கிறேன். சாந்தோம் பகுதியில் ஒரு தெருவில் நடந்துபோய்க் கொண்டிருந்தபோது அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் 'வேலுமணி செத்துட்டானாமே?', 'அப்படியா! வேலுமணியா! அடடா!' என்று பரிதவிப்புடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எனக்கு வேலுமணி அந்தப் பகுதியின் முக்கிய பிரமுகராக இருப்பார் என்று தோன்றியது. வீட்டுக்கு வந்த என்னிடம் எனது மனைவி வேலுமணியின் மறைவுச் செய்தியை அறிவித்ததும் குழம்பிப் போனேன்.

வேலுமணி, சித்தி தொடரில் நடிகர் வாசு விக்ரம் ஏற்று நடித்த பாத்திரம். அது இறந்தது தான் செய்தி. அதேபோல மெட்டி ஒலியில் ஐந்து பெண்களின் தந்தையான சிதம்பரத்தின் சாவு பார்த்து உடைந்து அழுது நாள் கணக்கில் துக்கம் அனுஷ்டித்த பெண்கள் பலரை நான் அறிவேன்.

ரியாலிட்டி ஷோக்களின் வருகை என்பது அதன் பின் மெதுவாக நிகழ்ந்தது. விஜய் டி.வியில் ஒளிபரப்பான கதை அல்ல நிஜம் தான் முக்கியமான துவக்கம்... அந்த ஷோவில் பல நிஜ மனிதர்கள் தங்களது வேதனைகளை நேயர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

கதையல்ல நிஜம் மட்டுமல்ல, 'சுப்பர் சிங்கர்' போன்ற நிகழ்ச்சிகளில் தோற்று விலகும் போட்டியாளரின் கண்ணீர், அவரைத் தட்டிக் கொடுக்கும் சக போட்டியாளரின் பாசம், பின்னணியில் ஒலிக்கும் உருக்கமான இசையமைப்பு, பிள்ளைகள் ஜெயிக்கையில் குதூகலிக்கும், தோற்றால் தேம்பியழும் அம்மாக்கள்... ஆட்டம் போடும் பாட்டிகள்.

அரட்டை அரங்கத்தில் 'எங்கம்மா என்னைக் கல்லுடைச்சுக் கஸ்ரப்பட்டுப் படிக்க வைச்சாங்க சார்' என்று உரத்த குரலில் அழும் சிறுமிகள். 'டீலா நோ டீலா' நிகழ்ச்சியில் பங்கு பெறுவோரின் துயரக் கதைகள்.

'நீயா நானா'வில் பங்கேற்பாளர்கள் பகிர்ந்து கொள்ளும் அந்தரங்கத் தகவல்கள் எல்லாவற்றையும் கவனித்தால் சீரியல்கள் உருவாக்கும் அதே உணர்வு ரீதியான பாதிப்புக்களைத்தான் ரியாலிட்டி ஷோக்களும் பார்வையாளர்களிடம் ஏற்படுத்த விளைகின்றன என்பதை உணர முடியும்.

அந்த வகையில் சீரியல் பார்வையாளர்களில் கணிசமான ஒரு பகுதியினரை ரியாலிட்டி ஷோக்கள் தம் பக்கம் ஈர்த்திருக்கின்றன என்பது உண்மையே... ஆனால் பொதுவாக சீரியல்களின் மவுசு சற்றுக் குறையலாமே தவிர, ரியாலிட்டி ஷோக்களால் சீரியலின் இடத்தை முற்றிலுமாகப் பறித்துவிடுதல் சாத்தியமில்லை.

ஏனேன்றால் சீரியல்களின் அஸ்திவாரம் என்பது நமது பெண்களின் உணர்வுகளில் பதிந்து நிற்கிறது. இப்போதும் அவர்கள் சீரியல்களை நேசிக்கிறார்கள். திருமதி செல்வம், தென்றல், நாதஸ்வரம் ஆகிய சீரியல்களைப் பார்க்க முடியாவிட்டால் பரிதவித்துப் போகிறார்கள். ஏனெனில் சீரியல்களின் பலம் அதில் வரும் பாத்திரங்களைப் பெண்கள் தங்களோடு அடையாளப்படுத்திக் கொள்வதே. ரியாலிட்டி ஷோக்களில் அது சாத்தியமில்லை. சீரியலில் ஒருத்தி படும் வேதனை தனது வேதனை.

(உயிர்மை 100ஆவது இதழ்)



# தொலைச்செல்லி

# தொழில்நுட்பத்தில் மைல் கல்


மருத்துவர்.சி.யமுனாநந்தா

கடந்த வாரமளவில் தொழில்நுட்ப வளர்ச்சி ஒன்றின் திறன் சீனாவில் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றது. அது தொலைச்சொல்லித் (Teleportation) தொழில்நுட்பம் சார்ந்தது. ஒரு துணிக்கையின் (அணு) மூலம் தகவல்களைக் கடத்துவதை அடிப்படையாகக் கொண்டதே இந்தத் தொலைச்செல்லித் தொழில்நுட்பம். ஓரிடத்திலுள்ள பொருளை வேறோரு இடத்திலே உருவாக்கிக் கொள்வது இதனால் சாத்தியப்படும். அதை வெகு தொலைவில் நிகழ்த்துவதிலும் இந்த நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதற்கான எதிர்வுகூறல்களே சீன விஞ்ஞானிகளின் அண்மைய கண்டடைவு.

மிகச் சிறிய அணுத் துணிக்கையின் குவாண்டம் நிலையைப் பிரதி செய்து தூர அனுப்புவதில் அந்த நாட்டு விஞ்ஞானிகள் அண்மையில் வெற்றி கண்டுள்ளனர். சீனாவின் விஞ்ஞான தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் இந்தத் தொழில்நுட்பத்தின் சாத்தியத்தன்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Ji. Gang Ren தலைமையிலான விஞ்ஞானிகள் திபெத்தில் உள்ள ஆய்வுகூடத்தில் இருந்து இந்தத் தொலைச்செல்லிச் செயன்முறையைப் பூமியைச் சுற்றி வருகின்ற, சீனாவின் செய்மதியான Micius இல் நிகழ்த்தி இருந்தனர். இதன்போது ஆய்வுகூடத்தில் இருந்து செக்கனுக்கு 4000 சோடி போட்டோன்கள் (Photon) வெளிப் படுத்தப்பட்டன. ஒவ்வொரு சோடி போட்டோன்களில் ஒன்று 1400 கிலோமீற்றர் தொலைவில் உள்ள Micius செய்மதிக்கு அனுப்பப்பட்டது.

செய்மதியில் உள்ள குவாண்டம் (Quantum) உணரும் கருவியின் மூலம் இவை அவதானிக்கப்பட்டன. இதன்போது பூமியில் உள்ள மிகச் சிறிய நுண் துணிக்கைபோல் (போட்டோன்) செய்மதியில் உள்ள சுற்றில் உருவாக்கப்பட்டது. இந்தச் செயன்முறையே தொலைச்செல்லியின் அடிப்படையாகும்.

குவாண்டம் சக்திப் பரிமாற்றத்தைக் கணனிகளில் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு இது ஒரு புதிய மைல்கல். துணிக்கையின் குவாண்டம் நிலையைப் பிரதி செய்து அனுப்புகின்ற தொலைச்செல்லித் தொழில் நுட்பத்தால் குவாண்டம் கணினிகளின் தரவு நிலைகளான (Quibits) நிலைக்குத்து நிலைக்குத்து, கிடைகிடை, நிலைக்குத்துகிடை, கிடை நிலைக்குத்து என 04சக்தி நிலைகளில் தகவல்களைச் செயற்படுத்தலாம். எனவே தொலைச்செல்லி தகவல் தொழில்நுட்பத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்துகின்றது. தற்போதைய ஆய்வுநிலையில் இதன் மூலம் குவாண்டம் இணையத்தை (Quantum internet) மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உருவாக்கமுடியும். இது பொருளாதாரத் தகவல்களைப் பரிமாறவும், இராணுவத் தகவல்களைப் பேணவும், தேர்தல் தகவல்களைக் கண்காணிக்கவும், உளவுத் தகவல்களைப் பேணவும் உதவும். (Encrypted information) தற்போதைய இணையத்தில் உள்ள ஊடுருவல்களை குவாண்டம் இணையத்தில் ஏற்படுத்த முடியாது. குவாண்டம் இணையத்தின் வளர்ச்சியானது தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தையும் புதிய பரிமாணத்துக்குக் கொண்டு செல்லும்.



அதன் வளர்ச்சியை அந்தத் துறையோடு மாத்திரம் மட்டுப்படுத்தி விடாது பல துறைகள் சார்ந்து கூட வருங்கால மனிதர்கள் பயன்படுத்திக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

ஏன்... மருத்துவத்துறையில்கூட அதன் வளர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உதாரணத்துக்கு தொலைச்செல்லித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, குவாண்டம் இணையத்தின் மூலம் மூளையின் நரம்புக்கலங்களின் செயல்நிலையைப் பிரதி எடுத்து, அதனை மீளவும் பயன்படுத்தக்கூடிய தொழில்நுட்பம் உருவாக்கப்படலாம்! மூளை இறப்பு (Brain death) ஏற்பட்ட நோயாளிகளின் மூளை நரம்புக் கலங்களின் செயற்பாட்டுப் பிரதிமை, தொலைச்செல்லி மூலம் அணுகப்பட்டிருந்தால், மீளவும் அந்த மூளைக்கலங்களின் செயற்பாட்டைத் தொடரவும், இறந்தவைகளுக்கு உயிர்கொடுக்கவும் முடியும் என்பது போன்ற பல வியப்புக்கள் வெகு தொலைவில் இருப்பதுபோல் தெரியவில்லை!

# ‘முகில் கணித்தல்’ (cloud computing)

சி. சிவபாலன்

இணையத்துடன் இணைந்து, வளர்ந்து வருகின்றது முகிழ் கணித்தல் தொழில்நுட்பம். இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது அதற்கான செயலியை நமது கணினிகள், மடிக்கணினிகள், அதி திறன் பேசிகள் என்பவற்றில் நிறுவிக்கொண்டால் போதும். ஏனைய செயற்பாடுகளுக்குத் தேவையான மென்பொருட்களை அவற்றில் நிறுவிப் பயன்படுத்தவேண்டிய அவசியமில்லை. அவற்றை இணையமூடாக உடனடியாகப் பெற்றுச் செயற்படுத்திக்கொள்ளலாம்.

உதாரணமாக நாம் கணினியில் ஒரு கடிதத்தைத் தயாரிப்தென்றால் அதற்குரிய மென்பொருளைக் கணினியில் நிறுவத்தேவையில்லை. அதனை உடனடியாக இணையத்திலிருந்து பெற்று, நேரடியாகவே செயற்படுத்தி எமக்குத் தேவையான கடிதத்தைத் தயாரித்துக் கொள்ளலாம்.



**பயன்கள் - நன்மைகள்**

இந்த வசதியால் எமது கணினிகளில் மென்பொருட்களை நிறுவுவதற்குப் பயன்படுத்தப்படும் சேமிப்பகத்தின் இடம் மீதமாகிறது. அதேவேளை எமது தரவுகள், தகவல்களையும் பொதுவான குறிப்பிட்ட ஒரு சேமிப்பகத்தில் சேமித்து வைக்கக் கூடிய வசதி கிடைக்கின்றது.

இதற்கான சேவை வழங்குநர்கள் உள்ளனர்.

இதன்மூலம் எமது கணினிகளுக்குப் பெரிய கொள்ளளவுடைய சேமிப்பகங்கள் தேவைப்படாது. கணினியைக் கொள்வனவு செய்யச் செலவிடும் தொகை குறைவடையும். இது எதிர்காலத்தில் நாம் வைத்திருக்கினற கணினியின் அளவையும் குறைத்துவிடும். அதேவேளை நாம் தகவல்களை எமது கணினியில் சேமித்து வைப்பதால் எமது கணினி இருக்குமிடத்தை அணுகியே நாம் அதிலிருக்கும் தவல்களைப் பெறமுடியும். ஆனால் இத் தொழில்நுட்பத்தில் தகவல்கள் இணையமூடாகப் பொதுவான சேமிப்பகங்களில் சேமிக்கப்படுவதால் உலகின் எந்தப் பாகத்தில் இருப்பினும் இணைய இணைப்பினூடாக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

உதாரணத்துக்கு நாம் எவ்விடத்திலிருந்தாலும் மின்னஞ்சலை அங்கு கிடைக்கின்ற கணினிகளிலோ, அதிதிறன் பேசிகளிலோ எப்படிப் பயன்படுத்த, பார்வையிட முடியுமோ அவ்வாறே இந்தத் தொழில்நுட்பத்தின் மூலமும் எமது தகவல்களைப் பார்வையிட, பயன்படுத்த முடியும். அதேவேளை உலகின் வெவ்வேறு பகுதிகளில் உடையவர்களும் இதனைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். நிறுவனங்களில்கூட தனித்தனியான பொரிய கணினித் தொகுதிதிகளையும் அவற்றை நிர்வகிக்கத் தேவையான வல்லுநனர்களையும் வைத்திருப்பதற்குப் பதிலாக இவ்வாறு இணையத்தினூடாக இணைந்து செயற்பட்டுச் செலவைக் குறைக்க வழி செய்யலாம்.

**பிரச்சினைகள் - தீமைகள்**

இவ்வாறு சேமிக்கப்படும் தனிப்பட்டோரின் அல்லது தனிப்பட்ட நிறுவனங்களின் தரவுகளின் பாதுகாப்புக் குறித்த பிரச்சினைகள் பற்றியும் கவலை இருக்கத்தான் செய்கிறது. என்னதான் கடவுச்சொற்கள் வழங்கப்பட்டாலும் அதனை ஊடுருவோரும் இருப்பது பொரிய பிரச்சினையாகவே இருக்கின்றது. எனினும் நச்சுநிரல்களைத் தயாரிப்போர் ஊடுருவல் செய்வதைத் தவிர்க்கும் பாதுகாப்புக்கள் பல உள்ளதாக இதற்கான சேவைகளை வழங்குவோர் தெரிவிக்கின்றனர். அதேவேளை இந்தச் சேவைகளை வழங்குவோருடைய கைகளில் எதிர்காலத்தில் முழுத் தரவுகளும் சிக்கிவிடுமோ...! என்று அச்சப்படுவோரும் உள்ளனர். எவ்வாறாயினும் எங்கிருந்தாலும் எவ்வேளையிலும் தமது செயற்பாடுகளில் தடங்கல் ஏற்படக்கூடாது என விரும்புவோருக்கு இந்தத் தொழில்நுட்பம் சிறந்த வரப்பிசாதமாகும். அவர்கள் தமக்குத் தேவையான தகவல்களைக் கையில் கொண்டுசெல்லத் தேவையில்லை. ஒரு கணினியும் இணைய இணைப்பும் (அலைபேசி கூட போதுமானது)இருந்தால் அவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் தொழில்நுட்பத்துக்கும் ‘முகிலு’க்கும் என்ன தொடர்பு?
ஏன் இந்தப் பெயர் வந்தது ?

பொதுவாக இணையமூடாகத் தகவல்கள் பெறுவதைப் படமாக, குறியீடாக வரைந்து காட்டும்போது முகிலை வரைந்து அதிலிருந்து தொடர்புகளைப் பெறுவது போன்று வரைவதும் வழமையானதாகும். இதனாலேயே இந்தத் தொழில்நுட்பத்துக்கு ‘முகில் கணித்தல்’ என்று பெயரும் வந்ததாம்.



# தென்கிழக்கு திசையில் இருந்து...

அனார்கலி

## குப்பைகள் ஏற்கப்பட மாட்டாது...!

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் குப்பைகளைத் தரம்பிரித்துச் சேகரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தரம் பிரித்து ஒப்படைக்கப்படாத குப்பைகள் எந்தக் காரணம் கொண்டும் பொறுப்பேற்கப்படமாட்டாதென மாநகர ஆணையாளர் ஜே. லியாகத் அலி தெரிவித்துள்ளார். மக்கள் பாடுதிண்டாட்டம் தான். இனி, மக்களுக்கும் குப்பைகளுக்கும் 'குட்பை' தான் போலும்.

## ஏன் இந்தக் கொதிப்பு?

கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் முஸ்லிம் கூட்டமைப்பு விவகாரம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு அதி கடுப்பையும் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளதெனக் கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. வவுனியா புளியங்குளத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கடந்த வாரம் உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம் முஸ்லிம் கூட்டமைப்புக் குறித்து தமது கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தி எகிறி விழுந்திருக்கின்றார்

எந்தக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸ் எனும் சாம்ராஜ்யத்தை அசைத்து விடவோ அதனுடன் மோதவோ முடியாது. என்றும் ஹக்கீம் சூளுரைத்துள்ளார்.

இப்படி குருதிக்கொதிப்படையும் அளவுக்கு இன்னமும் உருப்பெறாத முஸ்லிம் கூட்டமைப்பு, சாம்ராஜ்யத்தின் தலைவரையே அசைத்து விட்டதே என்கிறார் முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தி அணி முக்கியஸ்தர் ஒருவர்.

## கதிர்காமத்துக்கு பேருந்து சேவைகள்

கதிர்காமம் ஆடிவேல் உற்சவம் நாளை 24ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அதையொட்டி கிழக்குப் பிராந்தியத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பல சாலைகள் (டிப்போக்கள்) நாளை முதல் கதிர்காமத்துக்கு சிறப்புப் பேருந்துச்சேவைகளை முன்னெடுக்கவுள்ளன.

அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனை, ரிதிதென்ன, வாகரை, மூதூர் திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள சாலைகள் மூலம் இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. உற்சவம் முடிவடையும் காலப்பகுதியான ஒகஸ்ட் 8ஆம் திகதி வரை 95வரையான பேருந்துகள் கதிர்காமம் நோக்கிச் சேவையில் ஈடுபடவுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் ஏ.எல்.சித்தீக் தெரிவித்தார்.

கடந்த வருடம் உற்சவ காலத்தின்போது கிழக்கிலிருந்து தினமும் 73 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன எனவும் இவ்வாண்டு 95 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன எனவும் அவர்மேலும் தெரிவித்தார்.



## நன்றிக் கடிதம்!

அலுவலக மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு ஒரே தரத்திலமைந்த தகவல் திணைக்கள அடையாள அட்டைகள் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

புதிய அடையாள அட்டையில் 'பிராந்திய ஊடகவியலாளர்' என்பது நீக்கப்பட்டு 'ஊடகவியலாளர்' என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு அளிக்கப்பட்ட பெரும் கௌரவம் இதுவெனக் குறிப்பிட்டுள்ள தென்கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கச் செயலாளர் ஏ.புஹாது இதற்கு ஆவண செய்த நிதி மற்றும் ஊடக அமைச்சருக்கு நன்றிக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## செவ்விளநீருக்கு கிராக்கி

குறித்த சில காலங்களாக நாட்டில் வறட்சி தலைவிரித்தாடுகின்றது. வறட்சி காரணமாக செவ்விள நீருக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் செவ்விளநீர் விற்பனை அதிகரித்துள்ளது. பலர் செவ்விளநீர் விற்பனையை நாளாந்தம் வருமானமீட்டும் சிறு தொழிலாகச் செய்து வருகின்றனர்.

அக்கரைப்பற்று மட்டக்களப்பு பிரதான வீதியின் மருங்குகளில் செவ்விளநீருடன் சீனி, தேசிப்புளி கலந்து விற்பனை செய்து வருகின்றனர். கடும் வெயிலுக்கு மத்தியில் பயணம் செய்வோர் அதிகளவில் இங்கு கூடி தாகம் தீர்த்து வருகின்றனர். ஒரு இளநீர் 80 ரூபா முதல் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





## அறுவடை ஆரம்பம்

இலங்கையின் நெல் உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கும் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையின் அறுவடை தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது.

குறிப்பாக நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, குடுவில், இறக்காமம் 8ஆம் கட்டைப் பிரதேசங்களில் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. வறட்சிகாரணமாக இந்த மாவட்டத்தில் 45ஆயிரம் ஏக்கர் நெற்காணிகளில் மட்டுமே இந்த முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. நெல்விளைச்சல் அதிகரித்துள்ள போதிலும் நெல்விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்கொள்வனவில் ஆர்வம் காட்டாமையும் சந்தையில் தட்டுப்பாடின்றி நியாய விலையில் அரிசி கிடைப்பதுமே நெல்விலை வீழ்ச்சிக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. நல்ல ஆரம்பம், வீழ்ச்சியில் சூழ்ச்சிகள் ஏதுமில்லையே.

## எமது சாம்ராஜ்யம்

'கிழக்கில் முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நாம் முன்னெடுக்கும் முயற்சி எவருடைய சாம்ராஜ்யத்தையும் உடைப்பதற்காகவும் எந்தச் சாம்ராஜ்யத்துடனும் முட்டி மோதுவதற்காகவும் அல்ல'

இப்படித் தெரிவிக்கிறார் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமும் முஸ்லிம் கூட்டமைப்பின் ஏற்பாட்டுக் குழு முக்கியஸ்தருமான எம்.ரி.ஹஸனலி.

முஸ்லிம் சமுதாயத்தைக் காப்பாற்றவும் முஸ்லிம்களுக்கு அமைதியான ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்குவதுமே முஸ்லிம் கூட்டமைப்பின் நோக்கமென ஹஸனலி மேலும் தெரிவிக்கிறார்.

'முஸ்லிம் சமுதாயமே! உன்கதி இதுதானா?'

## தூய முஸ்லிம் காங்கிரஸ்

முஸ்லிம் காங்கிரசிலிருந்து வெளியேறியுள்ள அணியினர் தூய முஸ்லிம் காங்கிரஸ் எனும் பெயரில் தங்களை அடையாளப்படுத்தவுள்ளனர். முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி அட்டாளைச்சேனையின் முன்னாள் பிரதேச சபைத்தவிசாளர் எம்.ஏ.அன்சில், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் ஆகியோரை முக்கியஸ்தர்களாகக் கொண்ட தூய முஸ்லிம்காங்கிரஸ் கட்சி ரீதியான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவுள்ளது.

விரைவில் தென்கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசம் ஒவ்வொன்றிலும் தூய முஸ்லிம் காங்கிரசின் செயற்குழுக்கள் மற்றும் மத்திய குழுக்கள் அமைக்கப்பட்டு வலுப்படுத்தப்படவுள்ளதாக அதன் முக்கியஸ்த்தர் ஒருவர் தெரிவித்தார்.

புதியவைகள் பழையவற்றுக்குத் தலையிடிதான் போலும்'

3


அருணா செல்லத்துரை

# 2500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாக வழிபாடு

## அருவி ஆற்றின் கரையில் ஐந்துதலை நாக வழிபாட்டுச் சின்னங்கள்

புராதன காலத்தில் அடங்காப்பற்று - வன்னியில் நடுகல் வழிபாடு இருந்துள்ளது. நடுகல்லுக்குப் பதிலாகக் கருங் கல்லில் சிலைகள் பொளியப்பட்டு அவற்றைப் பிரதிஷ்டை செய்யும் பாரம்பரியம் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிலை வழிபாட்டுக்கான மூலகர்த்தாக்கள் நாகர்கள் என்று காவியங்களிலும் வரலாறுகளிலும் தெரிவிக்கப்ப டுகிறது. அருவி ஆறு உற்பத்தியாகும் இடங்களில், உருவ வழிபாடுகள் ஆரம்பித்த காலத்தில் கருங்கல் பொளிவுகள் உபயோகிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. வவுனியா- சமளங்குளத்தின் மலைக்குன் றில் கட்டப்பட்டுள்ள புராதன நாற்சதுர மண்டபத்தின் படி களுக்கும் சுவர்களுக்கும் கருங்கல் பொளிவுகள் உபயோ கப்படுத்தப்பட்டுள்ளன.

> அருவி ஆறு உற்பத்தியாகும் இடங்களில், உருவ வழிபாடுகள் ஆரம்பித்த காலத் தில் கருங்கல் பொளிவுகள் உபயோகிக்கப்பட் டுள்ளதை அவதா னிக்கக் கூடியதாக இருக்கின்றது.




## கருங்கல்லில் கட்டப்பட்டுள்ள நாற்சதுர மண்டபம்

குறித்த நாற்சதுர மண்டபத்தில் மேல்பகுதி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. செங்கல் கட்டடத்தின் வாசல் பகுதியில் கருங்கல் பொளிவுகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி உயரமாகப் படிகள் கட்டப்பட்டுள்ளன. கட்டடத்தின் வாசல் படியில் வைக்கப்பட்டுள்ள கருங்கல்படிகள் ஒவ்வொன்றும் தூண் வடிவில் பொளியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கருங்கல் பொளிவுகள் கட்டடத்தின் புராத னத்துக்கு ரிய அடையாளங்களாகும்.



பொளியப்பட்டு அடுக்கப்பட்ட கருங்கல் படிகள்

இதனை அடுத்து சதுரமாகக் கட்டப்பட்டுள்ள உட்ப குதியில் அகலமான கருங்கற் பொளிவுகள் பெரிதா கவும் சிறியதாகவும் இருக்கின்றன. இவை பீடங்க ளாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகி றது. நான்கு பக்கங்களும் கட்டப்பட்டுள்ள தலத்தின் உட்பகுதியின் ஒரு மூலையில் சிதைந்த நிலையில் முழுமையான கருங்கல் தூண் ஒன்று உள்ளது. அத்தோடு அங்கு காணப்படும் தூண்களின் அடிப் பாகங்கள் கட்டடத்தின் உள்ளேயும் கருங்கல் தூண்கள் நிறுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்து கின்றன. நிலத்தில் சிதைந்த நிலையில் பீடங்களும் காணப்படுகின்றன.



## சிதைந்த நிலையில் பீடங்கள்

சமளங்குளத்தில் உள்ள இந்த மலைக்குன்றில் 1980 களுக்கு முன்னர் தொல்லியல் பிரிவினரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அப்போது கருங்கல்லால் கட்டப்பட்ட கட்டடத்தின் முன்பகு தியில் இருந்த மண்டபத்தின் செங்கற்கள் அகற்றப்பட்டதா கவும், உட்பகுதியிலிருந்து சிலையொன்று எடுக்கப்பட்டதா கவும், பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக ஆய்வுகள் நிறுத்தப்பட்டதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். அங்கிருந்து எடுக்கப்பட்ட சிலை கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. முன்னர் இருந்த நிலையிலேயே செங் கற்கள் திரும்பக் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாற்சதுரமாக கட்டப்பட்டுள்ள ஆலயச் சுவர்களின் மூலைப் பகுதிகள் செங்கற்களால் மிகவும் செம்மையாகக் கட்டப்பட் டுள்ளமை இதனை உறுதிப்படுத்துகிறது.

> செங்கற்களில் ஒரே மாதிரியான குறியீடுகள் பரவலாகக் காணப்படுகின்றன. இவை நாகர்கால பிராமி எழுத்துக்கள் எனப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



## செங்கல்கட்டு மூலைப்பகுதி

மண்டபத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்கள் ஏனைய இடங்களில் இருப்பது போலல் லாது அவற்றின் அளவுகள் வித்தியாசமாக உள்ளன. இவை அகலமானவையாகவும் மிகவும் பலமுள்ள வையாகவும் உள்ளன. செங்கற்களில்ஒரேமாதிரியான குறியீடுகள் பரவலாகக் காணப்படுகின்றன. இவை நாகர்கால பிராமி எழுத்துக்கள் எனப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

(தொடரும்)



சிதைந்த செங்கல்லில் குறியீடுகள்

# வலியில்லாக் கடவுள்

காத்திருப்பதில்தான்
சுகம் என்கிறவர்களுக்கு
எனது வலி புரியாதிருக்கும்.

எவ்வளவு நேரந்தான்
காத்திருப்பது...? “நேரில்
வருகிறேன் நிறையப் பேசுவோம்”
இருவார்த்தைகளுடன்
தொடர்பறுத்தகஞ்சன்
கடவுள்.

உண்மையாகவா??
என்னை நானே கிள்ளிக்கொண்டதில்
சுறுக்கென்றது வலி.
கடவுள் சிரித்தார்.

எப்போது வந்தீர்?
காற்று...புகைப்படலம்..
ஓங்காரநாதம்..
நறுமணம்..
பேரொளிப்பிழம்பு....

எதுவுமேயில்லாமல் எப்போது வந்தீர்
எனது கடவுளே??”

"நான்
வருவதுமில்லை. போவதுமில்லை"
உன்னுடனேயே இருக்கிறேன்.
உனக்குள்ளேயே இருக்கிறேன்.

“கோயிலில் இருப்பது?
வெறும் கல்..உலோகம்..சடம்.."


கோப வார்த்தைகள்
கடவுளாலும்முடியுமோ??


என்னை நானே
கிள்ளுகிறேன்
வலிக்கிறது.
சிரிக்கிறார் கடவுள்.
இப்போதும்
எந்த வலியுமில்லாமலேயே.....



வானவன்

# 'முள்ளிவாய்க்கால் முற்றம்' மூச்சடங்கிப் போனது...



■ அகல்யா அருளம்பலம்

"ஒருவருடைய மறைவின் பின்னர்தானே அவரைப் புகழ்கின்றார்கள்..." எனும் மனிதப் புலம்பலைக் கட்டுடைத்தே இந்தக் கட்டுரையை எழுத வேண்டியிருக்கின்றது. அந்த நிலையுடன் கூடவே, இது புகழ்ச்சி அல்ல உரியவருக்குச் சொந்தமான உடமை என்பதையும் இடித்துரைக்க வேண்டியிருக்கின்றது. ஆம்! அவரை மகான் என்று கூறுவதற்கு முதல் "அவன்தான் மனிதன்" என்று கூறிக்கொள்வதே பொருத்தம். ஓவியன், நடிகன், மக்கள் கலைஞன், போராளி எனும் பலதுறைகளில் பயணித்த ஆளுமை இன்றைக்கு மண்ணுக்குள் உறங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தியா - தமிழகக் கலைஞன் என்பதாக அவரைப் போர்த்தியிருந்த போர்வை தகர்த்தெறியப்பட்டு, அவர் தன் இனத்தின் மேல் கொண்டிருந்த கரிசனையே இன்றைக்கு முன்னெழுந்து நிற்கின்றது.

அது தமிழகத்தின் ஒரு பிரபல இதழ். மறைந்த கலைஞன் வீர சந்தானத்தை இவ்வாறு விழித்திருந்தது...

*"அவ்வளவு இலேசில் என் உயிர் போகாது. தனி ஈழத்தைப் பார்த்துவிட்டுத்தான் இந்த உயிர் பிரியும்" என்று ஒவ்வொரு முறையும் சொல்லிக் கொண்டிருப்பார் வீர சந்தானம். அவரது மறைவு காரணமாக தமிழ்ச் சமூகம் வருத்தத்தில் ஆழ்ந்துள்ளது.*

இது கட்டுரையின் ஆரம்பமும்கூட. வீர சந்தானத்தின் மறைவையெட்டி அங்குள்ள இதழ்கள், பத்திரிகைகள் வெளியிட்டிருந்த பதிப்புக்கள் அனைத்திலும் இதுவே நிலை. அந்தக் கலைஞன் கொண்டுள்ள அடையாளம் எது என்பதன் புலப்பாடு இன்றைக்கு அவருடைய மறைவோடு வெளிப்பட்டிருப்பதல்ல. வாழ்ந்து கொண்டிருக்கும்போதே வீர சந்தானம் தன் இனம் சார்ந்து குரல் கொடுப்பவராகவே பேசப்பட்டிருந்தார் என்பதே உண்மை.

"வாழ்ந்து கொண்டிருக்கும்போதே வீர சந்தானம் தன் இனம் சார்ந்து குரல் கொடுப்பவராகவே பேசப்பட்டிருந்தார் என்பதே நிஜம்."

### பிறப்பும் குரலும்

சக மனிதனின் வலியைப் புரிந்து கொள்வது அனைவராலும் முடியாமலிருப்பதற்குக் காரணம் என்ன? அந்த வலிகள் கொடுக்கும் அனுபவத்தை அவர்கள் பெற்றிருக்காததே அதற்குக் காரணம். ஆனால் அது வீர சந்தானத்துக்குச் சாத்தியப்பட்டிருக்கவில்லை. மிகவும் வறுமைக்குடும்பத்தில் பிறந்து, பல இன்னல்களை எதிர்கொண்டு வாழ்வைக் கட்டியமைத்தவர் அவர். ஆலயங்கள் அவை சார்ந்த நன்னெறிகள் எனப் பலவாறான இறுக்கமும் அனுபவமும் அது சார்ந்த நெறிமுறைகளும் நிறைந்த முதிர்ச்சியையுடையது அவருடைய வாழ்க்கை. இந்தியா கும்பகோணத்துக்கு அருகில் உள்ள உப்பிலியப்பன் கோவிலூரே இவருடைய பிறப்பிடம். பிற்காலத்தில் நவீன ஓவியராக, சமூகப் போராளியாக அறியப்படும் இவர், மத்திய நெசவாளர் நடுவகத்தின் சென்னை, மும்பை நகரங்களிலுள்ள பல்வேறு கிளைகளில் சேவை புரிந்தவர். அதன்வழி தொடர்ந்த 25 ஆண்டுகாலப் பணிக்குப் பின்னர், தமிழ்ச் சமுதாயத்துக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற அக்கறையோடு தானாகவே விரும்பி அந்தப் பணிகளில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டவர். ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டினை உணர்ந்து ஈழத்தமிழர்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கத் தொடங்கினார். அதிலே உச்சமாகச் செயற்பட்டு வெற்றியும் கண்டார். தஞ்சைக்கு அருகே விளாரில் அமைந்திருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உள்ள சிற்பங்களையெட்டி அவர் வரைந்த ஓவியங்கள், தன் இறுதி மூச்சு வரைக்கும் அவர் ஈழ உறவுகளுக்காகக் குரல் கொடுத்ததன் சாட்சிகள் ஆகும்.

### தமிழர் அடையாளம்

ஓவியம், ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதுடன் மாத்திரம் அவருடைய தமிழ்ப் பற்று நின்றுவிடவில்லை. தமிழ் சினிமாவிலும் தடம் பதித்தார். இயக்குநர் பாலு மகேந்திராவின் 'சந்தியா ராகம்' படத்திலும் தம்பியுடையான், மகிழ்ச்சி, அரவான், பீட்சா, கத்தி, அநேகன், அவள் பெயர் தமிழரசி ஆகியவற்றிலும் நடித்திருக்கிறார்.

தோற் பாவைக் கூத்து இவருக்குப் பிடித்த ஒன்று. தோற் பாவைக் கூத்து பற்றிய ஆழ்ந்த அறிவும் அனுபவமும் கொண்டவர். திரிபுரா மாநில பழங்குடியினரின் மரபுக் கலை வடிவங்களை ஆடைகளில் அறிமுகம் செய்தவர். புதிய உத்திகளைக் கையாண்டு புடைப்புச் சிற்பங்களைச் செதுக்கியிருந்தவர். சகட யாழ், மகர யாழ், காமதேனு எனத் தமிழர்களின் இன்னும் பல அடையாளங்களை ஓவியங்களாக்கிய பெருமையையும் இவர் தவறவிடவில்லை.

### மறைவும் மனப்பதிவும்

அருகிலிருக்கும் தனது சக உறவுகள் கொல்லப்படும் அவலம் கண்டு கலங்கிய மனிதம் வீர சந்தானத்துக்கேயுரியது. அதை வைத்து அவர் அரசியல் பேசியிருக்கவில்லை. மருத்துவமனையில் போய் படுத்திருக்கவும் இல்லை. கலைஞனான அவருடைய கவலைகளின் வெளிப்பாடே 'முள்ளிவாய்க்கால் முற்றம்'. கடந்த 13ஆம் திகதியிலிருந்து அவருடைய ஆத்மாவும் ஈழ உறவுகளுடன் அங்கேயே உறங்கிக் கொண்டிருக்கின்றது.

**ஓவியர் வீர சந்தானம் காலமானார்!**

ஓவியர், தமிழ்த் தேசிய உணர்வாளர் வீரசந்தானம் சென்னையில் இன்று காலமானார்.

**வீர சந்தானத்தின் உடலுக்குப் புலிக் கொடி போர்த்திக் கௌரவிப்பு!**

உயிரிழந்த ஈழத்தமிழ்ப் போராளி ஓவியர் வீர சந்தானத்தின் உடலுக்குப் புலிக் கொடி போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இவை வெறும் செய்திகளல்ல. தமிழ் மீது அவர் கொண்டிருந்த பற்றுக்களின் வெளிப்படுத்தல்கள். அதை ஏராளம் ஏராளமாகவே அவர் செயற்படுத்திச் சென்றிருக்கின்றார். தனது ஓவியப் புலமை கொண்டு ஈழத்து எழுத்தாளர் கே. டானியலுடைய படைப்புக்களுக்கு உயிரூட்டியிருக்கிறார். ஈழத் தமிழர் தம் போராட்டங்களுக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்திருக்கிறார் அவர். எமக்காக, வாய்மைக்காகக் கரம் நீட்டியவர். அவருடைய மனிதத்தை என்றைக்கும் மனதிருத்திக் கொள்வது எமது கடமை. ■

"அவ்வளவு இலேசில் என் உயிர் போகாது. தனி ஈழத்தைப் பார்த்துவிட்டுத்தான் இந்த உயிர் பிரியும்" என்று ஒவ்வொரு முறையும் சொல்லிக் கொண்டிருப்பார் வீர சந்தானம். அவரது மறைவு காரணமாக தமிழ்ச் சமூகம் வருத்தத்தில் ஆழ்ந்துள்ளது.





# 75 லட்சம் வாக்குகளுக்கு மதுரோவின் பதிலென்ன?

பிரகாஸ்

ஒரு லட்சமோ, இரண்டு லட்சமோ அல்லது பத்து லட்சமோ அல்ல. சுமார் 75 லட்சம் வாக்குகளுக்குப் பதில் சொல்ல வேண்டியவராக உள்ளார் வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ. அமைதி இழந்து, கலவர பூமியாக மாறியுள்ளது வெனிசுலா. அதை இயல்பு நிலைக்குத் திருப்புவதற்கு மதுரோ எவ்வாறு செயற்படவுள்ளார் என்பதே தற்போது அவர் முன்னிருக்கும் முக்கிய கேள்வி.

### ஆட்சி மாற்றக் கோரிக்கை

வெனிசுலாவில் கடந்த 1999ஆம் ஆண்டு ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி ஆட்சியைப் பிடித்தது. சுமார் 14 ஆண்டுகள் அதிபராக நீடித்த அந்தக் கட்சியின் தலைவர் சாவேஸ் 2013ஆம் ஆண்டில் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து நிக்கோலஸ் மதுரோ அந்த நாட்டின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றார். மதுரோவின் மூன்று வருட ஆட்சியில் வெனிசுலா வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகள் அட்டைப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன. உணவு, உலர் உணவு என்பன கிடைப்பதென்பது அரிதிலும் அரிது. உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் ஆகியவற்றால் கொட்டப்படும் கழிவு உணவைத் தெரிந்து எடுத்துப் பசியாற்றுவதற்கும் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை. இவ்வாறு சென்றால் அந்த நாடு இன்னும் சில மாதங்களில் 700 சதவீதம் பணவீக்கத்தை எதிர்கொள்ளும் என்று உலக நாணய நிதியம் எச்சரித்துள்ளது. இத்தகைய பின்னணியிலேயே அங்கு ஆட்சி மாற்றத்துக்கான போராட்டம் ஆரம்பித்தது.

### நாயகனாக மாறினார் எதிர்க்கட்சித் தலைவர் லொபாஸ்

மதுரோவின் ஆட்சியில் உள்ள குறைபாடுகளையும், அவரின் பொருளாதாரத் திட்டங்களில் உள்ள உறுதியற்ற நிலையையும் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார் எதிர்க்கட்சித் தலைவரான லொபாஸ். இளைஞர்கள் லொபாசின் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். இதனால் ஆரம்பத்தில் மதுரோ பதவி விலகவேண்டும் என்று இருந்த எதிர்ப்புக்கள் அப்படியே லொபாசுக்கான ஆதரவுகளாக மாறின. வெனிசுலா அதிபர் மதுரோ, தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கு எதிர்மறையான திட்டங்களைக் கையாளுகிறார். அவற்றில் ஒன்று எதிர்கட்சித் தலைவர் லொபாசின் கைது. அந்த நாட்டில் அதிபர் தேர்தல் விரைவில் வரவுள்ளது. தேர்தல் நடந்தால், லொபாசின் வெற்றி நிச்சயம் என்ற நிலையே அங்குள்ளது. தேர்தலை நடத்தாமல் ஆட்சியைத் தக்க வைக்கவும் இயலாது. எனவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த லொபாசைக் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளார் மதுரோ. அவர் அரசியலில் ஈடுபடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் லொபாஸ் இல்லாத தேர்தலில் தான் வெற்றிபெறலாம் என்பதே மதுரோவின் திட்டம்.

### திணறுகிறது தலைநகர்

ஒருநாட்டின் தலைநகரே அந்த நாட்டின் தலைவிதி என்று சொல்லப்படுவதுண்டு. அதாவது ஒருநாடு தனது பாதுகாப்பு, பொருளாதாரத்தரம், கல்வியறிவு என்பவற்றில் தனது தலைநகரையே தனக்கான அடையாளமாகப் பயன்படுத்தும். பொருளாதாரத்தின் பின்னடைவைச் சந்தித்துள்ள நாடுகளும், வறட்சியில் தவிக்கும் ஆபிரிக்க நாடுகளும்கூடத் தமது தலைநகரைச் சிறப்பாக வைத்துக் கொள்ளவே எத்தனிக்கின்றன, வைத்துக் கொள்கின்றன. அந்த வகையில் வெனிசுலா என்றாலே போர்க்களம்தான் என்று அடையாளமிட்டுள்ளது அந்த நாட்டின் தலைநகர் கரஸ்கஸ். வெனிசுலாவெங்கும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் பரவலாக நடைபெற்றாலும், தலைநகர் கரஸ்கஸ் உலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. மெரீனா ஜல்லிக்கட்டுப் போராட்டம் போல் அங்கு இரவு பகலாகப் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. குறிப்பாக அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் முன்னால் தொடர் போராட்டங்கள் நடைபெறுகின்றன. கலகம் அடக்கும் பொலிசார் அங்கு பல்லாயிரக்கணக்கில் குவிக்கப்பட்டுள்ளனர். எனினும் துடிப்பும் நாட்டுப்பற்றும் உள்ள இளைஞர்கள் பெரும் தொகையில் கிளர்ந்தெழுந்துகொண்டு தான் உள்ளனர்.

### சுமார் 100 பேர் கொலை

கரஸ்கஸ் உள்ளிட்ட பல நகர்களில் நடைபெற்றுவரும் போராட்டங்களைத் துப்பாக்கிகள் கொண்டும், கண்ணீர்ப் புகை கொண்டும் அடக்க எத்தனிக்கின்றன வெனிசுலா அரசபடைகள். இதுவரை 100 இளைஞர்கள் இந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டுள்ளனர். பொலிசாரே துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர் என்று ஆர்ப்பாட்டக் காரர்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் மதுரோ இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கிறார். ஆர்ப்பாட்டக் காரர்களுக்கு மத்தியில் இருக்கின்ற உள்ள சில சக்திகளே இந்த அசம்பாவிதத்தை நடத்தின என்பது மதுரோவின் கருத்தாக உள்ளது.

> கரஸ்கஸ் உள்ளிட்ட பல நகர்களில் நடைபெற்றுவரும் போராட்டங்களைத் துப்பாக்கிகள் கொண்டும், கண்ணீர்ப் புகை கொண்டும் அடக்க எத்தனிக்கின்றன வெனிசுலா அரச படைகள். இதுவரை 100 இளைஞர்கள் இந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

### மதுரோவுக்கு எதிராக 75 லட்சம் வாக்குகள்

மதுரோவிடம் இருந்து ஆட்சியைப் பறித்துவிட எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் நிற்கின்றன. மக்கள் தற்போதைய அரசில் கொண்டுள்ள எதிர்ப்பை அறிவதற்காகப் பொதுவாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் 75 லட்சம் மக்கள் ஆட்சிமாற்றத்துக்கு ஆதரவாக அதாவது மதுரோ பதவி விலக வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். எனினும் இதை உத்தியோகபூர்வமான வாக்கெடுப்பாக தற்போதைய அரசு அங்கீகரித்ததா என்று தெரியவில்லை. இந்த வாக்கெடுப்பை எதிர்க்கட்சிகளின் சதியாட்டம் என்று மதுரோ குறிப்பிடுகிறார். தனது ஆட்சியைக் கைவிடும் எண்ணம் மதுரோவிடத்திலும், போராட்டத்தில் இருந்து பின்வாங்கும் எண்ணம் போராடுபவர்களிடத்திலும் இல்லை.





# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 23.07.2017 தொடக்கம் 29.07.2017 வரை

### மேடம்

இந்த வாரம் சமூகத்தில் உயர்ந்தவர்கள் மத்தியில் புதியதொரு மரியாதையும் வரவேற்பும் உங்களுக்கு கிடைக்கப்பெறும். தாயின் உடல்நலத்தில் சிறு சிறு தொந்தரவுகள் உண்டாகி நல்ல பராமரிப்பின் காரணமாய் உடல்நலம் பெறும். வெகுகாலம் தீராத பிரச்சினைகள் மனதுக்கு சந்தோஷமான தீர்வைத் தரும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். திருமண வாய்ப்புக்காக காத்திருப்பவர்களுக்கு உறவினர் சார்ந்த வகையில் சில தடைகள் வந்நது விலகும். அரசு, தனியார் துறைகளில் உள்ளவர்கள், ஆடம்பரச் செலவினங்களைத் தவிர்த்து தங்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபச்செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும்.

### இடபம்

மனதில் உத்வேகம் உருவாகி உயர்வான செயல்களைச் செய்வீர்கள். நிலுவையில் இருந்த பணம் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும். அரசு, தனியார் வங்கிகளின் உதவிகளைப் பெற்று வீட்டை வசதிக்கேற்ப மாறுதல் செய்வீர்கள். பணியாளர்களிடம் நீங்கள் காட்டி வந்த கடுமையான போக்கு மாறி செயலில் கனிவான தன்மை நிறைந்திருக்கும். இதனால் நற்பெயர் பெறுவதுடன் ஊழியர்களின் எதிர்பாராத உதவிகளும் மனதை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும். வியாபாரிகள், பொருள்களைக் குத்தகை முறையில் வியாபாரம் செய்பவர்கள் அதிக இலாபம் பெறுவார்கள். மின்சாரம் தொடர்புடைய பொருட்களை விற்பனை செய்பவர்கள் தங்கள் தொழிலில் முன்னேற்றம் அடைவர்.

### மிதுனம்

முடங்கிக் கிடந்த திட்டங்கள் அனைத்தும் முழுமையாகச் செயல்பாட்டுக்கு வந்துவிடும். உங்கள் ஒவ்வொரு வெற்றிக்கும் உறவினர்கள், நண்பர்கள் காரணமாக இருப்பார்கள். பொருளாதாரத்தில் உயர்வு உண்டாகும். குடும்பத்தில் கணவன்மனைவி ஒற்றுமையால் அனுகூலங்கள் கிடைக்கும். நிர்வாகத்திறமையை வளர்த்துக்கொள்ளத் தேவையான பயிற்சிப் படிப்புகளை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகும். தங்கநகைகள் உற்பத்தி, விற்பனையில் ஈடுபடும் தொழிலதிபர்கள் நன்மதிப்பும் பொருளாதார உயர்வும் பெறுவார்கள். பெண்கள் அரசுத்துறை மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் மேல் அதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெறுவார்கள்.

### கடகம்

குடும்பத்தில் ஒற்றுமை கூடும். அரச அதிகாரிகளின் அனுகூலம் கிடைக்கும். நிலம் தொடர்புடைய தொழில்களைச் செய்பவர்கள் இலாபம் பெறுவார்கள். ஆன்மிக எண்ணங்கள் தோன்றும். எதிரிகள் மறைந்திருந்து கெடுதல் செய்வார்கள். கவனம் தேவை. உத்தியோகஸ்தர்கள், அரசுத்துறைகளில் உயர்பதவியில் இருப்பவர்கள் குறுக்கீடுகளின் காரணமாக சோர்வு மனப்பான்மைக்கு ஆளாகி மீள்வார்கள். தொழில்ரீதியாக புதிய ஆலோசகர்கள் கிடைப்பார்கள். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. தொழில் ரீதியாக உங்களை புறந்தள்ள நட்புடன் பழகியவர்களே முயற்சி செய்வார்கள். கடின உழைப்பைக் கொண்டே முன்னேற முடியும்.

### சிங்கம்

நல்லவர்களின் உதவி உங்கள் மனதை மகிழ்விக்கும். நீங்கள் பேசும் ஒவ்வொரு பேச்சும் மற்றவர்களால் வேதவாக்காக ஏற்றுக்கொள்ளப்படும். ஆன்மிக உணர்வுடன் செய்த நற்செயல்கள் தகுந்த பலனைத் தரும். வீடு, மனை, வாகனங்கள் புதியவை வாங்கவும் இருப்பவற்றை சீர்திருத்தவும் வாய்ப்புகள் வந்து சேரும். குழந்தைகள் வகையில் செலவுகள் அதிகரிக்கும். அரசு,தனியார் துறையினருக்கு வேலை சார்ந்த பயணங்கள் உண்டு. அரசு, தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சேமித்த பணத்தை குடும்பத்தின் சுபச் செலவுகளுக்காக பயன்படுத்துவார்கள். கலைத்துறையினர் திறமையை நன்கு வளர்த்துக்கொண்டு மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துவார்கள்.

### கன்னி

சுபகாரியச் செலவுகள் நிகழும். அலைச்சலான சூழ்நிலைகள் உண்டு. உங்கள் பேச்சும் செயலும் தெய்வாம்சம் பொருந்தியதாக இருக்கும். தைரியமான செயல்களைச் செய்து தகுந்த புகழை அடைவீர்கள். வீடு, மனை, வாகனங்களுக்கான பராமரிப்புச் செலவுகளை சிக்கலின்றி செய்யலாம். குழந்தைகள் வகையில் அனுகூலம் உண்டு. புதிய சிந்தனைகள் உருவாகும். வியாபாரிகள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து தொழிலில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். மனதில் நல்ல உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். அறச்செயல்கள் செய்வதில் மனம் ஈடுபாடு கொள்ளும். சமூகத்திலும் உறவினர்களிடமும் நற்புகழ் கிடைக்கும்.

### துலாம்

குடும்பத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. நீங்கள் பேசும் வார்த்தைகள் மற்றவர்களுக்கு தீயைப் போலச் சுடலாம். ஆனால் அவர்களுக்கு வழிகாட்டும் ஒளியாக இருக்கும். நல்ல செய்கைகளினால் மட்டுமே புகழைத் தக்க வைக்க முடியும். வீடு, மனை, வாகன வகைகளில் திருப்தியான நடைமுறைகள் இருக்கும். உத்தியோகஸ்தர்கள், அரசு ஊழியர்கள் பொதுமக்களின் கண்டனத்திற்கு ஆளாகும் நிலை ஏற்படும். பணவரவு சரளமாக இருக்கும். வியாபாரிகள் தங்கள் தொழிலில் மிகுந்த ஆர்வமுடன் செயல்பட்டுத் தகுந்த பலனைப் பெறுவார்கள். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். கடந்த காலங்களில் ஆதாயமாய்க் கிடைத்த பணத்தால் மங்கலக் காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

### விருச்சிகம்

அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிபவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மாற்றம் வரும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். அலுவலகத்தில் உங்கள் நிலை மேன்மை தரும். தொழிலதிபர்கள் முன்னேற்றம் காண்பார்கள். நல்ல வியாபார வாய்ப்புகள் பெற்று முன்னேற்றம் பெறுவார்கள். குழந்தைப்பேறுக்காகக் காத்திருந்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. வீடு, வாகன வகையில் அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கும். தொழிலதிபர்களுக்கு ஏற்றமான காலம் இது. புதிய சந்தை வாய்ப்புகளைப் பெற்று பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள். பெண்கள் சக ஊழியர்களின் மறைமுக நெருக்கடிக்குள்ளாவார்கள். தைரியத்தை இழக்க வேண்டாம்.

### தனுசு

இந்த வாரம் பொருளாதார மேன்மையும் புகழும் நிறைவாகக் கிடைக்கும். குழந்தைகளின் தவறான சேர்க்கை கவலை தரும். விழிப்புடன் செயல்படுவது நன்மை தரும். சிலரது குறுக்கீடுகளால் குடும்பத்தில் மனக்கசப்புகள் தோன்றிப் பின்னர் சீராகும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் அல்லது துறை சார்ந்த அதிகாரிகளின் நெருக்கடிகளுக்குள்ளாகி புதிய அனுபவங்களைப் பெறுவார்கள். அரசு, தனியார் வங்கிகளில் உயர் பதவி வகிப்பவர்கள் ஊழியர்களின் நடத்தையால் மனவருத்தத்திற்குள்ளாவார்கள். தொழிலதிபர்களுக்கு சுணக்கம் ஏற்படும். வேலையில் தகுந்த கவனம் செலுத்த வேண்டும். பெண்கள் முன்னேற்றம் காண்பார்கள். வாழ்க்கைத் துணையுடன் இருந்து வந்த வீண் வாதங்களைத் தவிர்க்கவும்.

### மகரம்

எடுத்த காரியம் கைகூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். தாயின் உடல்நலத்தில் தகுந்த அக்கறை காட்ட வேண்டும். வழக்கு தொடர்பான விவகாரங்களில் உங்கள் மனம் விரும்பும் படியான வெற்றிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். நம்பிக்கையும் உயரும். உங்களது கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். தொழிலதிபர்களுக்கு மனதில் இருந்த சஞ்சலங்கள் மாறி நம்பிக்கை ஒளி பிறக்கும். புதிய சந்தை வாய்ப்புகளைப் பெற்று சிறந்த முன்னேற்றம் காண்பார்கள். மனிதாபிமான உதவிகளால் அந்தஸ்தும் புகழும் ஏற்படும்.

### கும்பம்

வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பூர்விகச் சொத்துக்களால் வருமானம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையைக் காண்பீர்கள். வேலைகளைத் தன்னம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகமாகும். உங்கள் வேலைகளுக்கு உரிய அங்கீகாரத்தை மேலதிகாரிகள் வழங்குவார்கள். அடுக்குமாடிக் கட்டடங்களைக் கட்டி விற்பனை செய்பவர்கள் ஆதாயம் பெறுவார்கள் பணப்புழக்கம் தங்கு தடையின்றி இருக்கும். உங்கள் நிறுவனத்தின் புகழ் எட்டுத்திக்கும் பரவும். கலைத்துறையினர் துறையில் உள்ள நுணுக்கங்களை அறிந்து வெற்றி பெறுவீர்கள். அவற்றைத் தகுந்த சமயத்தில் உபயோகித்து வெற்றி பெறுவதற்கு ஏதுவான சூழ்நிலை உண்டாகும்.

### மீனம்

சொல்லால் மகத்துவமும் செயலால் கீர்த்தியும் ஏற்படும். வீடு, மனை, வாகனங்களின் பராமரிப்புப் பணிகளைத் தள்ளிப்போடவும். உத்தியோகஸ்தர்களுக்கு, பெற்றோரின் மூலமாக வேலை கிடைக்கும். உடன் பணியாற்றுபவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். வீணான பிரச்சினைகளும் மனக்குழப்பங்களும் வேண்டாம். நீங்கள் செய்யும் உத்தியோகத்தில் சிறந்து விளங்குவீர்கள். பதவி உயர்வு, பணிஇடமாற்றம், சம்பள உயர்வு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் நிமித்தமாக சிலர் தூர தேசப் பயணம் மேற்கொள்ள வேண்டி வரலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வாய்ப்புகள் கைகூடி வரும். போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

# பாராட்டு...

(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருத்தன் சிவப்புச் சேட் போட்டிருந்தான். ஒருத்தன் நீலச் சேட் போட்டிருந்தான். சங்கிலியை ஒரு கையால இறுக்கிப் பிடிச்சதாலை பாதியைத்தான் அறுத்தாங்கள்" என்று கவலையும் அழுகையும் வாயடைக்கக் கூறினாள் அந்த அபலை. உடனே ஓவியா விழாவை முடித்துக் கொண்டு வேறு பாதையூடாகச் சென்று கொண்டிருந்த ஆசிரியர்களுக்குத் தனது கைபேசியூடாகத் தகவல் வழங்கினாள்.

அப்போது எதிர்த் திசையிலிருந்து உறுமிக் கொண்டுவந்த உந்துருளி ஒன்று திடீரெனப் பிறேக் போட்டு ஓவியாவின் உந்துருளியை மோதியபடி நின்றது. அதில் சிவப்பு, நீலச் சேட்டுக்காரர். தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஓவியா நிலத்திலிருந்த செம்மணலை அள்ளி உந்துருளியை ஓட்டியவனின் கண்ணில் மின்னல் வேகத்தில் கொட்டினாள். "மச்சான் அடியடா உவளுக்கு" என்று சொல்லவும், பின்னுக்கிருந்தவன் பாய்ந்து வரவும், ஓவியா தனது கைமுட்டியைப் பலமாக்கிக் கிட்ட வந்தவனின் மூக்கில் ஒரு குத்துவிடவும் சரியாகவிருந்தது நேரம். மூக்கால் குருதி வழிந்தோட ஒற்றையடிப் பாதையில் விழுந்து கிடந்த அந்த அபலையின் லேடிஸ் சைக்கிளைத் தூக்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தான் அவன். மோட்டார் சைக்கிளில் இருந்து கொண்டே கண்களைக் கசக்கியபடி அவதிப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவனது உந்துருளியைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டாள் ஓவியா. திகிலுடன் இதனைப் பார்த்துக் கொண்டிருந்த சங்கிலியைப் பறிகொடுத்த பெண் ஓவியாவுக்கு அருகில் வந்து நின்று கொண்டாள்.

ஓவியாவின் அறிவிப்புக் கிடைத்த ஆசிரியர்கள் வேறு பலரையும் கூட்டிக்கொண்டு சம்பவ இடத்துக்கு வந்து விட்டனர்.



சைக்கிளில் ஓடித் தப்பியவனை வந்தவர்கள் தோட்ட வெளிகளில் தேடிப்பிடித்துக் கைகளைக் கட்டி, இழுத்து வந்தனர். இருவரும் கைகள் கட்டப்பட்டு உரிய கவனிப்புடன் பொலிசில் ஒப்படைக்கப்பட்டனர்.

ஓவியா வீடு திரும்புவதற்கு மாலை ஏழு மணிக்கு மேலாகி விட்டது. வீட்டுக்கு வந்ததும் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கணவனிடம் கூறினாள். "ஓவியா நீ சமயோசிதமாக நடந்து கொண்டாய். உடனே ஆசிரியர்களுக்குப் போன் பண்ணி ஆள்களைக் கூப்பிட்டபடியால் கையும் களவுமாகப் பிடிச்சு அவங்களைப் பொலிசில ஒப்படைச்சாய். வீரமங்கை ஜான்சிராணிதானப்பா நீ" என்றான் காவியன்.

"நக்கல் போதுமப்பா. பிள்ளைகள் சாப்பிட இரவுச் சப்பாடு செய்ய வேணும்" என்று சொல்லியபடியே புறப்பட்டாள் ஓவியா.

"நில்லப்பா பாராட்டு வார்த்தைகள் கூறவேணும். உனக்கல்ல" என்றபோது சற்று ஏமாற்றத்துடன் வறட்டுப் புன்னகையை வரவழைத்துக் கொண்டே "அப்ப வேறு யாரை அப்பா பாராட்டப் போறியள்" என்று புருவத்தை உயர்த்திக் கொண்டே கேட்டாள் ஓவியா.

"உனக்குப் பயிற்சி தந்த அவங்களத்தான் பாராட்டனும்" என்றான் காவியன். ஓவியா சிரித்துக் கொண்டே

## சொற்சிலம்பம் போட்டி இல: 481

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | 4 | | 5 |
| 6 | | | 7 | | | | |
| | | 8 | | | | 9 | |
| | 10 | | | | 11 | | |
| 12 | | | | 13 | | | |
| 14 | | | 15 | | | | 16 |
| | | 17 | | | | 18 | |
| | 19 | | | | 20 | | |

அனுப்புபவர் பெயர்:..................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..................................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. இந்து முஸ்லிம்களால் புனிதமாகக் கருதப்படுவது.
3. காதில் மெதுவாகச் சொல்லுதல்
6. சோற்றை இதனோடு சாப்பிடுவர்
7. புதுமைக்கு எதிர்ச்சொல்
8. சண்டாளத்தனம்
10. உப்பு எடுக்கப்படும் இடம்
11. காதல் மயக்கம்
12. கை
13. சூறைக்காற்று
14. தாம் என்பது வேற்றுமை உருவை ஏற்பதற்குத் திரியும் வடிவம்
15. உள்ளம்
17. சந்தோஷப்படு
18. கதையின் மூலக் கருத்து
19. மீனின் உடலின் மேற்புறத்தில் இருப்பது
20. செய்த குற்றத்துக்காக ஒறு

### மேலிருந்து கீழ்

1. துரிதம்
2. மரத்தை வெட்டுமாறான ஏவல்
3. நாள் / வாரம்
4. பளு
5. (பெண்ணொடு) கூடி மகிழ்தல்
7. இருட்டைக் கண்டால் சிலருக்கு ஏற்படுவது
8. நெற் கதிர் அடுக்கும் இடம்
9. இலக்கியத்தில் குறிப்பிடப்படும் ஒரு வகை மீன்
10. ஒரு சிறு தீட்டும் கருவி
11. மத்தி
12. வீட்டின் பாதுகாப்புக்காக இருப்பது
13. பலராலும் பேசப்படுகிற நிலை
15. ஒரு வகை மரம்
16. கண் தெரியாதவள்
17. சந்திரன்
18. மனித உடலின் ஒரு உறுப்பு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 479 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பிடிவாதம் (4) அவி (6)சிலை (7)பகல் (8)காய் (9)விசாலம் (11)சப்பு (14)சிரட்டை (15)கதவு (16)மடை / மடு (17) தக்க (18)பிணக்கு(20) தம்பிடி

**மேலிருந்து கீழ்**

(1)பிரகாசம் (2)வாசி (3)தலைவி (4)அகம் (5)வில் (7)பலதாரமணம்(10)சாட்சி (12)புத்தகம் (13)சடை (19)குடி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.481**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (02.08.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 479இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
திவ்யா பிரதீபன் சர்மா,
இராமநாத சிவன் கோவில்,
இராமநாத மகா வித்தியாலயம்,
கே.கே.எஸ்.வீதி, மருதனா மடம்,
சுன்னாகம்

**2 ஆம் பரிசு**
அ.அகிலரசன்,
இல. 16/1 மருதடி வீதி ,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
ராணி அரசரட்ணம்,
தபாற்கந்தோர் வீதி,
மன்னார்.

**4 ஆம் பரிசு**
திருமதி வலஜி செந்தூரன்,
வவா கடை முன் ஒழுங்கை,
சரவணை, வேலணை.

**5 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீகிருஷாந்தி உமாபதிசிவம்,
இல. 18, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை,

குணராசா விஜிதன்
6ஆம் வட்டாரம்,
குமுளமுனை, முள்ளியவளை.

நா.மோகனேஸ்வரன்,
இல. 8/1 தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.481இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 06.08.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 479 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா





**மேடம்:** நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். ஆதாயம் அதிகரிக்கும்.



**இடபம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விவாதம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலக்கு நிறைவேற விடாமுயற்சி தேவை. இலாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை.



**மிதுனம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். நண்பர்களின் உதவியைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் தாராளபணவரவுகிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெறுவர்.



**கடகம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**சிங்கம்:** அனைவரிடமும் நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**கன்னி:** சிறு செயல் கூட கடினமாகத் தோன்றலாம். பொதுவிடயத்தில் நிதானித்துப் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் உறவினர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.



**துலாம்:** எதிர்பார்த்த வெற்றிச் செய்தி வந்து சேரும். நண்பர்களிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் குடும்ப வளர்ச்சி கண்டு மகிழ்வர்.



**விருச்சிகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை விலகும். சீரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் வந்து சேரும்.



**தனுசு:** வழக்கத்துக்கு மாறாக பணியில் பொறுப்புக் கூடும். குடும்பத்தினரின் ஆதரவும் உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். நகை, பண விடயத்தில் பாதுகாப்பாக இருப்பது நல்லது.



**மகரம்:** அலைச்சலால் சோர்வுக்கு ஆளாக நேரிடும். தொழில் வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர்.



**கும்பம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகமுடன் செயற்பட்டு தொழிலில் ஆதாயம் அடைவீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் வரும். பெண்களுக்குதாய் வீட்டினரின் ஆதரவு உண்டாகும்.



**மீனம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணிகளைநிறைவேற்றுவது அவசியம். சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.



## வி.ஐ.பி. – 2 முன்னோட்டத்தை ஒரு கோடி பேர் பார்த்துள்ளனர்

தனுஷின் நடிப்பில் வெளியாகவுள்ள வேலையில்லாப் பட்டதாரி– 2 (வி.ஐ.பி. – 2) படத்தின் முன்னோட்டத்தை இதுவரை சுமார் ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் பார்த்துள்ளனர்.

'வேலையில்லாப் பட்டதாரி' படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதால் இந்தப் படத்தின் 2ஆவது பாகம் தற்போது தயாராகி உள்ளது. ரஜினிகாந்தின் இரண்டாவது மகளான சவுந்தர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப் படம் தமிழ் மற்றும் தெலுங்கில், தனுஷின் பிறந்த நாளான ஜூலை 28ஆம் திரைக்கு வருகிறது.

இந்தப் படத்திற்கு நடிகர் தனுஷ் வசனம் எழுதியிருக்கிறார். தனுஷின் 'வொண்டர்பார் பிலிம்ஸ்' மற்றும் கலைப்புலி எஸ்.தாணுவின் 'ஹவிஷ் கிரியேஷன்ஸ்' இணைந்து தயாரித்துள்ள இந்தப் படத்தில் தனுஷ், அமலாபால், கஜோல், விவேக், சமுத்திரக்கனி, சரண்யா பொன்வண்ணன், அனு இம்மானுவல், உள்ளிட்ட பலரும் நடித்திருக்கின்றனர்.

கடந்த 25ஆம் திகதி வெளியான வேலையில்லாப் பட்டாரி திரைப்படத்தின் முன்னோட்டத்தை இதுவரை சுமார் ஒரு கோடிப் பேர் பார்த்துள்ளனர்.




கணவன் : சாரி டார்லிங் இண்டைக்கு வீட்டுக்கு வரமுடியாது போல

மனைவி : ஏன்?

கணவன் : கார்ல எவனோ ஸ்டீயரிங், அக்ஸலேட்டர், க்ளட்ச், ப்ரேக் எல்லாத்தையும் திருடிட்டுப் போயிட்டான்

மனைவி: தண்ணியடிச்சிருக்கியா?

கணவன் : கொஞ்சம் லைட்டா அடிச்சிருக்கேன்

மனைவி : மூதேவி முதல்ல பின் சீட்டிலேருந்து முன் சீட்ல போய் உட்கார்ந்து காரை எடுத்திட்டு வீட்டுக்கு வந்து தொலை

கணவன்: ........

தேவதை @SaranyaTwtzz

கேலி செய்யத் தயங்காத மனம் தன்னைக் கேலி செய்யும் போது மட்டும் ஏற்க மறுக்கிறது!

8 80 110

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | | | |
| | | | | | 6 | 8 | | |
| | 1 | 9 | | | 4 | | 2 | |
| 1 | | | 6 | | 2 | 3 | 5 | |
| 6 | | 3 | | 7 | | | | |
| | | | 1 | | | | | 7 |
| 3 | 2 | | | 5 | | 1 | 7 | |
| 7 | | 5 | | 2 | 1 | 9 | | |
| 9 | 4 | 1 | | 6 | 7 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 2 |
| 7 | 8 | 9 | 6 | 3 | 2 | 5 | 1 | 4 |
| 4 | 2 | 3 | 5 | 1 | 9 | 7 | 8 | 6 |
| 3 | 4 | 1 | 2 | 7 | 5 | 8 | 6 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 3 | 1 | 4 | 7 |
| 9 | 7 | 8 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 |
| 8 | 9 | 4 | 3 | 5 | 7 | 6 | 2 | 1 |
| 1 | 3 | 2 | 8 | 9 | 6 | 4 | 7 | 5 |
| 5 | 6 | 7 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

முட்டுக் குடுத்து முரட்டுத்தனமா தூங்குவம்டா...






இனி மேல் லைசன்ஸ் கேப்பியா?

அண்ணே பர்ஸை மறந்து வீட்டிலேயே வைச்சிட்டு வந்துட்டேன். ஒரு ஐநூறு ருபா இருந்தா கொடுங்களேன்
சரி இந்தா 20 ருபா வீட்டுக்குப் போய் பர்ஸை எடுத்துட்டு வந்துடு...




யாருகிட்ட....

தெரியாம என் நாய்க்கு இரண்டு வருடம் முன்னயே ஜூலினு பெயர் வைச்சிடேன்



பேசாம ஒரு நல்ல நாள் பாத்து பெயர மாத்தி காது குத்தி கணபதி ஓமம் பண்ணிடனும்

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### காணி விற்பனைக்கு
கோண்டாவில் சந்திக்கு அண்மையில் கொட்டைக்காட்டில 4½ பரப்புக்காணியும். திருநெல்வேலி முருகன் வீதியில் 2 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.
**076 697 2287**

### வசதியான வீடு விற்பனைக்கு
கச்சேரி. நல்லூர் வீதியில் 3 அறைகள். பெரிய கோல். 2 சமையலறை. இணைந்த குளியலறை கொண்ட 3½ பரப்புக் காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. (கிழக்கு வாசல்)
**076 697 2287**

### காணி விற்பனைக்கு
புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 29 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப் படும். (4 பரப்பு. 6. 8)
**076 857 3798**

### விற்பனைக்குண்டு
உடுவில் K.K.S வீதியில் மூன்றாவது 6½பரப்புகாணிவிற்பனைக்குள்ளது. முகவர்கள் தேவையில்லை. நேரடியாகதொடர்புகொள்ளவும்.
**077 606 4140, 077 558 1534**

### விற்பனைக்கு உண்டு
நல்ல நிலையிலுள்ள பஜாஜ் CT 100 NP VU1272 உடனடி விற்பனைக்கு உண்டு. (N 2816) (14)
தொடர்புகளுக்கு:
**077 204 8545/ 021 226 2876**

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி பாண்டியன் தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
**077 614 6434** (CS 5949) (14)

### விற்பனைக்கு
டோமன் 2 மாத நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.
**0778715430**

### தொழிற்சாலை, மாடி வீடு விற்பனைக்கு
பிரதான வீதியை முகப்பாக கொண்ட தொழிற்சாலை. கல்யாண மண்டபம் நடத்த கூடிய கட்டடங்கள், சகல வசதியுமுடைய மேல்மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.
**077 600 1701**

### காணி விற்பனைக்கு
கேரதீவு வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்துக்கு அருகில் நாவற்குழி பலநோக்கு மண்டபம் அருகில் 23½ பரப்பு (நெற்பரப்பு) காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையற்றது)
**077 900 8439** (CS 5973) (14)

### காணிகள் விற்பனைக்கு உண்டு
தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் (துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீதியில்) வீடு கட்டக்கூடிய 3 பரப்புக் காணியும், அம்பனைச் சந்திக்கு சிறிது தூரத்தில் அளவெட்டி றோட்டிற்கு கிட்டவாக 6பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு.
**011 250 0021/ 077 025 2391**



## தேவை



### வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தல் அதிகாரிகள் (Marketing Executive ) வேலையாள்கள் (ஆண்/பெண்) தேவை. தகுந்த ஊதியம் + கமிஷன் வழங்கப்படும்.
**071 764 3322/ 070 336 3334**

### காணி குத்தகைக்குத் தேவை
தோட்டம் செய்வதற்கு யாழ்.மாவட்டத்தில் தேவை.
**077 015 8304/ 077 447 5657**

### தேவை
- சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

**075 731 3916** (AKN 162) (14)

### மணமகள் தேவை
1984 இல் பிறந்த லக்கினத்தில் 2செவ்வாய் கௌரவகுடும்பம் இந்துசமயம். படித்துப் பட்டம் பெற்று ஆஸ்திரேலியா. சிட்னியில் தொழில் புரியும் மணமகனுக்கு ஆஸ்திரேலியா. சிட்னி பகுதியில் வசிக்கும் மணமகள் தேவை.
**075 503 2515** (CS 6031) (14)

### தேவை
பருத்தித்துறையில் இயங்கும் உல்லாச விடுதி ஒன்றுக்கு Room Boy உடனடியாக தேவை. பகுதி நேர பணியாளர்களும் இணைத்துக் கொள்ளப்படுவர். (N 2817) (14)
**077 163 2330**

### வேலையாள்கள் தேவை
கொழும்பில் உள்ள கட்டடம் கட்டும் இடங்களுக்கு மேசன்கள். கம்பிதொழிலாளிகள். சட்டறிங் செய்ய கூடிய தச்சாகள் தேவை. 1500 ரூபாயில் இருந்து அவர்களின் வேலையை பார்த்து வழங்கப்படும்.
**077 756 3930**

### வேலையாள்கள் தேவை
விஷன் லங்கா நிறுவனத்தால் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள்.
தரம் 10 முதல் O/L, A/L முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
**0772705388, 075 487 6233**

### பணிப்பெண் தேவை
யாழ் நகரில் உள்ள சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
**077 123 5630**

### மணமகன் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 ஆம் ஆண்டு பிறந்த சதய நட்சத்திரத்தையுடைய அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் மணமகளுக்கு பொருத்தமான அரச உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை.
**021 227 0633**

### தேவை
- அதி சொகுசு வாகனச் சாரதி தேவை.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**075 731 3916**

## ஏனையவை

### வாடகைக்கு
திருநெல்வேலி. Temple Road பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய 2 வீடுகள் வாடகைக்கு உண்டு. நிறுவனத் தேவைக்கு or அலுவலகத் தேவைக்கு (Office) பாவிக்கலாம்.
**076 857 3798** (N 2817) (14)

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையிலுள்ள 6மாதம் பாவித்த வீட்டுத்தளபாடம். சிங்கர் கம்பனி Warranty காட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொலைக்காட்சிப் பெட்டி. குளிர்சாதனப்பெட்டி. சலவை-இயந்திரம், . மின்விசிறி ஆகியன. (N 2815) (14)
**077 889 7983**

### WANTED
யாழ் நகரில் உள்ள வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு Accounts clerk with Computer knowledge தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
**RG & SJ ASSOCIATES (PVT) LTD**
60, Jummah Mosque Lane, Grand Bazar.
T.No - 021 221 6642 /Mob.No - 076 845 0854

### இளமை நீருற்று பயிற்சிக் கருத்தரங்கு
என்றும் இளமையாக இருப்பதற்கான இரகசியத்தை தெரிந்து கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பம்



கருக்கங்கள் மறையத்தொடங்குகின்றது. ஆண்மை உறுதித்தன்மை கூடுகிறது முடிஉதிர்தல் நிற்கிறது கண்பார்வை தெளிவடைகின்றது, உடல் எடை குறைகிறது. முழுமையான உடல் நலத்திலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது.

முதுமையிலிருந்து இளமைத்தோற்றத்திற்கு மாறவும் உங்கள் ஆரோக்கியத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் 4 மணி நேர பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபெறுங்கள் 21 நாட்களில் உங்கள் இளமையும் ஆரோக்கியமும் மீண்டுவரும் அதிசயத்தைக் கண்டு கொள்வீர்கள். கட்டணம் 1000/= காலம் 30-07-2017, காலை 9.30 முதல் 1.30 வரை. அல்லது 2.00 மணி முதல் 6.00 வரை முன் பதிவிற்கு 0766998906 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும். By. Dr. K. Dinesh Bernat
இடம்: மனைவளக்கலை நிலையம்
14/4, கோவில் வீதி US Restaurent முன்பாக

### காணி தேவை - 75 - 100 ஏக்கர்
புதுக்குடியிருப்பு. விஸ்வமடு. தேவிபுரம். எழுதுமட்டுவாழ். கிளாலி. முகமாலை ஆகிய பகுதிகளில் 75 - 100 ஏக்கர் காணி தேவை.
தண்ணீர் வளமும், விவசாயத்துக்குரிய மண்வளமும், அமையப்பெற்றதாக இருக்கவேண்டும்.
தொடர்பு
**077 318 5499/ 077 771 5550**

### Computer Repair - கணினித் திருத்தம்
சகல விதமான கணினிகளும் திருத்தம் செய்து தரப்படும். மற்றும் பாவித்த நல்ல நிலையில் உள்ள கணினி, உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(Used Computer & Accessories).
**தொடர்பு : 077 889 1702**
Basic Computer Studies - அடிப்படை கணினி கல்வி
(M.S.Word,MS.Excel, M.S.Pow.Point, Internet & E-mail, Basic Hardware)
வீடு வந்து கற்பித்துத் தரப்படும்.
(குழுவாகவும் கற்கலாம்) (CS 6086) (14)

### MAJESTIC CINEPLEX Jaffna
A CEYLON THEATRES CINEMA
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### கடை வாடகைக்கு உண்டு
மீசாலை புத்தூர் சந்தியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு : சு.பாக்கியராஜா
மீசாலை வடக்கு மீசாலை. (CS 6031) (14)

### காணி விற்பனைக்கு
கோயில் வீதி, கொழும்புத்துறையில் தென்னைமரம், நல்ல தண்ணீர் வசதிகள் உள்ள சுற்று மதில் உள்ள காணி விற்பனைக்கு.
**021 221 1959/076 620 8358**

### ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா
Sri Lakshmi Plaza




E-mail:jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550 / 0044 746 657 8511
இல.84. ஐயனார் கோயில் வீதி.
தட்டாதெரு சந்தி (அருகில்). யாழ்ப்பாணம்.

### பணியாளர்கள் தேவை
யாழ்ப்பாணம் 60, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள
**அக்ஷதை**
உணவு விடுதிக்கு ஆண்/ பெண் பணியாளர்கள் தேவை.

*01. Chines Vegetarian Cook & Helper*
02) உணவு பரிமாறுபவர்
03) துப்புரவுத் தொழிலாளர்

**021 221 9946, 077 088 9433**

# மருத்துவ பீட மாணவரின் கைது முயற்சி தொடர்பில் அறிக்கை கோருகிறார் சாகல

கொழும்பு, ஜூலை 23

மருத்துவ பீட மாணவர்களின் செயற்குழு ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத்தைக் கைது செய்ய முற்பட்ட சம்பவம் தொடர்பில் எழுந்துள்ள முறைப்பாடுகள் குறித்து, விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகலரத்னாயக்க பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரை கைது செய்வதற்காகப் பொலிஸார் பின்பற்றிய நடைமுறை தொடர்பில் விசாரணை நடத்துமாறும் அமைச்சர் கோரியுள்ளார்.

அத்துடன் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் இந்தச் சம்பவம் தொடர்பில் சிறப்பு உரை ஆற்ற உள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ரயன் ஜயலத்தைக் கைது செய்வதற்குப் பொலிஸார் நேற்று முன் தினம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# சிறிலங்கன் விமான நிறுவன முன்னாள் தலைவருக்கு மூன்று ஆடம்பர வீடுகள்

## அமைச்சர் கபீர் ஹாசீம் தகவல்

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மூன்று உத்தியோக பூர்வ இல்லங்களைப் பயன்படுத்தியுள்ளதுடன், 6 கைத்தொலைபேசி இணைப்புகளுக்கான கட்டணங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார் என அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

இதனடிப்படையில் முன்னாள் தலைவரின் நிர்வாக காலத்தில் நிறுவனம் அடைந்த நட்டம் மூவாயிரத்து 252 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான கட்டுநாயக்க சேவைப் பிரிவைப் பார்வையிடச் சென்றிருந்தபோதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விமான சேவை நிறுவனம் குறித்து நாடாளுமன்றத்தில் ஆரம்பத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது, நிறுவனத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் தேவை மாத்திரமே இருக்கின்றது என்று கூற நேர்ந்தது.

அரசு தற்போது நிறுவனத்தின் நட்டத்தை ஈடுசெய்து வருகிறது. நிறுவனத்தை மூடுவதோ அல்லது விற்பனை செய்வதோ நோக்கமல்ல. விமான சேவை நிறுவனத்தை மறுசீரமைப்பதன் மூலம் அடுத்த 5 வருடங்களுக்குள் பிராந்தியத்தில் சிறந்த விமான சேவையாக மாற்றமுடியும்.

நிறுவனம் 2015 மற்றும் 2016 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அடைந்த நட்டம் புதிய நிர்வாகத்தின் கீழ் 43 மில்லியன் டொலர்களாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 2014 முதல் 2015ஆம் ஆண்டுவரை நிறுவனத்தின் நட்டம் 127 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

அதிக நட்டத்தில் இயங்கும் நாட்டுக்குப் பெரும் தலைவலியாக இருந்த விமான நிறுவனத்தை மூடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்குப் பதிலாக அரச தலைவரும், தலைமை அமைச்சரும் சுமையை ஏற்று நிறுவனத்தை மீண்டும் நாட்டின் சொத்தாக மாற்றும் பொறுப்பை என்னிடம் வழங்கியுள்ளனர்.

முன்னாள் நிர்வாகத்தின் கீழ் ஊழல், மோசடிகள் நடந்துள்ளதுடன் நிறுவனத்தின் வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டன. விமான சேவை நிறுவன ஊழியர்களை அலரி மாளிகையில் பணிக்கு அமர்த்தி மாதாந்தம் லட்சக்கணக்கில் சம்பளம் வழங்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது-என்றார்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவராக அவரது மனைவியின் சகோதரரான நிஷாந்த விக்ரமசிங்க பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

**5ஆம் ஆண்டு நினைவு நாள்**

அமரர்
ஐயாத்துரை லோகேஸ்வரன்
(லண்டன்)
திதி: அமாவாசை




மலர்வு 26.12.1950
உதிர்வு 19.07.2012

எம் வாழ்வில் மறைந்தும் மறையாது
உம் நினைவால் வருந்துகின்றோம்

பிரதான வீதி,
சங்கானை.
குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



கனடாவில் காலமான
சிவகானன்
பாலஸ்கந்தா
(Consultant Engineer)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கொண்டலடி வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி நாகலிங்கம் கனகம்மா குடும்பம்.
124/3, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**ஈராண்டு அஞ்சலி**



திருமதி புவனேஸ்வரி
சீவகாருணியம்
பிறப்பு
13.11.1932
இறப்பு
14.08.2015
திதி: ஆடி அமாவாசை

தாயே உன்மடி உலகில்
தாலாட்டி எனை வளர்த்து - இன்று
தன்னம் தனியனாய் எனை தவிக்கவிட்டு சென்றாயோ?

நேர்மையும் ஒழுக்கமும் பண்பாகி
சீரான வாழ்வு சிறப்போடு வாழ்ந்து
போராடி எமக்காய் தியாகம் புரிந்து
ஈராண்டாய் எமைவிட்டு போனாயே அம்மா...

உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

126 , அரசடி வீதி,
கந்தர்மடம்.
கணவர், மகள்,
பேரப்பிள்ளைகள்.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்
04 . 10 . 1949
மறைவு
23 . 06 . 2017

அமரர் முத்துவேலு கணேசலிங்கம்

வானுறையும் தெய்வத்தினுள் சங்கமமாகிய
எங்கள் அன்பு மாமாவே
பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
இப்பாரினில் வாழ்ந்த எம் பாசமிகு மாமாவே
எம்மையெல்லாம் துன்பக்கடலிலே தவிக்கவிட்டு
நின்னுயிர் நீத்த மாயம் தான் என்ன ?
நிம்மதியாய் நீர் இறைபதம் சேர்ந்தீர்
நமக்கோ நின் கனவு அதுவும் நித்தியம் நிரந்தரம்

எமது மாமாவின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

77, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3212

நீங்கா நினைவுகளுடன்
சிவலிங்கம் மோட்டோர்ஸ்

**45ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு**



கடந்த 10.06.2017 சனிக்கிழமை
இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின்
ஒளிவிளக்கு
அமரர் அன்னலிங்கம்
புஸ்பாகரன் (றஜனி)
பிறப்பு 29.03.1981
இறப்பு 10.06.2017

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து-நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.
குடும்பத்தினர்.




அராலி மத்தி ஊரத்திக் கிராமத்தில் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மக்கள் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டு, அவர்களுடைய அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கேட்டறிந்தார்.





'மன்னார் மாவட்ட சைவக்கலை இலக்கிய மன்றம்' நடத்திய கம்பன் விழாவில். மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்டியன் முல்லைத்தீபனுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார். (ஐ)






பல்லாயிரக்கணக்கான கனேடியர்கள் கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் திரண்டு, கனடாவின் 150 ஆவது பிறந்தநாள் விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். இதனை முன்னிட்டு இளவாலையில் இயங்கும் வசதியற்ற சிறுவர்களுக்கான பராமரிப்பு நிலையத்தில் வாழும் சிறுவர் சிறுமியர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என, மொத்தம் 150 இளையவர்களுக்கு, சிறந்த மதிய உணவும், வைப்பில் வைத்து அவர்கள் பராமரிப்புக்குச் செலவிடுவதற்கென குறிப்பிட்ட தொகைப் பணமும் வழகி வைக்கப்பட்டது. (ஐ)




மண்முனைப் பற்று பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட 43 பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. பிரதேச செயலாளர் என்.சத்தியானந்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் பி.குணரத்தினம், மண்முனை பற்று பிரதேச செயலக தலைமையக முகாமையாளர் ஏ.தனேந்திரராசா, முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.இராசலிங்கம், மாவட்ட முகாமையாளர்கள், முகாமையாளர், உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)



மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் கிராமத்தில் இயங்குகின்ற வள்ளுவர் சனசமூக நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமிய விளையாட்டு விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. குறித்த விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஊடாக வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)



வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் தனது பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து மாத்தளன் றோ.க. பாடசாலைக்கு அண்மையில் கணினிகளை வழங்கி வைத்தார். (ஐ)



அல்வாய் மாலுசந்தி விநாயகர் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது.



கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது.



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற அமர்வும் சாதனையாளர் பரிசளிப்பு விழாவும் பாடசாலை அதிபர் வரதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன். மாகாண மட்டத்தில் விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடத்திய பனம் பொருள் உற்பத்தி கண்காட்சியில் பொது சமாச தலைவர் செ. இலகுநாதன் மூத்த கூட்டுறவாளர் ச.ஆறுமுகநாதனுக்கு உற்பத்தி பொருள்களை வழங்கி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். (ம -17)




டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வட்டத்தைச் சேர்ந்த போரால் பாதிக்கபட்ட 5 குடும்பத்தை சேர்ந்த மாணவர்களுக்கும் . மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 4 குடும்பங்களைச் சேர்ந்த மாண ளுக்குமாக 9 புதிய துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கபட்டுள்ளன. (ஐ)



தென்மராட்சி கல்வி வலய மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வும் பதவியேற்பு நிகழ்வும் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ஐ-9)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் பாரதிநகர் கிராமத்தில் வதியும் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சி மேற்கொள்ளுவோரை ஊக்குவிப்பதற்கு நிதியுதவி வழங்குவது தொடர்பான கூட்டம் கடந்த வாரம் இடம்பெற்றது. கனடா கல்வி அறக்கட்டளை நிலையத்தால் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்காந்தராசாவின் ஏற்பாட்டில் மூன்று இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டவுள்ளது. இதில் நிதி வழங்குனர். பிரதேச செயலர் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட தொழில்திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ)



முல்லைத்தீவு மாவட்ட பாரதி பெண்கள் சிறுவர் இல்லத்துக்கு இல்ல நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க 43 மெத்தைகள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் பொருளாளர் க.ரகுமான் இல்ல நிர்வாகத்திடம் மெத்தைகளைக் கையளித்தார். இதற்க்கான நிதி அனுசரனை கனடா நாட்டைச் சேர்ந்த சிவசேனாதிராஜா மற்றும் லண்டன் நாட்டைச் சேர்ந்த சிவசீலன் ஆகியோர் வழங்கியிருந்தனர். (ஐ)

வெளிவாரிக்...

நீக்குமாறுகோரி உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஊடாக வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே குறித்த தெரிவுப் பரீட்சையை அண்மையயில் அறிமுகப்படுத்தியது.
முன்னர் ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தால் இசட் ஸ்கோர் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாரியாகத் தெரிவாகி வந்தனர். உள்வாரியாகத் தெரிவாகாதவர்கள் வெளிவாரியாகப் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளமுடியும். அரச, தனியார் துறைகளில் பணிபுரிவோர் தமது பதவி உயர்வுக்காகப் பட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிவாரிப் பட்டப்படிப்பே கைகொடுத்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகத் தெரிவுப் பரீட்சையை நடைமுறைப்படுத்தியுள்ளது. உள்வாரி மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலேயே வெளிவாரி மாணவர்களின் எண்ணிக்கையும் அமையும் என்றும் கட்டுப்பாடு விதித்துள்ளது. அரசு தரமற்ற முறையில் பெறப்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்படும் வெளிநாட்டுப் பல்கலைக்கழக பட்டங்களை ஊக்குவிக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டப்படுகிற: இதுதவிர, அரச உத்தியோகத்தர்கள், மாணவர்களின் பட்டப்படிப்பினைக் கட்டுப்படுத்தும் தெரிவுப் பரீட்சை தொடர்பில் பலராலும் விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. தெரிவுப் பரீட்சையால் யாழ்ப்பாணத்தில் மட்டும் நூற்றுக் கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள தோடு நாடு முழுவதும் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
எனவே வெளிவாரிப் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு நடைமுறைப்படுத்திய தெரிவுப் பரீட்சை முறையை நீக்கவேண்டும் என்றுகோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த வாரம் இது விசாரணைக்கு வரவுள்ளது.

(4)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிர்காமேஸ்வரி சண்முகம்



தோற்றம் 26.11.1929 மறைவு 20.07.2017

ஓட்டுமடம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமேஸ்வரி சண்முகம் கடந்த (20.07.2017) வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று நாளை (24.07.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயாத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பிறேமகுமார் (சமாதான நீதிவான் - மருமகன்)
077 190 7451

### மகேந்திரன் வசந்தன்



பாண்டித்தாழ்வு வலந்தலை காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் வசந்தன் கடந்த 21.07.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் மகேந்திரன் பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் வாசுகி, நந்தகுமார், செல்லக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அரிய ரட்னம் (சிவத்திரை) மீனாட்சி தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாண்டித்தாழ்வு,
வலந்தலை, காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 827 6330

### கந்தர் வீராசாமி



தோற்றம் 07.05.1932 மறைவு 19.07.2017

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட கந்தர் வீராசாமி 19.07.2017 அன்று இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா - நாகமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், மாதினி (ஆசிரியை - கொழும்பு 7, புனித பிறிஜட் கன்னியர் மடம்), உமாகரன் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விவேகானந்தன் (பிரதம நிறைவேற்று அதிகாரி - INTER NATIONAL POLY TECHNIC), ஜெய கௌசல்யா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், யர்மிஷா, தேனிஷா (நியூசிலாந்து) ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, மனோன்மணி, சிவபாக்கியம், நாகராசா, முருகேசு மற்றும் புஸ்பம், அமராவதி, பதஞ்சலிநாதன், காலஞ்சென்ற கற்பகமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), புஸ்பராணி (நியூசிலாந்து), மங்கையற்கரசி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்
குடும்பத்தினர்.

## மரணஅறிவித்தல்கள்

மலர்வு 08 . 07 . 1922



உதிர்வு 21 . 07 . 2017

### சுப்பிரமணியம் தர்மலிங்கம்

(இளைப்பாறிய சிவில் பொலிஸ் சார்ஜன்)

யாழ்ப்பாணம், சுன்னாகம் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தர்மலிங்கம் 21.07.2017 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவானந்தகுமார் (திருகோணமலை), கோணேஸ்வரன் (பிரான்ஸ்), கதிர்காமநாதன் (தயா - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணதேவி (திருகோணமலை), குமுதா (பிரான்ஸ்), அனுசியா (சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ஜயாத்துரை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கவி, சிவானுஜன் (திருகோணமலை), நிதர்சினி, யதுசன், தாரணி (பிரான்ஸ்), கயூரதன், கஜந்தன் - கஜீதா, கிரிகரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

52/22, கந்தையாவீதி,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தயா - 077 646 8644, ஆனந்தன் - 077 900 7118,
கோணேஸ்வரன் - 0033 676 272011

### நடராஜா ராஜேந்திரம்

(மாத்தறை பிரபல வர்த்தகர் யாழ். நயினாதீவு 7 ஆம் வட்டாரம்)



யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாவும் நயினாதீவு 7 ஆம் வட்டாரம் மற்றும் கனடா றொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட மாத்தறை பிரபல வர்த்தகர் நடராஜா ராஜேந்திரம் 21.07.2017 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை செல்லமுத்து குமாரசாமி ஆகியோரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், குருபரன் (கனடா), யாழினி (கனடா) மாலினி (கனடா), பிரபாகரன் (Uk), இன்பாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவிகரன் மற்றும் செந்தில்குமரன் (கனடா), செந்தூரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீரா (கனடா), சிவரஞ்சன் (கனடா), பிரமிளா (பிரான்ஸ்), சாவித்திரி (கனடா), விதுசா (நயினாதீவு) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற ராசம்மா மற்றும் மனோன்மணி, சுப்பிரமணியம் (ஜே மணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மராணி (டென்மார்க்), சிறிஸ்கந்தராஜா (மகிலன் புத்தகசாலை யாழ். கொழும்பு), காலஞ்சென்ற விஜயகுலராஜா மற்றும் கு[illegible] தினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கரிஸ், ஆகாஸ், கீர்த்தன[illegible] கனோஜன், வர்ஷனா, சஷிகா, சர்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் புதவுடல் நேற்று (22.07.2017) சனிக்கிழமை 5 மணிமுதல் 9 ம[illegible] வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre, 8911 Woodbin[illegible] Avenue, Markham, Ontario, L3 R 5G1 இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, இன்[illegible] (23.07.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 2 மணிவரை பா[illegible] வைக்கு வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகன[illegible] செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்[illegible]வும்.

தகவல்: குடும்பத்தினர்
416 - 299 .9057 (குருபரன்)

சிறிஸ்கந்தராசா (மைத்துனர்) 077 664 9333
(மகமிலன் புத்தகசாலை - கொழும்பு)
விதுசா (நயினாதீவு) 077 510 2471



# குதிரையில் வலம்வந்து அருள்மழை பொழியும் சில்லாலை புனித யாகப்பர்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

சில்லாலை புனித யாகப்பர் ஆலய பெருவிழா நிகழ்வுகள் வருகின்ற 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளன. அது குறித்து இவ்வாக்கம் அமைந்துள்ளது.

சில்லாலை பங்குத் தந்தை ஏ. அகஸ்ரீன் அடிகளார் உதயன் நாளிதழின் ஞாயிறு சிறப்பு இணைப்பின் கிறிஸ்தவ பகுதிக்கு கருத்து தெரிவிக்கும் போது,

"சில்லாலை புனித யாகப்பர் ஆலய பெருவிழா நிகழ்வுகள் நடப்பாண்டிலும் வழமை போலவே சிறப்புற இடம்பெறவுள்ளன. வேஸ்பர் ஆராதனையை(திருநாள் திருப்பலிக்கு முன்னையநாள் வழிபாடு) யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளாரும்,மறையுரையை ஜேம்ஸ் நாதன் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர். திருநாள் திருப்பலியை யாழ். மறை மாவட்ட கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குனர் எஸ். இயூஜின் பிரான்சீஸ் அடிகளார் நிகழ்த்தவுள்ளார். சில்லையூர் மக்களையும் ஏனைய அயல் பங்கு மக்களையும் திரண்டு வந்து புனிதரின் அருள் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கிறோம்." என்றார்.

சில்லையூர் புனித யாகப்பர் ஆலய 75ஆவது ஆண்டு நிறைவு பவள விழா மலர் 2010 தொகுப்பில் உள்ளடங்கிய தகவல்களும்,சில்லாலைப் பங்குத்தந்தைகள் வழங்கிய தகவல்களும் மற்றும் ஆலயங்களில் ருந்து பெறப்பட்ட தகவல்களும் இவ்வாகத்தினை அணி செய்கின்றன.

**ஆரம்ப கால ஆலயம்**

1934ஆம் ஆண்டுகளுக்கு முன்னதாக சில்லாலைப் பங்கில் கதிரை மாதா ஆலயம் மட்டுமே இருந்தது. ஆனால் 1934ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில்லாலை தெற்கு பகுதியில் வாழ்ந்த 24 கத்தோலிக்க குடும்பங்களும்; அக்காலத்தில் வசதி படைத்த சம்மாட்டிகளான திருவாளர்கள் தொம்மைப்பிள்ளை றெமூத்துப்பிள்ளை, சங்கிடுத்தாம் சந்தியாப்பிள்ளை ஆகியோரின் தலைமையில் தமக்கெனத் தனியான ஒரு ஆலயம் தேவை என்பதை அப்போதைய பங்குத் தந்தையாக இருந்த ஜே.ருவெல்லக் அ.ம.தி அடிகளாரிடம் தெரிவித்தனர். பின்பு எல்லோருமாக இணைந்துகொண்டு ஆயர் மேதகு ஏ.ஜே. கியோமர் ஆண்டகையிடம் ஆலயம் அமைப்பதற்கான உத்தரவினையும் பெற்றுக் கொண்டனர்.

1934ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில்லாலை தெற்கு பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்க மக்கள் தமக்கெனத் தனியான ஆலயம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சி களை மேற்கொண்டமை குறித்தான ஆதாரத்தினை சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய '25 வருடங்களில் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சி' என்னும் நூலில் காணக்கூடியதாகவுள்ளது.

ஆலயம் அமைப்பதற்கான காணியைத் தேடிய போது தற்போது ஆலயம் அமைந்திருக்கும் வடக்கேயும் தெற்கேயும் ஆக இரு வீடுகளுக்கிடையில் அமைந்திருந்த சதுரக்காணியை இனம் கண்டு கெண்டனர். காணியை பகுதி பகுதியாக வேண்ட முடியாத சந்தர்ப்பத்திலே முழுக்காணி யையும் வாங்குவதில் பெரிய நிதிநெருக்கடியை எதிர்நோக்க வேண்டி இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே வசதி படைத்த சம்மாட்டிகளாகவும்,ஆலய மூப்பர்க ளாகவும், மேற்பார்வையாளர்களாகவும் இருந்த தொம்மைப்பிள்ளை, றெமூத்துப்பிள்ளை,சங்கிடுத்தாம் சந்தியாப்பிள்ளை ஆகியோரின் கூடுதல் நிதிப்பங்க ளிப்பில் காணி கொள்வனவு செய்யப்பட்டது. ஆலயத்துக்குத் தேவையான காணியை விட மிகுதியான காணி பங்கு மக்களுக்கு விற்கப்பட்டது. ஆலயம் அமைப்பதற்கு ஒவ்வொரு குடும்பமும் ஒரு பனை மரம் என்ற விதமாக பொருள் உதவி புரிந்தனர். ஆரம்பத்தில் ஓலைக் கொட்டிலாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் பிரதான பகுதிகளில் முழுப்பனையை மரமாக நிறுத்தி வைத்தனர். அன்னையர்கள் சாணியாலும்,களிமண்ணாலும் ஆலயத் தரையை மெழுக்கிட்டு அழகு செய்தனர்.

**குதிரை வீரரான புனித யாகப்பரின் எழுந்தருளல்**

குதிரை வீரரான புனித யாகப்பரை பாதுகாவலராகக் கொண்டு ஆலயம் அமைப்பது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு கிளாலியில் இருந்து மரத்தினாலான புனித யாகப்பரின் திருச்சொரூபம் வாங்கப்பட்டது. பங்குத்தந்தை ஜே.ருவெல்லக் அ.ம.தி அடிகளார் மக்களின் எண்ணத்தை நிறைவேற்றிய வராக புனித யாகப்பரை பாதுகாவலராக்கி ஒரு சிறிய கோவில் அமைத்து வழிபாடுகளை நடத்தி வந்தார்.

> வேதாகமத்தில் யாக்கோபு என்றும் மக்களால் சந்தியோ குமையோர் யாகப்பர் யக்கோ படையாளி என்றும் அழைக்கப்படும் யேசுவின் ஒன்றுவிட்ட சகோதரரான புனித பெரிய யாகப்பரே சில்லாலை பங்கின் பாதுகாவலர் ஆவார்.

1935ஆம் ஆண்டு லூயிஸ் டெய்சி அ.ம.தி அடிகளார் தனது சில்லாலை பங்குப்பணியின் முதற் சேவைக் காலத்தில் (1932-1939) தற்போது அழகுடன் காட்சி தருகின்ற சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலயத்துக்கான அடிக்கல்லை நாட்டினார்.

பெரும் பண வசதி இல்லாத போதும் பங்குமக்கள் தமது தியாகத்தையும், உழைப்பையும் அர்ப்பணித்தே ஆலயத்தை அழகு மிளரக் கட்டி முடித்தனர். ஆலயக் கட்டுமானப்பணிகளுக்கு பங்கு மக்கள் தங்களுடைய உடல் உழைப்பை முழுமையாக மனமுவந்து வழங்கியதுடன் தமது நாளாந்த உழைப்பின் வருவாயை வீட்டுக்குக் கொண்டு வருவதற்கு முன்பே அதன் ஒரு பகுதியை ஆலயத்துக்கென ஒதுக்கிச் சேமித்தும் வந்துள்ளார்கள். இவ்வாறு பங்கு மக்களின் கடின உழைப்பிலும்,விருப்பிலும் தான் ஆலயம் பகுதி பகுதியாகக் கட்டப்பட்டது. இன்று வானளாவ உயர்ந்து பவள விழாக்கண்டு கொண்டு பிரமித்து நிற்கிறது.

குடாநாட்டின் மிகச்சிறந்த கோபுர அமைப்புக்களில் ஒன்றைக் கொண்ட ஆலயங்களில் ஒன்றாக எண்ணப்படிக்கூடிய சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய கோபுரத்துக்கான மணிகளை இப்பங்கைச் சேர்ந்த இரு குடும்பத்த வர்களே வழங்கியுள்ளனர்.

**பங்குத்தந்தையர்களும் பணிகளும்**

சில்லையூர் புனித யாகப்பர் ஆலய பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்களில் முக்கியத்துவத்து டன் நோக்கப்பட வேண்டியவர் சில்லாலையில் இரண்டு தடவைகள் பணியாற்றிய லூயிஸ் டெய்சி அ.ம.தி அடிகளாரே. இவர் 1932 ஆம் ஆண்டு தொடக்கம் 1939 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். 1935 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தற்போது அழகுடன் காட்சி தரும் சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலயத்துக்கான அடிக்கல்லை நட்டனர். 'பவள விழாக்காணும் சில்லையூர் புனித யாகப்பர்' என்ற ஆக்ககத்தில் அ.ம.கொண்சன்ரைன் தெரிவிக்கும் ஒரு கருத்தை இங்கு குறித்து நோக்குதல் சிறப்பு. லூயிஸ் டெய்சி அ.ம.தி அடிகளார் ஆலயக்கட்டுமானப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்த முத்தையா என்பவரிடம் ஆலயக்கட்டுமானத்துக்கு அரிந்த சீமெந்துக் கற்களை பெரிய த்ண்ணீர் தொட்டி நீரில் ஊறவைத்து பின்னர் கோடலியால் கொத்தச் செல்லுவாராம். ஆலயத்தை பலப்பாகவும், இறுக்கமாகவும்,உறுதியாகவும் கட்ட வேண்டும் என்பதில் லூயிஸ் டெய்சி அ.ம.தி அடிகளார் எவ்வளவு தூரம் கவனமாக இருந்தார் என்பதற்கு இந்த உதாரணம் ஒன்றே போதுமானது.



**லூயிஸ் டெய்சி அ.ம.தி அடிகளாரும் பின் வந்தவர்களும்**

லூயிஸ் டெய்சி அ.ம.தி அடிகளார் 1951 ஆம் ஆண்டு தொடக்கம் 1961 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இரண்டாவது தடவையாகவும் பங்குத் தந்தையாகப் பணியாற்றியுள்ளார். அவரைத் தொடர்ந்து பி.சூசைப்பிள்ளை அடிகளார் (1961-1964),றெனாட் அடிகளார் (1964-1965),வசம்பேர்க் அ.ம.தி அடிகளார் (1965 -1968), பி.ரி.ஜேம்ஸ் அ.ம.தி அடிகளார் (1966-1967), பிலிப் பொன்னையா அடிகளார் (1967 - 1968),ஸ்பம்பத்தி அடிகளார் எஸ் .என்.ஜோசப் (1968-1969) ஆகியோர் பங்குத் தந்தையாகப் பணியாற்றியுள்ளனர்.

**இம்மனுவேல் பயஸ் அடிகளார்**

அதன் பின்பு பங்குத்தந்தையாக பணியாற்றிய இம்மனுவேல் பயஸ் அடிகளார் காலத்தில் குறிப்பாக 1969 ஆம் ஆண்டு தொடக்கம் 1973 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆலயக்கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

இவருடைய பணிக்காலத்தில் சென் ஜேம்ஸ் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் ஆசிரியராக திருமதி அல்வினஸ் மரியம்மா கடமையாற்றினார். இம்மனுவேல் பயஸ் அடிகளார் காலத்தில் மரியாயின் சேனை, புனித ஞானப்பிரகாசர் பீடப்பணி யாளர் சபை போன்ற சபைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி அடிகளார்**

பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி அடிகளார் (1973 - 1978) காலத்தில் ஆலயம் அமைப்பு வடிவம் பெற்றது. கற்களால் கட்டப்பட்டு உருவம் பெற்ற ஆலயம் நிறப் பூச்சுக்கள் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டது. ஆலய வேலைகளில் பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி அடிகளார் மக்களோடு மக்களாகச் சேர்ந்து பணி செய்தார். இவர் காலத்தில் வடக்கு மற்றும் தென் திசை மதில்கள் கட்டப்பட்டு ஆலய எல்லைகள் சீர் செய்யப்பட்டன. இந்நாள்களில் கோவில் நோவினைகள் ஆறு நாள்கள் நடைபெற்றன. நோவினை நாள்களில் மக்கள் பாரமான இரும்புக் குழாய்களில் வெடி மருந்தை அடைத்து பீரங்கி போன்று அதனை வெடிக்க வைத்து இரவும் பகலும் மகிழ்ந்தனர். அவர்கள் அவ்வாறு பயன்படுத்திய பாரமான இரும்புக் குழாய்கள் தற்போதும் அங்கிருப்பதாகக் கூறப்படுகிறது.

**1978 ஆம் ஆண்டுகளின் பின்பான பயணம்**

இதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு தொடக்கம் 1979 ஆண்டு காலப்பகுதி வரை பங்குத் தந்தையாக எவ்.ஏ. இராஜரட்ணம் ஜ.வி.டி. அடிகளார் பணியாற்றினார்.

எஸ். கில்லறி ஜெபநேசன் அடிகளாரின் பணிக்காலம் (1980-1983) பொற்காலம் என அழைக்கப்படுகிறது. இவரின் பணிக்காலத்தில் இளையோர் ஒன்றியம்,சிறுவர்களுக்கான மரிய கொறற்றி சபை ,திரு இருதய சபை போன்ற சபைகள் உருவாக்கப்பட்டதுடன் மிகச்சிறப்பாக அவை இயங்கியுள்ளன. பயஸ் இருதயதாஸ் அடிகளாரின் (1983 1987) பணிக்காலத்தில் ஆலய முகப்பின் டோம் கட்டி முடிக்கப்பட்டது. இவரின் குணமாக்கல் வழிபாடுகள் சில்லாலை பங்கிற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தன என தெரிவிக்கப்படுகிறது.

பி.எவ். பொனிபஸ் அடிகளாரின் (1987-1991) பணிக்காலத்தில் பங்கின் நிர்வாக அமைப்பு தீர்க்கமான ஒரு நிலைபெற்றது. மரபு ரீதியாக இருந்து வந்த மூப்பர் செயலர் என்ற குறுகிய நிர்வாக அமைப்பு முறையில் இருந்து பங்குத்திருச்சபை விரிவாக்கம் செய்யப்பட்டது. பங்கானது 'அ' முதல் 'ஐ' வரை என 9 வலயங்களாக பிரிக்கப்பட்டு அவ்வாலயங்களில் இருந்து 9 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆலய பங்குச்சபை புதிதாக உருவாக்கப்பட்டு யாப்பு ஒழுங்குடன் அவை ஒழங்கமைப்புச் செய்யப்பட்டன. முதற் செயலாளராக இ.பரமானந்தமும்.பொருளாளராக எஸ்.பி.,யேசுதாசனும் தெரிவு செய்யப்பட்டு பங்குத்திருச்சபையின் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

வேதாகமத்தில் யாக்கோபு என்றும் மக்களால் சந்தியோகுமையோர் யாகப்பர் யக்கோ படையாளி என்றும் அழைக்கப்படும் யேசுவின் ஒன்றுவிட்ட சகோதரரான புனித பெரிய யாகப்பரே சில்லாலை பங்கின் பாதுகாவலர் ஆவார். இவரின் பாதுகாவல் என்றும் கிடைக்க இறை வரம் வேண்டுவோம்.

## கடை வாடகைக்குண்டு

யாழ். பல்கலைக்கழக சுழலில்
பான்சி, வீடியோ, போட்டோ கொப்பி,
பார்மசிக்கேற்ற கடைகள்
வாடகைக்குண்டு.
உடன் தொடர்புகளுக்கு -
077 6597 084

## IPS

ஆடி மாதத்திற்கான இறுதிப்பிரிவு
இலவச ஆங்கில, கணினிப்பிரிவுகள்
ஆரம்பம் - 28, 29 /07/2017
சனி 10 AM *காலம் - 3 மாதங்கள்
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள்

**IPS** Thirunelvely
T.P : 076 685 2529

## வீடு வளவு விற்பனைக்குண்டு

சுதுமலை தெற்கு, மானிப்பாயில்
அமைந்துள்ள 02 பரப்புக்காணியும்,
02 அறை விறாந்தையுடன் சகல
வசதிகளும் கொண்ட புதிய வீடு வளவு
விற்பனைக்குண்டு. விலை 350000/=
தொடர்பு - 076 721 5228
பார்வையிடும் நேரம் - பி.ப. 2 மணி
தொடக்கம் 4 மணி வரை

## பெண் உதவியாளர் தேவை

இல.72, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு சனி/ஞாயிறு நாள்களிலும் வேலை செய்யக்கூடிய (வெள்ளி - விடுமுறை) பெண் உதவியாளர் ஒருவர் தேவை. இன்று மாலை 6 மணி வரை அல்லது திங்கள் (24.07.2017) மாலை 3 - 6 மணி வரை நேரில் வரவும்.

நிர்வாகி.
077 7033 729

## RENT CAR (A/C)

Airport Services, Wedding
Hire, Jaffna & Trinco Tour
Services, Local Services
Phone No. - 075 529 6064

## வேலையாள்கள் தேவை

தங்கி நின்று பூச்சாடி உற்பத்தி மற்றும்
பூந்தோட்ட வேலை செய்ய தெரிந்த
வேலையாள்கள் தேவை. (மாற்றுத்
திறனாளிகளுக்கு முன்னுரிமை)
ஆதரவு கைத்தொழில் நிலையம் - மீசாலை
தொடர்புகளுக்கு: 077 735 1148
(IN/2948)(10)


கர்த்தருக்குள் நித்திரையடைந்த அருளப்பு
அமலதாஸ் அவர்களின்

## 6 ஆவது ஆண்டு நினைவுநாள்



மண்ணில் எமக்காய் — விண்ணில் எமைப்பிரிந்து
18.02.1943 — 23.07.2011

## அருளப்பு அமலதாஸ்

ஆண்டுகள் ஆறு
ஓடிப்போயிருக்கலாம் அப்பா
உங்கள் இழப்பு இன்னும் எங்கள் மனதில்
வேதனைதான் அப்பா
எத்தனை நினைவுகள் நாம்
கடந்தாலும் அப்பா
உம்முடன் இருந்த நினைவுகள்
என்றும் அழியாது அப்பா
என்றும் உங்கள் துயரத்தில்
ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினர்.

மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்


## Great way

எமது நிறுவனத்திற்கு நிர்வாகம் சம்மந்தமான உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படுகின்றனர். O/L, A/L படித்தவர்கள் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். வயதெல்லை இல்லை, வெளி மாவட்டத்தார்க்கு தங்குமிடம் வழங்கப்படும்
தொடர்பு - 076 9393 965, 077 0064 030,
077 9856 671

## Job Vacancy



*Admin Secretory
*Educational Counselor

Send your CV to below
address on or before
29-July-2017

ICS DREAM BEYOND BOARDERS
Foreign Education Services
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
sutha@icssrilanka.com
011- 4343322 . 021 - 4926222

## STUDY IN CANADA

உங்கள் கனவுக் கல்வியினை கனடா நாட்டில் தொடர உங்கள் கனவிற்கும் தகைமைக்கும் மதிப்பளிக்கும் WINSTAR VISA CONSULTANTS ஐ நாடுங்கள்.

- 2018 Jan Intakes
- எங்குமில்லாத மிகக்குறைந்த கட்டணங்கள்
- இலவச IELTS வகுப்புக்கள்
- சிறந்த சிநேகபூர்வமாக ஆலோசனைகள்
- அடிப்படை தகைமை O/L அனைத்து பாடங்களிலும் சித்தி

4 வருடங்களாக மக்கள் மனதை வென்று
இயங்கும் ஒரு நிறுவனம்

சிறந்த ஆலோசனைகளைப் பெற நேரில் வரவும்.
(CS 5858) (14)

WINSTAR VISA CONSULTANTS
106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி.
021 300 4641
www.winstarjaffna.com

## ஆடி Mega Sale

Mangala

## மங்களா காட்சியறை

அனைத்து தளபாடங்களும் விலைகுறைப்பு

FACTORY LOT FURNITURE அனைத்தும் விற்பனை விலையில் இருந்து பாதி விலைக்கு விற்பனையாகின்றது. கையிருப்பு உள்ளவரை மட்டுமே தெரிவுக்கு முந்துங்கள். ஞாயிறு தினங்களிலும் திறக்கப்படும்.

வேலையாள்கள் தேவை

முகாமையாளர், Factory Supervisor, Spray Painter, Driver தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 346 3332, 077 728 6069

மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8367


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் பரமநாதன் இராசநாயகம்



தோற்றம் 19.06.1949 — மறைவு 18.07.2017

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பு மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பரமநாதன் இராசநாயகம் 18.07.2017 செவ்வாய்க்கிழமை மதுரை மாவட்டம் இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பரமநாதன் - முத்துப்பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவசிதம்பரப்பிள்ளை - செல்வமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவானந்த செல்வியின் அன்புக்கணவரும் பிரசாத், லேக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் இலங்கைநாதன், சண்முகநாதன் காலஞ்சென்ற மகாலக்ஷ்மி ஆகியோரின் சகோதரரும் ராசமலர், கௌரி, ஶ்ரீஜெகநாதன் காலஞ்சென்ற சிவராஜப்பிள்ளை, சிவானந்தகருணைவேல்பிள்ளை, சிவஞானப் பிள்ளை, சிவசண்முகப்பிள்ளை, ஆனந்ததேவி, இன்பவதனி, வசந்தாதேவி, காலஞ்சென்ற பத்மினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி இ. சிவானந்தசெல்வி (மனைவி - 075 954 6754)
ப, சண்முகநாதன் (சகோதரர் - 077 400 1975)
சி. சிவசண்முகப்பிள்ளை (மைத்துனர் - 075 954 6755)

## நல்லூர் பிரதேச சபை கேள்வி அறிவித்தல் திருத்தம்

2017 யூலை 21 ஆம் திகதிய 10 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிட்டவாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அட்டவணை 1 இல் 11 ஆம் 12 ஆம் வேலைகளுக்கான வேண்டப்படும் தரம் C8 என மாற்றியமைக்கப்படுகின்றது.


**மேலும் பந்தி 8 பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.**

08. அட்டவணை 1 இன் முதல் 07 வேலைகள் மற்றும் 11 ஆம், 12 ஆம் வேலைகளுக்குமான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 63 நாள்கள் ஆகும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசபை, கொக்குவில்.** 2017.07.23

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் பாலசிங்கம்




சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பாலசிங்கம் 21.07.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணாத்தை தம்பதியரின் அன்பு மகனும் முருகேசு - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பகவதியின் அன்புக் கணவரும் பகீரதன் (ஆசிரியர், வவுனியா தமிழ் ம.ம.வி.), பாமலோஜினி (முன்னாள் ஆசிரியை, உடப்பு தமிழ் ம.வி.), பிரதீபன் (ஆசிரியர், அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வதனசீலன் (கனடா), சங்கீதா (ஆசிரியை, இளவாலை கன்னியர்மடம் ம.வி.) ஆகியோரின் அன்பு மாமனும் குபேரா, ஆகிஷா, அகில் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, கதிரவேலு, பாக்கியம், நாகராசா மற்றும் அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் பூபதி, சுப்பிரமணியம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராமுப்பிள்ளை, சேதுபதி விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுவிளான், இளவாலை.** தகவல்: **குடும்பத்தினர்.**



### றிச்சட் கிறிஸ்ரி (லிற்றன்)

யுவானியார் கோயிலடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தையிட்டி, காங்கேசன்துறையை வதிவிடமாகவும் ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட றிச்சட் கிறிஸ்ரி லிற்றன் (21.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றிட்சட் - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புக் குட்டி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் விஜிதா (பிரான்ஸ்), றாஜன் (பிரான்ஸ்), ஜசோதா (இத்தாலி) காலஞ்சென்ற கஜேந்தா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறி, யோகன் ஆகியோரின் அன்பு மாம்னாரும் அருந்ததி, அஜய், கபிலன், வரதன், டிலான், பானுசா, பாலேஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் சந்திராவதி, பத்மாவதி, சிறிமாவதி, திலகேந்திரன், விமலேந்திரன், தனேந்திரன், இன்பவதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை,, மாரிமுத்து மற்றும் செல்லத்துரை, சரஸ்வதி, சிவனடியார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிவழிபாடு நாளை (24.07.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மானிப்பாய் வீதி,** — **குடும்பத்தினர்**
**ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.** — **077 188 2041**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாதேவி அம்மா (கிளி) பூதன்



காங்கேசன்துறை 2 ஆம் குறுக்கு வீதியை பிறப்பிடமாகவும் ஐயனார் வீதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி அம்மா(கிளி) பூதன் நேற்று (22.07.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணமலை முத்தம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பூதனின் பாசமிகு மனைவியும் கனகம்மா, துரைராசா, செல்லத்துரை, குணரத்தினம், சறோயினிதேவி, வசந்தாதேவி, மஞ்சுளாதேவி ஆகியோரின் சகோதரியும் சுதாகர், பிறேமலதா, பிரபு, தீபன் ஆகியோரின் அன்பு தாயாரும் நிர்மலா, பாஸ்கரன், சோபியா, இந்துமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓடக்கரை கரைச்சி இந்து மயானத்திற்கு (சங்காணை) எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் வீதி,**
**சண்டிலிப்பாய்.**

தகவல்:

| | |
|---|---|
| சுதாகர் | 077 606 8317 |
| பிரபு | 077 629 9241 |
| தீபன் | 077 565 3294 |
| வேபி (தம்பி) | 077 440 9601 |

### சங்கரப்பிள்ளை பரமேஸ்வரன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மூத்தான்கலட்டி, மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பரமேஸ்வரன் (17.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பொன்னம்பலம் - நல்லம்மா தம்பதியரின் அன்புமருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் ரமணகுமார் (கொமர்ஷல்வங்கி), கிரிக்குமார், தயாபரி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுமணா (மக்கள் வங்கி), விஜிதரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் வினோஜன், வபீசன், பிரித்விக், விகாஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், மகேஸ்வரி, கனகலிங்கம், இராமலிங்கம், கனகம்மா, தம்பு, தங்கம்மா ஆகியோரின் சகோதரரும் கனகநாயகம் (கனடா), தனலட்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 900 7805, 021 224 3362

### சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் இ.போ.ச சாரதி)



யாழ். மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு சிலாவத்தை, யாழ். ஈச்சமோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும், தற்போது 37/3, இரண்டாவது விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பா ணத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை (ஞானமுத்து) அந்தோனிப்பிள்ளை கடந்த (21.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை (ஞானமுத்து) - ஆனாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - அக்கினேஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும் பொலின் வயலெற் (பவுலின்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மரியநாயகம் (குணரட்ணம்) மற்றும் மேரி (இராசாத்தி, லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மேரி ஜசிந்தா, N.யோசப் (முன்னாள் இ.போ.ச. சாரதி), அவர்களின் மைத்துனரும் யூடி அனோமா விஜிதா (ஆசிரியை, யா/சென் மேரிஸ் வித்தியாலயம்), ஜரிஸ் சேவியர் ஞானேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் செல்வநாயகம் (அதிபர், நாவாந்துறை றோ. க. வித்தி.), பிரதீபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஷ்லின், ஏஞ்ஜெலின், பூர்விதா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
0033651689682 -மகன் -பிரான்ஸ்
0777989200 -மருமகன்

## காணி விற்பனைக்கு

வேலணை கிழக்கில் (பிரதேசசெயலகத்திற்கு அருகில்) அமைந்துள்ள குழந்தை சீமா எனும் பெயருடைய நெற்பரப்பு 5 1/4 விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-077 465 9570

## தேவை

றொட்டிவேலை, சமையல்வேலைகளுக்கு ஆள் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். தொடர்பு-077 854 5173

## விற்பனை

சோளம் பொரி மோட்டர், டிபிறிச் என்பன நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு-077 454 3815

## விற்பனைக்கு

ஒரு நாள் தனிச்சேவல், ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0766 300 799

## விற்பனைக்கு

U.K.இல் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய மற்றும் பழைய நிலையிலுள்ள drillers Sanders இறைச்சி அரைக்கும் இயந்திரம் Handy Cam Camera, Recorder என்பன விற்பனைக்குண்டு.

076 615 1837

## விற்பனைக்கு

கிரைன்டிங் மில் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. நடத்த விரும்புவோருக்கு வாடகைக்கு கடையுடன் கைமாற்றி கொடுக்கப்படும்.

தொடர்பு-076 374 1542

## காணி விற்பனைக்கு

மணக்கும்பான் வெள்ளைக் கடற்கரையில் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 910 7242

(IN/2949)(10)

## மலிவு விற்பனை

எம்மிடம் கோதுமை தவிடு விற்பனைக்குண்டு.
40kg - 1360/=

தொடர்புகளுக்கு: 076 430 8095

(CS/6111)(10)

## வேலையாள்கள் தேவை

யாழிலும் கொழும்பிலும் இயங்கும் பிரபல வணிக நிறுவனத்திற்கு ஆண்கள் தேவை. (சிட்டை எழுதுநர் மற்றும் உதவியாளர்கள்) தங்குமிட வசதி, உணவு இலவசம்.

077 386 6250/071 766 7715

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ் வரும் வேலையாள்கள் தேவை. மூன்று நேர உணவு தங்குமிட வசதி மாதாந்த சம்பளம் இவை அனைத்துடனும் உங்கள் வசதிக்கேற்ப

1) உணவு.பரிமாறுபவர்கள் (சம்பிளையர்)
2) காசாளர் (ஆண்)
3) சுத்திகரிப்பாளர்
4) பிரதான சமையலாளர்
5) ஏனைய குசினி வேலையாள்கள்

(ஆண்/பெண் இருபாலாரும்)

36, 38 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 076 732 2886

## வாடகைக்கு
(நல்லூர் உற்சவ காலத்துக்கு)

நல்லூர் ஆலய வளாகப்பகுதியில் மேல் மாடியில் களஞ்சிய வசதி, ஐஸ்கிறீம் விற்பனைக்கும் மற்றும் ஏனைய தேவைகளுக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
077 233 5103 / 075 046 8606

(IN/2952)(10)

## சாரதி தேவை

யாழ்நகரில் இயங்கும் மொத்த வியாபார நிறுவனம் ஒன்றுக்கு அனுபவமுள்ள சாரதி ஒருவர் தேவை.

யாழ் நகரை அண்மித்து வசிப்பவர் விரும்பத்தக்கது.

071 098 4996

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

- கருப்பு நிறம், கருந்திட்டு, கரும்புள்ளியா?
- பருக்கள், பருவந்த அடையாளமா? உதட்டுக் கறுப்பா?
- கை, கால், முதுகு கறுப்பு நிறம் நீங்க வேண்டுமா?

அனைத்துக்குமான மிக அற்புதமான கேர்வல் கிறீம் 2 வாரங்களில் மிக அழகிய தோற்றத்தைப் பெற, மேலும் இயற்கை மூலப் பொருள்களைப் பயன்படுத்தி இங்கு பேசியல் செய்யப்படும்.

ஒரே தடவையில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

பக்கவிளைவற்றது.

பதிவு இல:- 16168
077 210 6155

விலை 3500
5500

221, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

விலை 3500
5500, 9000

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

பதிவு இல : 16168
077 2106 155

221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## Study in Australia

WESTERN SYDNEY UNIVERSITY · Charles Sturt University · MACQUARIE UNIVERSITY · EDITH COWAN · ECU · JAMES COOK UNIVERSITY AUSTRALIA · DEAKIN COLLEGE · DEAKIN UNIVERSITY · UNIVERSITY OF CANBERRA · LA TROBE UNIVERSITY AUSTRALIA · Griffith UNIVERSITY Queensland, Australia · THE UNIVERSITY OF NEWCASTLE AUSTRALIA · Curtin University Sydney

### Why Study in Australia?

- After G.C.E. O/L or G.C.E A/L or Degree
- Foundation / Diploma / Bachelors / Masters
  படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
- Scholarships Available
- குறைந்த பாடநெறிக் கட்டணங்கள
- இலகு Visa நடைமுறைகள்
- பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20Hours per week)

Admission open for 2017 /2018 Intakes

iCS DREAM BEYOND BOARDERS
Foreign Education Services

Appointments : 077 3013060
107, B 1/1 Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்

## பதவி வெற்றிடம்

### தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)

**தகைமை:** N.C.T (CIVIL) அல்லது அதற்கு சமமான அரசாங்க நிர்மாணத்துறை திணைக்களங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
**Visvakarma (Pvt) LTD**
No.28 மாரியம்மன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Telephone : 021 222 6781 / 021 492 7338
Fax : 021 221 9976
e-mail : msivam25@yahoo.com

(CS/6107)(10)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கோபாலகிருஸ்ணன்

(வரன் ஆட்ஸ்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பண்டாரிக்குளம் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கோபாலகிருஸ்ணன் கடந்த (21.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் றெங்கேஸ்வரன் (பாப்பா கனடா) இன் சகோதரனும் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் சந்திரபிரபா, கலாவதி, மாலதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 9.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18/8, கொண்டலடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: உற்றார், உறவினர்
077 352 9901, 077 706 2349

## மேல் நீதிமன்ற...

நல்லூர் ஆலயத் தெற்கு வீதியில், கோயில் வீதியும் பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் இடத்தில் இடம்பெற்றது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் நிலவியது. நீதிபதியின் மெய்க்காவலர் வைத்திருந்த துப்பாக்கியைப் (9 எம்.எம். பிஸ்டலை) பிடுங்கி எடுத்தே தாக்குதலாளி சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். துப்பாக்கியைப் பறிகொடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் சூடு பட்டு வீதியில் சரிந்தார். நீதிபதியின் மற்றைய மெய்க்காவலர் காரிலிருந்து இறங்கிச் சூடு நடத்தியபோதும் தாக்குதலாளி தப்பிச் சென்றான் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நீதிமன்றிலிருந்து நேற்று மாலை 5 மணியளவில் நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்குக் காரில் திரும்பினார்.

நல்லூர் கோயில் வீதியால் பயணித்த நீதிபதியின் காருக்குப் பாதுகாப்புக்காக அவரது மெய்க்காவலர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். அவர் கோயில் வீதியும் பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் சந்தியில் நின்று நீதிபதியின் காருக்கு வழிவிடும் வகையில் வீதிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினார்.

இந்த வேளையில் திடீரெனப் புகுந்த இனந்தெரியாத நபர் மோட்டார் சைக்கிளில் வீதி ஒழுங்கைக் கண்காணித்த மெய்ப்பாதுகாவலரைக் கட்டியணைத்து அவரது இடுப்புப்பட்டியுடன் இணைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியைப் பிடுங்கி எடுத்துள்ளார். அதனைக் காருக்குள்ளிலிருந்த நீதிபதி அவதானித்துள்ளார்.

காரை நிறுத்துமாறு சாரதியிடம் கூறிய நீதிபதி உடனடியாக அதிலிருந்து இறங்கியுள்ளார். அவருடன் காரில் பயணித்த மெய்க்காவலரும் இறங்கி வருவதற்குள் தாக்குதலாளி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நீதிபதியின் மெய்க்காவலர் குண்டுபட்டு வீதியில் சரிந்துள்ளார்.

நீதிபதியை அவரது சாரதி பாதுகாப்பாகக் காருக்குள் இழுத்துச் சென்று விட்டுள்ளார். அதற்கிடையே நீதிபதியின் மற்றைய மெய்ப்பாதுகாவலரும் தாக்குதலாளியும் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் மற்றைய மெய்ப்பாதுகாவலரும் கையில் படுகாயமடைந்துள்ளார். துப்பாக்கி ரவைகள் இருவரிடம் நிறைவடைந்த நிலையில் தாக்குதலாளி பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிச் சாதாரணமாக நடந்து சென்றுள்ளான்.

வீதியில் சரிந்து கிடந்த மெய்ப்பாதுகாவலரைக் காரில் தூக்கி ஏற்றிய நீதிபதி, அவரைத் தனது மடியில் வைத்து உடனடியாகவே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்த்துள்ளார். அங்கு அவருக்கு உடனடியாகவே அறுவைச் சிகிச்சை இடம்பெற்றது.

நீதிபதி மீது துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற செய்தி ஊடகங்களில் தீயாகப் பரவியதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அரசியல் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், நீதிமன்ற அலுவலர்கள், பொலிஸார் எனப் பலர் குவிந்தனர்.

இதேவேளை, மேல்நீதிமன்ற நீதிபதியின் வழமையான சாரதி, அவரது வாகனத்தை நேற்றுச் செலுத்தவில்லை. நீதிமன்றின் மற்றொரு சாரதி அவரது வாகனத்தைச் செலுத்தி வந்துள்ளார். சாரதியின் மோட்டார் சைக்கிளையே, நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் முன்னால் செலுத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5-26-37-101-106)

## மஞ்சள்...

ஆசிரியையும் பாதிக்கப்பட்டனர். இதற்கான காரணத்தைக் கண்டறிந்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின் சுற்றுச்சூழல் பிரிவினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் பாடசாலை அதிபர் திருமதி வி.சண்முகரட்ணம்.

நேற்று முன் தினம் பாடசாலையின் காலைக் கூட்டநேரத்தில் 7.25 மணி தொடக்கம் 7.50 மணி வரையான நேரத்தில் மழைத் தூறல் விழுவதைப்போன்று துளிகளாக மஞ்சள் நிறத் திரவம் மாணவிகள் மற்றும் ஆசிரியைகள் மேல் விழுந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அசாதாரண நிலை கடந்த புதன்கிழமையும் இடம்பெற்றுள்ளது. இந்தத் திரவம்பட்ட மாணவிகள், ஆசிரியை ஆகியோருக்கு ஒருவிதமான எரிவுத்தன்மை, தோல்களில் கறுப்பு நிறப்புள்ளிகள், காயம், வீக்கம் , வாந்தி , தலைச் சுற்று போன்றவை ஏற்பட்டன. எனவே இதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின் சுற்றுச்சூழல் பிரிவின் பொறுப்பதிகாரிக்குப் பாடசாலை அதிபர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-21.8)

## ஆரியக் கூத்தாடி...

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் வித்தக விழா மற்றும் நீதி முரசு இதழ் வெளியீடு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கு வந்திருக்கும் மூன்று அரச தலைவர் சட்டத்தரணிகளையும் அவர்கள் மாணவர்களாக இருந்த காலத்திலேயே எனக்குத் தெரியும். நிசாம் காரியப்பரின் தந்தையார் என் நண்பர். அப்பொழுது இருந்தே நிஸாம் காரியப்பரை அறிந்திருந்தேன்.

**வசீகரக் குரலுக்குச் சொந்தகாரர் சுமந்திரன்**

எம்.ஏ.சுமந்திரன் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு சட்டத்துக்கு வந்தவர். அவரின் பல்ஞான அறிவு அவருக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளது. கொழும்பு மாவட்ட நீதிபதியாக நான் இருந்தபோது ஓரிரு வருடங்களுக்குச் சட்டக் கல்லூரியில் விரிவுரைகள் ஆற்ற அனுமதி பெற்றிருந்தேன். பின்னர் நீதிபதிகள் விரிவுரைகள் ஆற்றப்படாது என்று தீர்மானித்துவிட்டார்கள். அந்தக் காலகட்டத்தில் என்னிடம் பயின்ற மாணவர்களில் ஒருவர் சுமந்திரன். அவருடைய குரலை ஒரு நாள் என் வகுப்பில் கேட்டுவிட்டு வசீகரிக்கும் உங்கள் குரல் சட்டத்துறைக்குப் பொருத்தமாக அமையும் என்றேன். அவரின் குரலும் அவரின் அறிவும் சேர்ந்தே மிகக் குறுகிய காலத்தில் எமது தலைசிறந்த தமிழ்ச் சட்டத்தரணிகளுள் ஒருவராக அவரை ஆக்கியுள்ளது. அரசியலில் நாம் இருவரும் இன்று எதிரும் புதிருமாக இருந்தாலும் என்னை வெறுத்துப் பல கூற்றுக்களைக் கூறுபவராக அவர் இருந்தாலும் அவரின் நலனில் நாட்டமுள்ள ஒருவராகவே இன்றும் நான் இருந்து வருகின்றேன். அவருக்கு அரச தலைவர் சட்டத்தரணி பதவி கிடைத்தமை அவரின் ஒரு கால ஆசிரியர் என்ற முறையில் எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. ஒரு ஆசிரியருக்குத் தமது மாணவ மாணவியர் நல்ல நிலைமையை அடையவேண்டும் என்பதே மிகப் பெரிய எதிர்பார்ப்பு. தாயின் மார்பில் குழந்தைகள் எட்டி உதைத்தாலும் தாயின் அன்பு என்றென்றும் மாறாது.

**கண்டபடி விமர்சிக்கிறார் சுமந்திரன்**

புவிதரனை அவரின் சிறு வயதில் இருந்தே எனக்குத் தெரியும். எனது நண்பரின் மகன். அவரும் என் மாணவரே என்று கூறுவதில் பெருமை அடைகின்றேன். அரசியலில் நான் நுழைந்தபோது என்னைக் காரசாரமாக விமர்சித்தவர் அவர். எவ்வாறு சுமந்திரன் இன்று என்னைக் கண்டபடி விமர்சிக்கின்றாரோ அதே வேகத்தில் அன்று என்னை விமர்சித்தவர்தான் புவிதரன். இன்று நாம் இருவரும் தமிழ் மக்கள் பேரவையில் ஒன்றாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். அவருக்கு அரச தலைவர் சட்டத்தரணி பதவி கிடைத்தபோது என் சொந்த மகனுக்கு அப்பெருமை கிடைத்தது போல் மகிழ்ச்சி அடைந்தேன்.

இன்று வந்திருக்கும் மூன்று அரச தலைவர் சட்டத்தரணிகளும் என் மனம் கவர்ந்த மூவர் என்று கூறுவதில் நான் பெருமையும் பெருமகிழ்வும் அடைகின்றேன். அவர்கள் மூவருள்ளும் என் சார்பான ஒரு ஒற்றுமையுண்டு. என்னை மூவருமே காரசாரமாக விமர்சித்த துண்டு.

என் மூத்த மகனிடம் இருந்து முடிவற்ற விமர்சனங்களைக் கேட்டுப் பழகிப் போன எனக்கு இந்த மூன்று மகன்மார்களதும் விமர்சனங்கள் வெகுவாக என்னைப் பாதிக்கவில்லை என்பதே உண்மை. இன்றைய பத்திரிகைகள், குறிப்பாக யாழ் மண்ணில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள் இரண்டு, சுமந்திரனை மட்டும் குறிப்பிட்டு அவரை என் மகன் என்று நான் அழைத்ததாகத் தமது பத்திரிகையில் கூறுவார்கள். எனது அரசியல் அபிலாசையை இக்கணமே கூறிவிடுவது உசிதம் என்று நம்புகின்றேன். ஆரியக் கூத்தாடினாலும் நாங்கள் காரியத்தில் கண்ணாய் இருக்கவேண்டும்.

**அடிப்படையை விட்டுக் கொடுக்க முடியாது**

வடக்கு - கிழக்கு இணைப்பும், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் கூட்டாட்சி அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்க முடியாத தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளாவன.

புதிய அரசமைப்பு ஊடாகத் ஒரு அரைகுறைத் தீர்வைத் திணித்துவிட்டு தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டதாகப் பன்னாட்டுச் சமூகத்திற்குக் காட்டுவதற்கு இந்த அரசு முனைந்து வருகின்றது. அதற்கு நாம் ஒருபோதும் துணை போகக்கூடாது. எங்கள் கொள்கைகளில் நாம் உறுதியாக நிற்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகின்றேன். கொள்கைகளில் உறுதியாக இருந்து கொண்டு எவருடனும் அன்புடனும் மனிதாபிமானத்துடனும் உறவு கொண்டாட முடியும் என்ற கோட்பாட்டைத் தழுவி நடப்பவன் நான் என்றார். (த-5)

## அனலை தீவை...

ஸார் தெரிவித்தனர்.

கோப்பாயில் 2011ஆம் ஆண்டு வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரே, நீதிபதி மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலும் தொடர்புபட்டிருக்கின்றார் என்று பொலிஸாரின் முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து அனலைதீவில் சிறப்புப் பொலிஸ் பிரிவு களமிறக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சாட்சியம்

இதேவேளை சம்பவத்தை நேரில் கண்டதாகத் தெரிவித்து ஒருவர் பொலிஸாருக்குச் சாட்சியமளித்துள்ளார். அந்தச் சாட்சியத்தில், துப்பாக்கிதாரியின் இலக்கு பொலிஸாரோ, நீதிபதியோ இல்லை என்றும் வேறு ஒரு நபரே இலக்கு என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்த இலக்கு வைக்கப்பட்ட மற்றைய நபர் யார் என்று தெரியாது எனவும், அவர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் கூறியுள்ளார். (த-5-37-106-101)

## நடந்தது...

அவர் கூறியதாவது:

மாலை 5.10 மணியளவில் நல்லூர் பின் வீதியில் எனது வாகனம் சென்று கொண்டிருந்தது. வாகனத்தின் முன்னால் மோட்டார் சைக்கிளில் எனது மெய்ப்பாதுகாவலரான சார்ஜன்ட் சென்றுகொண்டிருந்தார். நல்லூர் கோயில் பின் வீதி, நாற்சந்தியில் வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி எனது வாகனத்தை முன்னகர்த்த முற்பட்டபோது, சார்ஜன்டின் இடுப்பில் இருந்த பிஸ்டலைச் சிவிலியன் ஒருவர் பிடுங்குவதை அவதானித்தேன். 'பிஸ்டலை விடடா' என்று கத்திக் கொண்டு நான் செல்ல முற்பட்டேன். எனது மெய்ப்பாதுகாவலரான சார்ஜன்ட் பிஸ்டலை மீட்பதில் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தார். சுமார் 2 அல்லது 3 நிமிடங்கள் இந்த இழுபறி தொடர்ந்தது. பிஸ்டலைப் பிடுங்கிய சிவிலியன் அதனை நன்கு பயன்படுத்திய அனுபவம் கொண்டவர். அவர் அதனை 'லோட்' செய்து சுட்டார். அவரது துப்பாக்கி என்னை நோக்கித் திரும்பிச் சுடத் தொடங்கியதும், வாகனத்தில் இருந்த மற்ற மெய்ப்பாதுகாவலர் பாய்ந்து வந்து, என்னைக் காரினுள்ளே தள்ளிவிட்டு, சிவிலியனை நோக்கிச் சுடத் தொடங்கினார். இதன்போது நல்லூர் கோயில் பின் வீதியில் இருந்த தகரங்களிலும் துப்பாக்கிச் சூடு பட்டது. இந்தப் பரஸ்பர துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் சுமார் 5 நிமிடங்கள் வரையில் நடைபெற்றிருக்கும். பின்னர், பிஸ்டலை பிடுங்கிய சிவிலியன் அதனைப் போட்டுவிட்டு நொண்டி நொண்டி தப்பிச் சென்றார்.

எனது மெய்பாதுகாவலர்கள் துப்பாக்கிச் சூடு பட்டதால் குழறிக் கொண்டிருந்தனர். அவர்களை உடனடியாக மீட்டு எனது வாகனத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தேன். வாகனத்தில் வரும்போதே பொலிஸாருக்கு அறிவித்தேன். அந்தப் பகுதியில் உள்ள சிசிரிவி காணொலிகளை ஆய்வு செய்யுமாறும் அறிவுறுத்தினேன்.

நான் வழமையாக நல்லூர் கோயில் வீதியால்தான் எனது வீட்டுக்குச் செல்வேன். அதனை அவதானித்து, என்னை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதா என்ற சந்தேகம் எனக்கு எழுந்துள்ளது. கடந்த 8 மாதங்களுக்குள் நான் மிகவும் ஆபத்தான, உயிர் அச்சுறுத்தலான வழக்குகளை கையாண்டிருக்கின்றேன். தற்போதும் மிகவும் ஆபத்தான வழக்கைக் கையாண்டு வருகின்றேன். இவ்வாறான பாரதூரமான வழக்குகளைக் கையாளும் ஒருவராக நான் இருப்பதினால், இந்தத் துப்பாக்கிச் சூடு என்னை இலக்கு வைத்து நடந்ததாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. ஏனெனில் எனது பொலிஸ் பாதுகாவலர்களை யாருக்கும் தெரியாது என்றார்.

(த-5-37)

## சூத்திரதாரிகளை...

கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன்கொண்டு வரவேண்டும். இதற்குப் பின்னணியில் இருக்கக் கூடிய சதித்திட்டங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபரை நாம் கேட்டுக் கொள்கிறோம்.

நீதி நிர்வாகத்தில் ஈடுபட்டிருப்போர் மீது இவ்வாறான வன்முறை பிரயோகிக்கப்படுவதை நாம் கடுமையாகக் கண்டிக்கும் அதே வேளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் இப்போது இன்னுமொரு படிநிலையை அடைந்துள்ளமையானது எமது ஆழ்ந்த கவனத்தை ஈர்க்கின்றது.

சட்டம் ஒழுங்கு சீர்குலைவதில் பயன் காணக்கூடியவர்கள் இப்படியான செயல்களின் பின் மறைந்திருக்கிறார்களா என்ற சந்தேகம் வலுவாக எழுகின்றது.

இந்த நிலமை உடனடியாகச் சீர்செய்யப்பட வேண்டும் என்றும் இதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அத்தியாவசியமானது என்பதனையும் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்றுள்ளது. (த-5)

## கறுப்பு...

ப்பட்ட, எரியூட்டப்பட்ட, கொடூரமிக்க நாள்கள் இவை.

அந்தச் சில நாள்களில் 3 ஆயிரம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். 25 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அங்கவீனமானார்கள். ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நிர்க்கதியாக வீதிக்கு வந்தார்கள்.

இந்தக் கொடூரம் அரங்கேறி கொடுந்துயர் நிகழ்ந்து 34 ஆண்டுகள் கடந்து விட்டாலும், அன்று இழைக்கப்பட்ட அநீதிக்கு இன்று வரை நீதிக் கோரிக் கொண்டிருக்கின்றது தமிழினம். கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று, தாயகத்திலும் தமிழர் வதியும் புலம்பெயர் தேசங்களிலும் நடைபெறவுள்ளது. (த-5)

## மோட்டார்...

துச் சூடு நடத்திய நபர், தப்பி ஓடும்போது பருத்தித்துறை வீதியில் வந்த வங்கியாளர் ஒருவரது மோட்டார் சைக்கிளைப் பிஸ்டலைக் காண்பித்துப் பறித்துள்ளார். மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்லும்போது அங்கிருந்த மதில் சுவருடன் மோதுண்டுள்ளார். இதன்போது, மெய்ப்பாதுகாவலரிடம் இருந்து பறித்த பிஸ்டல் கீழே விழுந்துள்ளது. அதனை அப்படியே விட்டு மோட்டார் சைக்கிளில் ஓடித் தப்பியுள்ளார்.

மெய்ப்பாதுகாவலர் கொண்டு வந்த பிஸ்டல் 9 மில்லி மீற்றர் ரகத்தைச் சேர்ந்தது. 13 துப்பாக்கிச் சன்னங்களையும் சம்பவ இடத்தில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர். பிஸ்டலின் மகசின் வெள்ளவாய்க்காலிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது. (த-5)

## நீதிபதிக்கு...

மா.இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை தொடர்ந்து, அவருக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பொலிஸ் பாதுகாப்பு, பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைவாக அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். நீதிபதியின் வீட்டுக்கும் பாதுகாப்பு அதிகரித்து வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (த-5-26)

## படுகாயமுற்ற...

காயமடைந்த அவரது மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன்ட் ஹேமச்சந்திர (வயது51) நள்ளிரவு உயிரிழந்தார்.

இவரது பிஸ்டலைப் பறித்தே சிவிலியன் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தார். வலது வயிற்றுப் பகுதியால் உட்புகுந்த துப்பாக்கிச் சன்னம் இடது வயிற்றுப் பக்கத்தால் வெளியேறியுள்ளது. இதனால் நுரையீரலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குருதிக் கசிவு ஏற்பட்டுள்ளது. அவருக்கு உடனடியாகவே நேற்று மாலை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பின்னர் அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிறப்பு மருத்துவர்கள் குழாமின் கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் அதிக குருதிப் போக்குக் காரணமாக நள்ளிரவு 12.20 மணியளவில் ஹேமச்சந்திர உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

பொலிஸ் சார்ஜன்ட் ஹேமசந்திர, நீதிபதி இளஞ்செழியனுக்கு 17 வருடங்களாக மெய்ப்பாதுகாவலராகப் பணியாற்றியுள்ளார்.

மற்றைய மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் கான்ஸ்டபிள் விமலச்சந்திர தோள்பட்டையில் காயமடைந்துள்ளார்.

(த-5)



யங்ஹென்றிஸ் அணி

# யங்ஹென்றிஸ் - ஐயனார் இறுதியில் இன்று மோதல்



நவரட்ணராசா

யாழ்ப்பாணம், ஜூலை 23

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 'உதயன் செய்தியாளர்' நா.நவரட்ணராசா ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வேலணை துறையூர் ஐயனார் அணி என்பன இறுதியாட்டத்தில் இன்று மோதவுள்ளன. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இந்த இறுதியாட்டம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் ஊரெழு றோயல் அணிக்கான முதலாவது கோல் பிரசன்னாவால் பதிவானது. ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கான முதலாவது கோல் ஞானறூபனாலும், இரண்டாவது கோல் 45ஆவது நிமிடத்தில தனேசினாலும் பதிவாக முதுல் பாதியின் முடிவில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியில் ஊரெழு றோயல் அணிக்கான இரண்டாவது கோல் சயந்தனால் பதிவு செய்யப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



ஐயனார் அணி

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

**வடமாகாண கரப்பந்தாட்டம்**

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு வடக்குமாகாண ரீதியாக நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**நண்பர்களின் கால்பந்தாட்டம்**

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டிநவஜீவன்ஸ்அணியை எதிர்த்து கம்பர்மலை யங் கம்பன்ஸ் அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. (ம-23)





கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி பிரிமியர் லீக் கால்பந்தாடத் தொடரின் தகுதி காண் சுற்று இன்று மாலை 4.30 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் வடஸ்ரகர் அணியை எதிர்த்து பேர்ள்ஸ் போய்ஸ் அணி மோதவுள்ளது. (ம-422)

## நாவற்குழி சரஸ்வதி கைதடி சரஸ்வதி அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 23

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவற்குழி சரஸ்வதி, கைதடி சரஸ்வதி அணிகள் வெற்றிபெற்றன.

குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதியது. நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 8:2 என்ற புள்ளிகளின் அடிப்ப டையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. 5:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைதடி சரஸ்வதி அணி வெற்றிபெற்றது. (ம-23)



பெண்கள் உலகக்கிண்ணம்;

# இந்தியா இங்கிலாந்து இறுதியில் இன்று மோதல்

பெண்கள் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் வைத்து எதிர்கொள்கிறது இந்திய அணி.

11ஆவது பெண்கள் உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. மொத்தம் 8 அணிகள் இந்தத் தொடரில் பங்குபற்றியிருந்தன. லீக் சுற்றின் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும். கடந்த 15ஆம் திகதியுடன் லீக் ஆட்டங்கள் முடிந்தன. இதன் முடிவில் இங்கிலாந்து, நடப்பு சம்பியன் ஆஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதியில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்து இங்கிலாந்தும், இரண்டாவது அரையிறுதியில் ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்து இந்தியாவும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன. இறுதியாட்டம் கிரிக்கெட்டின் தாயகமான லோட்ஸில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

மிதாலி ராஜ் தலைமையிலான இந்திய அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என மூன்று துறைகளிலும் சம பலத்துடன் திகழ்கிறது. லீக் ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி உள்ளதால் இந்தியா மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறது. இங்கிலாந்தும் சம பலத்தைக் கொண்டுள்ள ஓர் அணிதான். அதுவும் சொந்த மண்ணில் விளையாடுவது அந்த அணிக்குக் கூடுதல் பலம். (ம)



# இங்கிலாந்துக்கு எதுவும் இலகுவாக இருக்காது

*மிதாலி ராஜ் எச்சரிக்கை*



இன்று நடைபெறவுள்ள பெண்கள் உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணிக்கு எதுவுமே சுலபமாக இருக்கப் போவதில்லை என்று இந்திய அணியின் தலைவர் மிதாலி ராஜ் எச்சரித்தார்.

இறுதியாட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து இந்தக் கருத்துக்களை அவர் பதிவுசெய்தார்.

“இறுதியாட்டத்தில் நுழைந்தது ஒரு அணியாக எங்கள் அனைவருக்குமே மகிழ்ச்சியளிக்கிறது. இந்தத் தொடர் எளிதாக இருக்காது என்பதை நாங்கள் அறிந்தேயிருந்தோம். ஆனால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் வீராங்கனைகள் திரண்டெழுந்து வெற்றியைச் சாதித்ததே முக்கியம். இங்கிலாந்துக்கு கண்டிப்பாக ஒன்றும் எளிதாக இருக்காது. ஆனாலும் அன்றைய தினத்தில் எப்படி ஆடுகிறோம் என்பதில்தான் இருக்கிறது. முதல் ஆட்டத்தில் எங்களிடம் தோற்ற பிறகே இங்கிலாந்து சிறப்பாக விளையாடி வருகிறது. எனவே சரியான திட்டமிடல் தேவை. மேலும் அவர்கள் சொந்த மண்ணில் இறுதியில் வைத்து அவர்களை எதிர்கொள்வது எப்போதும் சவாலானதே.

ஆனால் இந்திய அணி எதற்கும் தயாராகவே உள்ளது. ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றமையை சிறந்த அடைவாகவே கருதுகிறோம். ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒரு வீராங்கனை எழுந்து நிற்கிறார் இறுதியாட்டத்திலும் இந்த நிலை வேண்டும்” என மிதாலி மேலும் தெரிவித்தார். (ம)



# சமநிலை

இந்திய அணிக்கும், இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் அணிக்கும் இடையிலான இரண்டு நாள்களைக் கொண்ட பயிற்சி டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான பயிற்சி ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் அணி 187 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர் குணதிலக 74 ஓட்டங்க்ளையும், அணித் தலைவர் திரிமன்ன 59 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் குல்தீப் யாதவ் நான்கு இலக்குகளையும், ஜடேஜா 3 இலக்குகளையும், மொகமது சமி 2 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லோகேஸ் ராகுல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அபினவ் முகுந்த், புஜாரா இருவரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். லோகேஷ் ராகுல் 54 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் இந்தியா 3 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்தியா 9 இலக்குகள் இழப்புக்கு 312 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இரு அணியின் தலைவர்களும் சம்மதித்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம)

# யாழ்ப்பாணம் மத்தி. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்திய 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 26.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக விஜயன் 28 ஓட்டங்களையும், கனிஸ்ரன் 22 ஓட்டங்களையும், தாசன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பில் மதுசன் 6 இலக்குகளையும், திவாகரன் 3 இலக்குகளையும், இயலரசன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 13 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஜெயதர்சன் 38 ஓட்டங்களைப் பெற்றார். (ம-422)

## இந்திய வீராங்கனைகளுக்கு தலா 50 லட்சம் ரூபா பரிசு

பெண்கள் உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற இந்திய அணியின் வீராங்கனைகளுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலா 50 லட்சம் ரூபாவை (இந்திய மதிப்பில்) பரிசாக அறிவித்துள்ளது.

இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்திய அணி கிண்ணம் வென்றாலும் தோற்றாலும் இந்தப் பரிசுத் தொகை அவர்களுக்கு கொடுக்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மேலும் குறிப்பிட்டது.

இந்திய வீரர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் இந்திய வீராங்கனைகளுக்கு வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வேலையாள்கள் தேவை

பேக்கரியில் வேலை செய்வதற்கு பாஸ், வாகன சாரதிகள், பாண் விற்பனையாளர்கள் தேவை.

**புதிய துர்க்கா பேக்கறி**
கலைவாணி வீதி, பொற்பதி றோட்,
கொக்குவில் யாழ்ப்பாணம்.

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Suzuki Celerio VXI 2015 (22000 KM) வெள்ளை நிறக்கார் (Auto matic) விற்பனைக்குண்டு.

**077 450 5587**

## ஐரோப்பாவில் கல்வி

(லட்வியா மற்றும் லுத்வேனியா)

SCHENGEN VISA
No IELTS

- ஐரோப்பாவில் கல்வி கற்று, வேலை பார்த்து சுதந்திரமான நிரந்தர வதிவிடம் பெறுவதற்கான அரியதொரு வாய்ப்பு
- Bachelors, Master, Phd போன்ற கற்கை நெறிகளை தெரிவு செய்யலாம்
- க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் தேவை

0777166461, 0777166462, 0777166463
EduCare International
33C 1/1, W.A.Silva Mw, Colombo-06

September Intake Admissions Open

EDUCARE

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவு !!

சிறந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள் !!

ரெயின்போ ஜெலி ஐஸ்கிரீம் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள :
**077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No. 18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

## FLC FRENCH LANGUAGE CENTRE



# பிரெஞ்சு வகுப்புக்கள்

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...
சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன
2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்...

| | | |
|---|---|---|
| இல. 40, பலாலி வீதி, (அரியகுளம்) 0779 789 456 021 221 7781 | இல.181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 | IELTS Life SkillsA1,B1 வகுப்புக்களும்..... |

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

## கொக்குவில் இந்துக் கல்லூரி நண்பர்களைத் தேடுகின்றோம்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1988 க.பொ.த.சா/தரத்தில் பயின்றவர்களும், 1991 ஆம் ஆண்டு அணியில் A/L கல்வி பொ.த.உயர்தரம் கற்ற மாணவர்களுக்கான ஒன்றுகூடல் 2017.08.26 ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெற இருப்பதால் மேற்படி ஆண்டுகளில் க.பொ.த.சா/தரம், க.பொ.த. உ/தரம் கற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் வரவினை உறுதிப்படுத்துமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

**077 780 9664 - அ.முரளிதரன்**
**077 373 3509 - ச.பிரவீன்ராஜ்**

- ஒன்றுகூடல் விழாக்குழு -

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணசாமி பத்மநாதன் (பத்தர்)

(கலாபூஷணம், சப்தஸ்வர ஞானபூபதி, இசைஞானமணி, யாழ். ரத்னா)



வண்ணார்பண்ணை, பூநாறி மரத்தடியைப் பிறப்பிடமாகவும், உடுவில், துன்மலை வீதியை (லவ்லேன்) வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி பத்மநாதன் (யாழ். இந்துக்கல்லூரி இளைப்பாறிய இசையாசிரியர் வயலின் வித்துவான்) நேற்று (2017.07.22) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணசாமி (பத்தர்) - மங்களம்மா தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான சிவசாமி - புவனேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் சுலோஜினிதேவியின் அன்புக்கணவரும் கலாமணிதேவி, நிர்மலாதேவி, கணேஸ்வரி, சிவகுருநாதன், செல்வநாதன் (கனடா), சந்தசற்குணநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற செம்பொற்சோதியின் அன்பு மைத்துனரும் சியாமாகிருஸ்ணா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்), இரமண கிருஸ்ணா (இலங்கைவங்கி), ரோகினி, காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம அபிவிருத்தி, கிளிநொச்சி), சுபோஷினி, நேச கிருஸ்ணா (LOLC) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியா, பிரமிளா (இலங்கைவங்கி) ஆகியோரின் அன்பு மாமனாரும் க்ருஷி கேசன், வர்சித், சாய்கேசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்மலை வீதி,
உடுவில்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 4745 533, 075 7645 658

## தேவை

பிரபல தனியார் நிறுவனத்தில் வேலைவாய்ப்புக்கள்
(யாழ்ப்பாணம்)

1. முகாமையாளர் - 1
2. சந்தைப்படுத்தல் அதிகாரிகள் - 5
3. பட்டா வாகனங்கள்

**நேரம் 08.00 am - 5.00 pm**

**072 502 9966/ 011 432 0232/ 011 406 2830**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2906 திகதி 22.07.2017

| வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து | | | | | போனஸ் இல. | திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|---|---|---|---|
| 08 | 15 | 30 | 55 | I | 71 | 32, 764, 865/- |


இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 13 23 42 56

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.07.24 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824,
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதபிள்ளை சந்திரலிங்கம்



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சந்திரலிங்கம் நேற்று (22.07.2017) சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை - சற்குணம் தம்பதியரின் அன்பு மகனும் மர்னற் தர்சினியின் அன்புக் கணவரும் சர்மினி, இளங்கோ, மரியவிக்ரர், சஜீவன், தர்சிகா, கபிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றோபேட், சுபகலா ஆகியோரின் மாமனும் ஹனுஷாந், ஜனனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2017) ஞாயிற்றுக்கிழமை சுதுமலை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
0771742503

### சின்னத்தம்பி வல்லிபுரம்



கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வல்லிபுரம் 22.07.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் வள்ளியம்மை (அமெரிக்கா), கந்தசாமி (ஆஸ்திரேலியா), ஞானவரதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி (அமெரிக்கா), சர்வாஜினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் நிஷனி, நிதர்ஷன், மிதுஷன், மிதுனா, சக்திகா, சர்மிலன், கிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2017) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு - 076 386 9504

தகவல்:
குடும்பத்தினர்

## ஹோட்டல், கேட்டரிங் உரிமையாளர்களே !!




தமிழில் தொடர்பு கொள்ள **077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No. 18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03.

## சேவை நலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்தும்




**22.07.2017**

Best Wishes

தென்மராட்சி பிரதேச செயலகப்பிரிவில் கிராம அலுவலராகவும் நிர்வாக கிராம அலுவலராகவும் 33 வருடங்கள் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் கடமையாற்றி நேற்று (2017.07.22) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற

**திரு. நடராசபிள்ளை இராசகுமாரன்**

(நிர்வாக கிராம அலுவலர் - பிரதேச செயலகம் தென்மராட்சி)

அவர்களின் சேவை நலனைப் பாராட்டுவதோடு 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதிலும் அகமகிழ்வடைகிறோம். ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
தென்மராட்சி.

வாழ்த்துவோர்:
பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்.



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2017 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.